உ

திருச்சிற்றம்பலம்.

ஒழிவிலொடுக்கம்.

சீகாழி

திருஞானசம்பந்தசுவாமிகள்

திருவருள்பெற்ற

கண்ணுடையவள்ளல்

திருவாய்மலர்ந்தருளிச்செய்தது.

இஃது

திருப்போரூர்ச்

சிதம்பரசுவாமிகளால்

அருளிச்செய்த-உரையுடன்

சிதம்பரம்.

இராமலிங்கபிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டபிரதிக்கிணங்க

பரிசோதிக்கப்ப

காஞ்சிபுரம்

வீராசாமிமுதலியார் குமாரர்

திருவேங்கட முதலியாரது

இயற்றமிழ்விளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

தாரண௵.

இந்நூலுரைபாடத்திற் சிற்சில இடங்களினுள்ள மறைச்சொற்பொருட்குத் தெளிசொற்பொருள்.

முதல்-பவுரிக்கூத்து-வலமிடமாகச் சூழ்ந்தாடுங்கூத்து.

௨ - குறுமன்னியர் சிலராலறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவமுடையோர்.

௩-மகாமன்னியன் பலராலுமறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவமுடையோன்.

௩-பிரளயாகலர் மும்மலங்களுளொருமலநீத்தோர். அவர் பிரமன் முதலாயினோர்.

௪-ஞாதுரு-காண்பான்.ஞானம்-காட்சி. ஞேயம்-காணப்பட்டது.

௫-சூக்குமைவாக்கு.வார்த்தைதோன்றற்கு முதற்காரணமாயுந்தியிலே நாதவடிவாய் நிற்குமொருசத்தி.பரஞானம் அநுபவஞானம். அபரஞானம் வாசகஞானம்.

௪-பகடிக்கூத்து உள்ளதுபோன்றில்லாததைக்காட்டும் வெளிவேடம். அல்லது அகசியக்கூத்து.

௬-அரிப்பாளன்-குப்பைமுதலிய விடங்களிற் பொன்முதலியஅரித் தெடுக்கின்றோன்.

௯-கொழுந்தாடை, கரும்பினுனித்தழை.

௰௨-சாயாபுருடன், தங்கிழலைப்பார்த்துப் பின்னுகாயத்தையுற்றுநோக்குகின்றார்க்கு அவ் வாகாயத்தின்கட் புருடவடிவம்போற் றோன்று மங்கிழற்காட்சி.

௰௩-பைமறித்தல், உள்ளிருந்தசரக்கு வெளிப்படப் பைவாய்த்தொட்டு உட்புறமேற்பட்டும் வெளிப்புற முட்பட்டு மடங்கமடக்கல்.

௰௭-கிண்கிணிவாய்ச் செய்தலர்தல், வட்டவடிவாக முகங்கொண்டுமலர்தல்.

௨௨-பஃறுளி, பலதுளி.

௪௩-பற்ற, பார்க்கிலும்.

௩-அருகித்தோற்றல், சுருங்கித்தோற்றல்.

௫௨-பிரோரகம், காரியப்படுத்தல்.

௫௪-பிரதிபலிதம், எதிர்விம்பம்.

௫௬-சகசமலம், அனாதியாகியமலம்.

௯௩-கடா, வினா.

௯௪-விட்டிசையாதிசைத்தல், நடுவேயில்லாமலொலித்தல்.

௯௫-நக்கினம், நிருவாணம்.

௯௭-தேறிட்டநீர், தேற்றாங்கொட்டையாற் றெளிவிக்கப்பட்டநீர்.

௯௮-கவுசனை, யாதாயினு மோர்பொருளை யுள்வைத்து மறைய மேன்மூடிக்கட்டு மேற்கட்டு.

௯௯-சுழல்விறிசு, கொள்ளிவட்டம்போற் சுற்றுவதாய ஒருவகைமருந்துவாணம். இத்தேயத் திக்காலத்தில் சுழல் புறிசு என்றுவழங்குகின்றது.

௧0௩-அநன்னியம், அன்னியமல்லாமை.

௧0௬-நெற்பொலி, தூற்றுநெல்.

௧0௭-தும்புசெறித்து, தும்புஅவிழ்த்து.

௧௧௩-அநுபவிக்கச்சிந்தைக்கும், அநுபவிக்கவறிகின்றபோதும்.

௧௪௨-அவித்தியாகதம், அஞ்ஞானமயம். வெறுவீடர் அநுபவிப்பதற் கில்லாமையால்விட்டோர் போன் றிருப்போர். கறண்டல் பற்களால் நெருக்கிப்புறண்டுதல்.

௧௭௧-சேட்டித்தல், தொழிற்படுத்தல். அல்லது குணக்கேடான தொழில் விளைத்தல்.

௧௭௭-சிங்கி, விலங்கு.

௧௮௮-நாங்கூழ், நாகப்பூச்சியென்னுமோர்கிருமி.

ஒஷ-விகளம், மௌனம்.

௧௯௨-மடலெடுப்பு, பனைமடலாற் குதிரைசெய்தேறுதல்.

௧௪௫-முடிகள[illegible]த்தி, முடி-சிரசு. களசம்-நீக்கம். முத்தி-வீடு.

௧௪௬- வாசியென்றவார்த்தை, இதுசெய்க விடுகவென்று நியாயமாகக் கூறும்வார்த்தை.

௧௫௧-வியாபகம், கலப்பு. வியாத்தி கலக்கப்படுவது.

௧௫௩-விசர்க்கரித்தல், விடுத்தல்

௨00-ஐவரரசர், பாண்டுமக்களாகிய தருமன்முதலியஐவர்.

௨௨௰-மந்தகாசப்பிரகாசம், புன்னகைப்பிரகாசம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ - ஞானசம்பந்தகுரவே நம:

சிறப்புப்பாயிரம்.

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளல்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தா-னுள்ளத்
தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ண
வொழிவி லொடுக்கநூ லோர்ந்து.

இச்செய்யுள் கருத்திற்றியாதோவெனின், இந்நூன்முகத்தாசிரியர் பெயர்முதலியவற்றைக்குறித்துநிற்றலிற் சிறப்புப்பாயிரவொழுக்கமுணர்த்தல் கருதிற்றென்க.

(இ-ள்) வள்ளல்குருராயன்வாதுவென்றசம்பந்தன் -வள்ளல்மலர்த்தாடலைமேல்வைத்து=எ-து- வள்ளலாரென்னுந் திருப்பெயருடையவர் ஞானாசாரியநிருபராகிச் சமையவாதிகடருக்கச் செருக்குகள் பிற்பட்டொழியப் பேரருணெறியான்வெற்றிகொண்டு சீகாழியென்னுந்திருநகர்க்கண்ணே மெய்ந்நெறிவிளங்க வீற்றிருந்தருளிய திருஞானசம்பந்தப்பிள்ளையாரது வள்ளற்றன்மையுடைய மலர்போலுந் திருவடிகளைத்தமதுநன்முடிக்கண்ணோர் பொன்முடியாகவணிந்து.

ஓர்ந்து-உள்ளத்-தழிவில்டுக்குந்தேனையன்பரெலாமுண்ண-வொழிவிலொடுக்கநூலுரைத்தான். எ-து-அத்திருவடிகளினருட்டுணையாற் றத்துவங்களனைத்துஞ் சடமென் றோர்ந்துணர்ந் தவற்றைக்கடந்து தற்காட்சியோடு திருவருட்காட்சியுஞ்செய் தங்ஙனம்வாதனையானசைந்தெழும்போதந்தோற்று ததனையத்திருவரு ளொளியினடக்கியாண்டுமேன்மேலுமெழாநின்ற சிவாநந்தத்தேனைத் தாமநுபவஞ்செய்தவாறதன்கணன்புள்ள பக்குவருஞ் செய்தற்பொருட் டச்சிவாநந்தாநுபவவந்தரங்க மெல்லாம் வெளிப்பட்டுவிளங்க வொழிவிலொடுக்கமென் றோருபதேசமுறையை யுரைத்தருளினார் என்றவாறு.

வள்ளலென்னும்பெயர்.

ஆசிரியர்க்குத்தாமுன்னிருந்த கிரியாசாரியநிலைக்கண் ணவ்வாசாரியமரபின்வழித்தாய் வந்தகாரணவபிடேகச்சிறப்புப்பெயரென்க. அல்லதூஉம் பின்னர்ஞானாசாரியநிலைக்கட் டமதருண்ஞானநோக்கானியைந்த கண்ணுடையவென்னுங் காரணவிசேடண மேற்கொண்டுநின்

ற வில்வள்ளலென்னும்பெயரீண்டவ்விசேடணமிசையெச்சநிலையினி ற்ப நின்றதெனினுமமையுமென்க. இஃது வினைபண்புமுதலியவடுத்த தொகைநிலைச்சொற்றொடராகாது தொகாநிலையாய்த்தனைத்தொடர்ப யனிலை யண்மைப்பொருளுணர்ச்சியின்றி யிடையிட்டுநிற்கத்தான்செ ய்யுண்முதற்கட்டனித்திருந்தமையி னாற்றலின்றாலோவெனின், அற் றன்று-கொடைமடங்குறித்த குணங்காரணமாகவந்த வில்வள்ளலென் னும்பெயர் தன்னுறுப்புகளுட்கொடை குணம்புகழழகுவளமென்னு நால்வகைகுறித்தபலபொருட்பகுதியாய்வண்மையென்னுமுதலுறுப் பானுசிரியர்க்குளவாயவக்கொடை முதலியவருட்குணங்களைக் குறிப் பிற்புலப்படவிரித்தலிற்பொருளாற்றலுண்டென்க. அல்லதூஉம் -இ ப்பெயர் உயர்பொருட்கிடனு யுடனிலைக்கூட்டாய் ஒருநெறியசைத்தா யோரினந்தழுவிப் பல்வகைக்குறிப்பிற்படர்ந்து முற்றியையு வண்ண ப்பெருஞ்சொல்லாக நிற்றலிற் சொல்லாற்றலுமுண்டென்க.

ஆயினிவ்வாசிரியர்பெய ரிச்செய்யுளினிடைகடைகளி னொன்றி னிறுத்தாது முதலடிமுதற்சீரோதுகைத்தொடைக்கணிறுத் ததிற்குறி த்த தியாதோவெனின், ஒன்றிரண்டெனக்கொண் டுறுமறையாகம ந ன்றிருமுடிபி னடுநிலைநடாஅய்ப்புலப்பெறுதத்துவநியதியிற்போந்து ண்மலன்தெறுமறிஞர் வாழ்த்திப்பரவும் ஆசிரியர் சன்மார்க்கமுதலிய மார்க்க நான்கானுட்டலைமையிற்றலைமையாயவுத்தமசன்மார்க்கத்தின ரென்பதுகுறித்ததென்க. இங்ஙனமுத்தமசன்மார்க்கத்தினரென்பதை யாசிரியர்கூறிய இதுவென்றதெல்லாம் பொய்யென்று னென்னுந்தி ருவெண்பாவாற்காண்க. இஃதின்னும்விரிக்கிற் பெருகும்.

குருராயனென்பது-திருஞானசம்பந்தப்பிள்ளையார்க்குச் சிறப்பி ற்சிறப்பாய காரணப்பெயராய்நின்று- ஓதியுணர்ந்துபன்னாட் பலசாத னங்களின் முயன்றுமுயன்றாசாரியத்தன்மை யொருவாறரிதிற்கிடை ப்பப்பெற்றுமோரோர்காலங்களினவத்தைவயப்பட்டு மயங்குமற்றை யாசாரியர்போலா தோதாமல்வேதாகமாதிகளை முற்றுமுணர்ந்திறை ப்போதுமோர் சாதனங்களின்முயன்றதின்றி ஞானாசாரியவருளிலக்க ணங்களனைத்துந் தாமேதம்பானிரம்பிநிற்ப வமர்ந்தன ரென்பதூஉம் ஓதியுணர்ந்தவவ்வாசாரியர்க்கெல்லா மவரவரறிவின்கணருளுருவாய் நின்றறிவித்து மாசாரியவுருவாய் வெளிநின்றனுக்கிரகித்தும்,நின்றன ரென்பதூஉம்- திருநோக்கஞ்செய்தன்முதலிய வறுவகைத்தீக்கையா னுமன்றித் தமதுதிருவுருவைக்காண்ட னினைத்தன்மாத்திரையே பக் குவரல்லாரும் பக்குவராய்ப்பயன்பெறநின்ற திருவருட் பெருமைய ரென்பதூஉங்குறித்ததென்றுணர்க. இங்ஙனம் ஓதாமல்வேதாகமாதி

யுணர்ந்தமை முதலியவற்றையாசிரியர் கூறியதன்மையு முன்னிலையு மென்னுந் திருவெண்பாவாற்காண்க.

அல்லதூஉம்-குருராயனென்பது வாதுவென்றசம்பந்தனென்ப தற்கு மேனிற்கவைத்தவிதப்புக்குறிப்பாற் பிள்ளையாரிவ்வவதாரத்தி ன்மேனின்ற வவதாரத்தினுங்குமாரசற்குருவாயரனுர்க்குமகத்தியனு ர்க்கு முபதேசித்தருளிய வாசாரியத்தலைமையுங் குறித்ததெனக்கொ ள்க. (அருணகிரிநாதர்) "தென்னவனங்கனஞ்சூழ்காத்திரிநகசூலகரத், தென்னவனங்கனந்தப்பதநீட்டினன்செல்வமுன்பின், றென்னவனங்க னன்னீற்றுற்றிருத்தியதென்னவின்னங், தென்னவனங்கனங்கைச்சிலைக் கூனையுந்தீர்த்தருளே, என்றதனுற்பிள்ளையாரிவ்வவதாரத்திற்குமேனி ன்றவவதாரத்திற்குமாரசற்குருவென்பதுகாண்க.கல்லாடம்"உழன்ம திற்சுட்டதழனகைப்பெருமான்வணங்கிநின்றேத்தக், குருமொழிவை த்தோய்,குறுமுனிதேற நெடுமறைவிரித்தோய்,,(சித்தியார்)அருமறை யாகமமங்கமருங்கலைநூறெரிந்த, வகத்தியனுக்கோத்துரைக்கு மருட் குருவாங்குருளே, என்பவைகளாலரனுர்க்குமகத்தியனுர்க்கு முபதே சித்தவாசாரியத்தலைமையையுணர்க.

ஆயிற்குருவேந்தனென்னுது குருராயனென்ற தெதுகுறித்தற் கோவெனின் நான்கன்வேற்றுமையானடுத்து மிக்குயர்நெறிப் பொரு ண்மையின்வந்த காரகச்சிறப் பொருதலைத்தொடர்மொழிப்பெயராய விக்குருராய னென்பதன்கட் குருவென்பதன் முதனிலையெழுத்துத்த மிழியல்விதிப்படி மொழுக்குமுதலாகியும்,ராயனென்பதன்முதனிலை யெழுத்துத்தமிழியல்விதியின்றி யாரியவியல்விதிப்படி மொழிக்குமு தலாகியும்வந்திருவகையியலுங்கோடலி னிதனைத்தம்பெயராகவுடை யபிள்ளையாருந்தமிழ்நூல் வடநூலென்னுமிருவகைநூற்குமுரியாெ ன்பது குறித்தற்கென்க.ஆசிரியர் மறைப்புலவன் றமிழ்க்குரிசில் சீகா ழிச்சம்பந்தனென்றதனு லிருவகைநூற்கு முரியாரென்பது காண்கவெ ன்க.அல்லதூஉம்-பொருள்வேறுபடாது சிறிதேவடிவு வேறுபட்டுநி ன்றகுருராயனென்பது, தன்னையுள்ளூன்றி நோக்கினர்க்கிலைமறைகா ய்போல் ஜாவென்னுமுயிர்மெய்யோடிருந்ததன்முன் வடிவமுட்கொ ண்டுவிளங்கக் காட்டிநிற்கின்றதாகலி னிதனையுடையபிள்ளையாருந்தம துகடவுட்டன்மைவேறுபடா துத்தமபுருடவுருவம்கொண்டு நின்றத ம்மை யன்பானுள்ளூன்றி நோக்கினர்க்குக் குமாரசற்குருவென்னும் பெயர்கொண் டளவிகந்த் சூரியருதயம்போன் றொளிவீசுந் தம்முன் னுருவாய தெய்வத்திருவுருவுட்கொண்டு விளங்கக்காட்டி நின்றனரொ ன்றுகுறித்தற்கென்பதுமாமென்க.

(ஆளுடையபிள்ளையார்புராணம்)"மறையவர்திருவேவைதிகநிலையே வளர்ஞானப், பொறையணிமுகிலே புகலியர்புகலே பொருபொன்னித், துறைபெறுமணியே சுருதியினொளியே வெளியேவந், திறையவனுமையாளுடனருடரவெய் தினையென்பார்.

என்று மூவாண்டிற்பிள்ளையார் திருவருள்வடிவைக்கண்டு சீகாழியுள்ளார் வியந்துகூறியவாறாய விச்செய்யுளால் உள்ளூன்றிநோக்கினர்க்குத்தம்முன்னுருவைக்காட்டிநின்றனரென்பதுகாண்கவென்க.

இனியின்றியமையாக் காட்டுளதேற்காட்டுவதன்றி மற்றையவிரிக்கிற்பெருகுமென்க.

அல்லதூஉம்-குருவென்பதனீற்றுயிர்மெய்யோடு ராயனென்பதின்முதலுயிர்மெய் புணராப்புணர்க்கையாய்நின்றதாகலினிங்ஙனமானந்தவடிவராகியபிள்ளையாருந் தாங்கொண்டருளிய மானிடத்திருவுருவோடு புணராப்புணர்க்கையாய் நின்றனரெனக் குறித்தற் கென்பதுமாமென்க.

அல்லதூஉம்- குறிலிணைக்கெதிர் நெடில்குறிலெண்ணீடாக நிற்பவு மீற்றினவ்வெண்ணீடின்றியொற்றுநிற்பவுந் தொடர்ந்தமொழியாகலிற்பிள்ளையாரும் பக்குவர்க்குமறைப்பொருளாயு மதிபக்குவர்க் கநுபவப்பொருளாயு மிவ்விரண்டினுங்கலவா ததீதப்பொருளாயுநின்றனரென்றுகுறித்தற் கென்பதுமாமென்க. இங்ஙனம்குருராயனென்பதிற்குவ்வென்பதுஇருள். ருவ்வென்பது அருள். ராயனென்பது விளங்கச்செய்கின்றோன்பொருளாம். இதனால்,குவ்வென்னு மசுத்தாவத்தையினின்றோரைருவ்வென்னுஞ்சுத்தாவத்தையிற்றாம்நின்றவண்ணநிறுத்துகின்றோர் குருவாவர் இச்சுத்தாவத்தைக்காதாரனாகியு மதீதனாகியும்விளங்கியிவ்வவத்தையினின்று மக்குருவாயினோர் தாழாதவண்ணம்அருள்செய்துநின் றதீதப்படுத்துகின்றோன் ராயனாவன், ஆகலினிதனையுமுணர்கவென்க.

எழுத்தாதிப் பல்வகைக்குறிப்பிற் பொருணெறிப்பற்றிநின்ற நோக்கஞ் செறிவுநுட்ப மிங்கிதமின்பங் கம்பீரஞ் சிறப்புறுதிமுதலிய நற்குணந்தழீஇயசொற்புணரீதென்றே யாசிரியரும் சரிதாதிநான்கினுக்குமென்னுந்திருவெண்பாவி னிடைக்கட்குருராயனென் றிதன்பெருமைதோன்றவைத்தனரென்க, இஃதின்னும்விரிக்கிற்பெருகுமென்க.

வாதுவென்ற சம்பந்தனென்பதிற் பொதுவானே வாதுவென்ற வென்ற தென்குறித்தோவெனின், எண்வகைக்குன்றத் தெண்ணுயிர வராய பாயுடுக்கைப்பறிதலைச்சமணர்களொருங்கேகூடித் தென்மது ரைக்கட் செந்தமிழ்ப்பாண்டியனை முன்னிட்டுச் செருக்காற்செய்த சுர வாதம்அனல்வாதம்புனல்வாதங்கள்பிற்படத்திருநீற்றானுந்திருவாக் கானும்வென்று திறல்கொண்டமையன்றியும்பரசமைய, கோளரியெ ன்றுதானேயொலித்த திருச்சின்னத்தின் றெய்வப்பேரொலிகேட் டு ளம்பொறாதெதிரிட்டுமறித்தபோதமங்கைப்புத்தநந்தியின் பொய்த்த ருக்கமும்புழுத்தலையும்பொடிபட்டழியவும்,பின்னருள்ளதுபோன் றி ல்லாதைப்பற்றிச் சாக்கியக்குழுவுட்டலைவனுயசாரிப்புத்தன் சிற்சில வகையாற் செய்தசமயவாதந்தலைதடுமாறவுஞ் செந்தமிழ்வேதத்திரு முறைதாங்கிமேம்படுமறிஞரான் வெற்றிகொண்டமையும் திருவோத் தூரின்கண் ணரனுக்கிடுபனை யாண்பனையாயிற்றேயென் றசதியாடிய வமணக்குழூஉக்களின் வாய்வாதங்கண் மண் பட்டொழியத் தாந்திரு வாய்மலர்ந்த திருக்கடைக்காப்புளோர் மொழியானே யவ்வாண்பனை பெண்பனையாகச்செய்து விறல்கொண்டமையுங் குறித்ததென்க.

அலலதூஉம் - வாதென்பதிலக்கணையாகக்கொண்டுபெருமண நல்லூரின்கட் டிருமணநல்விழாவைத் தரிசிப்பான் வந்தமக்கட்கெல் லாந் தொன்றுதொட்டிடைவிடா துடனிழற்போற் சூழ்ந்துள பிறவிப் பெருவாதுக ளனைத்தும்வென்றதூஉம்-திருப்பாச்சிலாச்சிராமத்தின் கண் மழவன்மகளார்க் கடுத்தமுயலகவாதுவென்றதூஉம்-மருகற்கண் ணோர் வசியனுக்கடுத்தவிடவாதுவென்றதூஉம் - இவைமுதலியவுங் குறித்ததெனினுமாமென்க வெற்றிகொண்ட பொருட்டிறன்முதலிய வற்று ளொன்றேனுந் தோன்றக்கூறு திலேசானே வாதுவென்றவெ ன்ற தென்குறித்தோவெனின், பிறர்க்கிங்ஙனம் வேறல்தம்மானுந் து ணைமையானும்பற்பலநாட் பற்பலவகையின் முயற்சிசெயினு முற்று தெனினும்பிள்ளையார்க்குச் செந்தமிழ்மொழியுந் திருவாக்கானே யா ண்டாண்டவ் வேறன்முற்றியதென்பது குறித்தென்க. வாதுஎன்பது குருராயனென்பதனோடுஞ் சம்பந்தனென்பதனோடுஞ்சாராது நடுநி ன்றமையின்,அத்துவிதநெறியினுஞ் சேராதுதுவிதநெறியினுஞ்சாரா து நின்ற பதிதவாதிகளது பபணில்வாதமெ னினுமமையுமென்க. எதி

றேற்கப்பட்டெதிர்வினை கீழ்ப்படமேற் கொள்வினையெழுச்சிப்பொருளின்வந்த வெல்லலென்னும் பிறவினைப்பகுதியானடுத்த வென்றவென்னும்பெயரொச்சஞ் சம்பந்தனென்னும் பெயர்கொண்டு முடிந்து. இங்ஙனம் வெற்றிகொண்டபருவம் பிள்ளையார்க் கிளங்குமாரப்பருவமெனக்குறித்ததென்க. என்னை, எச்சமென்பதிளஞ்சேய்மேற்றாகலின்.

சம்பந்தனென்பது பிள்ளையார்க்கு மூவகைவைக்கண் மூவுலகும் புகழப்பொற்பொடுபுணர்ந்தவற்புதத்திருப்பெய ராகலின், ஆண்டுபெருமானருளப்பிராட்டியாரளித்தசிவஞானத்தெள்ளமுதருந்தி யச்சிவஞானத்திற் குரிமைபூண்டமை குறித்ததென்றுணர்க. ஆயிற்சிவஞானசம்பந்தனென்னாது சம்பந்தனெனவைத்ததென்கொலோவெனின், சிவஞானமுமன்றிச்சிவாநந்தமாநந்தாதீதமென்பவைக்கு முரிமைபூண்டதலைமைபற்றியும் அவற்றையுலகுயிர்க் கிங்ஙனமென்றுணர்த்தியுரிமைசெய்விக்குமாட்சிபற்றியு மங்ஙனம் வைத்ததென்க.

அல்லதூஉம்-சுருங்கச்சொல்லுதல் வனப்பினாற் சம்பந்தனெனவே சிவஞானசம்பந்தனென வுரிமைச்சிறப்பு வழக்காற்றானேதோன்றுமெனவைத்ததெனினுமாமென்க. எங்ஙனமெனின், இந்திரனென்பது, இறைமைச்சிறப்புவழக்காற் றேவேந்திரனையும் உடையானென்பதுபொருட்சிறப்புவழக்காற் பொன்னுடையானையுங் குறிக்குமாகலினென்க. வள்ளன்மலர்த்தாளென்னும் ஒருவகைவனப் பிருவகைச்சந்திமூவகைமொழித் தொகைச்சொற்றொடர்க்கண் வள்ளலென்னுங்குணிப்பெயர்வினைமுதற்றொழிற்பயனுறப்படுமுடைமைக்குணப்பெயராய்நின்றுபிள்ளையாரது திருவடிகட்டம்மை யடைந்தோர்க்குவரையாதாநந்தப்பேற்றையளித்து அவரைத்தாங்கிக் கோடலைக்குறித்ததென்றுணர்க.

அஃதே லாநந்தப் பேற்றைத்தருதற்குந் தாங்கிக்கோடற்குங் கருத்தர்பிள்ளையாரன்றோ, வங்ஙனமிருப்பத்திருவடிகட்கிங்ஙனங்கூறலெங்ஙனமெனிற்றிருவடிகடம்மைவழிபடுவோர்க்கிரங்கியின்பமீதற்பொருட் டெழுந்தருளும்பிள்ளையாரது படர்ச்சிநிகழ்ச்சிக் கருவியாய்நின்று அவரையவ்வழிபடுவோர்பால் வருவித்தலானும்ஞானதீக்கைபண்ணுங்காலவர்சென்னியிற்சூட்டப்பட்டைக்கியம்வருவித்தலானு நித்தியாநந்தப்பேறு வாய்க்குமாகலினிங்ஙனமென்க.

அல்லதூஉம் "வாட்டமிலருளுங்கோட்டமில்குணனுமசையாநி லையு நசையாமனனும் வெகுளாப்பண்பும் விடாப்பேரன்புஞ் செவ்வி யின்மரீஇ யெவ்வெவவொவ்வகை வேட்டனரவ்வகைவிருப்பொடுகுறி ப்பின்வரையாதீதல்வள்ளற்றன்மைஎன்பவாகலி னிவ்வள்ளற்றன்மை யைத்தம்பாலடைந்தோரிடையடைவித் தருளுங்கருணைபற்றியங்ஙன ங்கூறியதெனினு மமையுமென்க. அஃதேல், வள்ளற்றன்மைவழங்கு மலர்போலுந் திருவடியென்றன்றோ வுரைவிரித்தல்வேண்டு மங்ஙன மின்றிவள்ளற்றன்மையுடைய மலர்போலுந்தாளென விரித்திருக்கின் றதேயெனின், அங்ஙனமடைவித்தலும் வள்ளற்றன்மையேயாதலி னு னுமுடையதொன்றன்றே யுதவப்படுமாதல் னுனு மிங்ஙனம்விரித்தல ங்ங னங்கூறற்கு மமைதியாமென்க.

அல்லதூஉம்- அருளின்றியமையாத வள்ளற்றன்மைக் கவ்வரு ளேமுதற்காரணமாமாகலின், ஆநந்தவடிவராகிய பிள்ளையாரவ்வாநந் தப்பேற்றையளிக்கும் வள்ளற்றன்மைக்கு முதற்காரணமாகிய திருவ ருட்சத்தியே திருவடியென்றுகுறித்தற்குக் காரணத்தைக் காரியமாக வீண் டுபசரித்ததெனினு மமையுமென்க.

அல்லதூஉம்-எமதுதிருவடிகளை வழிபடின் வீட்டின்பமெளிதி ற்றருவேமென்று பிள்ளையார்விதித்தருளிய வருள்விதிப்படி யறிந்து வழிபடினவ்வழிபாட்டானவ்வீட்டின்பந்தரப்பெறுதலுண்மையாகலி னவ்வுண்மைநோக்கி யீண்டுகூறியதெனினும், பிள்ளையார்திருமேனி முற்றுந்தெய்வத்தன்மை பூரணமாகலி னதனையறிவிக்கவீண்டுகூறிய தெனினுமமையுமென்க. திருவடிகட்கு அடையாய வள்ளலென்பதூ உம்-ஆசிரியர்பெயராயவள்ளலென்பதூஉம்அடியிணைஎதுகைத்தொ டையாய் எழுத்தசை சீரொலி பொருளாதிக ளானொற்றுமைகொண் டுநின்றுபிள்ளையாரது திருவடித்தீக்கைக்கு மாசிரிய ரதிபக்குவத்தன் மைக்குமுள்ள வொற்றுமைப்பொருத்தம் விளக்கினவென்க.

வள்ளலென்பது- பிள்ளையார்க்குக் காரணச்சிறப்புப் பெயராகக் கொண்டு பொருள்கூறுவாருமுளர். அங்ஙனங்கூறினித்துணைச்சிறப் பின்றென்றுமறுக்க, என்னெனின், அவயவச் சிறப்பானவயவிக்குணம் வெளிப்படுத்தலேபெரும்பாலுமின்பமாகலினென்க. இதனைப்போற் றிமானன்முகனுங் காணாதபுண்டரீகம் என்பதனாற்காண்கவென்கவள் ளமலர்த்தாளெனப் பாடமோதிவள்ளம்போலுங் குவிந்தவாய்மலரொ

ன மலர்க்கடையாகவுரை விரிப்பாருமுளர். அங்ஙனம் விரித்தலினித்தைப்பெரும் பயனின்றெனமறுக்க இங்ஙன மின்னும்விரிக்கிற் பெருகுமென்க.

மலரென்பது-வள்ளற்றன்மையி னருகுவைத்தமையின் ஈண்டுநிறைதலுங்குறைதலுமாயுள்ள நீர்நிலைக்கட்டோன்றியுமழிந்தும் விரிந்துங் குவிந்தும் வாடியுநின்று வண்ணமு நறையும் வாசமுஞ்சிறிதே சிறுபோதுகொண்டு பறித்தலாதியசிறுதொழிற்படுமலர்களைநீக்கி ஆண்டுதிரிபிலாத் தெய்வத் தெண்ணீர் நிலைக்கண் ணழியாமலர்ச்சியு மழியாமணமும் பொன்னிறப்பொலிவும் இன்னறவொழுக்கு மென்மையுந்தண்மையும் வியப்புறுமுருவுங் கண்டோர்கண்கவர் காட்சியு மாட்சியுங் கொண்டுமுக்காலமுங் குன்றாமலரைக்குறித்தமைகாண்க. என்னெனிற் பிள்ளையார்திருவடிகள் மெய்ஞ்ஞான விளக்கமா யருண் மணம்வீசிப் பொன்னிறம்பொலிந்து ஆநந்த மொழுக்கி மெல்லெனவுற்றுத்தண்ணெனக்குளிர்ந்து தரிசிக்கின்றோர் வியப்புறுமுருவா யவாதுவிருப்பநோக்கம்பரவ வென்று மொருதன்மையவா யிருக்கின்றமையினென்க. ஆயின் மலர்போலுந் தாளென் றுவமை விரிந்தபடி நிற்றற் கிடங்கொடாது மலர்த் தாளென்றதென்னெனின், அத்தெய்வத் திருமலர்தனைக்கண்டோர்க்குச் சிரியவிடயாநந்தந் தருதலே யன்றித் திருவடிபோற் சிவாநந்தந்தரமாட்டாச் சிறுமைநோக்கியென்க.

அல்லதூஉம் சுபவடிவாய் எவ்வகைச்சுபங்கட்கு முன்னின்றதனைவிளங்குறச்செய்வதாய் மகிழ்வுடையோர்யாரு மேற்கொண்டணியப்படுவதாய் நிற்குநன்மலர்போலுமெனக்கூறினுமமையும்என்னெனின்திருவடிகள் அருள்வடிவாயானந்தப்பேற்றிற்கு முன்னின்றளிப்பதா யறிவுடையோர்தந்தலைமேற் கொண்டணியப்படுவதாய் நிற்றலினென்க.

அல்லதூஉம்-மலரையடைந்தவண்டுக ளதனதுதேனுண்டு களிகொள்ளுதல்போற் றிருவடிகளையடைந்தோரும் அருளாநந்தம்பெற்றிறுமாத்தலினிங்ஙனங்கூறியதெனினுமமையுமென்க. இதனைத்தொகையுவமையணியாகக் கூறலின்றி வள்ளன் மலர்த்தாளெனக் கூட்டியற்புதத்தொகை யுவமை யணியாகக் கொண்டு பொருள் கூறுவாருமுளர்அரவர்கூறுங் கூற்றிற்பெரும்பயனின்றெனமறுக்க.இஃதின்னும் விருக்கிற்பெருகுமென்க.

தாள் என்பது அடிகட் கன்றியும் முயலுதற்கும் உண் ணின்ற பொருள் வெளிப்படாமைக்கு மதனை வெளிநின்றோருட் சென்றுகவரப் படாமைக்குங் காப்பாகக் காப்பினிற்குங் கருவிக்கு

மணிதற் கணியினிருகடையு மிணைத்துநிற்கு மிடைப்பூட்டிற்கு மிட னுகிவந்த பலபொரு ளொரு சொல்லாக்லின் திருவடிகள் தம்மைய டைந்தோரை யாநந்த நிலையுட்சேர்த்தலு மங்ஙனஞ்சேர்ந்தோர் மீட் டுமவ்வாநந்த நிலையினின்றும் போதவசைவுதோற்றிவெளிப்படா மைக்கு மவத்தைகளுட்சென்று தாக்கிக்கவரப்படாமைக்குங் காப் பாகவருளுருவாய தன்முன்னிற்றலுஞ் சிவத்துடன் சீவனையிடைநின் று கூட்டுவித்தலுங் குறித்ததுகாண்க. இக்குறிப்புணர்த்தவன்றே ம லர்க்காலென்னுது மலர்த்தாளென்றதென் றுணர்க.

தலைமேல்வைத்து என்பது-ஆசிரியர்-தம்மாசாரியராகிய பிள்ளை யார்திருவடித் தீக்கை செய்யத் தாம்பெற்றமை குறித்ததுகாண்க. அஃ தேல்,வைக்கப்பட்டுளனச் செயப்பாட்டுவினையெச்சத்தானிருத்தற்பா லதன்றோவெனின், ஆசிரியர்க் கத்திருவடிக்கண்ணேயுள்ள பிரியத் தொடர்ச்சியின் பெருமைதோன்ற விங்ஙனநின் றங்ஙனங் குறித்ததெ ன்க. இதற்கு இவ்வாறன்றித் தலைமேற்பாவனையான் வைத்தெனக்கு றித்ததென்று கூறுவாருமுளராலோவெனின், அவ்வாறுகூறிற்-பிள் ளையா ரிந்நூலாசிரியர்க்கு ஞானசாரியரென்பது மிவர்ஞானதீக்கையு டையாரென்பதும் விளங்குதலின்றி மற்றையாசிரியர்போ லெடுத்த நூலினிதுமுடிதற்பொருட்டுப் பாவனையான் வழிபடுகடவுட் பழிச்சி னரென் றிலேசிற்கருதப்படுமாகலி னங்ஙனங்கூறன்மரபன்றென்க. த லையில்வைத்து என்னுது தலைமேல்வைத்து என்றமையான், மறைமு டிக்கண்ணே வயங்காநின்ற வச்செல்வத்திருவடியின் சீர்மைதோன் றிற்றென்க.

ஓர்ந்துஎன்பதில்-ஓர்என்னும் பிறவினைமுதனிலை - அறிவுதனக் கெதிரிட்ட வுணர்ச்சிப்பொருட்கண் ணெதிரிடுவதுபோன் றெதிரிடா துள் ளாழ்ந்தவப்பொருட்டிற னெதிரிடப் பெயரும்புடைபெயர்ச்சியு மெதிரிட்டபின்னர் விகற்பியா தெதிர்க்குந்தோறு மெதிரிடப்பெயரு ம் புடைபெயர்ச்சியுங்கோடலிற் கருவித்திறனுந்தன்றிறனும் அருட் டிறனும் உற்றுணர்ந் தவ்வுணர்ச்சிவிகற்பியாது தேறிநின்றமையைக் குறித்ததுகாண்க. இக்குறிப்புத்தோன்றவன்றே திருவள்ளுவநாயனு ரு மோர்த்துள்ள முள்ளதுணரி னென்ருெறன்றறிக.

உள்ளத்தழிவிலென்பதி லுள்ளமென்பதன் பகாப்பதவீற்றுப் பகுபதப் பொருளி னிடவாகுபெயரா யணுப்பொருட்கண் வந்தவுள் ளென்னும் பகுதி யுட்புறத்து மப்போதமெழுஞ்சிற்றசைவும் பேர சைவுங் குறித்ததுகாண்க.

உள்ளமென்பது வாதனையானுள்ளெழும்போதத்திற் காகுபெய ராயது. வள்ளலென்பது போன்றெழுகிசையாய் வரவுள்ளவழிவிலெ ன்னாது பொருத்திசையாய்வர உள்ளத்தழிவி லென்றதென்கொலோ வெனின், வேற்றுமைவழியாதலினானும் போதவசைவு சார்பின்றிய மையாமை குறிக்கவேண்டு மாதலினானும் சாரியையோடு புணர்த்தி யங்ஙனங் கூறியதென்க. அழிவுஎன்பதில் அழியென்னும்பொதுவினை ப்பகுதி முன்னர்த்தோற்ற நிகழ்ச்சிப் பின்னரோர்காலத்துமோரிடத் துமின்றிக் கெடுதற்பெயர்ச்சிக்கண் வந்ததாக லினப்போத நிகழ்ச்சிபி ன்னரொக்காலத்தும் உட்புறமென்னு மெவ்விடத்துந்தோற்ற நிகழ்ச்சி யின்றியொடுங்கியவாறு குறித்ததென்றுணர்க. இங்ஙனமன்றி உள்ளத் தழிவிலென்பதற்கு மனத்தினசைவற்ற விடத்தெனப்பொருள் கூறு வாருமுளராலோவெனின்-மனத்தினசைவுபோத வசைவற்றன்றேனே யறுமாதலினானு மஃதன்றுதவிடத் திஃதெவ்வாற்றானு மமுதாதலினா னுமது பொருந்தாதென்க. இதனை ஆசிரியர்கூறிய பற்றுதுபோதும் பதறுமென்னுந்திருவெண்பாவாற் காண்கவென்க.

அடுக்குந்தேனென்பதி லடுக்குமென்பது, அடுத்தலென்னுந்தொ ழிற்பெயர்க் கட்டல்விகுதி தன்னெற்றுச் சந்தியொடுநீங்க வெதிர்கா லப் பெயரொச்சவிடைநிலையும்மை ககரமெய்ச்சாரியையூர்ந்து தன் னெற்றுச்சந்திபெற் றுண்டுநின்றிறையுமிடப்பாடுதோற்றாது செறித ற்பெயர்ச்சியும் அடுக்கலென்னுந்தொழிற்பெயர்க்கண் ணல்விகுதிநீ ங்க வவ்வெதிர்காலப்பெயரொச்சவிடைநிலையும்மை விகுதி நீங்கநின்று தன்வரவுகண்டோடிய குற்றுகரமூர்ந்த மெய்க்கண்ணேறிநின் றிறை யுமிடைப்போதின்மைபடாது பன்முறை மேன்மேலுறுதற்பெயர்ச்சி யும் பொருளாகக்கொண் டிருவகைப்பகுதி யொருவகை யெச்சமாக நிற்றலின் சிறிதுமிடத்தானுங் காலத்தானும் பிரிவுதோன்றாது செறி ந்து பன்முறைமேன்மேலெழு மானந்தத்தேனென்று குறித்ததென்று ணர்க.

உள்ளத்தழிவிலடுப்பது ஆநந்தமாகலிற்றேனென்பதையுவமக்கு றிப்பாற் சிவாநந்தத்தேனென்றதென்றுணர்க.

தேனுண்டவண் டசைவின்றியத்தேன் மயமாயிருத்தல் போல- ஆநந்தாநுபவத்தர் போதவசைவின்றி யிவ்வாநந்தமயமாயிருத்தலி னுவமையாகக் குறிக்கப்பட்டதென்றுணர்க. இதனையொப்புமைக்கூ ட்ட மொட்டாதிகளாக் கூறுவாருமுளராலோவெனி,னவ்வாறுகூறி னும் பொருள்சிதையாமையி னொருவாறமையுமென்க. போதவசை

வின் கட்டோற்றல் விடயாநந்தமாகலிற் போதவொழிவின்கட்டோற்றல்சிவாநந்தமெனக்குறித்தற் குள்ளத் தழிவிலடுக்குந் தேனென்றதென்றுணர்க. எங்ஙனமெனின், உள்ளத்தழியாமையி னடாத்தேனென்றெதிர்மறுக்கப்படுதலினென்க. மதுரம்பற்றித்தேனையாநந்தத்திற் குவமைகூறுவாரு முளராலோவெனின், அதுநாவிடையமா யிறைப்போதுநிற்றலினித்துணைச்சிறப்பின்றென்க.

அன்பரெலாமுண்ண வென்பதில் அன்பர்என்பது, பொருள்புகழாதியைக்குறித்துப் பயில்வோரைநீக்கிச் சிவாநந்தமெந்நாளடைதுமென் றிடைவிடாததனையே விரும்பிப்பயில்வோரைக் குறித்ததென்றுணர்க. எலாமென்பது-சரிதாதிகன்ம மார்க்கங்களைக்கூறும் பிறநூல்களெல்லாம் பருவநோக்காது சாதிசமயாசாரவிகற்பங்களை நோக்கிச் சிலரைநீக்கியுஞ் சிலரைநிறுவியு மதிகரித்தல்போலாது, அச்சாதிசமயாதிகளி னுயர்ந்தோர் தாழ்ந்தோரியாரேனும் பருவத்தராயினிந்நூற்குரியராவரென்பது குறித்ததென்றுணர்க.

உட்கொளவென்னும்பொருளுட்கொண்டு பொருட்டுப்பொருளிற்போந்த உண்ணவென்னும் வினையெச்சம் ஆநந்தாநுபவத்திற்கு விடாதவிலக்கணை யாயிற்றென்றுணர்க. என்னையெனில், உண்ணலிற் பசிநீங்கல்போல ஆநந்தாநுபவத்திற் பசுத்துவநீங்கலினென்க. பயன் காரணம்பற்றிவந்த வொழிவிலொடுக்கநூலென்பது ஒழிவிலொடுக்கமென்னு நூல், ஒழிவிலொடுக்கந்தருநூலென விருவழிக்கும் பொதுவாயசந்தியான் வந்தமையிற் றன்னைவேதாந்தத்திற்குஞ் சித்தாந்தத்திற்கும் பொதுவென்று குறித்ததென்றுணர்க.

ஒழிவிலொடுக்கநூ லுரைத்தானென்பதில் வேற்றுமைசாரியையுருபுமுதலியவொன்றும் விரியாதுநிற்றலின், ஞானாசாரமன்றிக் கருமாசாரமொன்றும் விரியாத விந்நூலி னின்மலத்தன்மை தோன்றிற்றென்றுணர்க. உரைத்தானென்பது - ஒருவர் மதிநுட்பத்தாற் றாங்கண்டறிந்த மாற்றுயர்ந்த பொன்னின்றன்மையைப் பிறருமறிந்துபயன்கோடற்குக் கட்டளைக்கல்லினுரைத்துக் காட்டல்போற் சுருதிகுரு வநுபவத்தாற் றாமநுபவித்தறிந்த சிவாநந்தப்பேற்றின்றன்மையைப் பக்குவருமறிந்துபயன் கோடற் பொருட்டு நூற்கணுரைத்துக் காட்டினாரென்று குறிப்புறுத்திற்றென்றுணர்க.

என்னெனி லுரையென்பது பொன்னுரையும் பொருளாகக்கோடலி னென்க. உரைத்தான்என்னுபயனிலை-செயப்படுபொருளி னிறுதியினியையாது செய்ப்படுபொருட்கும் கருவிப்பொருட்குமேற் ருடலை மேல்வைத்து என்பத னிறுதியிற்றொடர்ந்து நின்றதென்னெனிற் சிவஞானத் தீக்கையுடையராயுரைத்தா ரென்பது மன்றித்தமதாசாரியர்திருவடிசான்ருகத் தாங்கண்ட வநுபவத்தை விளங்க வுரைத்தாரென்பதுங் குறித்தற்கென்க என்னை.

தாடலைமேல் வைத்து எனவே சான்ருகவைத்து என்பதுதானேயமையுமாகலின்,தலைமேல்வைத்து என்பதன்பின்னிற்கக்கடவதாய ஓர்ந்துஎன்பது செய்ப்படு பொருட்பி னிறுதிநிலையாய் நின்றதென்னெனின், இந்நூல்கற்ருேர்க்குக் கருமங்குறைந்து ஞானமேலிடுதலுண்மைகுறித்தற்கென்க. எங்ஙனமெனின்,அவ்வோர்ந்துஎன்பதுவினைக்குறையாகலினென்க,உள்ளத்தழிவிலடுக்குந்தேனையன்பொலாமுண்ண வொழிவிலொடுக்கநூ லோர்ந்துரைத்தான் எனக்கொண்டு போதவொழிவின்கண் ணடுப்பதாய வாநந்தத்தை யன்பொல்லா மநுபவிக்கும்பொருட்டு வேதாகமமுடிபான ஞானநெறியையாராய்ந்து ஒழிவிலொடுக்கமென் ருேர்நூலை யுரைத்தார்எனப் பொருள்கூறுவாரு முளர். அங்ஙனங்கூறின் ஆசிரியர்பரஞானமுடையாரென்பதுதோற்ருது,அபரஞானமுடையாராகப் பொருள்படுமாதலினும்அபரஞானத்தாற் கூறப்பட்டநூல் மிகச்சிறவாமையானு மதுபொருந்தாதென்க.

இந்நூலியற்றற்கேற்ற நற்பொருளுடைமையுஞ் சிறப்புப்பாயிரவிலக்கணத்து ளாக்கியோன்பெயரே யெனமுதனிறுத்தப்பட்டநிமித்தகாரணச் சிறப்புடைமையும்,இச்செய்யுண் முடிபுக் கெழுவாயாந்தலைமை யுடைமையும்பற்றி வள்ளலென முதனிறுத்தியதென்கஇந்நூலாசிரியர்க் காசாரியரிவரொன்பதுதோன்றற்கு அவ்வள்ளலென்ப தன்புடைகுருராயனென்பதை நிறுத்தியதென்க. இங்ஙனம்ஆசாரியரென்பவர் பிள்ளையாரென்பது தோன்றற்கு ஞானசம்பந்தனென வைத்தல் வேண்டுமாகலின், அந்தஞானத்தைக் குறிக்கும் பாசவெற்றியாய வாதுவென்றவென்பது முன்கூட்டிச் சம்பந்தனென வதன்புடைனிறுத்தியதென்க.

இரண்டாமடிக்கட் பிள்ளையார் தாள்க ணிறுத்தத்தொடங்கி முன்னர் அத்தாள்களி னியற்கை யருளென்று குறிக்க வள்ளலென்றும் அதன்வடிவ மாநந்தமென்றுகுறிக்க மலரென்று முறையேவைத்து

வள்ளன்மலர்த்தாளென நிறுத்தியதென்க. தாள்களன்றியும்-பிள்ளையா ரும் அருளியற்கையரோயென்பது குறிக்கச் சம்பந்தனென்னுஞ்சத்த ந்தோற்றியவுடன் வள்ளற்சத்தந்தோன்றநிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தியவை-சொற்பொருண்முறைநிலை- தாளென்பதற்குந் தலையெ ன்பதற்குமுள்ள சொற்பொருட்சம்பந்தவின்பம்பற்றித் தாடலையென் றும் தலையென்பதற்கும் மேலென்பதற்குமுள்ள உரிமைநோக்கம்பற் றித்தலைமேலென்றும், மேலென்னுமிடப்பொருட்கு வைத்தற்றொழி ல்சிறந்ததுபற்றி மேல்வைத்துஎன்றும், வைத்துஎன்பதற்கும் உரை த்தானென்பதற்கும் இறுதியுமுதலுமினமாதல்பற்றிவைத்துரைத்தா னென்றும், முறையே நிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தியவைசொ ன்முறைநிலையும் சொற்பொருண்முறை நிலையுமாம்.

இங்ஙனம் முற்றுமுறைநிலை கூறப்புகின் மிகப்பெருகுமாதலினொ ருவாறுகாட்டினம், மற்றையவு மிவைகொண்டுணர்கவென்க. இச்செ ய்யுட்பொருள் ஆசிரியர தருளறிவின்மாட்சிமையை வெளிப்படையா னுங் குறிப்பானும் விளங்கவிரித்தலின் வாகைத்திணையுட் சால்புமு ல்லைப்பொருளின்பாற்பட்டதென்க.என்னை, சால்புமுல்லைப்பொருள் வான்றோயுமலையன்ன,சான்றோர்தஞ்சால்புரைத்தன்று, என்பவாகலி ன், இச்செய்யுள் தன்னுட்செயப்படு பொருளாய்நின்ற நூற்சிறப்பை த் தன்னானுந் தன்னுறுப்புக்களானுங் குறிப்பாற் குறித்துநின்ற நன் னோக்குடைச் செய்யுளென்றுணர்க. அங்ஙனங்குறித்தவை யெங்ஙன மெனின்.

இச்செய்யுள் தான் கலிப்பாவஞ்சிப்பா ஆசிரியப்பாவென்னு மு ப்பாவினுஞ் சிறந்தவெண்பாவாகலி னிக்குறிப்பால்இந்நூல்சரிதைநூ ல்-கிரியைநூல்-யோகநூல் என்னு முந்நூலினுஞ்சிறந்த ஞானநூலெ ன்றுகுறித்ததென்க,தான்ஈரசையானுசிட்டிருவகைத்தளைதழீஇ யொ ழுகிசைச் செப்பலோசையான் வந்ததாகலி னிக்குறிப்பாலிந்நூல் ஆ கமமுடிவும் வேதமுடிவுங்கூறுமிருவகை நெறியுமொருவகை நெறி யாத்தழீஇக்கொண்டிருந்தமை குறித்ததென்க.

தான் ஒன்றடுத்தவிரட்டை முப்பத்தா றெழுத்துக்களைக்கொண் டுநிற்றலினிக்குறிப்பானிந்நூல் பாசமொன்றடுத்த தத்துவமுப்பத்தா றென்று மம்முப்பத்தாறன்றன்மையிவையென்று பகுதறிதல்வகையு முணர்த்துவதெனக்குறித்ததென்க. தான்நான்கடுத்த முப்பத்தாறசை

களை யசைத்துநிற்றலினிக்குறிப்பானிந்நூல் அத்தத்துவ முப்பத்தா றனையு நியதிகளைதன்முறையையுணர்த்துவ தெனக்குறித்ததென்க.அஃதேன், முப்பத்தாறன்மே னுன்கடுத்ததென்னெனின்-ஆன்மதத்துவத்தின் வன்மைதோன்றற்கோரசையும், வித்தியாதத்துவத்தின்வலி தோன்றற்கோரசையு,நாததத்துவத்தின் பெருமைதோன்றற்கீரசையுமிருந்தனவென்க. தான்-பதினைந்துசீர் சீர்கொளநிற்றலி னிக்குறிப்பானிந்நூல் ஆசாரியத்தன்மை சீடத்தன்மை பதித்தன்மை பசுத்தன்மை பாசத்தன்மை உபதேசத்தன்மை பக்குவத்தன்மையோகநிவர்த்திகிரியைநிவர்த்தி சரிதைநிவர்த்தி விரத்திவிளக்கந் துறவுத்தன்மையருளவத்தைத்தன்மை வாதனைமாண்டார் தன்மை நிலையியல்புஎன்னு மிப்பதினைந்தனையுஞ் சீர்பெறக்கொண்டதெனக்குறித்ததென்க.

தானெழுவகைத் தளையினியைந்ததாகலி னிக்குறிப்பானிந்நூல் ஆன்மதரிசனம் அருட்டரிசனம் பரைதரிசனம் பரையோகம் பரையோகநீக்கம் போதவொழிவு இன்பப்பேறு என்னும் எழுவகைநிலையுமறிவிப்பதெனக் குறித்ததென்க. தான்-தனிச்சொல்பெற்று நான்கடியுடனடந்ததாகலி னிக்குறிப்பானிந்நூல்கூறு மொப்பற்றஞானமும் சுத்தச்சரிதை சுத்தக்கிரியைசுத்தயோகம் சுத்தஞானம் எனநான்குபாதத்தோடு நடப்பதெனக்குறித்ததென்க. தான் -ஒரூஉத்தொடையொடு முத்தொடையானியன்றதாகலி னிக்குறிப்பானிந்நூற்சுருதிகுருஅனுபவமென்னு மூன்றுமொத்தியன்றதென்க குறித்ததென்க.

அல்லதூஉம் -இச்செய்யுளடிநேரடியாய் விதித்தவெழுத்தெல்லையி னிகவாதுநிற்றலி னிக்குறிப்பா னிந்நூல் மெய்வீட்டினெறித்தாயவ்வீட்டினெறிக்கெல்லையாய ஞானத்தினிகவாது நின்றதெனினுமாமென்க. எல்லைஎன்னெனிற்"பத்தெழுத்தென்ப நேரடிக்களவே யொத்தநாலெழுத் தோற்றலங்கடையே,.யென்பவென்க.இங்ஙனங்குறித்ததற்கன்றே இச்செய்யுளீற்றடியி னூற்பெயரை வேறடைகொடாது தனிமையி னிறுத்தியதென்க.

இச்செய்யுள் சிறப்புப்பாயிரத்ததாயி னப்பாயிரத்திலக்கண மிதனுளிருந்த வாறெங்ஙனமென்னின்,வள்ளலென்பதனு லாசிரியர்பெயரும் குருராயன்வாதுவென்ற சம்பந்தன் வள்ளன்மலர்த்தாடலைமேல்வைத்து ஞாத்தா னென்பதனுன்,ஞானாசாரியராகியபிள்ளையாருபதேசவழித்தென வுட்கொளப்படுதலின் வழியும்,இந்நூற்றொடர் தமிழ்த்தொடராகலி னித்தமிழ்வழங்குநிலமே யிந்நூல்வழங்குநிலமெனக்கருதப்படுதலினெல்லையும்,ஒழுவிலொடுக்கநூ லென்பதனு னூற்

பெயரும் ஒழிவி லொடுக்கமென அன்மொழித்தொகைப் பெயர்மாத் திரையினில்லாது நூலென விரித்தமையி னிந்நூலுந் தொகைவிரியு டையதெனக்கருதப்படுதலின் யாப்பும்உள்ளத் தழிவிலென்பதனுற்க ருதியபொருளும் அன்பரொலா முண்ணவென்பதினுல் அன்பரொலா முணற்பொருட் டிஃதியற்றுகவென் றுள்ளெழுந்தெதிரிட்டுநின்றதா சிரியரது பெருங்கருணையெனக் கருதப்படுதலிற் கேட்போரும் உள் ளத்தழிவிலடுக்குந் தேனென்பதனுற் பயனும்புலப்படுமாகலி னவை யிருந்தவா றிங்ஙனமென்க.

இப்பாயிரச்செய்யுள் முற்காலத்தது.

இவ்வுரை-சி-இராமலிங்கப்பிள்ளையவர்களாற் செய்யப்பட்டது.

சிவமயம்.

அதிகார வட்டவணை.

வது	அதிகாரம்	செய்யுள்
௧.	வேதாகமப்பொதுவிலுபதேசம்.	௬௩
௨	சத்திநிபாதத்துத்தமொழிவு.	௨௮
௩	இயோகக்கழற்றி.	௩௦
௪	கிரியைக்கழற்றி.	௧௬
௫	சரிதைக்கழற்றி.	௧௪
௬	விரத்திவிளக்கம்.	௧௩
௭	துறவு.	௨௫
௮	அருளவத்தைத்தன்மை.	௪௨
௯	வாதனைமாண்டார்தன்மை.	௯
௧௦	நிலையியல்பு.	௧௩

ஆகச்செய்யுட்கள்-௨௫௩.

உ

சிவமயம்.

ஒழிவிலொடுக்கம்.

காப்பு.

விநாயகர்தோத்திரம்.

நிம்பநிழற்பா-லும்பன்முகத்தார்
செம்பதுமத்தா-ணம்புகருத்தே.

சுப்பிரமணியர்தோத்திரம்.

ஒழிவி லொடுக்கத் துரைவரநா யேற்குச்
செழிவி லொடுங்கருணை சேர்க்கு - முழுதின்பப்
பண்டைவள நாட்டும் பரமகுருப் போரூரன்
றண்டைவள நாட்டுதிருத் தாள்.

திருஞானசம்பந்தசுவாமிகள் தோத்திரம்.

வள்ள லுரைத்த வழுவிலொழி வில்லொடுக்கத்
தெள்ளுமுறை யெல்லாந் தெரிவிக்கு - முள்ளமே
யெம்பந்த நீக்கு மிறைவன் றமிழ்க்காழிச்
சம்பந்தன் பூஞ்சதங்கைத் தாள்.

ஆனைமுக னறுமுக னம்பிக்கைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுண் ணடு.

" உள்ளவுரைநாயேற் குறச்செய்யும்,, என்று பாடமோதலுமுண்டு.

ஈண்டு-இத்தோத்திரஞ் செய்யுட்கள் உரையாசிரியரால்இந்நூற்கு உரை இனிது முடிதற்பொருட்டு இயற்றப்பட்டன.

உ

திருச்சிற்றம்பலம்.

ஒழிவிலொடுக்கம்

உரைபாடம்.

முதலதிகாரம்.

வேதாகமப்

பொதுவிலுபதேசம்.

அஃதாவது,

[ஆசாரிய ரனாசாரிய ரிலக்கண முதலியவையு மிந்நூலிற் கூறிய கருத்தெல்லாவற்றையுந் தொகுத்துப் பொது வானுபதேசமாகக் கூறினமையா னிவ்வதிகாரத் திற்குப் பொதுவிலுபதேசமென்று பெயராயிற்று.]

க-கவி-அவதாரிகை.

குருஸ்தோத்திரம்.

வெண்பா.

வேதா கமப்பவுரி வீசுங் களாசநிலை
யாதார வெற்பி லபிடேகம்-போதத்
திருளிலெழு பாநு வெனதொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை.

(இ-ள்.) வேதாகமப்பவுரிவீசுங்களாசநிலை,, எ-து. வேதாகமங்களி னது பவுரிக்கூத்தினைப் பிரம்போடுங் கைவாரங்கொண்டுவீசி நிறுத் துமோருண்மை நிலை.

"ஆதாரவெற்பிலபிடேகம்,, எ-து. ஆறுதாரங்களாகிய பொருப் பனையன் முடியிற்சூட்டுமோர்மகுடம்.

"போதத்திருளிலெழுபாநு,, எ-து. ஆன்மபோதத்தின் கண்ண தாகிய வாணவவிருளைக் கிழித்தெழாநின்ற ஞானசூரியன்.

"எனதொழிவிலின்பக்கருணை பொழிவானெடுத்தகை,, எ-து. எனதுபோதநாசத்தின் கண்ணே யருளானந்தத்தைப்பொழியாநின்ற பிள்ளையா ருயரவெடுத்துச் சுட்டோடு மெய்ப்பொருளைக் காட்டியதிருவத்தமானது, என்றவாறு.

அரங்கின்கண் ணடிக்கின்ற கூத்தர்பலருக்கு முதல்வனாகிய கூத்தன்வந்து கூத்தைக் கைவாரங் கொண்டு நிறுத்தி யவ்வரங்கின்கண்ணுள்ள குறுமன்னியர்கட்கெல்லா முதல்வனாகிய மகாமன்னியனையே புகழ்ந்து சுட்டிநின்றாற்போல; வேதாகமங்கள்கூறிய பலசமைய நெறிகளையு மச்சமையங்கட்குரிய கடவுளரையுங் கடந்துநின்று அக்கடவுளருக்கெல்லா முதல்வனையே பிள்ளையார் பரஞானக்கண்ணினாலுணர்ந்து புகழ்ந்து சுட்டி நின்றமையால் "வேதாகமப்பவுரிவீசுங்களாசனிலே,, என்றும், நிராதாரமாகிய வருளினின்று மீதானமாகிய மெய்ப்பொருளிற் சுட்டோடு மதித்துப்பட்டு நின்றமையால் "ஆதாரவெற்பிலபிடேகம்,, என்றும், ஆன்மபோதத்தை மறைத்த வாணவ விருளை நீக்கிச் சிவத்தையறிவிக்குந் திருவருளைப்போ லிறைவனைப்பிறர்க்கறிவித்தமையால் "போதத்திருளிலெழுபாது" என்றுங்கூறினார்.

,, தோடுடையசெவியன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்' காடுடையசுடலைப்பொடிபூசி யெனதுள்ளங்கவர்கள்வ, னேடுடையமலரான்முனநாட்பணிந் தேத்தவருள்செய்த, பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

என்னுந் திருக்கடைக்காப்பான்-மெய்ப்பொருளைத் தரிசித்துச்சுட்டிப்புகழ்ந்து நின்றபோது திருவுள்ளம் மெய்ப்பொருட்கிருபாநோக்கம்வைக்க வக்கிருபாநோக்கத்தின் வழித்தாய்ச்சென்று சிவத்திலதீதப்பட்டு நின்றாரென்பதும் பிறர்க்கறிவித்தாரென்பதும் "எனதுள்ளங்கவர்கள்வன்,, என்பதனானும் "பெம்மானிவனன்றே" என்பதனானுங்காண்க. இத்திருக்கடைக்காப்பு பிள்ளையார் ஞானபோநக முண்டருளியபோது அருளிச்செயப்பட்டது. திருக்கடையாப்பு என்றுபாடங் கூறுவாருமுளர்.

பிரளயாகலர்க் கநுக்கிரகித்தலும். இது; வேதாகமங்களை முதற்பொருளாக்கி யவை யொன்றோடொன் றொவ்வாதுகூறும் பலபேத சமையநெறிகளைக் கூத்தாக்கினார்.

ஆதாரமாளையு மூடுருவி நின்ற சுழி முனையை - மேருவென்றும் - இடை பிங்கலைகளை - யதனை வலம்வருஞ் சூரிய சந்திர ரென்றும்-யோகிகள் கூறுவராகலின் "ஆதாரவெற்பு" என்றார். முடி

கூறினமையால் வெற்பென்னு மஃறிணையை யுயர்திணையாகக்கூறப்பட்டது. கை, என்பதை மூன்றிடத்துங்கூட்டுக. (கைவரங்கொள்ளுதல்) கூத்தை நிறுத்தற்பொருட்டு ஓகோவென்னு மடுக்குமொழி கூறிக்கரமுயர வெடுத்துவீசுதல். களாசம், என்பது -பிரம்பு. பிரம்போடும்வீசுமெனக்கூட்டுக. (க)

கவி-உ-அ-கை.

(அதிதீவிர பக்குவர்க்காயினும் ஞானாசாரியராலன்றிப்போதநாசங்கூடாதென வித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.)

தன்னிழப்பை யென்னகற்றுச் சாதிப்பான் சற்குருவா
மன்னுபெருஞ் சீய மதயானை-தன்னடைமேற்
சொற்பநத்தே தோன்றித் துடிப்பற்றுக் கேவலமாய்
நிற்பதுபோற் பாரா னெனின்.

(இ-ள்.)தன்னிழப்பை யென்னகற்றுச்சாதிப்பான்,,எ-து.ஒருவன்றற்போத வொழிவைச் சாத்திரங்களைக்கற் றவற்றுட்கூறியவாறே தனதுபோதத்தா னிட்டைகூடி யெங்ஙனஞ் சாதித்தடைவான்.

"சற்குருவா மன்னுபெருஞ் சீயமதயானைதன்னடைமேற்சொற்பநத்தேதோன்றி, எ-து. ஞானாசாரியனாகிய வருணிலைபெற்ற பெரியசிங்கம்போல்வான்சீடனாகிய மதயானையினது மேலாம்பக்குவத்தாற் பிரபஞ்சமாகிய சொற்பநத்தின்கட்டோன்றி.

"துடிப்பற்றுக்கேவலமாய் நிற்பதுபோல்,, எ-து. மதம்பொழியாநின்ற யானையினது சொற்பநத்தின்கட் சிங்கந் தோன்ற வதனதுமதகெர்விதமியாவுங்கெட்டு மருட்கேவலப்பட்டு நின்றாற்போலச் சீடனாகிய யானையின துட்புறனுஞ் சீவியாநின்ற போதப்பதைப்பெல்லாமற்று அருட்கேவலமாய் நிற்கும்படி.

"பாரானெனின்,, எ-து.அப்போதத்திற்கு முட்புறனாகியகிருபாநோக்கஞ் செய்யானாயின். என்றவாறு.

போதவொழிவின்கண் மெய்ப்பொரு ளிருத்தலின் மெய்ப்பொருளைத் தன்னிழப்பு, என்றார்.

மெய்ப்போதத்தாற் பொய்ப்போத மழிவதன்றி இதனை யிதனாலழிக்கத்தொடங்கின் மேன்மேல் வளர்ச்சியா யழிவு கூடாமையில் "தன்னிழப்பையென்னகற்றுச்சாதிப்பான்"என்றார்.

யானையைச் சிங்கங் கொல்வதுபோல ஞானத்தா லஞ்ஞானத்தைக்கெடுத்தலிற்"சற்குருவாமன்னுபெருஞ்சீயம்,,என்றும்;ஞாதுரு-ஞா

ட-ஞேயமாய-விவைகளொன்றுந்தோன்றாது ஆன்மாவப்பார்வையாற் சிவத்தி லதீதப்படுதலில் "கேவலமாய்நிற்பதுபோற் பாரானெனின், என்றுங் கூறினர்.

"குருவாஞ் சீயம்,, என்றமையாற்(சீடனுமியானை)என்றுவருவிக்கப்பட்டது. "துடிப்பற்றுக் கேவலமாய்நிற்பதுபோல்,, என்றுவமையாகக் கூறினமையா லீண்டு மியானையுஞ் சிங்கமும் வருவிக்கப்பட்டது. சிங்கம்போல்வான் பாரானுபி னெங்ஙனஞ் சாதிப்பானெனமுடிக்க. நடை-பக்குவம்-மேலாயபக்குவம்-எனமாறுக.

சீயம்பாரானெனி னெனமுடிந்தது- இராசசிங்கம் வந்தானென்பதுபோலக்கொள்க. (உ)

கவி-ந-அ-கை.

(ஆசாரியனையு மநாசாரியனையுமாணாக்கனுக்கிங்ஙனமெனவித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.)

கூலித் தொழிலாளர் கொண்டுவிற்போர் போன்றகுரு
வேலைப் பகடிகளை மேவாதே - காலம்போற்
பார்த்திருக்க வைத்த பரமகுரு வைப்பரவ
வார்த்தையிலே தீண்டா மநம்.

(இ-ள்.)கூலித்தொழிலாளர் கொண்டுவிற்போர்போன்றகுருவேலைப்பகடிகளைமேவாதே,, எ-து. வேலைசெய்து கூலிவாங்கிக்கொள்ளுங் கூலித்தொழிலாளரையும், ஓர்பொருளைக்கொண் டோர்பொருளைவிற்கும்வணிகரையும்போன்று, பிறர்க்குக் கிரியைகளைச்செய்து காட்டியும்-உபதேசங்களைக்கூறியும், அவர்கையி லருத்தம்பறிக்கும்-தமக்கியையாத-குருவென்னும் பெயர்கொண்ட தொழிற்செய்யும்பகடிக்கூத்தாடிகளை மாணு நீ மெய்க்குருவென்றடையாதே.

"காலம்போற் பார்த்திருக்க வைத்த பரமகுருவைப்பரவ வார்த்தையிலே தீண்டாமநம்,, எ-து.கதிர்வலம்வருதலாற்-கணம்-நாழிகை நாண்-மாதம்-இருது-வருடம்-யுகம்-முதலியகாலங்களு மக்காலங்களோடுந்தோன்றும் பிரபஞ்சங்களு மநந்தபேதமாய்த்திரியவுந் தனக்கோர்திரிவின்றியவற்றோடுந் தாக்கற்றிருந்த காலதத்துவம்போல மாயை

யிற்றோற்றியகருவிகளு மிக்கருவிகளாற்காரியப்பட்ட பிரபஞ்சங்களு மநந்தபேதமாய்த் திரியவுந் தனக்கோர்திரிவின்றி யிவற்றோடுந்தாக்க ற்றிருந்த வருளே வடிவாகக் கிருபாநோக்கம்வைத்து மாணாக்கனைச் சுட்டற்றிருக்கவைத்த மேலாகிய ஞாநாசாரியனைத் தோத்திரம்பண் ண வோர் வசனமுமில்லை தியானிக்கவெனின்; மனமு மவனைத்தீண் டாது, ஆகலின் அக்குருவையடைதி. எ-று.

கதிர்வலம் வருதலாற் கணமுதலிய கால பேதங்களும் பிரபஞ் சபேதங்களு நாநாவாய்த்தோற்றினு மவைக டோற்றற்கும் அதுவல ம்வருதற்குங் காலதத்துவம் ஏதுவானாற்போல;மாயையிற்கருவிகளு ம்பிரபஞ்சங்களு நாநாவாய்த்தோற்றினு மிவைதொழிற்படுதற்கு மி வை மாயையிற் றோற்றுதற்குந் திருவரு ளேதுவாயிற் றென்பதுங் காண்க.

பரமகுரு சூக்குமைவாக்குந் தற்போதமுங்கடந்த சிவமென்றறி விக்கவேண்டி "வார்த்தையிலே தீண்டாமநம்,, என்றார். (கூ)

கவி-ச.அ-கை.

(அநாசாரியனுக்குமவனிடத் துபதேசங்கேட்ட வபக்குவனுக்குங் குற்றம்வருமென வித்திரு வெண்பாவிற்கூறுகின்றார்.)

குட்டித் திரட்கரடி யாறெழுகக் கோன்குதித்துக்
கட்டிப் புதைந்த கதையாகுந்-துட்டமலப்
பித்திலே மூத்தவர்கள் பேய்பிதற்றும் பேதையர்க்குப்
புத்திபோற் காட்டும் பொருள்.

(இ-ள்.) குட்டித்திரட்கரடியாறெழுகக்கோன் குதித்துக் கட்டிப்பு தைந்தகதையாகும்,, எ-து. பலகுட்டிகளோடுங் கரடியானது நதிவெ ள்ளத்தோடுஞ்செல்ல வதனது கரைக்கணின்ற வோரிடைய னதனை யாடெனக்கருதி யந்நீரிற்குதித் ததனைப்பற்ற வஃதிவனைப்பற்ற வஃது மிவனு மவ்வெள்ளத் தாழ்ந்தனனொன் றுலகத்தார் கூறுங்கதைபோல வாகும்.

"துட்டமலப்பித்திலே மூத்தவர்கள் பேய்பிதற்றும் பேதையர்க் குப் புத்திபோற் காட்டும்பொருள்,, எ-து. கொடிதாகிய மும்மலப் பைத்தியத்தான் முதிர்ந்த வாசாரியரல்லா ரோர்காற்கூறிய தோர்கா ற்கூறாது பேய்பிடித்தாற்போலும் பிதற்றுகின்றவபக்குவர்க் குபதே சம்போலுங் கூறிய வருத்தம்.

பரஞானமென்பது சிறிதுமில்லாதா ரபரஞானங்களைக்கற்றுக்கொண்டு மனைவிமுதலிய குடும்பவெள்ளத்தி லாழ்ந்துகிடக்கின்றபேர்சிலர் டம்பநிமித்தங் கேழ்க்க வவர்க் கருத்தநிமித்தமுபதேசிக்க- அந்தவுபதேசப்பொருளா லிருவருக்குந் தோடமேலிட்டுப் பிறவிச்சாகரத் தாழ்வர். ஆகலினிக்கதையை இப்பொருளுக்குவமையாகக் கூறினர்

இடையன்கரடியை ஆடென்றுங் கரடி யவனை நதிகடத்தும்புணையென்றுங்கருதினதுபோல; வபக்குவனைப் பக்குவனென்று மநாசாரியனை யாசாரியனென்று மிருவரு மாறுபாடாய்க் கருதினரென்பதுமாம். (ச)

கவி-ரு-அ-கை.

அநாசாரிய ரிலக்கணமு மாசாரிய ரிலக்கணமு மித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

குருட்டரிப்ப னார்க்குங் குபேரனென்று பேரோ
கருப்பிரத மோத்தையோ காட்டு-மருட்டரித்த
வாசானைப் போல்வரோ வாரூறுக்கப்புறத்தே
பேசா திருத்தவல்லாப் பேர்.

(இ-ள்.) குருட்டரிப்பனார்க்குங்குபேரனென்றுபேரோ-கருப்பிரத மோத்தையோகாட்டும்,, எ-து. பிறவியந்தகனாகிய வரிப்பாளனுக்குங் குபேரனென்று பெயருண்டுகொலோ,கரும்பினதிரதத்தைமோத்தை யாடறிந்துகூறுமோ, அவைபோலும்.

“ அருட்டரித்த வாசானைப்போல்வரோ வாரூறுக்கப்புறத்தே பேசாதிருத்தவல்லாப்பேர்,, எ-து. அருள்வடிவமல்லாதமாயாவடிவங்கொண்ட வநாசாரியானார்-முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்துநின்ற சிவத்தோடு மாணக்கனை யிரண்டறக் கலப்பித்து மவுநமாய்வைக்கஅருளே திருமேனியாகக் கொண் டெழுந்தருளிவந்த ஞானசாரியனைப்போலு மாவாரோ. எ-று.

குருட்டரிப்பனுக்குக் கைப்பரிசமேயன்றிக் கட்பார்வையின்மையாற் பொற்பொடியேதோன்றா தங்ஙனமிருப்ப வவனையுஞ் செலவத்தா னளகேசனென்று கூறக்கூடுமோ வதுபோல்; அனாசாரியருக்குக் கிரியைத்தொழிலன்றி ஞானமேயில்லை. யங்ஙனமிருப்ப வவனையுங்குருவென்று கூறப்படுமோ, என்றும், மோத்தையாடு கொழுந்தாடைதின்பதேயன்றிக் கரும்புதின்ன வறியாதாகலி னதனதிரதத்தையறிந்திங்ஙனமென்று தனதுகுட்டிக்குக்காட்டவறியுமோ, அதுபோல அனாசாரியர் ஆகமங்கள்.

கூறுமந்திரகலை-தந்திரகலை - உபதேசகலைகளுள், உபதேசகலையைவிட் டிருவகைக்கலைகளை யாராய்ந் தவற்றுட்கூறிய சரிதாதிகளைச்செய் தவற்றான்வரும் விடையாநந்தாநுபவம் பெறுவதேயன்றிச் சிவாநந்தானுபவ மனுவளவேனு மறியார்; அங்ஙனமிருப்பப் பிறர்க்கச்சிவாநந்தாநுபவ மெங்ஙனங் கூறுவார். என்றும், இந்தவுவமைகளா லறிவித்தவாறுகாண்க.

அஃதன்றியும், ஆடோகாட்டும் என்னுமெதிர்மறை ஓகாரம் அவ்வாட்டைமறுத் தியானையைக் காட்டிநின்றதாகலிற் கருப்பந் தோட்டத்தைப்போற் சிவாகமம், அதனுட்புகுதும் ஆடு யானைபோல் இதனுட்புகுதுங் கிரியாகுரு- ஞானகுரு.

ஆடு கரும்பைவிட் டிலையைத்தின் றதனதுசுவையைத் தானுமறிந்து தனதுகுட்டிக்குங் காட்டுதல்போலவும், யானை யிலையை விட்டுக்கரும்பைத்தின் றதனது சுவையைத் தானுமறிந்து தனதுகன்றுக்குங் காட்டுதல்போலவும், கிரியாகுரு-மந்திர- தந்திர-கலைகளை யாராய்ந் தவற்றுட்கூறிய சரிதாதிகளை யநுட்டித் தவற்றான்வரும் விடையாநந்தத்தைத் தானு மனுபவித்துத் தன்னையடைந்த சீடனுக்கு மவ்வுபதேசங்களா லவ்வாநந்தத்தை வருவிப்பனென்பதும், ஞானகுரு; மந்திரதந்திரகலைகளைவிட் டுபதேசகலையை யாராய்ந் ததனுட்கூறிய ஞாநாநந்தத்தைத் தானும்பெற்றுத் தன்னையடைந்த பக்குவனுக்கு மந்த ஞாநாநந்தத்தை வருவிப்பனென்பதுங் காண்க.

(உ-ம்) பிரபுலிங்கலீலை "புறம்பு காண்குவன் புல்லிய னீசனை,யறிந்த ஞாநி யகமுறக் காண்பனு, லெறும்பி காண்டறி லின்கரும்பேகொளுஞ்,செறிந்த வாடிலை தின்பன வென்பனவே,,

அசகசாந்தரம் என்னுங் கிரந்தசமாதியும் - அது.

குருட்டரிப்பனென்பதைக் "குருட்டரிப்பனூர்,, என்றிழிபின்கட்பன்மையாகக் கூறினார்.

கட்பார்வையின்மைபோன் ஞானமின்மை.கைப்பரிசமறிதல்போற் கிரியைகளைச்செய்தல். என்பதுங் காண்க. (௫)

கவி-கூ-அ-கை.

(சாத்தியனேயன்றி சாதகன் ஞானோபதேசம் பண்ணுதல்குற்றமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.)

உ

தன்னறிவு சாட்சியல்லாற் சாயுச் சியப்பயனைச்
சொன்னபிழை கெட்டேன் றொலைப்பரோ-முன்னே
நடவா வழியொருவன் சொல்ல நடந்து
தடுமாறி நொந்தறியா தார்.

(இ-ள்.) தன்னறிவுசாட்சியல்லாற் சாயுச்சியப் பயனைச் சொன்னபிழைகெட்டேன் றொலைப்பரோ,, எ-து. சிவாநுபவ நன்றாய் விளங்கிற் றென்பதற்கு மஃதின்றென்பதற்குந் தனக்குத் தன்னறிவு தானே சாட்சியாயிருக்கவும் பயனைக்குறித்து மயக்கத்தா லந்தவநுபவந் தனக்குண்டுபோற்காட்டிப் பிறர்க்கு வீடடையு நெறியானவுபதேசப் பொருளைக்கூறிய பாவங்களைக்கெட்டேன், எந்தக்கால நீக்கிக்கொள்வரோ.

"முன்னே நடவாவழி யொருவன்சொல்லநடந்து தடுமாறிநொந்தறியாதார்,, எ-து. அஃதன்றியுந் தாமுன்செல்லாதவோரூர்க்குப் பின் செல்லுங்கா லவ்வூ ரடையு நெறியாதென் றந்நெறிக்கட் டான்முன் நடவாவொருவனைக்கேட்ப வவன தன்கட் சென்றான்போன்று நெறியல்லா நெறிகூற வீதுண்மையெனக்கருதி யந்நெறிகட்சென்று முன்னிருந்தவூரும் பின்னடையு மூருமன்றி நடுவிடைத் தடுமாறி மநமுடல் வருந்தி யறிந்தவரலர். எ-று.

ப-ம். ஐயன்-காளி-சந்நிதியி லசத்தியங்கூறினர்க்கு மிம்மைக்கண்ணே துன்பம்வருதலிற் பூரணசிவத்தின் சந்நிதியி லசத்தியங் கூறியபாவந் தொலையாதாகலிற் "கெட்டேன்றொலைப்பரோ என்றும், வாக்காற்கேட்டறிந்து காயத்தாற் சென்றடையுமூர்க்கு நெறியறியாவொருவனெறிகூறக்கேட் டதன்கட்சென் றதனான்வருமிடரநுபவித்தறிந்தவர் மநத்தானுஞ்சென்று கூடுதற்கரிய வீடடையுநெறியைத் தாமறியாதிருந்து மறிந்தார்போன்று பிறர்க்குக்கூறுவர். ஆகலி னிங்ஙன முவமை கூறினர்.

செறலின்கட் (டம்)என்னும்பன்மை தன் என்னுமொருமையாய்வந்தது. "அல்லால்,, என்பதை மயக்கத்தாலெனக்கொள்க.

"முன்னே என்பதை, யிரண்டிடத்துங் கூட்டுக. கெட்டேன் என்ப திரக்கக் குறிப்பின்கண்வந்த வழக்கச்சொல். (சு)

கவி-எ-அ-கை.

(ஞானசாரியராயினும் பக்குவனையறிந்துபோதியாராயி னவனை யுமாசாரிய ரலரென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.)

பொய்போகப் போகப் பொருந்திப் பொருடானுஞ்
சையோக போக தரங்கத்தி- னையும்
பரிபாகங் கண்டு பதையாமற் பார்க்குங்
குருவேகாண் ஞானக் குரு.

(இ-ள்.) பொய்போகப்போகப் பொருந்தி,, எ-து. பொய்யாகியகருவிகண் முப்பத்தாறு நீங்கநீங்கவே யவைகளைப் பகுத்தறிந்து நீங்கி நின்ற வறிவு தானென்று தன்னை யருளாலுள்ளபடி கண்டு பின்பு அருட்டரிசனம்பரைதரிசனம் பரையோகம் என்னு மிவற்றையடைந்து.

"பொருடானுஞ்சையோகபோகதரங்கத்தி னையும் பரிபாகங்கண்டுபதையாமற் பார்க்குங்குருவேகாண்ஞானக்குரு,, எ-து. மெய்ப்பொருடானாகிய வநுபவசத்தியிற் றோன்று மாநந்தபோக சமுத்திரத்தலையி லவன்கரைந்துபோகுந் தீவிரதரபக்குவ மீதென்றுகண்டு மாணக்கனதுபோத மணுவளவேனும் பதையாதடங்கக் கிருபாநோக்கம்வைக்குமாசாரியனே ஞானாசாரியனாவான். எ-று.

ப-ம். சிவகரணம்பரையோகமளவுந்தொடர்தலிற் "பொய்போகப்போக,,வென்றார்.

" சையோகம்,, என்றதனுபவசத்தி. அது பரையோகத்திற்குஞ் சுகாதீதத்திற்கு மிடையேதோன்று மாநந்தப்பேற்றிற்கிடம்.

" போகதரங்கத்து,, என்றமையாற் சமுத்திரம்வருவிக்கப்பட்டது. "தரங்கம் ஆநந்தமேலிடல். அவ்விடத் தான்மபோதங்கெடுமாகலின் 'னையும்,என்றார்.

அடிதொடங்கி யநுபவமுற்றுங் கூறினமையா லிவ்வநுபவமுற்றும்பெறு மவனதிதீவிரபக்குவ னென்பதுங் காண்க. (எ)

கவி-அ-அ-கை.

(ஆசாரிய னுபதேசங்கூறுமாறு மாணக்க னேற்றுக்கொள்ளுமாறு மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.)

தேனுண் டுமிழுந் திறம்போற் சிவாநந்த
மோனந் துளும்பி மொழிகாலத் - தேனின்று

தோன்றிருது போலுமொன்றைச் சுட்டாது கேட்பவர்கட்
கான்றதவம் வேத மது.

(இ-ள்.) தேனுண்டுமிழுந் திறம்போற்சிவாநந்த, மோனந் துளும்பி மொழிகாலத்தே,, எ-து. தேனை நிறையவுண் டதனை மீட்டுங் கக்குந் தன்மைபோ லுட்புறனு யெங்கு நிறைந்து மவுநமா யிருந்த சிவாநந் தவெள்ளங் காருண்ணியத்தாற் றதும்பி ஞாநாசாரியருபதேச மொழி களைக் கூறுங்காலத்தளவும்.

"நின்று-தோன்றிருது போலுமொன்றைச்சுட்டாது கேட்பவர்கட் கான்றதவம்வேதமது,, எ-து. பணிவிடை செய்துநின்றுதோன்றப்பட்ட விருதுகாலம்போலு மதுவிதுவென் றொன்றையுஞ் சுட்டாது பதைப்பறவிருந் ததனைக் கேட்பவர்களுக்கு மாட்சிமைப்பட்டதவமுடிவும் வேதமுடிவு மங்ஙனநின்றுகேட்குங் கேள்வியாம். எ-று.

ப-ம். ஆசாரியர்மாணுக்கனது பக்குவமறிந்து வலியக்கூறுதலேயன்றியவனையு மிவன் வலியக் கேட்கலாகாதாகலின் "மோநந் துளும்பி மொழிகாலத்தே,,என்றும், இருதுவிற் பத்திரபுட்ப பலாதிகள்தோற்றினு மவ்விருது விகாரமின்றியிருந்தாற்போற் கருவிகளோடுங்கூடியிருந்து மவற்றுட் டாக்கற்றுநின்று கேட்கவேண்டு மாகலின் "இருதுபோலுஞ் சுட்டாது கேட்பவர்கள்,, என்றுங் கூறினர்.

மோநந்துளும்பி மொழிகாலத்தென்றமையானும், ஒன்றைச்சுட்டாது கேட்பவர்களென்றமையானுஞ், சொல்லாமற் சொன்னதென்றுங் கேளாமற் கேட்டதென்று மாயிற்று.

சுட்டற நிற்கவந்தது தவப்பயனாகலி னதனைத் "தவம்,, என்றும், அங்ஙன நின்றுகேட்கு மொழியாகலி னதனை "வேதம்,, என்றுங் கூறினர். அங்ஙனஞ்சொல்லுவது மிங்ஙனங்கேட்பதுஞ்சாம்பிரதாயம். ()

தற்போதத்தாற் கூறுஞ் சொற்கட்கெல்லா மமதை யிருத்தலின் ஆங்கேமமதையிராது, என்றார். (அ)

கவி-௧௬-அ-கை.

(ஞானசாரியரது திருவாக்குச்சிறப்பித் திருவெண்பாவிற் கூறுகின்றார்.)

இருளிற் சுடரென்ன வின்றிரவி யென்ன
வருளைக் கடந்தபரா நந்தர்-திருவாக்

கமுதமழை யம்பரச்சொன் னன்னிமித்த மாங்கே
மமதையிரா தென்றே மதி.

(இ-ள்.) இருளிற்சுடரொன்ன விந்திரவியென்ன,வருளைக்கடந்தபரா நந்தர்-திருவாக்கு,, எ-து. பூதவிருளின்கட்டோற்றும் விளக்குப்போலுஞ் சந்திரன்போலுஞ் சூரியன்போலும் பிரகாசித் தாணவவிருளை நீக்குந் திருவருளையுங்கடந்துசிவாநந்தமயமா யெங்குநிறைந்துள்ள ஞாநாசாரியரது அழகியவசநம்.

"அமுதமழையம்பரச்சொன் னன்னிமித்தமாங்கே மமதையிரா தென்றேமதி,, எ-து. அமுதமழைபோலு மாகாசவாக்குப்போலு நல்லநிமித்தம்போலுமாமன்றி யதன்கட்சிறிதேனு மகங்காரமுண்டாகாதென் றறிதி. எ-று.

ப-ம். அருடோற்றுங்கான் மூவிதமாய்த் தோற்றலானு மொன்றற்கொன் றதிகமாய்ப் பிரகாசிக்கையானும் விளக்காதி முச்சுடரையுமுவமையாகக் கூறினர்.

(உ-ம்) தத்துவப்பிரகாசம் "பொறிகரணங் களையுயிர்ப்போற் போதம்போ தத்தைப்,பொருந்திநடத் திடுஞ்செயலாற் போதவுணர் வுணர்ந்தே,யறிவினது செயலோநா மெனவுணர்வுற் றிருப்ப வப்போது விளக்கெனவு மருணன்மதியெனவுங், கறைவிடியுங் காலமெனவொளிவந்துற்பவிக்கும்,, என்பதனானுங்காண்க,

நீர்மழை கைமாறின்றிப் பொழியினு முற்பத்திநாச முளவாகலினம்மழையை யுவமைகூறுமல் "அமுதமழை- என்றும்,ஆகாசவாக்குண்மையறிவித்தல்போ லுண்மையாகிய சிவத்தையறிவித்தலின், அம்பர ச்சொல் என்றும், நல்லநிமித்தங்கேட்டோர்க்குத் தாங்கருதியபொருள் கைகூடல்போ லிதனைக்கெட்டோர்க்குத் தாங்கருதியவீடு கைகூடுதலின்நன்னிமித்தம், என்றுங்-கூறினர். (௯)

கலி-க0-அ-கை-

இதுவுமது.

சாயா புருடனைப்போ லாநந்த மேதடித்த
மாயா வயிரிமகமாண்ட- நேயவுரை
யாவேசர்வீர ரசர் மடலாளர்
சாவானனந் தர்க்குச் சரி.

(இ-ள்.) சாயாபுருடனைப்போ லாநந்தமேதடித்த மாயாவயிரிமனை மாண்டநேயவுரா,, எ-து வடிவமின்றிய வாகாயத்தில் வடிவம்போற் றடித்த சாயாபுருடனைப்போல் வடிவமின்றிய பேராநந்தந்தானே காருண்ணியத்தால் வடிவம்போற்காட்டி யெழுந்தருளிவந்த (மாயைக் கோர்வயிரியரான) ஞானசாரியரதுமனோதீதமானகிருபாவசனம்.

"ஆவேசர் வீரரரசர்மடலாளர் சாவானந்தர்க்குச்சரி,, எ-து. ஆவேசமேறினர் மாவீரராயினர் ஒருகுடைக்கீழாளுமரசர் மடலெடுத்தவர் தாஞ்சாவதின்பமாய்க்கருதினோர் ஆகிய விவர்களதுமொழிகட்குச்சரியாம். எ-று.

ப-ம். ஆவேசமேறினர்-தற்செயலின்றிக் கூறுதல்போல முக்கரணங்களையுந் தமதிடத்தடக்கிக்கொண் டருளாய்நின்று கூறினமையானும் மாவீரராயினோர்,எதிர்த்தாரைக்கொல்வதேகருத்தாகக்கூறுதல்போலறிவுக் கெதிரீடாய்த் தோற்றுவனவெல்லாமதனைற் கொல்வதே கருத்தாகக்கூறுதலானும்,ஒர்குடைக்கீழாளுமரசர்-கூறியமொழிப்படியிம்மைப்பயனுதல்போ லிவர்கூறியமொழிப்படி மறுமைப்பயனுதலானும்,மடலாளர்-மற்றொன்றையுங்கூறாது தாம் நச்சிய மாதினையேபுகழ்ந்து கூறுதல்போலச், சரிதாதிகளைக் கூறாது தமது ஞானநந்தத்தையே புகழ்ந்து கூறுதலானும்,சாவானந்தர்-தாஞ்சாவதேயின்பமாகக்கூறுதல்போலத் தற்போதவொழிவையே யின்பமாகக் கூறுதலானும்,ஆவேசமேறினர் முதலிய வைவர் மொழியையு முவமையாகக் கூறினர்.

அவரது மொழிக் குவமை கூறினமையா லிவரதுமொழிவருவிக்கப்பட்டது. (௧0)

கலி-௧௧-அ-கை.

(நூன்மரபு இத்திருவெண்பாவிற் கூறுகின்றார்.)

சத்தியநிர் வாணத்தாற் றற்போதத் தாக்கறுத்து
வைத்துவழி காட்டு மறைப்புலவன்-சுத்தன்
றமிழ்க்குரிசிற் சீகாழிச் சம்பந்த னென்பா
னெமக்கருளிச் செய்த திது.

(இ-ள்) சத்தியநிர்வாணத்தாற் றற்போதத் தாக்கறுத்து வைத்துவழிகாட்டும்,, எ-து. சத்யநிர்வாணத் தீக்கையா லெனது போதத்தை

யொன்றோடும் பற்றற தொழித்துச்சிவத் தோடிரண்டறக்கலக்கவைத் தென்பால் வந்தடைந்தோர்க்கு மெனதுள்ளே தாமே நிறைந்திருந்து முத்திநெறியை யறிவிக்கும்.

"மறைப்புலவன் சுத்தன் -றமிழ்க்குரிசிற் சீகாழிச்சம்பந்தனென் பானெமக்கருளிச்செய்ததிது,, எ-து. வேதங்களையெல்லா மோதாம லுணர்ந்த ஞானப்புலவர்.மும்மலங்களை புங்கடந்துநின்ற நின்மலர். தமிழின திலக்கணமெல்லா மளவிட்டறிந்ததமிழ்வேந்தர் சீகாழியென் னுந் திருப்பதியி லெழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தப் பிள்ளை யாரொன் றியாவரும் புகழாநின்றசுவாமிகள். எம்போல்வார் வீடடைந் துய்யுநிமித்த மருளிச்செய்ததிந்நூலினருத்தம். எ-று.

ப-ம். இந்நூல்பிறர்க் குபகாரமாகக்கூறினமையால் வழிகாட்டும் என் பது பிறர்க்கெனக்கொள்க.

"மறைப்புலவன், தமிழ்க்குரிசில், என்றமையா லுபயகலைகளை யு முடையானென்றறிக. (கக)

கவி-கஉ-அ-கை.

(நூற்பயன் இத்திருவெண்பாவிற் கூறுகின்றார்.)

தாக்கற்ற பூரணத்திற் சந்தற்ற தம்மைமல
நீக்குந் துயரகல நேசித்தோர்- பார்க்கும்
வழிபலநாம் பைமறித்த வாறுநீ மாளா
வொழிவி லொடுக்கமுறைப் போம்.

(இ-ள்.)தாக்கற்றபூரணத்திற்சந்தற்றதம்மைமல- நீக்குந்துயரகலநே சித்தோர்,, எ-து. எல்லாவற்றோடுங்கூடிநின்று மவைகளொன்றோடு ந் தாக்கற்றிருந்த பரிபூரண சிவத்தோடு ஆணவ நீங்கியவிடத் திரண் டறக்கலந்து விளங்காநின்ற தம்மை யந்தவைக்கியத்தைத் தெரிய வொட்டாது மறைத் திரண்டுபடுக்கு மவ்வாணவமலதுன்ப மகன்றே க வன்புகொண்டோர்.

"பார்க்கும்,வழிபல நாம் பைமறித்த வாறுநீமாளாவொழிவிலொ டுக்கமுறைப்போம்,, எ-து. ஆராய்ந்தறியுஞ் சாத்திரநெறிகள்பற்பலவு ளவா மவைபோலும் மறைத்துக்கூறாது நாம்பையைவிரித் ததனுள்ளி ருந்தபொருளீதென்று காட்டுமாறு மாணுக்கனே யொழியாமனீயறு தியென வொழியுமிடத் தொடுங்குநெறியைக் கூறுவாம். எ-று.

ப-ம். ஆன்மாவிற்குச் சிவத்தோடைக்கிய மலமறைப்பாற் றெரியாதி ருத்தலின்,நீக்குந்துயரகலநேசித்தோர்; என்றார்.

"பார்க்கும்வழிபல,, வென்றது,பேதம் அபேதம் பேதாபேதங் களாய்க் கூறுநெறிகள்.

அநுபவ ரகசிய மெல்லாமறையாமற் கூறினமையாற் 'மைம றி த்தவர்,,என்றார். ஆன்மா கெடா ததனது போதங்கெடுதலின் 'மா ளாவொழிவில் என்றார்.

அவ்விடஞ்சுகாதிதம். அதனுளொடுங்குநெறி யிதனுட்கூறின மையால்'ஒழிவிலொடுக்கமுறைப்போம், என்றார். (௧௨)

கவி-௧௩-அ-கை.

(நூற்பெயர் இத்திருவெண்பாவிற் கூறுகின்றார்.)

சுருதிகுரு வாக்குச் சுவாநுபவ மூன்றுஞ்
சரியொத்த போதமுனைச் சார்வைத்- தெரிய
வுரைத்தநூற் பேர்கே ளொழிவி லொடுக்கம்
விரித்தநூற் கெல்லாம் விதை.

(இ-ள்)சுருதிகுருவாக்குச் சுவானுபவமூன்றுஞ் சரியொத்தபோத முனைச்சார்வை,,எ-து.ஞானாசாரியரருளிச்செய்தவுபதேசமொழிகளு மிம்மொழிகண்மேலையம்பிறவா திவற்றைத் தெளிவிக்கும்வேதாகம ங்களு மிவ்விருவகைமொழிகளி னருத்தப்படியே தம்முட்டோன்று ஞ் சுவாநுபவமுமாகிய மூவகையுஞ் சரியொத்த விடத்திற் றோன்று ம்பேரறிவாகிய பதியையு மவற்றானிப்பதியை யறியும் பசுவையு மி ப்பதியைப் பசுவிற் கறியவொட்டாது மறைத்து நின்ற பாசத்தையும்.

"தெரிய-வுரைத்தநூற்பேர்கேளொழிவிலொடுக்கம், விரித்தநூற் கெல்லாம்விதை,, எ-து. உள்ளபடி விளங்கக்கூறிய விந்நூற்பெயரை மாணக்கனே நீகேட்டி ஒழிவிலொடுக்கம் என்பதாம்.இம்முப்பொரு ளையும் பற்பலவாய்விரித்துக் கூறியநூல்கட்கெல்லா மிஃதோர்வி த்தாம். எ-று.

ப-ம். குருமொழியே யமையுமெனினுந் தீவிரதர பக்குவ மின்றியமற் றைய மூவர்க்கு மதன்மேலையம்பிறக்குமாகலின் சுருதிவேண்டிற்று. குருவுஞ் சுருதியுமுண்டாய் சுவாநுபவமின்றாயி னது பரஞான மன் று,ஆகலி னிம்மூன்றுஞ்"சரியொத்தபோதம்,, என்றார்.

இக்குறிப்பா லிந்நூலு மிம்மூன்று மொத்துக்கூறியதென்ப தாயிற்று. முப்பொருளின திலக்கண விரிவை யெல்லாஞ் சுருக்கித்தற் போதவொழிவிற் குபாயமேவிரித்துக் கூறலானும், போதவொழிவி லியாவுமொடுக்கிப் போதவிரிவி ல்யாவும்விரித்தலானு மிதனை, விரித் தநூற்கெல்லாம்விதை, என்றார். (௧௩)

(கவி-௧௪. அ-கை.)

இந்நூ லுபதேசகலையென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தந்திரகலை மந்திரகலை சார்பழுந்தச் சாற்றுமது
மந்திர சரிதாதி மார்க்கமிது - முந்தைத்
தபதி விரத்தியனைச் சார்பழியச் சாற்று
முபதேச மென்றே யுணர்.

(இ-ள்.) தந்திரகலைமந்திரகலை சார்பழுந்தச்சாற்றுவது மந்திரசரிதாதிமார்க்கம்,, எ-து. குண்டமண்டல வேதிகாதிகளைக்கூறுந் தந்திரகலைகளுங் - கிரியைகட் குரியவாகிய மந்திரங்களைக்கூறு மந்திரகலைகளும்-ஆன்மாவை யேன்மேலு மலச்சார்போ டழுந்தக்கூறு மக்கலைகண் மந்திர தந்திர கிரியாபாவனைகளாற்செய்யுஞ்சரிதை கிரியாயோகநெறிகளாகும்.

"இது முந்தைத் தபதிவிரத்தியனைச் சார்பழியச்சாற்று முபதேசமென்றே யுணர்,, எ-து. இந்நூன் முற்பவங்களி னிட்காமியத்தவம்பண்ணின தபோதனர்க்கு மத்தவத்தா னுட்பற்றறுதியுடையோர்க்கு மலச்சார்பறும்படிகூறு ஞானோபதேசமென்றுநீயறிதி. எ-று.

ப-ம். அக்கலைகளாற் போதவிரிவேயன்றி யொழிவின்மையாற் சார்பழுந்தச்சாற்றும் என்றார். இது, தபதிவிரத்தியனைச் சார்பழியச் சாற்றும் என்றமையான், மற்றையர்க் காகாதென்பதாயிற்று. (௧௪)

(கவி-௧௫. அ-கை.)

இந்நூற்கதிகாரிகளினிலக்கண மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உடற்குயிர்போற் கட்கிமைபோ லூசிநூ லொத்து
விடிற்புலிதி பாம்பினில்வீழ் வார்க்காஞ் - சுடச்சுடினும்
வாழைக்கா காவேதி மட்கலத்துக் காகாவா
றேழைக்கா காத திது.

(இ-ள்.) உடற்குயிர்போற்கட்கிமைபோ லூசிநூலொத்து விடிற்பு லிதீ பாம்பினில்வீழ்வார்க்காம்,, எ-து. உடம்பை யுயி ரபிமானித்தல் போலுங் கண்ணை யிமையானது காத்தல்போலு மூசி சென்றவிடந் தோறுஞ் சரடு பின்சேறல்போலு ஞானசாரியனைப் பிரியாதுநின் றவர் திருமேனியை யபிமானித்தும் பாதுகாத்து மவர் திருவுள்ளக் குறிப்பின்படியே சென்றும் வழிபட்டு அவர்பார்த்துப் புலி-தீ-பாம்பாதிகளிற் செலுத்தினும் பின்னிடையா தவைமேல்விழு மதிபக்குவர்க்கே யிந்நூல் கொடுக்கலாகும்.

"சுடச்சுடினும் வாழைக்காகாவேதி மட்கலத்துக்காவா றேழைக்காகாத திது,, எ-து. மிகுந்த வக்கினியாற் சுடினும் வாழைத்தண்டைச் சுடக்கூடாதவாறுபோலும் பரிசனவேதி மட்கலத்திற் பரிசித்துப் பொன்னுக்கக்கூடாத வாறுபோலும்- அங்ஙனமாசாரியாரை வழிபடமாட்டாத வபக்குவர்க் கிந்நூல்கொடுப்பினு மனுபவஞ்சித்தியாது. எ-று.

ப-ம். உயிரானது உடம்பைத் தானு யபிமானித்துத் துன்பந்துடைத்த லொப்பனைசெய்தன் முதலிய வுபசாரங்களை யதற்குச்செய்வதுபோலு மவர்திருமேனியைத் தந்தேகமா யபிமானித்துச் செய்யவேண்டு முபசாரமெல்லாஞ் செய்யவேண்டுமாகலின், உடற்குயிர் போல், என்றும்; இமையானது கண்ணைவிட்டு நீங்காதிருந் ததன்கட்டுரும் பாதிவந்து சார்வதற்கு முன்னேநின்று பாதுகாத்தல்போலு மிரவும்பகலும் விட்டுநீங்காதிருந் தவரைத் துட்ட மிருகமுதலிய வந்து சார்வதற்கு முன்னேநின்று பாதுகாக்கவேண்டும்-ஆகலிற், கட்கிமைபோல் என்றுங் கூறினர்.

அதிபக்குவர் தேகாபிமானம்விட் டவரை மெய்ப்பொருளாகக் கருதினவராகலிற் புலியாதிகண்மேற் செலுத்தினும் வீழ்வா ரென்பதாயிற்று. அக்கினிக்கும் பரிசன வேதிக்கும் விறகைச் சுடுதற்கும் உலோகங்களைப் பொன்னுக்குதற்குங் கூடுமேயன்றி வாழைத்தண்டையு மட்கலத்தையு மங்ஙனஞ் செய்யக்கூடா ததுபோ லிந்நூலாற் பக்குவர்க்கு ஞானம் விளங்குமேயன்றி யபக்குவர்க்கு விளங்காதென்பதறிக. (கரு)

(கவி-கசு. அ/-கை.)

இந்நூல்கேட்குமிலக்கண மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

ஆலிங் கனத்திலே யைந்திணையும் பாடுவோன்
மாலின்ப வாரி மறிதிரைபோற் - காலப்பூக்
கிண்கிணிவாய்ச் செய்ததுபோற் கின்னரிப்பாட் டுல்லாசங்
கொண்டவர்போற் கண்டவர்க்கா கும்.

(இ-ள்.) ஆலிங்கனத்திலே யைந்திணையும்பாடுவோன் - மாலின்பவாரிமறிதிரைபோல்,, எ-து. மாதர் கூட்டரவிற்செய்யு மைவகையாலிங் கனத்தான் வருமின்ப மைந்திணையு மநுபவித்தறிந் தொருவன் கூறிய பாட்டினைப் பாடுமோர்விடனுக் கக்கவியருத்தத்தா னவ்வின்பம் பெற் றான்போன் றுளத்தின்க ணம்மயக்கவின்பவாரியெழுந் தலைமறிவது போலும்.

"காலப்பூக் கிண்கிணிவாய்ச்செய்ததுபோல்,, எ-து. உதயகாலத் துத் தாமரையரும்பு கிண்கிணிவாய்ச்செய் தலர்ந்தாற்போலும்.

"கின்னரிப்பாட்டுல்லாசங் கொண்டவர்போற் கண்டவர்க்காகும்,, எ-து. மற்றொன்றினையுங் கேளா தொருவன் பாடுங் கின்னரிப்பாட் டோசையையே யுல்லாசமா யுட்கொண்டவர்போலு மிந்நூலைக்கேட் டறிந்தோர்க்கே ஞானாநந்தமுள்ளதாம். எ-று.

ப-ம். ஐந்திணையும் பாடுவோனுக் கதனைப் பாடுந்தோறு மவ்வி ன்பம் பெற்றான்போன் றுளத்தின்ப மேன்மேலெழுதலின், மறிதி ரை என்றார். அவனைப்போ லிந்நூற் கேட்குந்தோறு மிவர்க்குஞ் சி வானந்தம் பெற்றார்போன் றுள்ளத்தின் மேன்மேற் சந்தோடந் தோ ன்றவேண்டுமாகலின், மாலின்பவாரிமறிதிரைபோல் என்றும்; முக மலர்ச்சி தோன்றவேண்டுமாகலின், காலப்பூக்கிண்கிணிவாய்ச் செய்த துபோல் என்றும்; மற்றொன்றையுங் கேளாதிதனையே கேட்கவேண் டுமாகலின் கின்னரிப்பாட்டுல்லாசங் கொண்டவர்போல் என்று மிங் ஙன் மூவமைகூறினார்.

ஆலிங்கன பரிசபேதத்தாற் சுகமு மைந்து பேதப்பட்டதெனக் கொள்க. அஃ தைந்தென்பது - 'ஆலிங்கன மைந்து மிதழ்பானம் பதி னென்றும்,' என்னுங் காமநூலிற்காண்க. (௬௬)

(கவி-கஎ. அ-கை.)

இவைகளிங்ஙனமிருப்ப யாமெங்ஙன மவையடக்கங் கூறுமாறெ ன்று குறிப்பானவை யடக்க மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

வணங்கா வுரைக்கு வணக்கமிலை தீங்கை
வணங்கிவாழ்த் தென்னில் வளமியா - வணங்கினு
மெல்லார்க்கு நன்று யிருப்பதிலை யாதொன்று
மெல்லார்க்கும் பொல்லா திலை.

(இ-ள்.) வணங்காவுரைக்கு வணக்கமிலைதீங்கை வணங்கிவாழ்த்தெ ன்னில் வளமியா,, எ-து. போதமடங்காதே மறப்பாற்கூறு நாலுக்க டக்கமேயில்லை தீமைகளைச்செறித்தோர் நூலாக்கி யதற்கடக்கங் கூறி யிதனை யிகழாது புகழுங்கோளெனி னதனான்வருநன்மை யாதொன் றுமில்லை.

"வணங்கினு மெல்லார்க்குநன்று யிருப்பதிலையாதொன்று மெல் லார்க்கும் பொல்லாதிலை,, எ-து. நன்மைகளைச்செறித் தோர் நூலாக்கி யதற்கடக்கங்கூறினு மியாவர்க்கு நன்று யிருப்பதில்லை யிவைகளன்றி மற்றியாதோர் நூலாயினு மியாவர்க்கும் பொல்லாங்கா யிருப்பது மி ல்லை. எ-று.

ப-ம். அடங்காவுரையெனவே, யவனடக்கங்கூறினு மடக்கமன் றென்ப தாயிற்று. தீங்கினைச்செய் தடக்கங்கூறிப் புகழச் சொன்ன மையால் வரு நன்மையொன்று மின்றாயிற்று. நன்மைகள் யாவுஞ்செ றித் தடக்கங்கூறினும் பொறாமைமுதலியவற்றாற் சிலரா லிகழப்படு தலின், எல்லார்க்குநன்றுயிருப்பதிலை என்றும்; பயனின்றாய்க் கூறு மியாதோர் நூலாயினுஞ் சிலரங்கீகரித்தலின், எல்லார்க்கும் பொல் லாதிலை என்றுங்கூறினர்.

தீமைநன்மைகளை முற்கூறினமையால் 'யாதொன்றும் என்ப திவைகட்குப் பொதுவாயிருந்த வுலகக்கதைகளைக்கூறு நூலெனக் கொள்க. உரை என்பதுந் தீங்கு என்பதும், ஆகுபெயர். தீங்கு என் றமையான்(நன்மை)யென்று வருவிக்கப்பட்டது. வணக்கம்,அடக்கம். வளமியா வென்ப திகரக்குறுக்க மாதலிற், றளை தட்டாதென்பது

(கவி-௧அ. அ-கை.)

சத்தத்திற்குப் பஞ்சவதிகார வழுவுண்டாயினு மருத்தம் எல்லாநூல்களின தருத்தங்கட்கு முடிவென வித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

அறைந்த பறைகுழற்கு மாடினர்க்கு மேற்க
மறந்தழுவார் வாய்ப்பாட்டு வாரா - திறங்கேளீர்
கூடக் கரைவதலாற் கூறிற் பயனில்லாப்
பாடற்கார் பார்ப்பார் பயன்.

(இ-ள்.) அறைந்தபறைகுழற்கு மாடினர்க்குமேற்க - மறந்தழுவார் வாய்ப்பாட்டுவாரா,, எ-து. கரத்தா னறையப்பட்ட மத்தளத்தொனிக்கு மித்தொனிக் கேற்பவூதுங் குழலோசைக்கு மிதுகட்கேற்பநடனமிடுவோர்க்குமேற்பத் தம்மைமறந்தழுமகளிரது அவ்வழுகையாகியவாய்ப்பாட் டொத்துவாராததுபோலு மிந்நூ றற்போத மிழந்து நின்று கூறியதாகலி னெழுத்துமுதலிய வைந்திலக்கணங்களோ டொத்துவாராது. அஃதங்ஙனமாயினு மதன்கட்கூறியபொருட்டா னன்குளவோவெனின்;

"திறங்கேளீர் கூடக்கரைவதலாற் கூறிற்பயனில்லாப் பாடற்கார்பார்ப்பார்பயன்,, எ-து. இந்நூலின்பொருட் டிறமையை நீர் கேட்பீராக வஃதெங்ஙனமெனி னிப்பொருளைக்கேட்போ ரிப்பொருளோடுங்கூடத் தாமுங்கரைந்துபோவதேயன்றிச் சொல்லுமிடத்துத்தாமுந் தமக்குவரு மிம்மைமறுமைப்பயன்களுமில்லாதபாடற் கியாவருத் தம்பார்ப்பார். எ-று.

ப-ம். தாளமுமோசையுஞ் சரியொத்தநடனத்திற்குத்துன்ப மேலிடலாற் றம்மைமறந் ததன்மயமாயிருந் தழுவாரழுமோசை யவற்றோடொவ்வாததுபோ லின்பமேலிடலாற் றம்மைமறந் திதன்மயமாயிருந்துகூறிய விப்பாடலிலக்கணத்தோடொவ்வாதென்பது குறிப்பானறியும்படி கூறினர்.

இதனதருத்தம் போதவொழிவுஞ்சிவானந்தப்பேறுமாகலினனு மிதனைக்கேட்டவதிபக்குவ ரக்கணமேபோதமழிந் தாநந்தமயமாவ ராகலினனுங் கூடக்கரைவது என்றும்; பயன்பெறும் போதமொழிவதனுற் பயனில்லாப்பாடல் என்றுங்கூறினர். (௧அ)

(கவி-கசு. அ-கை.)

மெய்ப்பொருளையறிவித்தற்குபாயமித்திருவெண்பாவிற்கூறுகின்ருர்

போத வொழிவையுரை போய்த்தீண்டா பூதலத்தோர்
பாதமனங் கண்போலப் பற்றுமோ - நீதெளியிற்
கண்ணுடி யிற்கடலைக் கைவசமாய்க் காட்டுதல்போற்
கண்ணுரி சன்னையைப்போற் காண்.

(இ-ள்.) போதவொழிவையுரை போய்த்தீண்டாபூதலத்தோர் பாதமனங்கண்போலப் பற்றுமோ,, எ-து. ஆன்மபோத வொழிவிற் ருனுயிருக்துள்ளசிவத்தை வேதாகமசாத்திரங்களா லளவிட்டறியக்கூடாது. அஃதன்றிக் காலானடந்துசென்று மனத்தாநினைந்துங் கண்ணுற்பார்த்து மிப்பூதலத்தோ ரோரோர்பொருளை யறிந்துபிடிப்பதுபோற் கருவிகளாலு மதனையறிந்துபிடிக்கக்கூடாது. ஆகலினங்ஙன மறிந்து பற்றுவதன்றி.

"நீதெளியிற் கண்ணுடியிற்கடலைக்கைவசமாய்க்காட்டுதல்போற் கண்ணுரிசன்னையைப்போற்காண்,, எ-து. நீ யச்சிவத்தை யறியுமிடத்துச்சிறிதாகிய கண்ணுடியிற் பெரிதாகியகடலை மகவுக்குப்பிரத்தியககமாகக்காட்டுமாறுபோலும்-ஓர்நாரி யோர்புருடனுக்குக் கட்சைகையாற் கலவிக்கிடங்காட்டுமாறு போலும் யாமதனை யறிவிக்குங்குறிப்பானீயறிதி. எ-று.

ப-ம். போதவொழிவை யப்போதத்தா னறியுங்கலைகளானுங் கருவிகளானு மறியக்கூடாதாகலின் உரைபோய்த் தீண்டாவென்றும்; பாதமனங் கண்போலப்பற்றுமோ வென்றுங்கூறினர்.

பரிபூரணசிவத்தினிலக்கணமெல்லா நன்ருய்விளங்கும்படி வேதாகமமுடிவிற்கூறிய சிலவுபதேசமொழிகளையெடுத் திந்நூலிற்கூறுதலிற் கண்ணுடியிற்கடலைக்கைவசமாக்காட்டுதல்போல் என்றும்;பூரணநோக்கம்-மௌநமுத்திரை-முதலியகுறிப்பா னச்சிவத்தை யடைதற் குபாயமறிவித்தலாற் கண்ணுரி சன்னையைப்போல் என்றுங் கூறினர். (கசு)

(கவி-உ0.அ-கை)

இதுவுமது.

ஆனைக்கை போலபின வத்துவிதா னந்தமா
மோனத்தை வாக்குமன முட்டுமோ - ஞானத்தாற்

காக்கை யிருந்தமனை கைமேற் பிறையென்ற-
லாற்கருதி நீசிவமா வை.

(இ-ள்.) ஆனைக்கைபோலபின வத்துவிதானந்தமா மோனத்தைவா க்குமன முட்டுமோ,, எ-து. பரிசமறியுங்கையுங் கந்தமறியு நாசியு மொன்ருயிருக்கின்ற யானையினது துதிக்கைபோன்று •பின்னமின்றி ச் சிவமுமான்மாவு மிரண்டற்றிருந்த வத்துவிதமாகிய மோனுனந்த த்தை வாக்காற்கூறுங்கலைகளு மனேபாவனைகளுந் தீண்டுமோ.

"ஞானத்தாற் காக்கையிருந்தமனை கைமேற் பிறையென்றலாற்க ருதிநீசிவமாவை,, எ-து. ஓர்மனையையும் பிறையையு மொருவனுக் கொருவ னறிவிக்குங்காற் காக்கையிருந்த மனையென்றுங் கைவிரன் மேற் பிறையென்று மிங்ஙனமறிவித்தலா னவனறிவதுபோலு மியா ஞ்சிவத்தைக் குறிப்பா னறிவிக்கு முபதேசங்களை ஞானத்தாற் கூர்ந் து விசாரித்தறியெனி னீயுமச்சிவமாவை. எ-று.

ப-ம். கை நாசி யென்றிரண்டிருப்பா யிரண்டு விடயங்களையும் வேறுபிரித் தறிவதா யிருந்தும் பிரிபடா ததுவேயிதுவா யிதுவே ய துவா யிருப்பதுபோலச் சிவமென்று மான்மாவென்று மிரண்டுபொ ருளா யிரண்டுஞானங்களும் வேருயிருந்து மயிக்கத்துப்பிரிபடா தது வே யிதுவா யிதுவே யதுவா யிருத்தலின்; ஆனைக்கைபோ லபின்வத் துவிதம், என்ருர்.

மனைகள் பலவற்றையுங் கடந்துசென்று காக்கையிருந்தமனையை நீயடைதியென் றெருருவனறிவிக்க வறிதல்போல்; கருவிகள் பலவற் றையுங்கடந்து சென்று நாதத்துவத்தின் முடிவினின்ற சைதன்னிய ம் நீயென்றறிவிக்க வறிதலால் காக்கையிருந்தமனை என்றும்; ஒருவ னுக்கொருவன் பிறையை யறிவிக்குங்கால் விரன்மேற்பிறையென்று சுட்டிக்காட்டியறிவிக்க வவ்விரனேரேநோக்கி யப்பிறையைத் தரிசித் தல்போல, நாதாந்தத்தின்முடிவினின்று நீ திருவருளை முன்னிட்டுக் கொண்டு சிவத்தைத் தரிசிக்கவேண்டுமென் றறிவிக்க வம்முறையே சென்று சிவத்தைத்தரிசித்தலாற் கைமேற்பிறை என்றுங்கூறினுர்.

கண்போலும், ஆன்மா. விரல்போலும். திருவருள். பிறைபோ லுஞ் சிவம் எனக்கொள்க. (உ0)

(கவி-உக. அ-கை.)

தருக்கவாதிக டுர்க்குணமு மவரது மொழிகளைக் கேட்கலாகா தென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்ருர்.

முலையுண்ணி நீருண்ணு மோட்டெருமை மூடர்
சலமின்றிச் சந்துரைப்பார் தர்க்கர் - பலதாரை
வட்டிலே போலுமவர் மாயோக வாசகத்தைக்
கிட்டி னரகங் கிடீர்.

(இ-ள்.) முலையுண்ணி நீருண்ணு மோட்டெருமைமூடர் சலமின்றிச்சந்துரைப்பார்தர்க்கர்,, எ-து. பசுவினது விம்மிச்சுரந்த முலையிற்கடித்த வுண்ணிபோலுந் தடாகத்தினீரருந்து முதிர்ந்தவெருமைபோலு மறிவேதுமின்றிய மூடர்போலு நீரின்றிச்சந்தமுரைப்பார்போலு மாவார் தருக்கராயினர்.

பலதாரை-வட்டிலேபோலுமவர் மாயோகவாசகத்தைக்- கிட்டினரகங்கிடீர்,, எ-து. பல்துறுளை வட்டிலைப்போலும் பலபடக்கூறுகின்ற வவரது மாயைக்கூட்டரவாகிய மொழிகளைக் கேட்பினு நிரையமென்றறிவீர். எ-று.

முலையுண்ணி பாலுண்ணவறியா துதிரமருந்தல்போ னூலாற்சிவானந்தப்பேறடையா திம்மைப்பயன்கோடலான், முலையுண்ணி என்றும், தடாகத்திற் றன்றாகந்தீர்க்கு நீரருந்தா ததனுள்வீழ்ந்து சேறுக்கிச்செல்லு மெருமைபோன், ஞானிகள்பாற்செல்லினு மவர்கூறும் ஞானமொழிகளைக் கொள்ளாது தருக்கமாடி யவர்சித்தத்தைக் கலக்கிச்சேரலான் எருமை என்றும், மூடர் யாவ ரோதுநன்கு கூறினுந் தான் பிடித்தபிடி விடாது நிற்றல்போற் றீதாயினுந் தருக்கவலியாற் றும்பிடித்த பிடியை முற்றுஞ்சாதித்தலின் மூடர் என்றும், சலமின்றிச் சந்துரைப்போர்க்குக் கைவருத்தமேயன்றிப் பயனின்றுவதுபோலிவர்பலரோடுந் தருக்கமாடலான் வாய்வருத்தமே யன்றிப் பயன்வேறின்றாகலின், சலமின்றிச்சந்துரைப்பார் என்றும்; பலதாரைவட்டிலினீர் தாரைகடோறுஞ் சேறல்போ லோர்நெறிகூறுங்கா லதனைமுற்றுப்பெறக்கூறாது பன்னெறியாய் மலைவுபெறக்கூறலிற், பலதாரைவட்டில். என்றும்; திருவருட்போதமன்றி மாயாபோதத்தாற்கூறலின்; மாயோகவாசகம் என்றுங் கூறினர்.

இதனாற் கல்வியுடையோரேனும் பிரபஞ்சிகளினுங் கேடென்பதாயிற்று. கல்வி-பொருள்-என்னு மிரண்டு செல்வங்களு நல்லோர்பால்வரி னன்மையுந், தீயோர்பால்வரிற் றீமையு-மேன்மேல் வளர்தலி னிவர்தீயவரென்ப தாயிற்று.

இவரதுமொழிகளையுண்மையாகக் கொள்வோர்க்குந் தீதுவருமா கலிற் கிட்டினரகம் என்றார். (உக)

(கவி - உஉ. அ - கை.)

பக்குவவிலக்கண மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

குன்றழலி னொந்துநீர் தேடுங் குருடனைப்போற்
கன்றுபசு வைப்பார்க்குங் காலம்போ - லொன்றொன்றில்
வேட்ட வதி மோகி விடயம்போற் சற்குருவைத்
தேட்டமதி பக்குவமாய்த் தேர்.

(இ-ள்.) குன்றழலினொந்துநீர் தேடுங்குருடனைப்போற் கன்றுபசு வைப்பார்க்குங்காலம்போ லொன்றொன்றில் வேட்டவதிமோகிவிடய ம்போல்,, எ-து. முதிர்வேனிற்காலத்து மலைக்கட்படுந்தீவெப்பத்தான் மெய்வருந்தி நீரெங்குளவென்று தேடுமந்தகனைப்போலும், ஆவின்க ன்று தன் றாயைத்தேடுங்காலம்போலும், விடயங்கள் பலவற்றுள்ளு மோர்விடயத்தை நச்சிய மிகுந்துவந்த விடயமோகிபோலும்.

“சற்குருவைத்தேட்ட மதிபக்குவமாய்த்தேர்,, எ-து.ஞானசாரிய ரெங்குளரென்று தேடுந்தேட்டமே யதிதீவிரதர பக்குவமென்றறிதி எ-று.

ப-ம். அழலினொந்தகுருடர் வெப்பத்துன்பந் தணிப்பானீர்தெரியா துதேடுமாறுபோன் மிகுந்தபக்குவர்க்குப்பிறவி துன்பமாய்த்தோற்ற லினித்துன்பந் துடைப்பானசாரியனைத்தெரியாது தேடலின், நீர்தே டுங்குருடனைப்போல், என்றும்; கன்று காலை மாலையாகிய காலத்துத் தன்றாயை மிகுந்த வன்போடுந்தேடல்போன் முற்காலம்போ லன்றி யிக்காலத்திற் பிரபஞ்சம் பொய்யாய்த்தோற்றி மிகுந்தவன்போடு ஞா னசாரியனைத்தேடலிற்,கன்று பசுவைப்பார்க்கும் காலம்போல்என்று ம்; ஓர்விடயத்தைநச்சியவதிமோகி யதனான்வரு மின்பத்தைக் கருதிக் கருதி யவ்விடயமென்று கிடைக்குமோவென் றதனையேதேடல்போற் பேரின்பத்தைக் கருதிக்கருதி யிதனைக் கொடுக்கு ஞானசாரியனை யெ ன்றைக் கடைவோமென் றவனையே தேடலான், அதிமோகிவிடயம் போல், என்றுங் கூறினார். (உஉ)

விடயமோகிபோலென்று கூட்டுக.

(கவி - உ௩. அ - கை.)

பதியொன்றுளதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பெண்ணா ணலியாய்ப் பிறந்துவளர்ந் தேயழியு
மெண்ணாத பேத மியல்பின்றிப் - பண்ணுங்காற்
காரணகத் தாவொருவ னுண்டவனைக் காட்டுநூ
லாரணமு மாகமமு மாம்.

(இ-ள்.) பெண்ணாணலியாய்ப் பிறந்துவளர்ந்தேயழியு மெண்ணாத பேதமியல்பின்றிப் - பண்ணுங்காற் காரணகத்தாவொருவ னுண்டு,, எ-து. ஓரியல்பின்றி யனந்த பேதங்களாயும் பெண்வடிவமாயு மாண்வடிவமாயு மிவ்விருவகையுங்கூடிய வலிவடிவாகியுந் தோன்றிநின் றழியப்பட்ட வித்தேகாதிபிரபஞ்சத்திற்குத் தற்சுதந்தர மின்மையாற் றானே காரியப்படமாட்டா தாகலி னிதனை யனாதியிலே படைத்தற்கு நிமித்த காரணனாகிய கருத்தனொருத்தனுண்டு. அஃதெங்ஙனமெனின்;

"அவனைக்காட்டுநூ லாரணமுமாகமுமாம்,, எ-து. அக்கருத்தனையறிவிக்குநூல்கள் வேதாகமங்களாகும். இவற்றானறிந்துகொள்ளுதி. எ-று.

ப-ம். காரியங்களுண்டாவதற்குக்காரணம்-முதற்காரணந் துணைக்காரண-நிமித்தகாரண-மென மூன்றுவகையாயிருக்கும். இவற்றுண்-முதற்காரணம்-மண். துணைக்காரணந்-தண்டு-சக்கரம். நிமித்தகாரணங்-குலாலன்.

நிமித்தகாரணனாகிய குலாலன் - முதற்காரணமாகிய மண்ணைத் துணைக்காரணமாகிய தண்டுசக்கரங்களைக்கொண்டு - கடகலசாதி காரியங்களையுண்டாக்குவன். அவைபோற் குலாலன்போலு நிமித்தகாரணனாகிய சிவன்-மண்போலும் முதற்காரணமாகிய மாயையைத் தண்டுசக்கரம்போலுந் துணைக்காரணமாகிய தனது கிரியாசத்தியாற் றநுகரண புவன போகங்களாகிய காரியங்களை யுண்டாக்குவன். ஆகலினாலுங், கடகலசாதி காரியங்களைக்கண் டிவற்றைக்காரியப்படுத்துங் குலாலனொருவ னுளனென் றறிவதுபோலுந் தநுகரணாதிகளைக்கண் டிவற்றைக்காரியப்படுத்துங் கருத்தாவொருத்த னுளனென் றறியவேண்டும். ஆகலினானும், பண்ணுங்காற் காரணகத்தா வொருவனுண்டு என்றார்.

மற்றையநூல்க ளிவற்றைபோ லுண்மையா யவனை யறிவிக்கமாட்டா தாகலின், அவனைக்காட்டுநூ லாரணமு மாகமமுமாம், என்றார்.

(பெண்ணாண்) என்னும் பன்மைபோல் அலியையும் பன்மையாகக் கூறினமையாற் பெண்ணணுக்குரிய குறிகளிருவகையுமின்றிய புன்முதலியனவும், புழுமுதலியனவும், அலி யெனக்கொள்க. பண்ணுங்கால்-என்னு மேழனுருபை நான்கனுருபாகக்கொள்க.

(உ-ம்) சித்தியார், "காரியங் காரணங்கண் முதறுணை நிமித்தங்கண்டாம், பாரின்மண் டிரிகைப்பண்ணு மவன்முதறுணை நிமித்தந், தேரின்மண் மாயையாகத் திரிகைதன் சத்தியாக,வாரியன் குலால னாய்நின்ருக்குவ னகில மெல்லாம்,, என்பதனாற் காண்க. (௨௩)

(கலி - ௨௪. அ - கை.)

பதியிலக்கண மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தன்னை யறியாது வேறுண்டாய்த் தானறியா
துன்னி லொழி வாமுதிப்பீ ரென்றுமிலேச் - சன்னிதிக்கே
யஞ்சுதொழி லாமதனை யானந்த வாக்காலே
கிஞ்சளவு கேட்கலுமா கும்.

(இ-ள்.) தன்னையறியாது வேறுண்டாய்த் தானறியா துன்னிலொழிவாமுதிப்பீரென்றுமிலை,, எ-து. நீர்கூறியசிவந் தன்னை யறிந்துகொண்டிருக்குமோவெனின், மலரகிதம யிருத்தலி னதுதன்னை யறியாது மற்றோர் பொருளைத்தா னறிந்துகொண் டிருக்குமோவெனிற் றனது பூரணத்திற் சகலமு மடங்கி யிருக்குமாகலிற் றனக்குவேறு யோர் பொருளுண்டா யதனையறியாது நினைவோடு தான் கூடியிருக்குமோ வெனி னினைப் புண்டெனின் மறப்புண்டாகலி னது நினைப்பு மறப்புமின்றிய நிருவிகாரி,அதுதா னோர்காலத்துண்டாயதோவெனி னுற்பத்தியுண்டெனி னசமுமுண் டஃதனுநித்தியமாகலி னுற்பத்திநாசங்களொன்றுமில்லை.

"இங்ஙனம் மலரகிதமாய்ப் பரிபூரணமாய் நிருவிகாரியா யனாதி நித்தியமா யிருந்துள்ள வச்சிவம் எங்ஙன மாயையைக் காரியப்படுத்துமெனின்.

"சன்னிதிக்கே யஞ்சுதொழிலாமதனையானந்தவாக்காலே கிஞ்சளவுகேட்கலுமாகும்,, எ-து. அச்சிவத்தின் சந்நிதிக்கண்ணே பஞ்சகிரு

த்தியங்களுளவா மக்கிருத்தியத்தை யான்மாக்கண்மேல் வைத்தகாரு ண்ணியத்தான் மவுனனந்தந் ததும்பி யதுகூறு மானந்தவாக்காற் சிறிதளவு கேட்கலுமாகும். எ-று.

ப-ம். சூரிய னிச்சா யெத்தின மின்றி யிருக்கவு மவன் சந்நிதியிலொன்றுமுகையாயு மொன்றலர்ந்து மொன்றுலர்ந்துந் தாமரை முத்தொழிற் படல்போற் சிவசந்நிதானத்திலே மாயையிற் சிருட்டியாதி தோற்றலாற், சந்நிதிக்கேயஞ்சுதொழிலாம், என்றார். ஆனந்தவாக்கு-வேதாகமங்கள்.

கிஞ்சளவுகேட்கலுமாகும், என்றமையாற் பஞ்சகிருத்தியத்தின் பெருமையை யளவிடக்கூடாதென்பதாயிற்று. (உச)

(கவி - உரு. அ - கை.)

இதுவுமது.

உதியா துளதாகி யோங்கிப்பே ராம
லதிசூக் குமங்குறைந்தா காமற் - பதையாத
வாகாய முங்கா லும்போல வசைவற்ற
தேகாண் பரிபூ ரணம்.

(இ-ள்.) உதியாதுளதாகி யோங்கிப்பேராம லதிசூக்குமங் குறைந்தாகாமல்,,எ-து. தானொன்றினு லுற்பத்தியாகா தெக்காலமுமுள்ளதாய்க் கருவிகண் முப்பத்தாறையுங் கடந்திருப்பதாய்ப் போக்குவரவற்றதாய் நுண்ணிய பொருள்கட்கெல்லாம் நுண்ணிதா யோர்காலத்திற் குறைந் தோர்காலத்தில் வளராததாய்.

"பதையாத வாகாயமுங்காலும்போலவசைவற்ற தேகாண்பரிபூரணம்,, எ-து.முடிவுகாலத்திற் சலனமின்றாய் வாயுவுமாகாயமும் பிரிவற்றொன்றாயிருப்பதுபோற் சடசித்துக்களாயுள்ள பிரபஞ்சமுந் தானும் பிரிபடா தொன்றா யசைவற்றிருப்பதே யச்சிவத்தினது பரிபூரணசொரூபம். எ-று.

ப-ம். தநுவாதிகளை மாயையிற்றோற்றுவிப்பது மான்மாக்களையவற்றிற் கூட்டுவிப்பது மஃதாகலினனு மதற்குமேன் மற்றொன்றின்மையானும்,உதியாதுளதாகி என்றும்;அசலமாகலிற் பேராமல் என்றும்;யாவைக்குந் தாரகமா யுட்புறம்பாயிருந்து மொன்றோடுந் தாக்கற் றிருத்தலின்,அதிசூக்குமம் என்றும்; அகண்டாகாரமா யிருத்தலிற் குறைந்தாகாமல் என்றும்; ஆகாயத்தில் வாயுச்சரிக்தும்போதவ்வா

காயத்தையும் வாயுவையு மிவ்வாயுக்கட்டோன்றுஞ் சீதள வுட்டண முதலியவற்றையும் பிரித்துக்காணப்படும்.

அவற்றினடுநின்றவாயு வந்த வாகாயத்தி லசைவறநிற்பின் முற்றோன்றியபகுப்புக்களின்றி யவ்வாகாயந்தானுயிருக்கும் - அவைபோலும்,பெத்தகாலத்து முப்பொருள்கட்கு நடுநின்ற வான்மபோதஞ்சீவிக்குமிடத்துச் சிவமென்றும், பசுவென்றும், பாசமென்றும் பிரித்தறியப்படும். முத்திகாலத் தவ்வான்மபோதஞ் சீவியாது சிவத்துளடங்கின் முற்றோற்றியபகுப்புக்க ளொன்றுந்தோற்றுது சிவந் தானுயிருக்கும்.ஆகலின், "ஆகாயமுங்காலும் போலவசைவற்ற தேகாண்பரிபூரணம்,,என்றுங்கூறினுர். (உரு)

(கவி - உசா. அ - கை.)

பதியானதுசடசித்துக்கட்கெல்லா மிடங்கொடுத்துக்கொண் டெல்லாந்தானுயிருக்கு மென்றீராஞல் அட்டமூர்த்தமுதலிய வடிவங்களு மத்திருமேனிகளைவழிபடுவோர்க் கதுகொடுக்கும் பயன்முதலியவு மியாவையெனின் அதற்குவிடையும்,பதியினதருட்சத்தியிலக்கணமு மித்திருவெண்பாவிற்கூறுகின்ருர்.

எட்டுருவு மைந்தொழிலு மிச்சைவடி வும்பயனுஞ்
சுட்டரிய பூரணமுஞ் சுட்டுதலு - நிட்டைகளு
முன்னிழப்பி லின்ப முதித்தொடுங்கு மொன்றிரண்டுந்
தன்னருட்கே யாமத் தனே.

(இ-ள்.) எட்டுருவுமைந்தொழிலு மிச்சைவடிவும்பயனுஞ் சுட்டரியபூரணமுஞ் சுட்டுதலும்,, எ-து. பிரபஞ்சமெல்லா மோர்வடிவமாய்க்கொண்டருளிய வட்டமூர்த்தமும், ரூபாரூபமாகிய சதாசிவஞ்செய்யுமைந்தொழில்களுந் தமதுசுதந்தரவிச்சையாற் றிருமேனிகொண்டவுருவமாகிய மயேசுரவடிவு மிவ்வடிவுகளை வழிபடுவோர்க் கிவராற்கொடுக்கும் பதப்பிரயோசனங்களு மிவ்வடிவங்களெல்லாங் கடந் தான்மபோதத்தாற் சுட்டியறிதற்கரிய வருபமாகிய பரிபூரணசொரூபமுஞ் சுட்டியறியும்படி யெழுந்தருளிவந்தகுருவடிவும்.

"நிட்டைகளு முன்னிழப்பிலின்பமுதித்தொடுங்குமொன்றிரண்டுந் தன்னருட்கேயாமத்தனே,, எ-து.வீடடையுநெறிய ாகக்கூறிய வுபாய

நிட்டைகளிற் ேறாற்றுவனவு முனதுபோதவொழிவி லானந்தந் தோ ற்ற வதனையறிந் ததனு ளதீதப்படு மத்துவிதமென்பது மிங்ஙன மதீத ப்படுவதன்முற்றோற்றுந் துவிதமென்பதுமாகிய விவையத்தனையு மச் சிவத்தின தருட்சத்தியா லுண்டாம். எ-று.

ப-ம். எட்டுருவென்றது, பஞ்சபூதங்களுஞ் சந்திர சூரியரு மான் மாவு மெனக்கொள்க. (உசு)

(கவி - உஎ. அ - கை.)

முத்தியிலு மும்முதலும் பிரிவற்றிருக்குமென் றித்திருவெண் பாவிற் கூறுகின்றார்.

உனையுணர்த்திற் பாச முதவி யுடையோன்
றனையுணர்த்தி னீயே தலமாங் - கனலை
விறகிடமாய்க் காணிலதன் வெம்மையையே றுக்கி
யறியகிலாப் போலதுநீ யாம்.

(இ-ள்.) உனையுணர்த்திற்பாச முதவியுடையோன் றனை யுணர்த்தி னீயேதலமாம்,, எ-து. பசுவாகியவுன்னை யறிவிக்குமிடத்தும் உன்னை யனுதியிலே மறைத்துநின்ற பாசத்தை யறிவிக்குமிடத்தும் பெத்த முத்தியென்னு மிரண்டுகாலத்து முயிர்த்துணையாயிருந் துனக் குபக ரிக்கும்பதியை யறிவிக்குமிடத்தும் நீயேமற்றைய விரண்டிற்கு மிட மாகும். அஃதெங்ஙனமெனில்,

"கனலை விறகிடமாய்க்காணிலதன் வெம்மையையேறுக்கி யறிய கிலாப்போலதுநீயாம்,, எ-து. அக்கினியைக் காட்டத்தி னிடமாய்க் கடைந்துகாணி னவ்வக்கினிவே றுட்டணம்வேறாய்ப் பிரித்தறியக் கூ டாததுபோலச் சுவாநுபவத்தான் மலத்தினைநீங்கி யுன்னை யுள்ளபடி யறியி னீவேறு சிவம்வேறாய்த்தோற்றாதாகலனச்சிவநீயாகும்.எ-று.

ப-ம். காட்டத்திலடங்கியிருந்த தீக் கடைந்தபோது தோற்றினாற் போன் முன் மலபெந்தத்தாற் றோற்றா திருந்த வான்மா விப்போது சுருதிகுரு சுவாநுபவத்தாற் றோற்றலாற் கனலைவிறகிடமாய்க்காணில் என்றும்; அதிற்றோற்றியதீயிலுட்டணமும்பிரகாசமு மிருத்தல்போ ற் றன்னையுள்ளபடிகண்ட வான்மாவினிடத்தானந்தமு மவ்வானந்தமே ன்மேல்விளைவது மிருத்தலின் அதன்வெம்மையையேறுக்கி யறியகி லாப்போல் என்றும்; இரண்டிற்கும் நீயேதலம் என்றுங்கூறினார்.

அக்கினியைப்போற் பசு. சூடுபோற்;சிவம். பிரகாசம்போற் பாசம்-எனவறிக. ஆனந்தஞ் சிவம். ஆனந்தத்தை யநுபவிப்பது;ஆன்மா ஆனந்தத்தைவிளைப்பது மலம்-எனவறிக.தத்துவமசிவாக்கியார்த்தமு மிங்ஙனங்காண்கவென்று,அதுநீயாம் என்றார். (௨௭)

(கவி - ௨௮. அ - கை.)

ஆன்மாச்சார்போதமென்பது மிச்சார்போதத்தாற் றுன்பமேய ன்றி யின்பமின்றென்பது மித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

விடாதவத்தை மூடி விடம்புசித்தாற் போலச்
செடாதிகளுஞ் சேதனனுஞ் சேர்ந்து - படாதுபடு
மச்சைக் கழற்றி லருள்வழிநீ யவ்வழியுன்
னிச்சைப் பொருண்மலமென் றெண்.

(இ-ள்.) விடாதவத்தைமூடி விடம்புசித்தாற்போலச் செடாதிகளுஞ்சேதனனுஞ் சேர்ந்து படாதுபடும்,, எ-து. அணுவளவேனுமிடைவிடா தவத்தைகண் மூட வவ்வவத்தைகடோறும் வேறுவேறாயிருந்துள்ள வுடம்புமுதலியகருவிகளு மான்மாவுங்கலந்து விடமருந்தினாற்போற்படாததுன்பங்களெல்லாம்படும். ஆகலி னிங்ஙனமென்றறிந்து.

"அச்சைக்கழற்றி லருள்வழிநீயவ்வழியுன் னிச்சைப்பொருண் மலமென்றெண்,, எ-து. அந்தவவத்தைகளாகிய வுடம்புகளை நீங்குதியெனி னீ யருளினிடமாவை. யவ்வவத்தைகளிடம் உன்னாலிச்சிக்கப் பட்ட பொய்ப்பொருள்கள். அஃதன்றியுன்னைவாதிக்கு மலமு மவை யென்றறிதி. எ-று.

ப-ம். சாக்கிராவத்தையினிருக்கும்போ தத்தனுட்டோன்றுங் கருவிகளியாதொன்றியாதொன் றடுத்த ததனதன்மயமாயு மதனதன்கணின்றுசொற்பனாதிகளிற் செல்லும்போ தாண்டாண்டுத்தோன்றுங்கருவிகண்மயமாயு மீண்டுவரும்போது மந்தவவத்தைகடோறு முற்கூறிய கருவிகளைச்சார்ந்து வரலானும் அந்தவவத்தைகளைவிட வான்மாவிற்கு வேறிடமின்மையானும் விடாதவத்தைமூடி என்றார்.

விடமருந்தினோனை யவ்விடம்வாதிப்பதுபோ லவத்தைதன்னைச் சேர்ந்த வான்மாவை வாதித்தலா னிங்ஙனங்கூறினார். உடம்பும் விட

யமுமாகிய விச்சைப்பொருளான் மற்றையவவத்தைகண் மேன்மேற் றொடர்தலி னெல்லாவற்றையுங்கூட்டி அவ்வழியுன்னிச்சைப்பொருள் என்றார்; யாதோரவத்தையடுத்த தந்தவவத்தைவடிவா யான்மாவிருத்தலி னதனை அச்சு என்றார். (உ௮)

(கவி - உ௯. அ - கை.)

சிவத்தை யெதிரிட் டறியக்கூடாதென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

தன்னையறி வார்க்கெதிருந் தானும் பயனுமிலை
யென்னிற் சிவனையறி வென்போமோ - சின்னாத
தீதகற்று மாற்றொளிபோற் றேய்ந்துசிவ மாயிருக்கப்
போதகத்தை நாமொழிவிப் போம்.

(இ-ள்.) தன்னையறிவார்க்கெதிருந் தானும்பயனுமிலை யென்னிற்சிவனையறிவென்போமோ,, எ-து. கருவிகண் முப்பத்தாறையு நீங்கித் தன்னையுள்ளபடியுணர்ந்தோர்க்கு முன்னறிவிற் கெதிரீடாய்த்தோன்றின கருவிகளுமில்லை தேகமாகிய தானுமில்லை. இத்தேகத்தா லநுபவிக்கும் விடயப்பயனுமில்லையென்று வேதாகமங்கள் கூறுமெனின்; அவ்வான்மாவி னக்கினிக் குட்டணம்போற் பிரிபடாதிருந்தசிவத்தை யெதிரிட்டறியத்தொடங்கின் என்னவிபரீதமாய்ப் போமோ யா மறிகிலோம்.

"சின்னாத தீதகற்றுமாற்றொளிபோற் றேய்ந்துசிவமாயிருக்கப் போதகத்தை நாமொழிவிப்போம்,, எ-து. ஞானநாதனே? புடம்போட்டுக்கருமச மகற்றும் பொன்னுக்கு மாற்றொளி மிகுதல்போ லுன் போதங்குறைந்து நீ சிவப்பிரகாசந் தானாயிருக்க நானா வுபாயங்களானு மப்போதத்தை யா மொழிவிப்போம் யாமொழிவித்தபடியே நீ யொழிந்துபோதி. எ-று.

ப-ம். பொன்னுங் கல்லுஞ் சரியொத்தபோது இருபுறனுஞ் சாயாதுமேன் முண் ணேரோநிற்குங் கீழ்முடபோலத் தன்னையுள்ளபடியுணர்ந்தோனுக்குக் கேவல சகலங்களிற்சென் றதனதன்மயமா யிருந்தவறி வவைகளைச்சாராதுபிரிந் தருணாட்டத்தி லசைவற நிற்றலால் தன்னையறிவார்க் கெதிருமில்லை என்றும்;தேகந் தானாயிருந்தவறி வதனைப்பிரிந் தறிவாய்நிற்றலால் தானுமிலை என்றும்; அருட்பூரண மெ

ன்றைக்கு விளங்குமோவென்றருண்மே லிச்சையை வைத்து விடய விச்சையை நீங்கி நிற்றலால் பயனுமிலை,என்றுங்கூறினர்.

புடம் போடுந்தோறு மிடைகுறைந்து மாற்றுயர்தல்போலத் த ற்போதத்தாற் சிவத்தை யெதிரிட் டறியா தறிந் தசைவற நிற்குந்தோ று மப்போதங் குறைந்து சிவப்பிரகாச மேலிடலால் தீதகற்றுமாற் றெளிபோல், என்றுவமை கூறினர். (உகூ)

(கவி - ௩0. அ - கை.)

மலத்தடையா லான்மாவிற்கு ஆனந்தமுந் திருவருளுந் தோற் ரு திருந்ததென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பூரணவா னந்தமாந் தானே புறம்புபால்
வாரியின்மீன் போன்ற மலவாழ்வைப் - பாரீ
ருதியாது நின்ற வொளியை யிருளாக்கு
மதுகாணு மக்கினித் தம்பம்.

(இ-ள்.) பூரணவானந்தமாந்தானேபுறம்புபால் வாரியின்மீன்போன் ற மலவாழ்வைப்பாரீர்,,எ-து. உள் புறம் நடு கீழ் மேல் பக்கமென்று கூறப்பட்ட வெவ்விடத்து நிறைந்துள்ள பரிபூரண சுகமாகிய சிவந்தா னே வதனைவிட்டு நீங்காத வான்மா விற்குப் புறம்புபாற்கடலிற் சஞ் சரித்து மப்பாலைப் புசிக்கறியாது செந்துக்களைப்புசிக்கு மீன்போலு மப்பூரணனந்தத் திருந்து மதனை யநுபவிக்க வறியாது மாயாமலமா கிய விடயங்களை யநுபவிக்கு மிந்தவான்மாக்களினது மலவாழ்க்கை யைக் கண்டீர்கொலோ.

(அஃதன்றி.)"உதியாதுநின்ற வொளியையிருளாக்கு மதுகாணுமக்கினித்தம்பம்,, எ-து. உதையாத்த மான மின்றி யெக்காலத்து மோ ரியல்பாய்நின்ற ஞானசூரியனைத் தெரியவொட்டா திருள்போற்காட்டு ம். அது காணு மக்கினித்தம்ப மந்திரம்போலு மான்மாவை யனுதி யே மறைத்திருந்தவாணவ மாவது. எ-று.

ப-ம். கூகைக்கு விழிக்கண்ணிருந்த குற்றத்தாற் சூரியப்பிரகாச மிருளாய்த் தோற்றியதுபோ லாணவமலக் குற்றத்தா லான்மாவிற்கு ஞானவொளி யிருளாய்த் தோற்றினமையால் ஒளியையிருளாக்குமென

ன்றும்; அக்கினியோடு மந்திரம் அபின்னமாயிருந் தவ்வக்கினி முழு த் மறையா ததனது சூட்டை மறைத்ததுபோ லான்மாவோ டாணவ ம் அபின்னமாயிருந் தவ்வான்மா முழுதுமறையா ததனது ஞானத் தை மறைத்தலான் அதுகாணுமக்கினித்தம்பம், என்றுங் கூறினர். ()

(கவி - ௩௧. அ - கை.)

திருவருள் ஆன்மாக்களைக் கன்மத்துக்கீடாய் நடத்துமாறு மவ் வான்மாக்கள் கரணங்களோடுங்கூடி யிந்திய வழிச்சென்று விடயங்க ளைப் புசிக்குமாறு மிங்ஙனமென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

கடல்சிவநீ ரான்மா வுப்புமலங் கன்ம
மடர்வாயுப் போத மலைகா - ணிடைவிடா
தவ்வாதி யுட்கரண மைம்பொறியிற் பம்பரம்போ
லிவ்வா றுனைச்சுழற்று மெண்.

(இ-ள்.) கடல்சிவநீரான்மாவுப்புமலங்கன்ம மடர்வாயுப்போதமலைகா ண்,, எ-து. கடல்போலுஞ் சிவம். அதனுணீர்போலு மான்மா. வந்நீரு ட்பிரிபடா திருந்த வுப்புப்போலு மாணவ மந்நீரின்மேல்வீசுங் காற் றுப்போலுங் கன்ம மக்காற்றா னெழு மலைபோலும் போதம்.

(ஆகியவிவற்றுள்.) "இடைவிடா தவ்வாதியுட்கரண மைம்பொறி யிற்பம்பரம்போ லிவ்வாறுனைச்சுழற்றுமெண்,, எ-து. காற்றைப்போ ன்ற கன்மத்துக்கீடா யிச்சா ஞானக் கிரியைகள் பஞ்சமூர்த்திகளைச் செ லுத்த விப்பஞ்சமூர்த்திகள் அகார முதலிய வக்கரங்களைச் செலுத்த விந்த வக்கரங்கண் மனமுதலிய வுட்கரணங்களைச் செலுத்த விவ் வுட் கரணங்க ளைம்பொறிக ளிடத்துமிடைவிடா துன்னைப் பம்பரச் சுழல் போலு மிங்ஙன மெக்காலுஞ் சுழற்றுமென்றறிதி. எ-று.

ப-ம். அவ்வாதிகளைக் கூறினமையா லிவற்றிற்கு முதற்காரணமா கிய விச்சாஞானக்கிரியை முதலிய வருவிக்கப்பட்டது. காற்றா னலை யெழல்போ லான்மாக்கள் கன்மத்துக்கீடாய்ப் போதம் பலபடவிரித லி னங்ஙனங் கூறினர். (௩௧)

(கவி - ௫௨. அ - கை.)

ஆன்மாவீதென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

மண்ணாதி சத்தாதி வாக்கு மனமாதி
கண்ணாதி நாதாந்தங் கண்டகன்ற - வுண்மை
தனையணுவென் றேயுணர்த்துஞ் சார்பினையுங் கண்ட
வுனையறிவென் றுள்ளே யுணர்.

(இ-ள்.) மண்ணாதிசத்தாதி வாக்குமனமாதி கண்ணாதிநாதாந்தங் கண்டகன்ற-வுண்மைதனை,, எ-து. பிருதிவிமுதலிய பஞ்ச பூதங்களுஞ் சத்தாதிவிடயங்களும் வாக்காதி கன்மேந்தியங்களு மனமாதி யந்தக்கரணங்களுஞ் சட்சுவாதி ஞானேந்தியங்களுங் காலமாதிவித்தியா தத்துவங்களுஞ் சுத்தவித்தையாதி நாத மீறாய்ச்சொல்லப்பட்ட சிவதத்துவங்களும் ஆகிய விம்முப்பத்தாறையு மடிதொடங்கி வேறுவேறாய் ரூபதரிசனம்பண்ணியறிந் தவையெல்லாந் தானன்றென்று நீங்கி யவற்றின் முடிவினின்ற சைதன்னியத்தை.

"அணுவென்றேயுணர்த்துஞ் சார்பினையுங்கண்ட வுனையறிவென் றுள்ளேயுணர்,, எ-து. ஆன்மாவென் றுனக்கறிவிக்குந் திருவருளையு மவ்வருளான் முன்கண்டு நீங்கியகருவிக ளிவையென்றுங் கண்டவுன்னை யறிவென் றுனக்குள்ளே யறிதி. எ-று.

ப-ம். கருவிகண் முப்பத்தாறு மொன்றையொன் றறியாமையானுந் தத்தங் குணங்களைத் தாமறியாமையானுங் காட்சி கண்ணையறியாததுபோ லவைக ளான்மாவை யறியாதாகலானுங் கண் காட்கிகளை யறிவதுபோலக் கருவிகளை யிதீதென்று பகுத்தறிந்து நீங்கிநின்ற தான்மாவாகலானும் நாதாந்தங்கண்டகன்றவுண்மைதனை, என்றார், எ-று.

ப-ம். தன்னாலறியப்பட்ட கருவிகளைச் சடமென்றும், அவற்றைத்தனக்கறிவித்த தருளென்றும், அக்கருவிகள்போற் சடமு மன்றித் திருவருளைப்போற் பேரறிவுமன்றி நின்று அறிந்தவறிவு தானென்றும், தன்னையும் பாசத்தையுந் திருவருளையு மவ்வருளாற்கண்டமையால், உணர்த்துஞ் சார்பினையும் என்றார். தத்துவங்களையெல்லாம் பகுத்துக் கூறினமையால் வித்தியாதத்துவம் வருவிக்கப்பட்டது. அறிவோடுங்கூடியறிவாயிருத்தலி னான்மாவையு மறிவென்றார். (௫௨)

(கவி - ௩௩. அ - கை.)

பஞ்சகிருத்தியத்தா லவத்தைகணிகழ்வனவென் றித்திருவெண் பாவிற்கூறுகின்றார்.

அஞ்சுதொழி லாவதுவே யஞ்சவத்தைக் கிஞ்சலிலா
வஞ்சிடத்துங் கொள்ளிவட்ட மாகவே - பஞ்சவன்னம்
வைத்த படிகம்போன் மாறா துனைமயக்கல்
சித்திரக்கூத் தாகத் தெளி.

(இ-ள்.) அஞ்சுதொழிலாவதுவே யஞ்சவத்தைக்கிஞ்சலிலா வஞ்சிடத்துங்கொள்ளிவட்டமாகவே,, எ-து. சிவனது பஞ்சகிருத்தியங்களி யாவையெனின், சாக்கிரமுதலிய வஞ்சவத்தைகளுமாஞ் சுருக்கமில் லாத விவ்வஞ் சவத்தைகளிடத்துங் கொள்ளிவட்டம்போலாக வதிசீக் கிரமாய் மாறிமாறி வரச்சுழற்றி.

“பஞ்சவன்னம் வைத்தபடிகம்போன் மாறாதுனைமயக்கல் சித்திரக்கூத்தாகத்தெளி,, எ-து. வைக்கப்பட்ட பஞ்சவன்னத்தின் மயமாம் படிகம்போல நீசேர்ந்தவவத்தையா ததன்மயமாக்கி யிடையறா துனை மயக்குத லவனதழகிய திருக்கூத்தாக வறிதி. எ-று.

ப-ம். முப்பத்தாறுகருவிகளோடு மான்மா தேகபோகங்களையறி தலிற், சாக்கிரத்தைச் சிருட்டியாயு மிச்சாக்கிரத்திற் புசித்த வாசனை சொற்பனத்து மறிந்துநிற்றலா னிதனைத் திதியாயு மிச் சொற்பனம் போற் சிறிதுநிழலெழத் தோன்றி மறைதலாற் சுழுத்தியைச் சங்கார மாயும், பிராணவாயு வியக்கமின்றியொன்றுந் தோன்றாதிருத்தலாற் று ரியத்தைத் திரோபாவமாயு மதீதங் கருவிக ளேதுமின்றி யாணவவிரு ளா யிருந்ததாயினு மதனிமித்தமாய் மாயையிற் றநுவாதிகொடுத்தல் இருவினை யொப்புவருவித்தல் ஆசாரிய மூர்த்தமாய் வந்துபதேசித்த ல் முதலியவநுக்கிரகம் பெறுதலி னிவ்வதீதத்தை யநுக்கிரகமாயுங்கூ றினார்.

கிஞ்சலிலா என்ற விதப்பான், உடல் தோன்றிநின்று அழிவது, சிருட்டி திதி சங்காரம். உயிருண் மயக்கமுந் தெளிவும்வருவன, திரோ பாவ வநுக்கிரகம். இங்ஙனம் உடலின் மூன்றும் உயிரினிரண்டுமாக வருவனவும்.

ஓர் இந்தியத்தில் ஆன்மா பிரவேசித்தல் சிருட்டி. யதனாலறியும் விடயத்தை யநுபவித்தல் திதி. அவ்விடய மயமா யழுந்துதல் சங்கார ம். அதனி லுருசிப்பித்தல் திரோபாவம். அதனைத்தெளிந்துகோடல் அநுக்கிரகம். இங்ஙனம், இந்திரியங்கடோறும் வருவனவும்.

மனத்தானேர்பொருளைநினைத்தல், சிருட்டி. யப்பொருளிற் பிரியம் பிறத்தல், திதி. அஃதெப்போது வருமென்றுதிகைத்துநிற்றல், சங்காரம். அப்பொருளின்மயக்குதல், திரோபாவம். அதனைத்தெளிந்துகோடல்,அநுக்கிரகம். இங்ஙனங் காணத்தில்வருவனவும். இவை முதலிய பெத்தத்தில்வரும் பஞ்சகிருத்தியங்களும்.

முத்தியில் அருள்வடிவமாதல் சிருட்டி. ஆனந்தப்பேறு - திதி. இதி லதீதப்படுதல் சங்காரம். ஞாதுரு ஞான ஞேயமென்னு மூன்றுந் தோன்றுதிருத்தல், திரோபாவம். இவை நான்கு மெக்காலமும் விளங்கல், அநுக்கிரகம். ஆகிய விம்முறையேவருவனவுங்கொள்க.(ரு௩)

(கவி - ரு௪. அ - கை.)

இந்த வவத்தைக ளொன்றுந் தோன்றா தொழிக்கக் கூடாதோ வெனின்,அவத்தைநீங்கி நிற்றற்குபாய மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மாயா விகார மதுபானம் போன்றுமயக்
கோயாத துன்னு லொழியுமோ - நீயதுவாய்ப்
போகாம லாடும் பவுரியவன் பொய்க்காட்சி
யாகாது போலே யறி.

(இ-ள்.) மாயாவிகார மதுபானம் போன்றுமயக் கோயாத துன்னு லொழியுமோ,, எ-து முற்கூறியவவத்தை மாயாகாரியமாகிய கருவிக்கூட்டங்களின்துசேட்டை. அது மதுபானங்கொண் டவனது நற்குணத்தை மாறுபடுத்தித் தனது லகிரி மேலிட் டவனை மயக்குதல்போன் றுனது ஞானகுணத்தை மாறுபடுத்தித் தனது குணமேலிட் டுன்னை யொழிவறநின்று மயக்குமதனை யுன்னுலொழிக்கக்கூடுமோ.ஆனுனீரிங்ஙனங் கூறியவாற்று னதனை யொழிக்கவேண்டாவோவெனி னதனையொழியா தொழித்தற்குபாயமுண் டஃதெங்ஙனமெனின்,

"நீயதுவாய்ப் போகாமலாடும் பவுரியவன்பொய்க்காட்சி யாகாதுபோலேயறி,, எ-து. ஆடப்பட்ட வோர் பார்ப்பனக்கூத்தன் றேட்டிவேடம் போட்டா னுயினு மப்பொய்வேடக் காட்சி தானுகாது-தன்னை வேறுகண்டு நின்றாற்போ லவத்தையுள்ளிருத்தியெனினு நீயதன் மயமாய்ப்போகா துன்னை வேறுபிறித்தறிதியெனி னஃதுன்னை மயக்காதென் றறிதி. எ-று,

ப-ம். இங்ஙனம் பிரித்துநிற்றல் சாக்கிராவத்தையிலன்றிச்சொற் பனுதிகளிற் கூடாதெனினு மச்சாக்கிராவத்தையைப் பிரித்துநிற்பிற் றிருவருடோற்று மித்தோற்றமேலிடி லச்சாக்கிராவத்தை மறையு மது மறையவே யதனதுவாசனையான் சொற்பனுதிக டோன்றுவாகலிற் பொதுப்படக்கூறினர். (௫௪)

(கலி - ௫௫. அ - கை.)

பஞ்சகிருத்தியத்தா னுண்டா மஞ்சவத்தையுங் கடந்து சிவத்தி லதீதப்பட்டுநின்றார்க் கோரோர்காலத்தோ ரோரவத்தைக டோன் றுவோவெனின், சிவயோகியை யவத்தைகள் சாரமாட்டாதென் றித் திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பழுதையைப்பாம் பென்ற பயம்போனுற் பாவித்
தழுதுடம்பை யாட்டுகினு மாமோ - தொழிலொழிவி
னின்ற சிவயோகி நினைத்தொருகா னீவாரா
யென்றழைத்தா லும்பதையா தென்.

(இ-ள்.) பழுதையைப் பாம்பென்ற பயம்போனுற்பாவித் தழுதுட ம்பையாட்டுகினுமாமோ,, எ-து. இருளாற் பழுதையைப் பாம்பென் றுகண்ட பயகம்பனுதிகள் சுடராற்பழுதை யென்றறிந் தப்பாம்பென் றுகண்ட பயகம்பனுதிகள்போனு லிப்போதுசுடராலறிந்த பழுதையி ன் முன்னிருளாற்றோற்றிய பாம்பிருப்பதாய்ப் பாவித்துப்பயந்தது போலழு துடலைநடுக்கினு முன்போலும் பயகம்பனுதிக ளுண்டா காது.

(அதுபோலும்.) "தொழிலொழிவி னின்றசிவயோகிநினைத்தொ ருகானீவாரா யென்றழைத்தாலும்பதையாதென்,, எ-து. முன்மலவி ருளான் மெய்போற்றோற்றிய வவத்தைகளையெல்லா மிப்போது ஞா னசூரியனுற் பொய்யாகக்கண் டவ்வவத்தைகளைநடாத்தும்பஞ்சகிருத் தியங்களையுங்கடந்து மேனின்ற சிவத்திலதீதப்பட்ட சிவயோகிகருதி அவத்தாய் ஒருதர மீட்டிங்கு நீவருதியென்றழைப்பினு (முன்னழை யாதிருக்கவுந் தானேவந்து கொள்ளிவட்டம்போற் சுழன்ற திப்போ து) அணுவளவேனு மசையாதிருந்தது - ஈதென்கொலோ யாமறியி லோம். எ-று.

ப-ம். சிவயோகிக்கு சிவகாருண்ணிய முதலியவற்றால் மவுனனை ந்தந் ததும்பிற்றாயினுந் திருவருள்வடிவாய் நிற்பதன்றி மாயாவடிவ மாகா னாகலானுஞ் சூரியப்பிரகாசத் திருட்டோற்றா ததுபோல ஞா னப்பிரகாசத்தின் மாயாந்தகாரந் தோற்றமாட்டா தாகலானும், அ ழைத்தாலும் என்றும், பதையாது என்றுங்கூறினார். (ருரு)

(கவி - ருசு. அ - கை.)

இங்ஙனமிருந்த சிவயோகிக் குபதேசித்தன் முதலியவற்றாற் றா ன் பிறவொன்றுதோற்றுவ தென்னெனின், சிவயோகி தான் பிறர்போற் கூறினு மிவை யவனுக்கில்லையென் றித்திருவெண்பாவிற் கூறுகின் றார்.

கன்னிக் கதலிதனை நார்கழிப்பான் கண்போலத்
தன்னையறி யாவறிவே தான்மீளச் - சொன்னாலு
நாவென்ற நாவேபோ னானென்ற சொல்லளவே
யாமன்றித் தானெதிரா கா.

(இ-ள்.) கன்னிக் கதலிதனை நார்கழிப்பான் கண்போலத் தன்னையறி யாவறிவே தான்மீளச் சொன்னாலும்,, எ-து. ஈனுவாழையின்து மட் டைநார் கழிக்கத்தொடங்கினோன்கண் ணம்மட்டை யுளதுளதென்று சுட்டிப்பார்க்குந்தோறு மவனது கை மட்டைகளையெல்லாங் கழித்து ச்சென் றதனுளிருந்த குருத்தையும்விரித்துவிடுத்தபோ தாண்டுமு ன்போற் சுட்டுதற்கு வேறொன்றுமின்றிச் சும்மாவிருந்த வக்கண்போ லு மாசாரியன் விவேகத்தான் முப்பத்தாறு கருவிகளையும் விடுவிக்க ததான் கடந்துசென் றவற்றின்முடிவினின்ற வருளையும் பரையையு ங்கடந் ததன்மேற்றோன்று மானந்தத்தையு மெதிரிடா ததனு ளதீதப் பட்டிருந்த சிவயோகி தன்னையறியா வறிவேயாவன். அவ்வறிவாயிரு ந்தோன் மீட்டும் நீநானென்று பிரித் தவ்வறி வேற்றற்பொருட்டு மா ணாக்கனுக் கறிவித்தானெனினும்.

"நாவென்றநாவேபோ னானென்றசொல்லளவே யாமன்றித் தா னெதிராகா,,எ-து. நாவானது தன்பெயரை நாவென்றுகூறினு மப்பெ யர்க்குரியபொருள் வேறின்றித் தானாயிருந்த வந்நாவைப்போலு நீநா னென்று சொன்னமாத்திரமே யாமன்றித் தானுமெதிரு மவனுக்கு ண்டாகாது. எ-று.

ப-ம். தன்னையறியா வறிவு சிவம். இதனைத் தன்னையறியாது வே றுண்டாய்த் தானறியாதென்று முற்கூறிய பாட்டானுங்காண்க. சிவ யோகி தற்போதம்போய்ச் சிவமாயிருத்தலிற் றானென்பது மச்சிவப் பிரகாசத்திற் பிரபஞ்சமறைதலிற் பிறவொன்பது மவனுக்கில்லை யாக லின்'தானெதிராகா வென்றார். (௫௬)

(கவி - ௫எ. அ - கை.)

தன்னைத்தானுள்ளபடி யறிவதெங்ஙனமெனின், தம்மையறிவ தி ங்ஙனமென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

தம்மா லறிந்ததெல்லாந் தாமல்ல வென்றுரைத்தாற்
சும்மா திருப்பதுவாய்த் தோன்றுதோ - விம்மி
யரிந்ததலை வாயடங்கு மவ்வளவே யல்லாற்
றெரிந்திடுமோ நீயே தெளி.

(இ-ள்.) தம்மாலறிந்ததெல்லாந் தாமல்லவென்றுரைத்தாற் சும்மா திருப்பதுவாய்த்தோன்றுதோ,, எ-து. தமதுபோதத்தா லீதீதென்று பகுத்தறிந்து நீங்கிய கருவிகளெல்லாந் தாமல்லவென்று வேதாகமங் கள் கூறுமெனி லவற்றைப்பகுத்தறிந்து நீங்கிநின்ற வறிவு தாமென வருளாலறிந்து மவுனமாயிருப்பதாய்த் தோற்றுதோ.

(ஆனாற் றம்மையறிந்த வநுபவஞ்சொல்வ தெங்ஙனமெனின்.) "விம்மி அரிந்ததலைவாயடங்கு மவ்வளவேயல்லாற் றெரிந்திடுமோ நீ யேதெளி,, எ-து. உறுப்புக்கட்கெல்லா முதலாய தலையையரிந்தபோ தவ்வாய்திறந் தடங்கு மவ்வளவேயன்றித் தலைபோயிற்றென்றுகூற வ றியாததுபோலுங் கருவிகண்முப்பத்தாறையுநீங்கி யவற்றின்மே னி ன்ற முத்திச்சகல முத்திக்கேவலமுநீங்கி யான்மாவருளாற் றம்மை மாத்திரமறிந்திருக்குமிடத்து ஆண்டுவேறோரநுபவந் தெரிந்திடுமோ நீயே யிதனைத் தெளிந்தறிதி. எ-று.

ப-ம். தத்துவங்கண் முடிவிற்றோன்று முத்திச்சகல முத்திக்கே வலமின்மையால், அரிந்ததலை, என்றும்; இங்ஙனநின்ற வறிவுக்கு வடி வின்மையாற் சொல்லக்கூடாதாகலின்வாயடங்கும் என்றுங்கூறினர்.

தத்துவங்களையங்கமாயு முத்திச்சகலகேவலங்களைத் தலையாயும் வைத்து, இத்தலைபோயவிடத்து ஆன்மாவுக் கவ்வநுபவங்க ளொன்றுமின்றிச் சும்மாயிருத்தலின், அரிந்ததலைவாயடங்கு மவ்வளவே யன்றித் தெரிந்திடுமோநீயேதெளி,என்றார். அரிந்ததலை விம்மியடங்குமெனக்கூட்டுக. (௩௭)

(கவி - ௩அ. அ - கை.)

தலைவனைதான் தன்னாலறியக்கூடாதோ வெனின், திருவருளாற் சிவத்தையறியும் போதுஞ் சிறிதும்போதஞ் சீவியாதுநின் றறியவேண்டுமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மறவாத தம்மை யறிவார் மருளோ
வறிவோ விடயம்போ லாகி - லறிவை
யறிவதறி வாகையினு லாறுறுந் தத்த
மறிவையறி யாபோ லறி.

(இ-ள்.) மறவாததம்மையறிவார்மருளோ வறிவோவிடயம்போலாகில்,, எ-து. சகலகேவலங்களாகிய நினைப்புமறப்புங்கடந் தறிவாய்மறவாதிருந்ததம்மை மறந்ததுபோ னினைத்தறியத்தொடங்குவோர்க் கெதிரிட்டறியும் விடயம்போற் றம்மைத் தமக்குத் தோற்றுமானு லது மருட்போதமோ வருட்போதமோ.

"அறிவை யறிவதறிவாகையினு லாறுறுந்தத்த மறிவையறியா போலறி,, எ-து. அறிவாயிருந்ததம்மை யறியத்தொடங்குவது தம்மறிவைக்கொண் டாகலின் முப்பத்தாறு தத்துவங்களுந் தத்த மறிவைத் தாமறியா திருப்பனபோற் றம்மைப்பிரித் தறியாது சும்மாவிருப்பதுவே தம்மையறிவதென்றறிநீ. எ-று.

ப-ம். முற்சகல கேவலமாயிருந்தவான்மா தன்னையாரொன்று பார்த்தபோது தான்வே றவைவேறாய்ப் பிரிந்தாற்போ லப்போது சுத்தமயமாயிருந்த வான்மா தன்னை யெதிரிட்டுப்பார்ப்பி னிச்சுத்தம் பிரிந்து கேவலசகலங்களிற் செல்லுமாகலின், ஆறுறுந்தத்தமறிவை யறியாபோலறி என்றார். நினைப்புமறப்பின்றி யறிவாயிருத்தலின்; மறவாததம்மை என்றார். (௩அ)

(கலி - ௩௬. அ - கை.)

இதுவுமது.

ஊன்றி நிலமசையி னுதமொழிந்த சிவந்
தோன்றாத் துணையுனக்குத் தோன்றுமோ - தோன்றில்
விரனுதியைத் தீண்டுவபோல் வாய்முகத்தை மென்று
சிரிப்பதுபோற் பார்த்துத் தெளி.

(இ-ள்.) ஊன்றிநிலமசையி னுதமொழிந்தசிவந் தோன்றாத்துணை யுனக்குத்தோன்றுமோ தோன்றில்,, எ-து. ஓர்தண்டாலூன்றிற் சடமாயுள்ள நிலமுமசையுமெனினும் எல்லாத்தத்துவங்களுக்கு முடிவாகிய நாததத்துவத்தையுங்கடந் துனதுயிர்க்குட் டோன்றாத்துணையாயிருந்த சிவத்தை யுன்போதத்தை யூன்றிநின் றறிவேனெனி னஃதுனக்குத்தோன்றுமோ வுன்போதத்துக் கதுதோற்றுமெனின்,

"விரனுதியைத்தீண்டுவபோல்வாய்முகத்தைமென்று சிரிப்பதுபோற்பார்த்துத்தெளி,, எ-து. ஓர்விரற் றன்னுனியைத்தான் றொடல்போலு முகத்தின்கண் ணிருந்தவா யம்முகத்தை யெதிரிட்டுக்கறித்துமென்று சிரிப்பதுபோலுமாமிதனையாராய்ந்து தெளிந்தறிதி.எ-று.

ப-ம். நுட்பத்தா னுன்மாவுள்ளும் பூரணத்தா லதற்குப் புறம்புமாய்ப் பிரிபடாது சிவமிருத்தலி னுன்மாவா லதனைப் பிரித்தறியக்கூடாதாகலி னிங்ஙன முவமைகூறினார். சிரிப்பது யான் சிவத்தையறிந்தேனென்று பிறருக்குக் கூறிமகிழ்தல். (௩௬)

(கலி - சய. அ - கை.)

இதுவுமது.

பற்றியது தானும் படிகநீ பற்றுவிடப்
பற்றை யெதிரிட்டுப் பார்த்தாலென் - சற்றும்
பிறியாச் சிவனைப் பிரித்தறியத் தேடு
மறியாமை காணு ணவம்.

(இ-ள்.) பற்றியதுதானும்படிகநீபற்றுவிடப் பற்றையெதிரிட்டுப்பார்த்தாலென்,, எ-து. தன்னைச்சார்ந்த நிறமியா தங்நிறந் தானுயிருக்கும் படிகம்போலு மியாதோர் கருவியடுத் ததன்மயமாவை நீயக்கருவிகணீங்குதற்பொருட் டுனக்குள்ளிருந்த சிவமாகிய பற்றையெதிரிட்டுப்பார்த்ததனாற் பயனென்னையுள.

"சற்றும்பிறியாச்சிவனைப் பிரித்தறியத்தேடு மறியாமைகாணுணவம்,, எ-து. ஓராணுவளவேனு முன்னைவிட்டுப் பிரியாதிருந்த சிவ

த்தை யுன்போதத்தாற்பிறித் துன்னைவிட வஃதோர்முதலாய்க் கண்டதனை யறியத்தேடும் பேதமைகாணவமாவது. எ-று.

ப-ம். கேவலசகலங்களைநீங்கி யருளாற் றன்னையுள்ளபடி யறிந்தவான்மா தனக்குவேறறவிருந்த சிவத்தையு மவ்வருளா லறியவேண்டுமெதனைக் குருவுபதேசத்தா லறிந்துகொள்க. குருஅருளா லறியவேண்டுமென்றதை, "அறியாமை யறிவகற்றியறிவினுள்ளே யறிவுதனை யருளினா லறியாதேயறிந்து" என்னுஞ் சித்தியாருள்ளுங்காண்க.

சிவத்தைப்பிரியா ததனுளடங்கிற் கருவிகடொடரா வதனைப்பிரிக்கிற் றொடருமாகலிற் பற்றுவிடப்பற்றை யெதிரிட்டுப்பார்த்தாலென் என்றார்.

ஆங்கு மலமின்றாயினு மதனது வாசனையாற் போத மெழுதலின், அறியாமைகாணவம் என்றார். ஆன்மாவைப் பற்றுவிடாதிருத்தலிற், சிவத்தைப் பற்று என்றார். (சயி)

(கவி - சக. அ - கை.)

அந்தச்சிவத்தைச் சென் றடையுமிட மெவ்விடமெனின், ஆன்மா சிவத்தோ டிரண்டறக்கலந்த வத்துவித மெவ்விடமென்பது மிது வேதாந்தமுடிவென்பது மித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

அருளாலே தம்மை யறிந்தருளா யந்தப்
0 பரிபூரணமே பரையாய்ப் - பரையொழிவி
லானந்தா தீதமா மத்துவித சித்தாந்த
மோனம் வேதாந்த முடிவு.

(இ-ள்.) அருளாலேதம்மை யறிந்தருளாயந்தப் பரிபூரணமேபரையாய்,, எ-து. முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து நின்றவிடத்துப் பாசமீ தருளீதென்று பகுத்தறிந்த வறிவுதாமென்று தம்மை யருளாலறிந்து பின்னர்தம்மையு மவ்வருளையும் பிறித்துப்பாரா தவ்வருடாமாயிருந்து பின்னர்தம்மைச்சிறிதுந் தோற்றாத வந்தப்பரிபூரணமாகிய பரையேயாகி.

"பரையொழிவி லானந்தாதீதமா மத்துவிதசித்தாந்த மோனம் வேதாந்தமுடிவு,, எ-து. பின்ன ரப்பரைநீக்கத்திற் றோன்று மானந்த

---

0 பரிபூரணமே பரையாய என்பதை பரிபூரணப் பரையேயாய என்றுகூட்டுக.

மயமாகியவ்வானந்தத்தையு மிங்ஙனமென்றறியா ததனு ளதீதப்படு வதாகு மத்துவிதமான ஆகமமுடிவாகியமவுனம் வேதமுடிவுக்கு முடிவாம். எ-று.

ப-ம். (அருள்.) தனதிச்சைப்படி யான்மா விச்சையைச் செலுத்தியுந் தனதுஞானத்தாலதன்ஞானத்தை மறைத்துந், தனதுகிரியையாலதனதுகிரியையை யடக்கியும், இங்ஙன மவ்வான்மபோதஞ் சீவியா தடக்குவது. அங்ஙன மதனது போதமடங்கினவிடத்து முற்றோற்றிய விச்சாஞானக்கிரியைகளவிரியாது நீங்கினவிடம் பரை ஆகலின், அருள் என்றும், பரை என்றுங்கூறினர்.

வேதாந்திக்குப் பெத்தத்திச்சைபோன் முத்தியிலுநானென்பது தொடர்தலின், வேதாந்தமுடிவு என்றார். (சக)

(கவி - சஉ. அ - கை.)

தமதாசாரியர் தமக்கருளிச்செய்த நிலையிணையவென வித்திரு வெண்பாவிற்கூறுகின்றார்.

தன்மையு முன்னிலையுந் தானாய்ப் படர்க்கையுமா
யென்னொழிவி லின்பமா யின்புமிது - வென்னாத
வேதாந்த சித்தாந்த மேபிறவா வீடென்றா
னோதாமல் வேதமுணர்ந் தோன்.

(இ-ள்.) தன்மையுமுன்னிலையுந் தானாய்ப்படர்க்கையுமா யென்னொழிவிலின்பமாயின்புமிது-வென்னாத,, எ-து. உயிருக்குயிராயிருந் தறிவிக்குந் திருவருளாகிய தன்மையுந்தாமாகி, யவ்வருளே திருமேனியாகக்கொண் டெழுந்தருளிவந்த வாசாரியராகிய முன்னிலையுந்தாமாகி, யவ்வருண்மிகுந்துகூறப்பட்ட வேதாகமங்களாகிய படர்க்கையுந் தாமாகி, இச்சுருதிகுரு சுவாநுபவங்களா லெனது போதவொழிவிற்றோன்று மானந்தமுந்தாமாகி, யவ்வானந்த மிதுவென்றுகூறக்கூடாத வானந்தா தீதமுந்தாமாகி, யெழுந்தருளியிருந்த.

"ஓதாமல்வேதமுணர்ந்தோன் வேதாந்த சித்தாந்தமேபிறவாவீடென்றான்,, எ-து. ஓதியறியாமற் றமது திருவருண்ஞானத்தா னான்கு வேதங்களையு முழுதுணர்ந்த திருஞானசம்பந்தப்பிள்ளையா ரிந்தவநுபவமுற்று முண்டான வேதத்தின் முடிவாகிய சித்தாந்தமே மீண்டு வாரா முத்தியென் றருளிச்செய்தார். எ-று.

எல்லாந் தாமாகியென்ற தவராது சுதந்திர மறிவித்தது. ஓதியுண ர்ந்தோரைப்பற்ற வோதாம லுணர்ந்தோர்க்குண்மையெல்லா முள்ள படி தெரியும். இங்ஙன மோதாம லுணர்ந்தோரே யிதுவே யிறவாவீ டென்றுகூறினமையா லிஃதுண்மை முத்தியென் றறிந்துகொள்க. வியாசர் முதலியோ ரோதாமலுணரினு மவர்க்குவிட்டுணுபரமென்று மகம் பிரமமென்றும் பின்னர் மலைவு பிறந்த தாகலினிவரைப்போலு மவர் சுதந்திர வறிவிலரெனக்கொள்க.

() இங்ஙனம், செய்யுட்கட் டானுயென்னு மொருமையை யுரைக் கட் டாமாகியெனப் பன்மையாகக்கூறியது, என்னையெனின், பிள்ளை யார் என்னுந் திருவருட்பெயரின் பெருமை நோக்கியென்க. (சஉ)

(கவி - சங. அ - கை.)

இதுவுமது.

மலையேறிப் போவார்க்கு மாநிலமாய்த் தோன்றிக்
கலையாதி யைக்கழற்றிக் காட்டித் - தொலைவிலே
காட்சியொழித் தென்னைக் கரந்தகலா வாதனையின்
மாட்சிசொலின் மோனமாம் வந்து.

(இ-ள்.) மலையேறிப்போவார்க்கு மாநிலமாய்த்தோன்றிக் கலையாதி யைக்கழற்றிக்காட்டித் தொலைவிலே காட்சியொழித்து,, எ-து. மாநில த்திருந்து மலைமேலேறிச் செல்வோர்க் காண்டு மாநிலமாய்த்தோற்றி யம்மலைமுடிமே லேறிநின்று மீண்டு பார்க்குமிடத்து முன்னிருந்த மாநிலமும் பின்வந்த மலையிடமுந் தாநின்றவிடத்திற்குக் கீழ்ப்பட் டருகிற் றோற்றுமாப்போலுங் கலைமுதலிய வாறத்துவாவையுஞ் சோ தனைபண்ணிநீக்கி யிவற்றின்முடிவினின்றவான்மாவை யறிதன்முதலி ய வநுபவங்களைக்காட்டி யிவ்வநுபவ முடிவிலே முற்றோற்றிய கருவி களும் பிற்றோற்றிய வநுபவங்களுமாகிய காட்சிக ளெனக்குத் தோற் றுவாறொழித்து.

"வாதனையில் என்னைக்கரந்தகலா மாட்சிசொலின் மோனமாம்வ ந்து,, எ-து. எனக்கோர் வாதனையு மில்லா தென்னைத் தமது பூரண னந்தத் தொளித் துள்ளும் புறம்புமா யெழுந்தருளியிருந்த வெனதா சாரியரது பெருமையைச் சொல்லுமிடத் ததனைச்சொல்லவொட்டா

9 இவ்வாறு கூறியவற்றிற் கெல்லாம்விதி யிங்ஙனமென்றுணர்க.

தென்னைப் பேரானந்தம் வந்து மவுனமாக்கும். (இஃதென்கொலோவ றிகிலேன்) எ-று.

ப-ம். தொலைவிலேகாட்சியொழித்து என்றமையான், மலைமுடி மேலேறிநின்று பார்க்குமிடத் தென்றும் வருவிக்கப்பட்டது.

கலையாதி- ஆறு அத்துவாவாவன, மந்திரம் பதினொன்றும், பதம்-எண்பத்தொன்றும், வர்ணம்-ஐம்பத்தொன்றும், புவனம்-இருநூற்றிருபத்துநாலுமாம். தத்துவ முப்பத்தாறும், கலைகள்ஐந்தும் எனக்கொள்க. அநுபவ முடிவுசொல்லக் கூடாமையின், மோனமாம்வந்து என்றார்.

(கலி - ௪௪. அ - கை.)

இதுவுமது.

இதுவென்ற தெல்லாம்பொய் யென்றா னெனக்குப்
பொதுவன்றித் தங்குமிடம் போச்சு - வதுநாங்கா
ணென்றா னதன்பே ரிரவைப் பகலாக்கு
மொன்றோ பரமசுக மோ.

(இ-ள்.) இதுவென்றதெல்லாம்பொய் யென்றானெனக்குப் பொதுவன்றித்தங்குமிடம்போச்சு,,எ-து. ஈதிதென் றுன்போதத்தாற் சுட்டியறிந் ததியா தஃதெல்லாம் பொய்யென்றார். இங்ஙன மருளிச்செய்த வாற்றான் என்போதத்தாற் சுட்டி யறிதற் கரிதாயெல்லாவற்றுள்ளும் பொதுவாயிருந்த திருவருளிடமேயன்றி முன்னர்க் கருவிகடோறும தனதன் மயமாய்த் தங்குமிடமெல்லா மிப்போது போயிற்று.

“அதுநாங்காணென்றானதன்பேரிரவைப்பகலாக்கு மொன்றோபரமசுகமோ,,எ-து. முற் கருவிகளோடுங்கூடிக் கருவிமயமாயு மிப்போதருளோடுங்கூடி யருண்மயமாயு மவற்றைப்பாசமென்று மிதனையருளென்று மிருந்தறிந்த வோரறிவுண்டே யவ்வறி வெம்மைவிட வேறோர் முதலன் றதுவேநாமென் றெமதாசாரிய ரருளிச்செய்தார். அங்ஙன மருளிச்செய்த திருப்பெயருக் கருத்தமென்னை?யிற்றைவரையு மறைத்திருந்த வாணவ விரவைப் பகலாக்கு ஞானசூரியனோ, அஃதன்றி யென்னா லொழிக்கக்கூடாதிருந்த தற்போதத்தை விழுங்கியெழுந்த பரமானந்த சாகரமோ யானறிகிலேன். எ-று.

ப-ம். பகுப்பின்றி யெல்லாவற்றுள்ளும் பொதுவாயிருத்தலின், அருளைப் பொது என்றார். அதுநாங்காண் என்றது, ஆன்மாவைச் சிவத்தோ டிரண்டற்ற வைக்கியங் கூட்டியதெனக் கொள்க. (௪௪)

(கவி - சரு. அ - கை.)

இதுவுமது.

ஆறிவித்தா லன்றி யறியாய்நீ யென்றான்
மறவைக் கதுவே மருந்தா - யறியவெளி
லாகாய மெய்யவைத்த வம்பா மறிவெளிலு
மாகாய வாக்கா மது.

(இ-ள்.) அறிவித்தாலன்றியறியாய்நீயென்றான் மறவைக்கதுவேமருந்தா யறியவெளி லாகாயமெய்யவைத்தவம்பாம்,, எ-து. உனதுயிருக்குயிராயிருந் தியாமொன்றினை யறிவித்தா னீயறிவதேயன்றி யுன்சுதந்திரமா யொன்றினையு மறியாயென் றருளிச்செய்தார். யானெனதென்றெழு மலப்பிணியை நீக்குதற் கத்திருவாக்கேமருந்தா யிங்ஙன மறிவிக்குந் தம்மை யானறியத்தொடங்கின் யானிருத்தற்கிடமுந் தம்மை யறிதற் கெழும்போதத்திற்கிடமுந் தமதிடமேயன்றி வேறுகாணேன் ஆகலின்,ஆகாயமிலக்கா யதனை யெய்யவைத்த அம்புபோலு மாகும்.

இங்ஙனமுயிர்க்குயிராயிருந் தறிவிப்பதா யெதிரிட்டறியக்கூடாததாயிருந்தவறிவின்கண் வாக்குத்தோற்றுவ தெங்ஙனமெனின், "அறிவெளிலு மாகாயவாக்காமது,, எ-து. அவரங்ஙனமிருந்த வறிவே யெனினு மவ்வறிவின்க ணின்ற காருண்ணியத்தாற் றோற்றும்வாக்கு மவ்வாகாய வாக்குப்போலும். எ-று.

ப-ம். அம்பிற் கெய்யாமுன் னிற்பதற் கிடமு மெய்தபின் சேறற்கிடமு மவ்வாகாயமேயன்றி வேறிடமின்மையா னிதனையதற் குவமையாகக் கூறினார்.

வாக்காற் கூறியதுபோற் பிறர்க்குத் தோற்றுவதேயன்றி யவர்க்குத் தோற்றா தாகலின்,ஆகாயவாக்காமது என்றார். (சரு)

(கவி - சசு. அ - கை.)

மும்மலங்களை நீக்குதற் குபாயமு மிம்மலங்களை நீக்கி யவ்வான்மா தற்போதமுங்கெட் டானந்தா தீதப்பட்டா லதற்குமேல் வேறுநிட்டையின்றென்பது மான்மா கருவிகடாக்காதுநிற்றற் குபாயமு மடங்கியபோத மீட்டும்விரியா தடக்கவேண்டு மென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மலமாயை கன்ம மயக்க விகற்ப
நிலைபோகப் போயொழிந்த நிட்டை - பலவோ

வறிவுக் கெதிரில்லை யாகாய நீழ
லறநிற்கு மாபோனிற் பாய்.

(இ-ள்.) மலமாயைகன்ம மயக்கவிகற்ப நிலைபோகப்போயொழிந்தநி ட்டை பலவோ,, எ-து. ஆணவமலமாகிய மயக்கத்தைக் கேவலாவத் தையாற் போகச்செய்து மாயையாகிய விகற்பத்தைக் குருலிங்க சங்க மவழிபாட்டாற் போகச்செய்து கன்மத்தைச் சுத்தநிலையாகிய வருளா ற் போகச்செய்து ஆன்மா விந்தவருள்வழிச்சென்று சிவானந்தத்திற் றற்போதமற்ற வுண்மைநிட்டை பலவிதமாமோ.

"அறிவுக்கெதிரில்லையாகாயநீழ லறநிற்குமாபோனிற்பாய்,, எ-து. இங்ஙனந் தற்போத மற்றுச் சிவமென்றுந் தானென்று மிரண்டற வி ருந்த வறிவிற் கெதிரீடாய்த் தோற்றுவ தொன்றுமில்லை. யாகாய மெ ல்லாப்பொருள்களோடுங் கூடியிருப்பினு மப்பொருள்களின் சாயை தன்னுட்டாக்காது நின்றாற்போ லெல்லாக் கருவிகளோடுங் கூடியிரு ப்பினு மக்கருவிகள் குணமு முன்னைச்சாராது நீநிற்றி. எ-று.

ப-ம். கேவலாவத்தையைத் தெரிசிக்கவே யாணவநீங்கு மாகலா னும்; மனவாக்குக் காயங்களாற் குருலிங்க சங்கமத்தை வழிபடவே ய ம்மனவாக்குக் காயங்களாய் விரிந்த விகற்பரூபமாகிய மாயை நீங்குமா கலானும்; இவற்றை நீங்கிச் சுத்தநிலையிற் றோன்றுந் திருவருளைத்தெ ரிசித் திந்தத்திருவருளே பெத்தமுத்தியிலு மெமக் குபகரிப்ப தென் றறிந்து தான் பிறவொன்னு முன்னிலைச்சுட் டொழிந்து நிற்கவே கன்ம நீங்கு மாகலானு,மலமாயைகன்ம மயக்கவிகற்ப நிலைபோக வென்றார்.

சகலகேவலங்களினீங்கி யான்மபோதமு மொழிந்த நிட்டைக்குமே ல் வேறுநிட்டை யின்றாகலிற் பலவோ வென்றார்.

ஆகாயந் தனது நுண்ணிய குணத்திற் றிரிவின்றி யிருந்தமையா ன் மற்றப்பொருள்களினிழ றாக்கா திருந்ததுபோ லான்மா தனதுபோ தஞ் சிவியாது நுட்பகுணத்தோ டிருந்ததெனிற் சிவத்தோடு கலப்பு க்கூடுந் தூலமாகிய கருவிகளு மதனைத் தாக்கமாட்டாதென்ப தறிக.()

(கவி - ௬௭. அ - கை.)

இதுவுமது.

போதம் பதைப்பறவே பூரணமாம் பூரணமும்
போதம் பதைத்தளவே பொய்யாகு - மீது

விழித்திமைப்பர் நின்றால் வெளியசைந்தாற் காற்றும்
பழக்கமதைச் சாட்சியைப்போற் பார்.

(இ-ள்.) போதம்பதைப்பறவே பூரணமாம்பூரணமும் போதம்ப தைத்தளவே பொய்யாகு மீது விழித்திமைப்பர்நின்றால்,, எ-து. ஆன்மபோதஞ்சீவியா தடங்கி னவ்வான்மா தோற்றும லருட்பூரணந் தானுயிருக்கு மப்பூரணமு மப்போதஞ் சீவித்தமாத்திரத்திற் றன் றோற்றாது மறையு மவ்வான்மாவாயிருக்கு மிங்ஙன மிப்போத மடங்கியும் விரிந்தும நின்று லப்பூரண மோர்காற் றோற்றியு மோர்கான் மறைத்தும் விழித்தல்போலு மிமைத்தல்போலுமாம்.

(அஃதெங்ஙனமெனின்) "வெளியசைந்தாற் காற்றும் பழக்கமதைச்சாட்சியைப்போற்பார்,, எ-து. வெளியிலடங்கிய காற்றுத் தான் வேறொரு பொருளாய்த் தோற்றாமல் வெளியேயா மவ்வெளியினின்று மசைந்தா லதனைவிடத் தானொரு பொருளாய்க் காற்றென்பதா மிக்காற்றாகிய சாட்சியைப்போ லுனதுபோதம் அருளி லடங்கியும் விரிந்துநின்ற பழக்க மதையும் பார்த்தறிதி. எ-று.

(கருத்து.) போதமடங்கி லருளாகியு மஃதசையி லான்மாவாகியு மிங்ஙனம் வருதலி னதனைச் சிறிதுந் தோன்றா தடக்கவேண்டுமென்பது. (சஎ)

(கவி - சஅ. அ - கை.)

ஆனந்தந் தோன்றுமிட மிங்ஙனமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

வேதாந்தம் போலிருக்கும் வேதாந்த சித்தாந்த
நாதாந்த போத நழுவினர்க்கு - நேதி
தனைக்கழன்று தற்போதஞ் சார்பழியுஞ் சந்தி
லுனக்கறிவா னந்தமுதிக் கும்.

(இ-ள்.) நாதாந்தபோத நழுவினர்க்கு வேதாந்தம் போலிருக்கும் வேதாந்தசித்தாந்தம்,, எ-து. நாத தத்துவத்தின் முடிவாயிருந்த வன்ளையுங் கடந்த மெய்ஞ்ஞானிகட்கு வேதாந்தம்போற் றுவித நாட்டருமிறி யிருக்கும் வேதத்தின் முடிவாகிய விச்சித்தாந்த நூலாகலின்

"நேதி தனைக்கழன்று தற்போதஞ் சார்பழியுஞ்சந்தி லுனக்கறி வானந்தமுதிக்கும்,, எ-து. நீக்குவதாயுள்ள தத்துவ முப்பத்தாறையுங் கழன்று அவற்றின் முடிவினின்ற வருளையும் பனையையுந் துவித நாட்ட மின்றிக் கழன்று நிற்றியெனின்; நின் றற்போதமு மாணவவாசனையாகிய சார்புமொழியு மிவையொழிந்த விடத்திற்கு மதீதத்திற்கு மிடையாகிய சந்தியி லுனக்கு ஞானானந்தந் தோன்றும். எ-று.

ப-ம். முப்பத்தாறு தத்துவங்களையு நீங்குமளவு மான்மபோதஞ் சீவித்தறிவ தருட்டெரிசனமுத லானந்தா தீதப்படுமளவு மப்போதஞ் சீவியா தடங்கியவ்வநுபவங்களைப் பெறவேண்டுமாகலின்; வேதாந்தம்போலிருக்கு மென்றார். (சஅ)

(கவி - சகூ. அ - கை.)

முத்தியி லொன்றென்று மிரண்டென்றுங் கூறக்கூடாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தத்துவா தீதத் திமிர்ப்படங்கித் தற்செலவு
மத்தின் வரத்து மசையாத - சுத்தத்தை
யொன்றென்ற னீசற் றுளதாவை யாதலினு
லன்றென்ற தென்றே யறி.

(இ-ள்.) தத்துவாதீதத் திமிர்ப்படங்கித் தற்செலவு மத்தின்வரத்து மசையாத,, எ-து. முப்பத்தாறு தத்துவத்திற்கு மதீதமாயிருந்த வாணவமல வாசனையெல்லா நீங்கியவிடத் தான்மா சிவத்தைச்சென்று கூடுதலுஞ் சிவ மான்மாவை வந்து பொருந்துதலுமாகிய விருவகையசைவுமின்றி யிரண்டற்றிருந்த.

"சுத்தத்தை யொன்றென்றனீசற் றுளதாவை யாதலினு லன்றென்றதென்றேயறி,, எ-து. முத்திக்கட் சிவமொன்றுமேயென்று கூறுதியெனின், அச்சிவ மொன்றென் றறிந்து கூறிய நீயுஞ் சிறி துண்டாவை யாகலி னம்முத்திக்க ணங்ஙனங் கூறுவது மன்றென்றதென் றறிதி. எ-று.

(ப-ம்.) உடம்பின் குணமன்றி யதன்கண் ணேறியிருந்த திமிர்ப்புயீபோ லுயிரின் குணமன்றி யிதன்கண்ணேறியிருந்தமையா லாணவத்தைத் திமிர் பென்றார்.

திமிர்ப்படங்காவிடத்துக் கூடினது போன்றும் பிரிந்ததுபோன்று மநுபவந் தோன்றலி னங்ஙனங் கூறினர். (சசு)

(கவி - ருய. அ - கை.)

இதுவுமது.

வெற்றவெறு மாநந்த மேலீடே கேவலத்தி
னிற்பதுபோ லந்த நிலைகழன்றோர் - சிற்போத
வண்டங் கடந்த வமுதத்தி னோடிலவும்
வெண்டிங்க ளுங்கிரண மும்.

(இ-ள்.) வெற்றவெறுமாநந்த மேலீடேகேவலத்தி னிற்பதுபோலந்த நிலைகழன்றோர்,, எ-து. நியதியிட்ட விடமெல்லாங் கழன்று சென்று தற்போத மொழிந்ததெல்லா மாநந்த மயமாய்த் தோற்று மாகலின் வெற்றவேறு மாநந்த மேலீடாகிய விடமே கேவலாவத்தைப்பட்டு நிற்பதுபோலத் தோன்று மிங்ஙனந்தோற்று மவ்வாநந்த மேலீடாகிய நிலையுநீங்கினோர்.

"சிற்போத வண்டங்கடந்த வமுதத்தி னோடிலவும் வெண்டிங்க ளுங்கிரணமும்,, எ-து. அருளும் பரையுமாகிய ஞானகாசத்தைக்கடந்துநின்ற வாநந்தாமுதத்தோடு விளங்காநின்ற சிவசந்திரனோடுந் தாமதனைவிட்டு நீங்காத வந்தவாநந்தாமுத கிரணமாகி நிற்பர். எ-று.

ப-ம். ஆநந்த மேலிட்டபோது பிரபஞ்ச மெல்லா மாநந்த மயமாய்த் தோற்றுமாகலின், வெற்றவெறுமாநந்த மென்றார். ஆநந்தமேலீடு விட்டுதியாமற்றோற்றுவது கேவலாவத்தை யநுபவத்தை யறிந்து ஒன்றுந் தோன்றாதிருந்ததென்று சொல்லவருதல்போ லானந்தாநுபவஞ் சொல்ல வருதலாற் கேவலத்தினிற்பதுபோ லென்றார்.

அநாதியிலாணவமலத்தான் மறைபட்டிருந்த வுயிர்க் கநுபவஞ் சொல்லக் கூடாததுபோற் சிவத்தி லிரண்டறக் கலந்துநின்ற வநுபவஞ் சொல்லககூடா தாகலின், ஆனந்தாநு பவத்திற்குவமை கேவலாவத்தையைக் கூறினர்.

வெண்டிங்களுங் கிரணமுமென் றுவமை கூறினமையாற் சந்திரனைப்போலச் சிவ மவனைவிட்டு நீங்காத வமுதம்போலாநந்த மவனையு மமுதத்தையும் விட்டு நீங்காத கிரணம்போ லான்மாசிவத்தோடிரண்டறக் கலந்துநின்ற நிலையே யெனக்கொள்க. (ருய)

(கவி - ௩௧. அ - கை.)

மாணுக்கனுக்குச் சகல கேவலங்களை முன்னரறிவித்துநீக்கிப் பின்னர் போதமொழித்தற் குபாயங்கூறுது சகல கேவலங்களி னுள்ள நிட்டைகூறுத லாகாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்முர்.

நினைப்பு மறப்பறுத்து நீயறலை நீக்கா
() துனைக்கரைய நில்லங்ங னங்ங - னெனக்கதற்றல்
விப்பிரட்ட மந்திரட்டம் வேலையிலே போட்டசுரை
செப்படித்தன் ஞானச் சிறை.

இ-ள். நினைப்புமறப்பருத்து நீயறலைநீக்கா துனைக்கரைய நில்லங்ங னங்ங னெனக்கதற்றல்,, எ-து. முன்னர் நினைப்பு மறப்பாகிய சகலகேவலங்களை யறிவித்து நீக்கித் தன்னை யறிவித்துப் பின்னர்த் தனக்குயிர்க் குயிராய்நின்ற திருவருளைத் தரிசிப்பித்து இத்திருவருளோடுங் கூடியறிகின்ற போதந் தற்சுதந்திரமா யொன்றைப்பகுத்தறியாத தாகலின், அருளை முன்னிட்டுக் கொண்டு தற்போத வொழிவைப் பெறுதற் குபாயங்கூறி யதனை நீக்காது அங்நினைப்புமறப்பாகிய சகல கேவலங்களுள்வைத் துன்போதங் கரைய நீயப்படிநில் அப்படிநில்லென்று மாணுக்கனுக் கோர்நிட்டைபோலுங் கூறுதல்.

"விப்பிரட்டமந்திரட்டம் வேலையிலேபோட்டசுரை செப்படித்தன் ஞானச்சிறை,, எ-து. மிகவும்பிரட்டமு மந்திரத்தாலொருவனுக்கு விநோதங் காட்டலுங் கடற்கட்போட்ட சுரையோடுஞ்செப்படி வித்தை ஞானத்திற்குத் தடையாயுள்ள மலபோதமுமாம். எ-று.

ப-ம். அந்தநிட்டைகூடுவோர் ஞானமுமன்றிமுற்செய்தகிரியையாதிகளுமன்றி யுபயப்பிரட்டராய்க் கருவிகளோடு மயங்கலின், விப்பிரட்ட மென்றும், ஒருவன் மந்திரத்தா ல் விநோத வித்தைதோற்றுவபோ லுள்ளே நானாவாகிய மாயாவிநோதங்கடோற்றலின், மந்திரட்ட மென்றுஞ்;சுரையோ டோர் துறைக்கட்சேரா தலையோடு மறிதல்போலறி வோர்நிலைநில்லாது நினைவோடுஞ்சுழல்வதனுல்,வேலையிலேபோட்டசுரையென்றும், ஓர்பந்துமுற்ருேற்றிப் பின்னதிற் பற்பல பந்து தோற்றுதல்போ லோர்காட்சிபோன் முற்ருேற்றியது முற்றுநில்லாது பற்பல காட்சியாய் விரிதலிற் செப்படித்த லென்று மிங்ஙனங்

() கதறல்-கதற்றலென விகாரமாயிற்று.

தோற்றுவன சகலகேவல போதமாகலின், ஞானச்சிறையென்றுங் கூறினர். அங்ஙனங் கூறியது நிட்டையன்றாகலின் கதற்றலென்றார்.(ருக)

(கவி - ருஉ. அ - கை.)

சித்தாந்த முத்தியோ வேதாந்த முத்தியோ வுண்மையென் றையுறுகின்ற மாணாக்கனுக்குக் காண்பானுங்காட்சியு மற்றவிடத் திரண்டுஞ் சரியென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சத்தாதி தத்துவம்போய்த் தானுமெதி ருங்கழன்றாற்
சித்தாந்த வேதாந்தச் சீர்மையிலை - முத்தி
யநிர்வசன மின்ப வதீதமெனி லாங்கே
பினமிடுதல் கன்மம் பிளாய்.

(இ-ள்.) சத்தாதிதத்துவம்போய்த் தானுமெதிருங்கழன்றாற் சித்தாந்தவேதாந்தச் சீர்மையிலை,, எ-து. சத்தமுதலிய முப்பத்தாறு தத்துவங்களையு நீங்கி யவற்றின் முடிவினின்றதானுந் திருவருட் டெரிசனமுத லானந்தானுபவமீறு யவ்வருளாற் றானறியா தறியுமநுபவங்களாகிய வெதிருங்கழன் றானந்தாதீதப்பட்டா லிரண்டென்று கூறுஞ்சித்தாந்தச் சிறப்பு மொன்றென்றுகூறும் வேதாந்தச்சிறப்புமாங்கில்லை

"முத்தி யநிர்வசனமின்பவதீதமெனிலாங்கே பினமிடுதல் கன்மம்பிளாய்,, எ-து. அங்ஙன மதீதப்பட்ட முத்தி சொல்லிறந்த சுகாதீதமென்றாற் பிள்ளா யொன்றென்று மிரண் டென்றும் அம் முத்தியைப் பின்னப்படக் கூறுதல் போதச்சேட்டையாம். எ-று.

ப-ம். சத்தாதிவிடயங்களின்மே லான்மாவுக் கனிச்சைபிறந்தபோது சோத்திராதி பஞ்சேந்திரியங்களும் விடயங்களை யுபகரியாது நீங்கு மிவைநீங்கவே முன்னபகரித்தபோது வசன கமன தான விசர்க் காநந்தங்களை விடயீகரிக்கும் வாக்காதிகன்மேந்திரியங்களுந் நீங்கும். இவை நீங்கவே யப் பத்திந்திரியங்கட்கு மிடமாய்நின்ற பூதங்கணீங்கு மிவை நீங்கவே விடயங்களைப்பற்றி நிச்சயித் தபிமானித்துச் சிந்தித்துநிற்கு மந்தக்கரணவாசனை நீங்கு மிதுநீங்கவே விடயங்களைப் பூசித்தறகோரெல்லையு மவ்வெல்லையி லுண்டாம். விடயப்பயனு மவ்விடயத்தைப் புசிக்கும்போ தோர்காலங்களினு மறியாததுபோலப் புதுமையு மேலு மிவ்விடய மனுபவிக்க வேண்டுமென்னுங் கருத்து முண்டாக்குங் கால தத்துவமுநீங்கு மிது நீங்கவே விடயங்களைப் புசிக்கும்போ திவ

னுக் கிவ்வளவு புசிப்பென்னுமட்டறிந்து வரைந்துநிற்கு நியதிநீங்கு மிது நீங்கவே யான்மா விடயங்களை யிச்சித்துப் பகுத்தறிந்து பற்றி யநுபவிக்க வவ்வான்மாவுக் கிச்சாஞானக் கிரியைகளை யெழுப்பு மிராகம் வித்தை கலையென்னு மிம்மூன்று நீங்கும்.

இவைநீங்கவே யான்மாவைப் பஞ்சேந்திரியங்களினுங் கறங்குபோற்கொண்டு சுழற்றும் புருடனீங்கு மிது நீங்கவே யவ்விடயங்களைப் புசிக்குமிடத் தவ்விடயமென்றுந் தானென்று மிரண்டற மயக்கிநிற்கு மாயை நீங்கும்.

இங்ஙனம் வித்தியா தத்துவங்க ணீங்கவே யிவற்றைப் பிரேரகம்பண்ணுஞ் சுத்த தத்துவங்களைந்துநீங்கு மிங்ஙனந் தத்துவ முப்பத்தாறு நீங்கினவிடத் தான்மாவி னிச்சை பெத்தத்தில் விடயத்தின்மேற் சனித்ததுபோற் சிவத்தின்மேற் சனிக்கும் ஞானம், விடயானந்தம் அசுத்தந் துக்கம் அனித்திய மென்றுஞ், சிவாநந்தஞ் சுத்தம் சுகம் நித்தியமென்றும், பகுத் தறிந்து கொண்டு நிற்குங் கிரியை பழைய பழக்கத்தால் விடயங்கண்மேற் செல்லினு மவற்றிற் செல்லாது மறுத்துநீங்கிச் சிவத்தையேநாடிநிற்கு மான்மா விச்சாஞானக்கிரியைகளிங்ஙனநிற்பது

சிவன் ஆன்மாக்களை முத்தியிலே யடைவிக்க வேண்டுமென்னு மிச்சைப்படி நிற்பதாகலிற் றிருவருட்பதியு மித்திருவருளை முன்னிட்டுக்கொண் டறியும் பரைதெரிசன முதலிய வநுபவங்க ளாகிய வெதிரு மவைகளை யறிந்த தானுங் கழன் றுநந்தா தீதப்பட்டா லிரண்டென்று மொன்றென்றுங் கூறக்கூடாதாகலின், “சித்தாந்தவேதாந்தச்சீர்மையிலை,, யென்றார்.

கன்மமென்பது சேட்டைமேலேறிற்று. ஆன்மா சத்தாதிகளைத் துரிசற விடுத்தபோது மற்றைத் தத்துவ முப்பத்தொன்று மிங்ஙன நீங்கலிற், சத்தாதிகளை முன்வைத்துக் கூறினார்.

முத்தியையறிவிப்பது வேதாகம முடிவாகலிற், சீர்மையென்று மம்முத்தியி லதனையறிந்து கூறும் போதமின்மையா லநிர்வசனமென்றுங் கூறினார்.

உதாரணம். (சிவப்பிரகாசம்.) மருவிய பொறியிலொன்று முழுவதுமென்றுந் (திருவள்ளுவர்.) சுவையொளி யூறோசை நாற்றமென்

றைந்தின், வகைதெரிவான் கட்டே யுலகு. என்றும், மற்றும் வருவ னவற்றானுங் காண்க. (ருஉ)

(கவி - ருங. அ - கை.)

சிவஞானியினது மகிமை யிங்ஙனமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சிந்தை பயமிலச்சை சீல மருவருப்பு
() வந்தைவிடுஞ் சாந்திகுல மாசார - மிந்தவழி
யெட்டுஞ் சிவயோகிக் கில்லையென மாமறைக
டட்டும் பெருமுரசந் தான்.

(இ-ள்.) சிந்தைபயமிலச்சை சீலமருவருப்பு வந்தைவிடுஞ்சாந்திகு லமாசார மிந்தவழி யெட்டும்,, எ-து. எனக்கின்னது வேண்டுமென்னு ஞ் சிந்தனையுந் துட்டமிருகாதி தோன்றியக்கா லச்சமு மின்னாரின்ன து சொல்லப்பொருறென்னு நாணமுஞ் சாந்திராயண விரதமுதலிய சீலமு மீதசுத்தமென்னு மருவருப்பு மகந்தையாற்செய்தபாவந் தீர்க் கும் புண்ணிய மீதென்று செய்யுஞ் சாந்தியுங் குலாசாரமுஞ் சமை யா சாரமுமாகிய விந்தமார்க்க மெண்வகையுஞ்.

"சிவயோகிக் கில்லையென மாமறைக டட்டும்பெருமுரசந்தான், எ-து. சிவத்தோ டிரண்டறக்கூடி நின்ற சிவயோகிக் கில்லையென்று மாமறைகளாகிய பெரியபேரிகை முழக்கும். எ-று.

"மாமறைகடட்டும் பெருமுரச மென்றது, அவர்க்கில்லை யென் று பலபடக்கூறுத லிவை யெட்டுஞ் சிவத்திற் கின்றாகலினதனையடை ந்த சிவயோகிக்கு மின்றென்பதாயிற்று. (ருங)

(கவி - ருச. அ - கை.)

இதுவுமது.

தத்துவத்தா ரல்லார் சலசந் திரனெப்பா
தத்துவத்தார் செய்யுந் தவாதவங்கள் - சுத்தக்
ககனமழை யாற்கழுவிக் காற்றைக் கனலாற்
றெகனஞ் செயல்போற் றெளி.

() அகந்தை-என்பது, அந்தையென்றிடைக்குறையாயிற்று.

"தத்துவத்தாரல்லார் சலசந்திரனெப்பார் தத்துவத்தார் செய்யு ந்தவா தவங்கள்,, எ-து. மெய்ப்பொருளாகிய பரதத்துவத்தை யடையாதோர் தற்போதத்தாற் செய்யுந் தவாதவங்களினனு மிவற்றின் பயன்களினனு முயர்ந்துந் தாழ்ந்துஞ் சலத்திற் பிரதிபலிதமான சந்திரனைப்போலு மாவர். அப்பரதத்துவத்தை யடைந்தோ ரருள்வடிவாயிருந்து செய்யுந் தவங்களு மவங்களுமிவற்றான் வரும் பயன்களு மிவர்க்கென்னை மாமெனின்,

"சுத்தக் ககனமழையாற்கழுவிக் காற்றைக்கனலாற் றெகனஞ்செயல்போற்றெளி,, எ-து. நிருமலமாயுள்ள வாகாயத்தை மழையாற்கழுவிக் காற்றைக் கனலாற் சுடுவதுபோலுமா மென்றறிதி,, எ-று.

ப-ம். ககனத்தைமழையாற் கழுவுதலுங் காற்றைக் கனலாற் சுடுதலு மின்றாயினவாறுபோற் றற்போதம் போய்ப் பெய்பிடியுண்டவனைப்போலுந் திருவருளே வடிவாயிருந்த மெய்ஞ்ஞானிக டிருமேனியினிகழுந் தவாதவங்க ளவ்வருள் விளையாட்டேயன்றி யவ ரவற்றைச் செய்தது மவற்றின்பய னவரைச் சார்வது மின்றென்ப தாயிற்று. தவாதவங்கடத்துவத்தா ரல்லார்க்கு வருவிக்கப்பட்டது. தத்துவமென்றது ஈண்டு சிவத்தை. (௫௪)

(கவி - ௫௫. அ - கை.)

இதுவுமது.

காலனுக்குப் பாவமென்றுங் காற்றுங் கதிரவனுஞ்
சீலமிலா ரென்றுஞ் சிவயோகி - மேலொன்றைச்
சுட்டுவதுந் தம்மைச் சுழற்றிவிடா தாட்டுமலக்
கட்டின் பிராந்திவலுக் காண்.

(இ-ள்.) காலனுக்குப்பாவமென்றுங் காற்றுங் கதிரவனுஞ் சீலமிலாரென்றுஞ்சிவயோகி மேலொன்றைச் சுட்டுவது,, எ-து. உயிர்களைக் கோறலாற் காலனுக்குப் பாவமுண்டென்று மசுத்த நிலத்திற் சலித்தலானு மந்நிலத் தெறித்த லானுங் காற்றுங் கதிரவனுமாசார மிலரென்றுங் கூறுதல்போற் சிவபூசையாதி நன்மார்க்கங்களைச் செய்திலரென்று நீராடலாதி யாசார மிலரென்று மிவைமுதலிய குணதோடங்களைச் சிவயோகிகண்மேற் சுட்டிக் கூறுவது.

"தம்மைச்சுழற்றிவிடாதாட்டுமலக் கட்டின்பிராந்திவலுக்காண்,, எ-து. தம்மைவிடாது பற்றிநின் றவத்தைக டோறுஞ்சுழற்றி யாட்டப்பட்ட மலபந்தத்தினாற் றோன்றும்பிராந்தியினது சாமர்த்தியமாம்.எ

ப-ம். சரிதை கிரியாயோக ஞானங்களுள் ஞானமொன்றுமே முத்திக் கேதுவாகலி னிஞ்ஞானத்தான் முத்தியை யடைந்திருத்தலாற் சரிதாதிகளும் உடம்பாதி யசுத்தங்களையெல்லாங் கடந்து சுத்தமாயுள்ள வாநந்த வெள்ளத்தின் மூழ்கி யிருத்தலா னீராடலாதி யாசாரங் களுஞ் செய்வதின்றிச் சிவயோகி சும்மா விருப்பன். அங்ஙனமிருப்பது சரிதாதிகளைச் செய்வோர்க்கு மலமறைப்பாற் றெரியாது தம்மைப்போற்பார்த் தவனையிகழ்தலான், மலக்கட்டின் பிராந்திவலுக்காணென்றூர். க-து. காலனுக்குப்பாவமுங் காற்றிற்குங் கதிரவனுக்குஞ் சுத்தமு மின்றாயதுபோ னன்மார்க்கஞ் செய்யாமையாற் பாவமு மாசாரமின்மையா லசுத்தமு மவர்க் கின்றென்பதுங் காண்க. (ருரு)

(கவி - ருசு. அ - கை.)

இதுவுமது.

நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென் - றூயார்
பெருமை சிறுமையிலை பின்னுமுன்னு மில்லை
வரைவற்று வேண்டியசெய் வார்.

(இ-ள்.) நாயேறிவீழ்ந்தென்னடாத்துகிலென் ஞானிக்குப் பேயாஞ் சகம்பழித்தென்பேணுகிலென் றூயார்,, எ-து. நாய்மேலிவர்ந்தோனதினின்றும் வீழ்ந்ததனு லிகழ்ச்சியென்னை வீழாதிருந் ததனைநடாத்தியதாற் புகழ்ச்சியென்னை அதுபோல், ஞானிகட்குப்பேய்க்கூத்துப்போற் றோற்று மிச்சகத்தி லுள்ளா ரிகழ்ந்தா லவர்க்கோர் சேதமென்னை புகழ்ந்தா லோர் இலாபமென்னை யவ ரொன்றோடுந்தோயார்.

"பெருமைசிறுமையிலை பின்னுமுன்னுமில்லை வரைவற்று வேண்டியசெய்வார்,, எ-து. அஃதன்றி யுயர்ச்சி வந்த தென்று பெருமையுந் தாழ்ச்சிவந்ததென்று சிறுமையு மவர்க்கில்லை பின்னாகிய சகலமு முன்னாகிய கேவலமு மில்லையாகலிற் சுத்தமாகிய வருள்வடிவாயிருந் தளவின்றித் தாம் வேண்டியவாறே திருவிளையாட் டாடுவார். எ-று.

க-து. இகழ்ச்சியாயுள்ள நாயேறிக்கு வீழ்ந்தாலு நடாத்தினாலு மிகழ்ச்சி புகழ்ச்சி யின்றாயதுபோல் ஞானிக டமக் கிகழ்ச்சியாயிருந்த வுடம்பை யிகழ்ந்தாலும் புகழ்ந்தாலு மவை யவர்க்கின்றென்பதாயிற்று.

ப-ம். செம்பிற் காளிதம்போன் றுயிரை யனுதியிற் பற்றியிருந்த சகசமல நீக்கற்பொருட்டு மாயையிற் றனுவாதி கொடுத்தலிற் சகலத்தைப் பின்னென்று மாணவ சம்பந்தமான கேவலத்தை முன்னென்றுங்கூறினர். (ருசு)

(கவி - ருஎ. அ - கை.)

ஞானம் பெற்றோரைப் புகழ்ந்து கூறியபின்ன ரிந்தஞானத்தை யருளிச் செய்தற்குத் தலைவராகிய பிள்ளையாரைப்புகழ்ந் தித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சன்மார்க்க மேமுதலாய்த் தாதமார்க் கத்தளவுந்
தன்மார்க்க மானவெங்கள் சம்பந்தன் - றன்னைத்
துறவி யரசு சுகியோகி போகி
யறவன் மறவனென லாம்.

(இ-ள்.) சன்மார்க்கமேமுதலாய்த் தாதமார்க்கத்தளவுந் தன்மார்க்கமானவெங்கள் சம்பந்தன் றன்னை,, எ-து. ஞானமுதற் சரிதையீறாய்ச்சொல்லப்பட்ட நான்கு பாதத்திற்கு முரித்தாகிய சன்மார்க்கமுதற் றாதமார்க்க மீறாய்ச் சொல்லப்பட்ட விந்நான்கினையுந் தமதருணெறியா லெனக் குண்டாகச் செய்தருளிய வெமது சுவாமிகளாகிய திருஞான சம்பந்தப் பிள்ளையாரை?

"துறவியரசுசுகியோகிபோகி யறவன்மறவனெனலாம்,, எ-து. எல்லாவற்றோடுங் கூடியிருந்து மவற்றோடு தாக்கற்று நிற்றலிற் றுறவியென்றுஞ், சகலபுவனங்களையும் தாமேயிருந்து நடத்தினைரசென்று மாநந்த மயனு யிருத்தலிற் சுகியென்றுஞ் சிவயோகத்தை யநுக்கிரகித்தலின் யோகியென்று மான்ம போதங்களை விழுங்கிக் கோடலிற் போகியென்றுஞ் சகல தருமங்களு மோர்வடிவாயிருந்தலி னறவனென்று மடைந்தோர் மும்மலங்களைக்கோறலான் மறவனென்றுஞ் சொல்லலாம். எ-று.

ப-ம். சன்மார்க்கஞ் சகசமார்க்கஞ் சற்புத்திரமார்க்கந் தாதமார்க்கமென நான்கு. இவற்றுட் சன்மார்க்கமாவது, நீயே நான் நானே நீயென்பது.

சகசமார்க்கமாவது, தோழனுந் தோழனுஞ். சற்புத்திரமார்க்கமாவது, பிதாவும் புத்திரனும். தாதமார்க்கமாவது, ஆண்டவனு மடியானு மெனக்கொள்க. (ருஎ)

(கவி - ருஅ. அ - கை.)

ஞானிகட்குப் பத்திசெய்வார் வீடடைவாரென் றித்திருவெண் பாவிற் கூறுகின்றார்.

தானல்லர் தன்னதல்லர் தத்துவசா லத்தலைவர்
மேனிசதா நந்தம் விளையுமிட - மியானைக்கைப்
போலே யிவருடம்பிற் போகமெலாம் பூசையித
னாலே சகம்பிழைக்கு மெண்.

(இ-ள்.) தானல்லர் தன்னதல்லர் தத்துவசாலத்தலைவர் மேனிசதாநந்தம் விளையுமிடம்,, எ-து. தநுகரண புவன போகங்களாயுள்ள தத்துவங்களெல்லாந் தமக்கயலாகலி னவை தாமு மல்லாமல் அசுத்தந் துக்க மனித்தியமா யிருத்தலி னவை தமது மல்லாமல் அத்தத்துவங்களோடு கூடியுங்கூடாத சாலத்தோடு மவற்றிற்குத் தலைவராயிருந்த மெய்ஞ்ஞானிக டிருமேனி சதாநந்த மேன்மேலு முண்டாகுமோரிடமாகலின்?

"ஆனைக்கைபோலே யிவருடம்பிற் போகமெலாம் பூசையிதனாலே சகம்பிழைக்குமெண்,, எ-து. எடுத்த பொருளின் பரிசமறிவது போற்றோற்றித் தன்னுளிருந்த நாசிக்குக் கெந்தவிடயமுமாகவிருந்த யானைக்கைப்போ லிந்தஞானிகளது திருமேனியா லநுபவிக்கும்போகமெல்லா மித்திருமேனி யநுபவிப்பதுபோலிருந் தித்திருமேனி யுள்ளிருந்த பரிபூரண சிவத்திற்கும் பூசையா மிப்பூசையினாலே சகத்திலுள்ளார் பிறவித் துன்பத்திற்குத்தப்பி வீட்டின்பத்தை யெய்துவரென் றறிதி. எ-று.

ப-ம். முற் றநுகரணங்களை யாமென்றும, புவனபோகங்களை யெமதென்றுங் கருதிநின்ற தற்போதங்கெட் டிப்போ தறிவுதாமா யாநந்தந் தமதாயிருத்தலிற் றானல்லர் தன்னதல்ல ரென்றார்.

தேகத்திருந்த போதத்தையுங் கருவிகளையும் விழுங்கிக்கொண்டதனுட் சிவங் குடியாயிருத்தலின், மேனி சதாநந்தம் விளையுமிடமென்றும், போகமெல்லாம் பூசையென்றுங் கூறினார். (ருஅ)

(கவி - ருகூ. அ - கை.)

திருவடியை யடைந்தோர்க்கே போக மனுபவிப்பதாமன்றி மற்றையர் தமக்குச்சொன்னநெறி நிற்பதேயன்றிப் போகமனுபவிக்கலாகாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பூசி முடிப்பனவும் பூண்பனவும் பொற்றுகிலு
மாசை மிகுந்த வரசியர்க்காங் - காசிற்ற
முண்டையர்க்கா காசீவன் முத்தனுக்குப் போகமல்லாற்
குண்டையொப்பார்க் கேனிதுவர் கும்.

(இ-ள்.) பூசிமுடிப்பனவும் பூண்பனவும்பொற்றுகிலு மாசைமிகுந் தவரசியர்க்காம்,, எ-து. சந்தனமாதிபூசப்படுவனவு மல்லிகையாதி முடிக்கப் படுவனவுங் கொந்தளப்பொன் ஞேலையாதி பூணப்படுவனவும் பொற்சரிகைச் சேலையாதி யுடுக்கப்படுவனவுமாகிய விவைமுதலிய போகங்களெல்லா மனையனுன் மிகவு மிச்சிக்கப்பட்ட சுமங்கலியாகிய வரசியர்க்கேயாகு மதுபோலும்?

"சீவன்முத்தனுக்குப் போகமல்லாற் காசிற்ற முண்டையர்க்கா கா குண்டையொப்பார்க்கேனிதுவாகும்,, எ-து. சிவனதிச்சைப்படியே யவனது திருவடிசேர்ந்த சீவன்முத்தனுக்கே போகமன்றி மங்கலநீங்கிய வமங்கிலிக்குப் போகங்களிலொன்றேனு மாகாவாறுபோலுஞ் சிவனடிசேராது தவம்பண்ணுவோர்க்கு மத்தவத்திற்குரிய விரதஞ்செய்து முடிப்பதேயன்றிப் போகங்களி லொன்றேனு மநுபவிக்கலாகா தஃதன்றிக் குண்டையைப்போலுஞ் சரிதாதி தொழிற்செய்வோர்க்கு மிப்போகமநுபவிப்ப தேனுகும். எ-று.

ப-ம். தம்முதலாகிய சிவத்தை யிழந்துதவம் பண்ணுவோரை முண்டையென்று குறிப்பாற் கூறினர்.

குண்டைக்குத் தொழிற் செய்வதேயன்றி யனையனோடுங் கூட்டரவின்மைபோற் சரிதாதிகளைச் செய்வோர்க்கு இத்தொழிற் செய்வதேயன்றி சிவத்தோடுங் கூட்டரவின்மையா லிவரைக் குண்டையொப்பா ரென்றார். (ருகூ)

(கலி - கூய அ - கை.)

ஞானி கிரியை செய்யினுஞ் செய்யாவிடினுஞ் சிறப்பாவனென்பதுங் கன்மி கிரியை செய்யாவிடின் மிகவு மிழிவாவ னென்பது மித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

ஆணைமதப் பட்டா லலங்கார மன்றிநாய்
தானுமதப் பட்டாற் சரியாமோ - ஞானி

தடைமீறி னாலுஞ் சதிராகுங் கன்மி
கடைமீற லாகாது காண்.

(இ-ள்.) ஆனைமதப்பட்டா லலங்காரமன்றியநாய் தானுமதப்பட்டா
ற் சரியாமோ,, எ-து. மதமேறு முன்னுஞ் சிறப்புள்ளயானை பின்மத
மேறித் தன்றடைகடந்து சேறினுஞ் சிறப்பேயாமன்றிப்பேயேறுமு
ன்னு மிழிவுள்ளநாய் தானும் பின்பேயேறினு லதுபோலுஞ்சிறப்பா
மோ வவைபோலும்?

"ஞானி தடைமீறினாலுஞ்சதிராகுங்கன்மி கடைமீற லாகாதுகா
ண்,, எ-து. முன்னின்ற நிலை கடவாதிருந்தபோதுஞ் சிறப்புள்ளமெ
ய்ஞ்ஞானி பின் னுண்ந்தமேலிட்டா லந்நிலை கடந்து சேறினுஞ் சிறப்
பே யாவன். கருமி நிலைகடவாமுன்னு மம்மெய்ஞ்ஞானிகட் கிழிவாவ
ன். தற்போதத்தா லந்நிலைகடந்தபோது மிகவுமிழிவாவ னுகலிற் றன்
னிலை கடக்கலாகாது. எ-று.

ப-ம். ஆனைமதமேறினுன் மிகவுஞ்சிறப்பு, நாய் பேயேறினுன் மிக
வு மிழிவு. அவைபோல, ஞானி தடைமீறினுன் மிகவுஞ் சிறப்பு. கன்
மி கடைமீறினுல் மிகவு மிழிவென்பதுங் காண்க. (௬௰)

(கவி - ௬௰க. அ - கை.)

தீவிரதரபக்குவனுக்குக் கூறு முபதேசமே போதுமென்பது
ம்றைய மூவர்க்கு மவர்கூறு முபதேச மொழியுமன்றி வேதாகமங்
களா லுணர்த்தவேண்டுமென்பது மித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

அதிபக் குவத்தாற் கநுக்கிரகஞ் செய்யும்
புதுமைக்குச் சாத்திரங்கள் போதா - திதுவென்னுப்
பேறே யனந்தம பிரகாரம் வந்தாலும்
வேறே யனந்தம் விதம்.

(இ-ள்.) அதிபக்குவத்தாற் கநுக்கிரகஞ்செய்யும் புதுமைக்குச்சாத்
திரங்கள்போதாது,, எ-து. தீவிரதரபக்குவ முடையானுக்கு ஞானநு
க்கிரகம் பண்ணு மதிசயத்திற்கு வெவ்வேறு வகைப்பட்ட சாத்திரங்
களெல்லாம் போதா தஃதெங்ஙன மெனின்,

"இதுவென்னுப் பேறேயனந்தம்பிரகாரம்வந்தாலும் வேறேயன
ந்தம்விதம்,, எ-து. இதுவென் றென்றைச்சுட்டுதற்கிடம் வைக்காது

கூறுமுபதேசப்பேறே யவனுக் கங்தம் விதமாய்க்கூறுஞ் சாத்திரங் களாகு மிங்ஙனம்வந்த பக்குவனு மனந்தம்பெயர்களுள்ளும் வேறிவ னையொழிந்த பக்குவர்களு மநந்தவிதமாவார்கள். எ-று.

ப-ம். தீவிரதர பக்குவன தறிவு சிவத்தையேயன்றி மற்றொன்றை யும் பகுத்து நாடாதாகலிற் சாத்திரங்கள் போதாதென்றார். மந்த மங் ததரந் தீவிரமென்னு மிம்மூன்று பக்குவரு நானாபேதமாய் வருதலி னு மிவர்க்குபதேச நானாபேதமாகக் கூறிப் பக்குவப்படுத்தவேண் டு மாதலினு மநந்தவிதமென்றார். (௬௧)

(கலி - ௬௨. அ - கை.)

பரையோகத்தி னிற்போருஞ் சீவன்முத்த ராவாரென் றித்திரு வெண்பாவிற் கூறுகின்றார்.

அறியாமை நீங்கி யறிவா யறிவே
யறியாம லாயிரண்டு மற்றுப் - பிறியாதார்
தன்னிழப்பின் ஞான சமாதிக்குச் சாதகரா
மந்நிலைக்கே சீவன்முத்த ராம்.

(இ-ள்.) அறியாமைநீங்கி யறிவாயறிவே யறியாமலாயிரண்டுமற்று ப் பிறியாதார்,, எ-து. சகலகேவலமாகிய வறியாமை நீங்கித் தம்மை யருளாற்கண் டவ்வருளறிவாகி முன்மலமாகிய வறியாமையின் மறை ந்திருந்தாற்போ லவ்வறிவு தானே யறியாமையாகி யதனுண் மறைந் திவ்வறிவென்பதுந் தாமென்பது மாகிய விரண்டுமற் றிதனைப்பிரியா திருப்போர்?

'தன்னிழப்பின்ஞானசமாதிக்குச்சாதகரா மந்நிலைக்கேசீவன்மு த்தராம்,, எ-து. அங்ஙனமிருக்கவே தற்சுதந்தரபோதமறும் அஃது அறவே பரைதானாகிய ஞானசமாதிக்குச் சாதகராவ ரிச்சாதகம்வந்த வக்கணமே சீவன்முத்தருமாவர். எ-று.

ப-ம். இம்முறைவந்து பரையோகத்தி னின்றோர்க்குச் சுகப்பேறு ஞ் சுகாதீதமுந் தாமே கிடைக்குமாகலி னந்நிலைக்கே சீவன்முத்தரா மென்றார். (௬௨)

(கவி - சாங. அ - கை.)

சிவஞான மில்லார்க்குச் சிவவேடத்தாற் பயனின்றென் றித்திரு வெண்பாவிற் கூறுகின்றார்.

மகவான்கண் பார்த்தவர்க்கு மாண்பாய்த் தனக்குப்
பகமா யிலச்சைவிடாப் பண்பாய்ச் - செகமாணக்
கண்ணாரி போல்வேடக் கண்ணாடி காட்டுதவ
மெண்ணூழி காலமிருந் தென்.

(இ-ள்.) மகவான்கண்பார்த்தவர்க்கு மாண்பாய்த்தனக்குப் பகமாயிலச்சைவிடாப்பண்பாய்,, எ-து. இந்திரனது கண்களைப் பார்த்த பெயர்க்கு மாட்சிமையா யவ்விந்திரனுக் கல்குலா யவனதுள்ளே நாணம் விடா முறைமையா யிருந்ததுபோல?

"செகமாணக் கண்ணாரிபோல்வேடக் கண்ணாடிகாட்டுதவ மெண்ணூழிகாலமிருந்தென்,, எ-து. தவவேடத்தைப் பார்க்கின்ற சகத்தோர்க்கு மாட்சிமையா யிருப்ப வவ்வேடத்திற்குரிய ஞானந் தமக்கின்றென்று தம்முள்ளே நாணமுற வேசிபோன்மினுக்கிய வேடமாகிய கண்ணாடி காட்டப்பட்ட தவத்தா ரளவிறந்த காலமிருப்பினு மவ்வேடத்தாற்பய னவர்க்கென்னையுள. எ-று.

ப-ம். அவனுக்குக் கண்களைப்பார்க்குந்தோறு மிலச்சைவரலா லிலச்சைவிடாவென்றார். அவனையிவர்க் குவமை கூறினமையா லிவர்க்கு மிவ்வேடத்தைப் பார்க்குந்தோறு மிலச்சைவருமென்பதாயிற்று.

தவத்தோர்க்குரிய வுள்ளொழுக்கமான ஞானசார மொன்றுந் தோற்றாது வடிவமாத்திரையே தோற்றினமையால், வேடக்கண்ணாடி காட்டுதவ மென்றார். (சாங.)

முதலாவது வேதாகமப் பொதுவி லுபதேசம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

இரண்டாவது

சத்திநிபாதத்

துத்தமரொழிவு.

அஃதாவது, நால்வகைச்சத்திநிபாதத் துத்தமர்களது பிரபஞ்சப்பற்றொழிவை முறையே கூறினமையா லிவ்வதிகாரத்திற்குச் சத்திநிபாதத் துத்தமரொழிவென்று பெயராயிற்று. இவர் இந்நூற் குரியவராகலி னவ்வதிகாரத்தின்பின் னிவ்வதிகாரம் வைக்கப்பட்டது.

(கவி - க. அ - ௯௪.)

தமதாசிரியர் ஞானபக்குவர் நால்வர்க்கு முபதேசிக்கு முறைமையைத் தமக்கருளிச்செய்யும்போது மானந்தாதீதரா யெழுந்தருளியிருந்தே யருளிச்செய்தாரென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சரிதாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெனக்களித்த வள்ளல் - குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ணல்வர்க் குபதேச
மானத் தையுநிகழ்த்தி னான்.

(இ-ள்.) சரிதாதிநான்கினுக்குஞ் சாலோகமாதி வருமா றெனக்களித்தவள்ளல் குருராயன்,, எ-து. சரிதை கிரியை யோக ஞானமென்னு மிந்நான்கு பாதத்திற்குஞ் சாலோக-சாமீப-சாரூப-சாயுச்சியமென்னு மிந்நான்குபதமும் வருமுறைமையை யெனக்கருளிச்செய்த வள்ளல் குருராயனாகிய திருஞான சம்பந்தப்பிள்ளையார்?

"ஞானத்திற்பக்குவர்க ணல்வர்க்குபதேச மானத்தையுநிகழ்த்தினான்,, எ-து. ஞானபாதத்திற்குரிய மந்த மந்ததரந் தீவிரந் தீவிரதரமென்னு மிப்பக்குவமுடையார் நால்வரதிலக்கணமு மவர்க்குபதேசித்த முறைமையையு மருளிச்செய்தார். எ-று.

க-து. முப்பத்தாறு தத்துவங்களையு நியதிகளைவது சரிதை. யவற்றையறிந்து நீங்கிய தன்னை யருளா லறிந் தவற்றின் முடிவி னிற்பது, சாலோகபதம். ஆங்குத் தனக்கறிவித்த வவ்வருளைத் தெரிசித்துப் பின் னருளென்றுந் தானென்றும் பிறித்துநோக்காது தற்போதத்தை

யடக்குவது கிரியை. யவ்வருளே வடிவாயிருப்பது சாமீபபதம். அங்ஙனமிருந்து தற்போதஞ் சிறிதுந்தோன்றா தொழிப்ப தியோகம். ஆங்குப் பரைதானாயிருப்பது சாரூபபதம். அப்பரை நீங்கத்திற்றோன்று ஞானானந்தத்தைப்பெறுவது ஞானம். அந்தவாநந்தத்தி லதீதப்படுவது சாயுச்சிய பதம். ஆதலின், சரிதாதி நான்கினுக்குஞ் சாலோகமாதி வருமா றிங்ஙனமெனக்கொள்க. (௧)

(கவி - உ. அ - கை.)

இதுவுமது.

கின்னரியைத் தொட்டவர்போற் கேட்டவள வுக்களவு
சொன்னதல வெங்கள் சுவாமியுரை - மன்னடத்தி
லாநந்த மூர்ச்சிதர்கை யாடகயாழ் தன்னிலே
தானுநலம் போலமொழிந் தான்.

(இ-ள்.) கின்னரியைத் தொட்டவர்போற் கேட்டவளவுக்களவு சொன்னதலவெங்கள் சுவாமியுரை,, எ-து. வருடி வாசிப்பார் தாம்நினைத்துக்கேட்ட பாட்டினளவுக் களவுகூறுங் கின்னரியைப்போன் றியானினைத்து வினவிய மட்டிற்கு விம்மட்டு விடைகூறியதன் றெமது சுவாமிகளாகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவாக் கஃதெங்ஙனமெனின்?

"மன்னடத்தி லானந்தமூர்ச்சிதர்கையாடகயாழ்தன்னிலே தானுநலம்போலமொழிந்தான்,,எ-து. பரமேஸ்வரன் றிருநடனத்தி லந்நடன வதிசயத்தைப் பார்த் தாநந்தபரவசராய் நிற்போர் கைப்பிடித்த பொன்னினா னியற்றப்பட்டயாழ் தன்னிலேதான் வாசிக்கு நலம்போலியான்கேளாது கேட்க வெனக் குபதேச மொழிகளை யருளிச்செய்தார். எ-று.

ப-ம். அவரானந்த பரவசராய் நிற்கவுந் தெய்வயாழ் வருடாதுவாசித்தல்போலப் பிள்ளையா ரானந்தா தீதராயெழுந்தருளியிருக்கவு மவரது தெய்வவாக்கு நினையாதுகூறிற்றென்பதறிக. "கின்னரியைத்தொட்டவர்போற் கேட்டவளவுக்களவு சொன்னதல வென்றமையாற், கடாவும் விடையுந் தாமே யருளிச்செய்தாரென்பதாயிற்று.

தெய்வயாழ்க்குமேல் வேறியா ழின்மைபோ லிந்தவாசாரியர்க்குமேல் வேறாசாரிய ரிலரென்பதுங் காண்க. யாழுன்னி வாசியாதிரு

க்கவும் பிறர்க்கன்னனஞ் செய்ததுபோற்றேற்றலிற்"றானூலம்போல மொழிந்தா னென்று திருவாக்குக் கதனையுவமையாகக் கூறினர். (உ)

(கவி - ௩..அ - கை.)

ஞானசாரிய ருபதேசத்தா னல்வகைப் பக்குவருந் தெளிந்து கொள்ளு முறைமை யித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சும்மாதே பார்த்திருக்கச் சுத்தியா முத்தமர்க்குத்
தம்மாய்வார்க் கோருரையே சஞ்சீவ - மென்மேலு
மாற்றஞ் சகுனப்புள் வாக்கு மதுவுண்ட
போற்றும்பி யின்பாட்டுப் போல்.

(இ-ள்.) சும்மாதேபார்த்திருக்கச் சுத்தியா முத்தமர்க்குத் தம்மாய் வார்க்கோருரையே சஞ்சீவம்,, எ-து. தீவிரதர பக்குவர்க் கோர்மொழியுங் கூறாது ஞானசாரியர் மவுனநந்த நோக்காற் பார்த்திருக்கவே யான்மசுத்தியாம். தீவிரபக்குவ முடையராய்த் தற்போத மொழிப் போர்க் கப்போதஞ் சிறிதேனும் பதையாதொழிதற் கேதுவாய்க்கூறு மோர்மொழியே சஞ்சீவம்போன்று சுத்தியாம்.

"மென்மேலு மாற்றஞ்சகுனப்புள்வாக்கு மதுவுண்டபோற்றும்பியின் பாட்டுப்போல்,, எ-து. மந்ததரபக்குவர்க்கு விட்டிசையா திசைக்குஞ் சகுனப்புள் வாக்குப்போலச் சிற்சிலசொற்களாற் றெளிவிக்கச் சுத்தியாம். அந்தபக்குவர்க்கு மதுவை நிறையவுண்டதும்பி யிடையறாது பாடும் பாட்டுப்போல வேதாகமசாத்திரங்களானு நாநாவுபாய யுத்திகளானு மிடையறா தறிவிக்கச்சுத்தியாம். எ-று.

ப-ம். திருநோக்கக் குறிப்பா லங்கிலெதெரிந்துகோடலிற் சும்மாதே பார்த்திருக்க வென்றுஞ், சஞ்சீவத்தாலுடலஞ் சுத்தியாவதுபோல, வோருரையா லான்மசுத்தி பெறுதலிற் சஞ்சீவமென்றுஞ், சகுனப்புள் வாக்காற் றானினைத்தபொருள் கிடைத்தல்போல் சிற்சில சொற்களான் மெய்ப்பொருளைத் தெரிந்து கோடலிற் சகுனப்புள் வாக்குப் போலென்றும், மூர்ச்சித்துக்கிடந்த பெண்டும்பியை யாண்டும்பி சூழ்ந்துகொண் டிடையறாது பாடி யாடவே யதற்கம்மூர்ச்சை தெளிந்திதனோடு பறந்து கூடல்போல நாநாவுபாய யுத்திகளா னிடைவிடா தறிவித் தறிவின தாணவமூர்ச்சையை நீக்கித் தம்மோடு சேர்த்தலாற் றும்பியின்பாட்டுப்போலென்றுங் கூறினர்.

சுத்தியாவது, சகல கேவலங்களைநீக்கி யவற்றின் வாசனையோ டெழுந்த தற்போதமுமொழிதல். "மென்மேலுமாற்றஞ் சகுனப்புள் ளென்றதனு லாங்கதையென்ப தாயிற்று. சகுனப்புள் வாக்குப்போலெ ன்றும், மதுவுண்ட தும்பியின் பாட்டுப்போலென்றுங் கூட்டுக. (ரு)

(கவி - ச. அ - கை.)

அறிவாநந்தத்தழுந்திய போதம் விரிந்து விடயா நந்தத்திற்செ ல்லா தோரியல்பிற்றுய் நின்றோர்க்கே யவ்வானந்த மாறுதுகிடைக்கு மென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றூர்.

முலைமுதிர நாண முதிர்ந்தடங்கி மூடிக்
கலவியிலே நக்கினத்தைக் காட்டற் - சலனைபய
னுலுந் தம்பனைசெய் தாநந்த மாக்குவது
போனுலா மிந்தப் பொருள்.

(இ-ள்.) முலைமுதிரநாண முதிர்ந்தடங்கிமூடிக் கலவியிலே நக்கின த்தைக்காட்டல்,, எ-து. ஓர்பேதைப்பெண் டனதுமுலை முதிர முதிர நாண மேன்மேலு முதிர்ந்து பிறபுருடரோடு முன்போ லளையாட லாதிசெய்யா தடங்கி யம்முலையினை மறைத்துத் தனது சுயபுருடனு க்குக் கூட்டரவின்கண் ணக்கினத்தைக் காட்டுவதுபோலு மொருவ னறிவு முதிர முதிர முன்போல விடயங்களிற் செல்வதற்கு நாணமு திர்ந் தவ்விடயங்களிற் செல்லும் போதத்தை யுள்ளடக்கித் திருவரு ளின் மறைத்து, ஆநந்தத்திற் கொப்பித்து நிற்றல் அப்போதத்தை யாநந்தத்திற் கொப்பிக்கவெனி னங்ஙன்மொப்பிக்குமாறே நில்லாமல்,

"சலனைபயனுலுந்தம்பனைசெய் தானந்தமாக்குவதுபோனுலா மிந்தப்பொருள்,, எ-து. போதச் சலனையாலும் விடயப்பயனை யநு பவிப்பதானு லு மிவ்விடயப்பயனை நீக்கி யப்போதசசலனையை யடக் கி யப்போதத்தை யாநந்த மயமாக்குவ தானு லு மிவ்வாநந்தப்பொரு ளோரியல்பிற்றுய்த் தோற்று தங்ஙனஞ்செய்வனபோமாயி னிப்பொ ரு ளோரியல்பிற்றுய்த் தோற்றுவதாம். எ-று.

ப-ம். முலைமுதிர்ந்த பெண் அம்முலையையு மல்குலையும் பிறபுரு டனுக்குக்காட்டாது மறைத்துச் சுயபுருடனுக்குக் காட்டுதல்போ ல றிவுமுதிர்ந்தோர் தற்போதத்தை விடயங்களிற் செல்லவொட்டாது மீட்டுள்ளடக்கி யதனைச் சிவாநந்தத்திற் கொப்பிக்கவேண்டுமாகல் ன ங்ஙன முவமை கூறினர்.

போதம் விடயங்களிற் சென்றழுந்தியு மாநந்தத்திற்சென்றழுந் தியு மிங்ஙன மாறிநிற்குமெனி னனந்தமு மாறித்தோன்றுமாகலி, ஞ நந்தமாக்குவது போனலாமிந்தப்பொரு ளென்ருர். ஆனலுமென்பத னைச் சலனேயென்பதனேடு மாநந்தமாக்குவதென்பதனேடுங்கூட்டுக.

(கவி - ரு. அ - கை.)

பதி பசு பாசங்களின துண்மையை வேதாகமங்களா லுணர்ந் தாலு மப்பதியைச் சுவாநுபவத்தாலுணரார்க்குப் பயனில்லையென் றி திருவெண்பாவிற் கூறுகின்ருர்.

பஞ்ச மலமும் பசுவநந்த மும்பதியு
மஞ்சு தொழிலு மவத்தைகளுங் - கிஞ்சறிவுங்
கேட்டுச் சரிதாதி செய்துகிலே சங்கெடாக்
காட்சிமெழு கிற்கனகங் காண்.

(இ-ள்.) பஞ்சமலமும் பசுவநந்தமும்பதியு மஞ்சுதொழிலு மவத் தைகளுங் கிஞ்சறிவுங்கேட்டு,, எ-து. ஆணவமாயை காமியந் திரோ தை மாமாயையென்று கூறப்பட்ட பஞ்சமலங்களின திலக்கணமு மி ம்மலங்களான் மறைப்பட்டிருந்த வநேகமாயுள்ள பசுவின திலக்கண மு மிப்பசுபாசங்கட்கு முதன்மையா யேகமாயிருந்த பதியின திலக்க ணமு மப்பதியாற் செய்யாநின்ற பஞ்சகிருத்திய விலக்கணமு மிப்ப ஞ்சகிருத்தியத்தானடக்குஞ் சாக்கிராதி யஞ்சவத்தையின திலக்கண மு மிவ்வஞ்சவத்தைகடோறுஞ் சுழலுமான்மபோத விலக்கணமுங் கேட்டறிந்தும்?

"சரிதாதிசெய்துகிலேசங்கொடாக்காட்சிமெழுகிற்கனகங்காண்,, எ-து. சரிதை கிரியா யோகங்களைச் செய்து மப்பாசத்தை நீக்கிப்பதி யையடைந்து 'பிறவித்துன்பத்தை நீக்கமாட்டாதா ரறிவு மாற்றறியு மெழுகிலடங்கிய கனகம் போலுமாம். எ-று.

ப-ம். உரைத்தொட்ட வேறியகனக முருக்கியெடாமையின், மெழு கின் மறைந்தாற்போலத் திரிபதார்த்தங்களின துண்மையைக்கேட்ட றிந்த வறிவு சுவாநுபவத்தான் வெளியாகாது மலத்துண் மறைந்த மையான், மெழுகிற் கனகங்காணென்ருர். அவ்வறிவு பிறருக்குக்காட் சியர்த் தோற்றலா னதனைக்காட்சியென்ருர். (ரு

(கவி - சு. அ - கை.)

சிவானந்தத்தைப் பெறுதிருந்தும் பெற்றேமென்று சத்தியங்கூறன் மிகவும் பாவமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

வாதி வடத்தினமு மாமருந்து வன்பிணியுஞ்
சாதித்த வீரன்மேற் றம்பலமுந் - தீததுபோன்
ஞானத்தி லின்பை நசிப்பித்து நானதுவா
மூனத்தை யாரொழிவிப் போர்.

(இ-ள்.) வாதிவடத்தினமு மாமருத்துவன்பிணியுஞ் சாதித்த வீரன்மேற்றம்பலமுந் தீததுபோன்,, எ-து. பஞ்சலோகங்களையும் பொன்னாக்கினேனென்று கூறு மிரதவாதி மிடியனுயிருத்தலும் பிறர் பிணிகளையெல்லாம் போக்கினே னென்றுகூறு மகாவயித்தியன் பிணியனு யிருத்தலும் பகைகளையெல்லாம் வென்றுசாதித்தே னென்றுகூறு மகாவீரன்மேற் பிறர்போட்ட தம்பல மிருத்தலுங் குற்றமா மது போல?

"ஞானத்திலின்பைநசிப்பித்துநானதுவா மூனத்தையாரொழிவிப்போர்,, எ-து. சுவாநுபவத்தான் ஞானானந்தத்தை யடைதற் கேதுவாகக்கூறும் ஞானசாத்திரங்களைக் கேட் டறிந்தமாத்திரத்தில் யாமவ் வானந்தம்பெறு ததனை விடயச்சேற்றுற்கெடுப்பித் திவ்விடயச்சேற்றிலழுந்திநின் றவ்வானந்தத்தின் மயமானேமென்று கூறுங் குற்றத்தை யாவர் நீக்குகிற்பார். எ-று.

ப-ம். மிடி பிணி தம்பல மவரிடத் திருத்தலாற் றாஞ்சொன்னவாறுசெய்பவரலரென் றறிந்தாற்போல, விடயப்பற்றுவிடாமையா னிவரிங்ஙனங் கூறுதலேயன்றி யதனை யடைந்திலரென்பதறிக.

மிடியாதி யவர்க்குக் கூறினமையால் விடய மிவர்க்கு வருவிக்கப்பட்டது. இங்ஙனங்கூறுதன் மிகவுந்தோடமூாகலி, னூனத்தையாரொழிவிப்போ ரென்றார். (சு)

(கவி - எ. அ - கை.)

ஆசாரிய ருபதேசங் கூறுமிடத்து மாணாக்கன் சகலகேவலங்களிற் றாக்கற்றுநின்று கேட்பின் மூவகைவினைகளு மறுமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மயலற்றார் கேட்க மகிழ்ந்துரைத்த வார்த்தை
யயலுக் குபதேச மாகுந் - துயிலாத்

தொறுவனைப்போ னின்றுகே சேழுக்கு நோயு
மறுமுறைத்தோ நாமுறைப்ப தை.

(இ-ள்.) மயலற்றார்கேட்க மகிழ்ந்துரைத்தவார்த்தை யயலுக்குபதேசமாகும்,, எ-து. தேகாதி பிரபஞ்சங்களை யானெனதென்று கருது மயக்கமற்ற வதிபக்குவத்தார்கேட்க ஞானசாரியரானந்த மகிழ்ச்சியா லருளிச்செய்த வுபதேசமொழிக ளப்பக்குவர்க்கன்றி யயலிருந்தோர்க்கு முபதேசமாகுமாகலி னம்மொழிகளை?

“துயிலாத் தொறுவனைப்போனின்று கேசேழுக்குநோயு மறுமுறைத்தோநாமுறைப்பதை,, எ-து. சாக்கிரத்தினில்லாது சொற்பனத்துஞ் செல்லா திடையான தன்மையாய்த் துயின்றுந் துயிலாத விடையனைப்போன்று கேவல சகலங்களிற் றாக்கற்றுநின்றுகேட்டி. யிங்ஙனங் கேட்டியெனிற், றூசின்மேலேறு மழுக்குப்போன் றேறுவதாய வாகாமிய துன்பமு மொழியு மியா முனக்குச் சொல்லவேண்டிய புத்தியைச் சொன்னோ மிதனைநீயறிதி. எ-று.

ப-ம். இடையன் கோற்கண் டுயிலாது துயின்று மாட்டுமணியரவத்தைக் கேளாதுகேட்கு முறைமைபோ லிப்போது ஞானோபதேசங் கேட்கும்போதே சகலகேவலங்க டாக்காது கேட்போ னநுபவமுற்றும் பெற்று முன்னிலைச்சுட்டு மொழிந்துநிற்பனாகலின், தூசழுக்குநோயு மறுமென்றார். தூசழுக்கு நோயுமறுமென்றவும்மையாற், சஞ்சிதபிராரத்தமு மறுமென்பதாயிற்று.

அஃதெங்ஙனமெனில், கருவிகள் சடமாகலி னவைகளான்மாவை யறிந்து கூடமாட்டா, ஆன்மா கேவலத்தின் மறைபட்டுக்கிடத்தலி னவைகளைச்சென்று கூடமாட்டான். கருவிகளைப்பிரேரகம்பண்ணியிக்கேவல மறப்பைநீக்கிச் சகலத்தில் வைத்துப் பெத்தத்திற் றேகாதிபிரபஞ்சங்களை யறிவிப்பதுபோலவுங், கீழாலவத்தைப் படுத்திக் கேவலத்தில் வைப்பதுபோலவு, முத்தியி லிக்கேவலசகலங்க டாக்காது வைத்துச் சுத்தாவத்தையிற் செலுத்திச் சுத்தத்தில் வைப்பதுந் திருவருளேயென்றும், இஃதன்றிக் கருவிகளைக்கூட்டிவித்தபோ தான்மாவிற்குச சுதந்திரவறிவுதோன்றித் தானல்லாததேகத்தைத் தானெனக்கருதிநின் றியானே யெல்லாவற்றையுமறிவே னெல்லாவற்றையுஞ்செய்துமுடிப்பே னெனக்கெதி ரொருவருமின்றெனநிற்கு மிங்ஙனநிற்பதனா லிதாகிதங்களு மிவற்றான்வரும் வினைகளுந்தொடரு மித்தொடர்ச்சியா லளவிறந்தபிறவிகளி னெடுங்காலஞ்சுழல்வதிங்ஙனமெறந்தப்புல்லறிவைவிட்டுநீங்கிக் கானலை நீரென்றுமயங்கிக் கண்டபோதும், நீரைநீரென் றுள்ளபடி கண்டபோதுந் தனக்குக் காட்டி நின்ற

றுகதிரொளியென்று கண்கண்டுநின்றுற்போ லான்மாபொய்யைமெய்யென்று மயங்கிநின் றறிந்தபோதும்,

மெய்யை மெய்யென்று தெளிந்துநின் றறிந்தபோதுந் திரோபவித்து மநுக்கிரகித்து மறிவித்து நின்றதுந் திருவருளேயென்றுமுள்ளபடி யறியிற் றானென்பதுமிந்தமுறையே அவனவளது வென்னுமுன்னிலைக்கண்ணுந் திருவருணடப்பிக்கின்றதென்றுகண் டம்முன்னிலைகளாற் றனக்கோரிதாகிதங்கள் வந்தகாலை யம்முன்னிலைகளை நாடாது வினைக்கீடாய்த் திருவருணடப்பிக்கின்றதென்று அத்திருவருளை நாடிநிற்றலாற் பிறனென்பதும்போ யெங்குந்திருவருளாய்க் காண்டலா லாகாமியமறுமென்பதும், ஞானசாரியர் கிருபாநோக்கத்தாற் சஞ்சிதமறுமென்பது முண்மை.

"முற்செனனம் புரிந்தவல்வினை யுடலுட னகலுமென்றும், "வினைப்போகமேயுறுந் தேகங்கண்டாய் வினைதானொழிந்தாற் றினைப்போதளவுநில்லாதுகண்டாயென்றும்,இங்ஙனமீஸ்வரவாக்கிய ஞானிகள்வாக்கியமிருக்க நீர் பிராரத்தவினையும்போமென்ற தென்னையெனின்,ஈண்டுக்கூறியமுறையே நிற்றி, யான்பிறனென்ப தொழிந்து திருவருளே கண்ணாகச்சென்று சிவதரிசனம்பண்ணி யதி லதீதப்பட்டுநின்ற சிவயோகி பஞ்சகிருத்தியங்களையுங்கடந்து பரமுத்தனைப்போலிருப்பனாதலினானு மவன் பிராரத்தம் வருவனபோற் றோன்றி யழிவதேயன்றி யவனை வாதியாதாகலினானு மவனுக்குப்பிராரத்த மின்றென்ப தறிக. இன்னு மப்பர் மாணிக்கவாசகர் முதலாயினோர் சரித்திரங்களினானுங் காண்க.

(யான்பிறனென்பதனால்வினையேறுமென்பதற் குதாரணம்.)

(திரட்டு.) "தானலா தொன்று தன்னைத் தானெனக் கருதிக்கொண்டே, யானெலாஞ் செய்தேனென்னு ஞானமஞ் ஞானமத்தா, லீனமாம்வினையிரண்டா மிருவினையாலுடம்பா, மூனமா ருடம்பாலூழா மூழினா லாகாதுண்டோ".

(சித்தியார்.) "யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியானென்னு மிக்கோணை ஞானவெரியால்வெதிப்பி நிமிர்த்துத், தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்றா னேரே தனையளித்து முன்னிற்கும் வினையொளித்திட் டோடு, நான்செய்தே னெனுமவர்க்குத் தானங்கின்றி நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்ம, மூன்செய்யா ஞானந்தா னுதிப்பினல்லா லொருவருக்கும் யானெனதிங் கொழியா

தன்றே" (சிவஞானதீபம்) "யான்செய்தேன்பிறர்செய்தாரெனுங்கோ ணீங்கி,, என்றும்; மற்றும் வருவனவற்ருற் காண்க.

பிராரத்துவ மின்றென்பதற்குதாரணம். (திருவருட்பயன்.) "மும்மை தரும்பயனு மூளாவா மூதறிவார்க், கம்மையு மிம்மையேயாம்" என்ருராசாரியாரும். (எ)

(கவி - அ. அ - கை.)

இருவினையொப்புமலபரிபாக முடையோர்க்குப் பக்குவ நால்வகையாயிருக்குமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்ருர்.

அண்ட முதலா யநந்தம் பிறப்பில்விதங்
கொண்டுநர ராய்வினைகள் கூறெருத்துத் - தொண்டிற்
சரிதாதி செய்து தவச்சார்பி னிற்போர்க்
கரிதான பக்குவநா லாம்.

(இ-ள்.) அண்டமுதலா யநந்தம்பிறப்பில்விதங் கொண்டுநாராய்த் தொண்டிற் சரிதாதி செய்துவினைகள்கூறெருத்து,, எ-து. அண்டசஞ் சுவேதச முற்பீசம்சராயுசமென்னு மிந்நான்கினிற் ருேற்று மெழுவகைப் பிறவியி லுண்டாகிய வெண்பத்துநான்கு நூருயிர யோனிபேதங்களினு மநந்த முருக்கொண்டு மாறிமாறிச்சுழன் றவைதொலேத்துப் பின்பு நரவடிவுகொண் டிவ்வடி வநந்தங்கோடியிற் சிவபுண்ணிய நேரிட் டச்சிவபுண்ணியத்தாற் சிவத்தொண்டுபூண் டிச்சிவத்தொண்டினுற் சரிதைகிரியா யோகங்களைச்செய் திச்சரிதை கிரியாயோகங்களா லிருவினையொப்பு மலபரிபாகம்பிறந்து?

"தவச்சார்பினிற்போர்க் கரிதானபக்குவநாலாம்,, எ-து. உயிர்ச்சார்பு பொருட்சார்புகளை நீத்துத் தவச்சார்பி னிற்போர்க்குக் கிடைத்தற்கரிதாகிய மந்த மந்ததரந்தீவிரந் தீவிரதரமெனப் பக்குவ நான்குள. எ-று. (அ)

(கவி - கூ. அ - கை.)

பக்குவர்க்கு ஞானசாரியனைத் தேடுந்தேட்ட மிங்ஙனம் பிறக்குமென் றித்திருவெண்பாவிற்கூறுகின்ருர்.

மேலைச் சுகம்வெறுத்து மேலோடுகீ ழற்றுவெறுஞ்
சாலப்பொய் யாயுடலார் தானுர்தன் - மூலமா

ரென்றுதெரி விப்பாரை யெய்துவோ மென்றிரண்டா
யொன்றுபடத் தேட்டமுதிக் கும்.

"மேலைச்சுகம்வெறுத்து மேலோடுகீழற்றுவெறுஞ் சாலப்பொ ய்யாயுடலார்தானுர்தன் மூலமாரென்று" எ-து. மேலாகிய வனிதாதி சுகங்களை வெறுத்து மேலடையும் பத முத்திகளினும் பூலோக போ கத்தினும்விருப்பற் றவைகளையெல்லா மிகவும் வெறும் பொய்யாய்க் கண் டிவ்வுடலுடையான் யாது இதனு ளிருந்த நானியாவ னெனக்கு முத லாயுள்ள பதி யாதென்று விசாரித் திவை யெம்மா லறியக் கூடுவதில் லை யாகலின்?

"தெரிவிப்பாரை யெய்துவோமென்றிரண்டாயொன்றுபடத்தே ட்டமுதிக்கும்" எ-து. இவற்றை யறிவிக்கு ஞானசாரியரையடைவோ மென்றுகருதித் தானென்றுஞ் சிவமென்று மிரண்டாய்ப் பகுத்தறிவ தாயபின்னர்ச் சிவத்தோ டொன்றாக விங்ஙனம் பகுத்தறிவ தொன்று க்கு மந்தஞானசாரியரெங்குளரென்றுதேடுந்தேட்டம்பிறக்கும். எ-று

ப-ம். முன்போன்மெய்யாய்த் தோன்றுமையின், "வெறுஞ்சால ப்பொய்யாயென்றார். (௬)

(கவி - ௰. அ - கை.)

ஞானசாரியரைத் தேடும்போது பிறக்குங்குண மித்திருவெண் பாவிற் கூறுகின்றார்.

வேர்க்குங்கண் ணீர்ததும்புங் கம்பிக்கு மெய்ந்நடுங்கும்
வார்த்தை நழுவு மனம்பதறும் - கார்க்கதமாய்க்
காந்து முரோமாஞ் சலியாகுங் காதலித்தார்க்
கேய்ந்தகுணங் காணிவையெட் டும்.

"வேர்க்குங்கண்ணீர்ததும்புங் கம்பிக்குமெய்ந்நடுங்கும் வார்த் தைநழுவுமனம்பதறுங்கார்க்கதமாய்க்காந்துமுரோமாஞ்சலியாகும்," எ-து. உடற் கண் வேர்வை யரும்புங் கண்களி லாநந்தநீரொழுகு மு ண்ணடுங்கு முடனடுங்கும் வசனங் குழறு மாசாரியரை யென்றைக் கடைவோ மென்று மனம்விரைந்து நாடு மேகம்போலுள்ளேகுமுறி யுள்மெலாம் வெதும்பு முடன் மயிர்க்குச்செறியும்.

"காதலித்தார்க்கேய்ந்தகுணங்காணிவையெட்டும்," எ-து. ஆகி ய விவை யெண் வகையும் ஞானசாரியரை விரும்பித் தேடுவோர்க் கியைந்த குணங்களாம். எ-று. (௰)

(கவி - ௰க. அ - கை.)

ஞானசாரியரெதிர்ப்படாதபோ தவர்க் கிங்ஙன மவத்தைக டோற்றுமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அணாநோட்டஞ் சிந்தை பெருமூச் சறியாச்
சுரமூட்ட மெல்லாந் துறத்த - லுணாதோற்று
மான மவுனம் விகள மறவைசா
வானவிவை பத்துமவத் தை.

(இ-ள்.) அணாநோட்டஞ்சிந்தை பெருமூச்சறியாச் சுரமூட்டமெல் லாந்துறத்த லுணாதோற்று மானம்,, எ-து. மனஞ் சகமுகத்தை விட் டகமுகமாய் நிற்றலி னருக்கியனோக்கமு மெப்போது ஞானசாரியனை யறிந்தடைவோமென்னுஞ் சிந்தனையு மவனை நினைக்குந்தோறு நெட் டுயிர்ப்பெறிதலு மிந்நினைவு மேலீட்டாற் பிறரா லறியக்கூடாத சுர மே லெழுதலு மிதனா னூணுறக்க முதலியவெல்லாந் துறத்தலு மித னைப் பிறருக் கியாதொன்று சொல்கோமென்று சொல்லாதடக்குமா னமும்?

"மவுனம்விகளமறவைசா வானவிவைபத்துமவத்தை,, எ-து. இம்மானத்தா லொருவரோ டொன்றுஞ்சொல்லா திருக்கு மவுனமு மிங்ஙனங்கூறும் விசார மேலீட்டாற் பித்தமேறலு மிந்த வவத்தைகள் படுங்காலத்து மந்த ஞானசாரிய ரெதிர்ப்பட்டாராயின் மூர்ச்சித்த லு மிறத்தலுமாகிய விவைபத்தும் பக்குவர்க்குத்தோற்று மவத்தை களாம். எ-று.

மறவை சாவென்னு மிரண்டவத்தையுந் தீவிரதர பக்குவர்க்கெ னக்கொள்க. (௰க)

(கவி - ௰உ. அ - கை.)

ஞானசாரியர் தமக்கெதிரே யெழுந்தருளியபோது பக்குவர் வ ணங்கி வினவுமுறைமையு மிவர்க் கவர்பண்ணுந்தீக்கை யிவையென் பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தேட்டந் திரண்ட திருமேனி யுட்புறம்பாய்க்
காட்டு மளவே கணாபுரண்டு - கேட்ட
வதிபக் குவத்தார்க் ககம்புறமென் றாறு
விதிவைத்த தீக்கையா மெண்.

(இ-ள்.) தேட்டந்திரண்டதிருமேனியுட்புறம்பாய்க் காட்டுமளவே,, எ-து. தமதுயிருள் ளிருந்துந் தெரியாது தாந்தேடுந் தேட்டமாகிய பேரானந்தந் தானே திரண்ட ஞானசிரியர் தமதுதிருமேனியை யவர் கண்ணாரக்காணும்படி புறம்பாய்க் காட்டுமாத்திரத்திலே?

"கனபுரண்டுகேட்ட வதிபக்குவத்தார்க் ககம்புறமென்றாறு விதிவைத்ததீக்கையாமெண்,, எ-து. அன்பெனு மாறு கனபுரண்டெழுந்து அவ்வாசாரியனைப் பலதரம் வலம்வந் தட்டாங்கமுதலிய வணக்கஞ்செய்து பின்னெழுந் தஞ்சலியத்தராய் நின் றுநந்தக்கண்ணீரொழுக வநேக தோத்திரம்பண்ணி யெமது சுவாமிகளே யடியேங்கட் கிவ்வுடல்வந்தவா றியா திவற்றுளிருந்த யாமியாவ ரெமக்கு முதலாயுள்ள மெய்ப்பொருள் யாதென் றுகேட்க வதிபக்குவ முடையோர்க்கு வேதாகமங்களில் விதித்துவைத்தபடி யவர் பண்ணுந் தீக்கை யகத்தீக்கை மூன்று புறத்தீக்கை மூன்றென் றாறுவகையா யிருக்குமென் றறிதி. எ-று.

தீக்கைகளாறுவன; திருநோக்கம் பரிசம் வாக்கு பாவனை நூல் யோகமென்பன.இவற்றுட் டிருநோக்கம் பாவனை யோகமென்னுமிம் மூன்றுமகத்தீக்கை. பரிசம் வாக்கு நூலென்னு மிம்மூன்றும் புறத்தீக்கையெனக்கொள்க. உள்ளென்பதையுயிருள்ளிருந்துமெனக்கொள்க.

(கவி - ௰௩. அ - கை.)

ஞானசாரியர் மாணுக்கனுக்குத்தீக்கையான் மும்மலங்களையுந் தற்போதத்தையு நீக்குமுறைமை யித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்து மலமாயைக்
கருமத்தை யெல்லாங் கழற்றிச் - சரிதாதி
வாதனையாம் போத மயக்கத்தை வாக்காலே
போதைசெய்து போக்கிவிடப் போம்.

(இ-ள்.) பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துமலமாயைக் கருமத்தையெல்லாங்கழற்றி,, எ-து. பறவை முட்டையைச் * செட்டையாற்பரிசித்தல்போன் மாணுக்கனைக் கரசரணங்களாற்பரிசித்து மாமைகணக்கணிருந்த முட்டையைத் தன்மனதிற்பாவித்தல்போ லவனைத்தமதருளுருவாய்ப் பாவித்து மீன் றனது சினையைப்பார்த்தல்போ லவனைத்தமது கிருபைப் பார்வையாற்பார்த்து மாணவமல மாயாமலங் கன்மமலமாகிய விவையெல்லாநீக்கி.

"சரிதாதி வாதனையாம்போத மயக்கத்தை வாக்காலே போதைசெய்து போக்கிவிடப்போம்,, எ-து. சரிதை கிரியாயோகங்களைச்செ

* செட்டையாற் பரிசித்தன் முதலியன வவ்வவ் முட்டைக டத்தம் பருவ மடைதற் கென்றறிக.

ய்யும்'வாசனையாகிய தற்போத மயக்கத்தை நீக்குதற்கேதுவாகிய வுய தேசமொழிகளைத் திருவாக்காற் போதித்துநீக்கப்போம். எ-று.

யோகத்தைப் பாவனையுள்ளடக்கி நாலைவாக்கிலடக்கி யவ்வாறை யுமீண்டு நான்காய்க்கூறினர். (யகூ)

(கவி - யச. அ - கை.)

ஆசாரிய ருபதேசித்த பொருள்களை மாணுக்க ரிம்முறைமைக ளா யேற்றுக்கொள்வாரென் றித்திருவெண்பாவிற் கூறுகின்ருர்.

காலமறை தேசமறை கன்மறைபோற் காண்பாரும்
பாலுணும்புள் ளிப்பிமீன் பக்கிதிக் - காலு
மிரும்பினீர் மின்னலிலே யேற்றபணம் பார்ப்பார்
தரும்பொருளைக் கொள்ளுவார் தாம்.

(இ-ள்.) காலமறைதேசமறை கன்மறைபோற் காண்பாரும்,, எ-து. முன்னோர் காலத் தோர் பொருளை யறியாதிருந்து பின்னோர் காலத் ததனை யறிந்து கொள்ளுங் காலமறைபோலு மோர் தேசத் தறியாதி ருந்த பொருளை யோர்தேசத் தறிந்துகொள்ளுந் தேச மறைபோலு முன்மணியென் றறியாதிருந்தும் பின்னதினேட்ட மறிவாரோடும்ப ழகி மணியென் றறிந்துகொள்ளுங்கன்மறைபோலு மாசாரியரநுக்கிர கித்த பொருளை யறிந்துகொள்ளுவாருமுள ரஃதன்றி;

"பாலுணும்புள்ளிப்பிமீன்பக்கிதிக் காலு மிரும்பினீர் மின்னலிலே யேற்றபணம்பார்ப்பார் தரும்பொருளைக்கொள்ளுவார் தாம்,, எ-து. பாலுண்ணு மன்னப்புட்போலுஞ் சிப்பிபோலு மீனுண்ணுங் கொக் குப்போலு முலையி லெழக்காய்ந்த விரும்பினீர்போலு மின்ன லொ ளியிலேற்கப்பட்ட பணநோட்ட மறிவார்போலு மவ ரருளிச்செய்த பொருளை யங்ஙன மேற்றுக்கொள்ளும் பக்குவருமுளர். எ-று.

ப-ம். ஆசாரியரநுக்கிரகித்த பொரு ளக்காலத்துத் தோற்ருதிருந் து சின்னுட்குப்பின்னர் தம்முள்ளே தெரிந்துகோடலாற் காலமறை யென்று மவர் கொடுத்த நூலிற் றெரியாதிருந் தந்நூற் பொருளைக்கூ று மற்ருேர்நூலிற் றெரிந்து கோடலாற் றேசமறையென்றுந் தாங்கற் றநூல் கற்ருேரோடும் பழகித் தெரிந்துகோடலாற் கன்மறைபோலெ ன்றுங் கூறினர்.

அன்னம் நீரைநீக்கிப் பாலுண்டாற்போற் சரிதாதிகளைநீக்கிஞா னமொழியைக்கோடலாற் பாலுண்ணும் புள்ளென்றும், சிப்பி சோதி மழைக் கங்காந்திருந்து துளிவிழுந்தமாத்திரத்தில் வாய்மூடிக் கொள்ளுதல்போ லெப்போதுகூறுவாரென் றிதையமலர்ந்துகேட் டங்ஙனங் கேட்டபொருளை யுள்ளடக்கிப் பயன்படுத்திக்கோடலா னிப்பியென்றும், கொக்கு துறைக்கண் ணசைவறநின்று மீன்வந்துழிக் கவருதல்போல் சித்திரப்பாவைபோ லசைவறவிருந்து பயன்றருமொழி வருந்தோறு மேற்றுக்கோடலான் மீன்பக்கி யென்றும், இரும்பு தானேற்கு நீர்மாத்திர மெடுத்துக்கொண் டதனைமீளவிடா திருத்தல் போலத் தமக்குவேண்டிய வுபதேசமொழிகளை யேற்றுக்கொண்டு மீளவிடாதிருத்தலா னிரும்பினீரென்றும், கட்கூர்மையால் விரைந்து மின்னலொளியிற் பணம்பார்த்ததுபோ லறிவுகூர்மையா லதிசீக்கிரத்திற்கூறியமொழிகளி னருத்தமெல்லாமறிந்துகோடலின், "மின்னலிலேயேற்றபணம்பார்ப்பா" ரென்றுங்கூறினர்.

க-து. காலமறையாதி மூன்றற்கு மின்னகாலத் தின்னபொரு ளுளதென்று மின்னதேசத்தி னின்னபொருளுளதென்று மின்னமலைக்கப்பாலின்னபொரு ளுளதென்றுந் தமக்காப்தனா யுள்ளவன்கூற வம்மொழியை யுண்மையாகக் காண்பார்போற் காண்பாரு முளரென்றுமாம்.

(கவி - ௰௫. அ - கை.)

ஆசாரிய ருபதேசித்தபொருளை யுட்கொண்டபக்குவர் தற்போதமொழிக்கு முறைமை இங்ஙனமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பதியிறக்கக் கேட்டிறந்த பத்தினிபோற் பால்போ
லதிமோகி தீப்புகல்போ லன்பாம் - விதவையர்போற்
கன்னன் கடையிற் கொடைபோலக் காணலாந்
தன்னையிழ வாதிழந்த ருன்.

(இ-ள்.) பதியிறக்கக்கேட்டிறந்த பத்தினிபோற்பால்போ லதிமோகிதீப்புகல்போ,, எ-து. பதியிறந்தானென்று பிறர்கூறக்கேட்ட வக்கணத்திற் றானுமிறந்த பதிவிரதைபோலுங் கடைகாலிருந்து கவிழ்ந்த பால்போலுந் தனது புருடன்மே லதிமோகியாயிருந்தாள ளவனிறந்தகாலத் தவனோடு மக்கினிப்பிரவேச மாதல்போலும்?

"அன்பாம் விதவையர்போற் கன்னன்கடையிற் கொடைபோலக்கா ணலாந் தன்னையிழவாதிழத்தலுன்,, எ-து. புருடனிறந்துபோய பின் னரு முன்ன ரன்பு விடாதிருந்த விதவையர்போலு மறுமைகுறித் தீட்டிய புண்ணியமெல்லாமோரந்தணனுக்குக்கன்னன் றன்றேகாந்தி யத்திற் கொடுத்த கொடைபோலு மாசாரியருபதேசித்த மொழிகளை யுட்கொண்டபக்குவர் தம்மையொழியா தொழித்தற்கு முறைமையை க்காணப்படும். எ-று.

ப-ம். கேட்டவக்கணத் திறந்தாளைப்போ லுபதேச மொழியைக் கேட்டவக்கணத்திற் போதமிறத்தலின் "பதியிறக்கக்கேட்டிறந்த பத்தி னிபோலென்றும்; பாலெல்லாங்கவிழ்ந்ததாயினு மதனுள்வாசனை யி ருத்தல்போற் போதமிறந்ததாயினு மப்போதவாசனையிருத்தலிற் பா ல்போ லென்றும், சின்னுழிகை சென்றபின்னர் தீப்புகல்போற் சின் னுளிற் போத மிறத்தலி னதிமோகி தீப்புகல்போலென்றும், புருட னேடிறவாதிருந்து தேகபோகங்களை வெறுத்திருத்தல்போ லியா னெனதென்றெழும் போதவெழுச்சியை யடக்கியிருத்தலின் விதவை யர்போலென்று மொன்றையுங்குறியாது கொடுத்தல்போலொன்றை யுங் கருதாது எல்லாவற்றையும் விடுத்தலிற் "கன்னன்கடையிற் கொ டைபோ, லென்றுங்கூறினர். (௧௫)

(கவி - ௧௬. அ - கை.)

ஆசாரியருபதேசிக்கு மொழியோர்பிரகார மாயினும் பக்குவவு யர்ச்சி தாழ்ச்சிப்படிஞானமேறுவதன்றி யோர்படித்தாய் ஞானமே றுதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மாற்றுப் பலவகையாம் பொன்னோடை வைப்பான்போற்
றேற்றிச் சிவாகமத்தாற் செப்புகினு - மேற்ற
பரிபாகத் தாலே பழுப்பாம் பலவு
மொருபாக மன்றென் றுணர்.

(இ-ள்.) மாற்றுப்பலவகையாம் பொன்னோடைவைப்பான்போற் றே ற்றிச்சிவாகமத்தாற் செப்புகினும்,, எ-து. பலவகையாய்த்தோற்று மாற்றுப்பொன்களைப் பத்துமாற்று மாக்குதற்பொருட்டுப் புடம்போ டு மொருவனைப்போலும் பக்குவர்நால்வர்க்கு மோர்படித்தாற் சிவா கமத்தாற் றெளிவித்துக்கூறினும்?

"ஏற்ற பரிபாகத்தாலே பழுப்பாம்பலவு மொருபாகமன்றென் றுணர்,, எ-து. மாற்றேற்றமாயிருந்தபொன் பரிபாகத்தான் முன் பழுப்பாகுமன்றிக் குறைந்தமாற் றுயர்ந்த மாற்றுக்களாகிய பலபொ

ன்களு மொருபாகமாப் பழுப்பாகுவதன் றதுபோ லுயர்ந்த பக்குவ னுக்கு முன்னர் ஞானமேறுமன்றி யெல்லார்க்குமோர் பிரகாரமாய் ஞானமேறுதென்றறிதி. எ-று.

க-து. தாழ்ந்தமாற்றுப்பொன்களைப்புடம்போடுந்தோறு மிடைகுறைந்து மாற்றுயர்தல்போலத் தாழ்ந்தபக்குவர்க்குச் சிவாகமத்திற்கூறு நானுவுபாய யுத்திகளை யுபதேசிக்குந்தோறும் பாசங்குறைந்து ஞானமேறுமென்பதுங் காண்க. (யசு)

(கவி - யஎ. அ - கை.)

மந்தமுதலிய நான்கு பக்குவங்களையு முடையோரை ஞானசாரியர் பக்குவப்படுத்தி யவர்க்கு ஞானமேற்றுமுறைமை யிங்ஙனமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

கல்லையுரு வாக்குங் கழற்றியிலே யில்வாழ்க்கைச்
சில்லநீர் போலத் தெளிந்துவருந் - தொல்லுலகங்
கான்றசோ றாகுங் கதலித்தண் டைக்கனலி
லூன்றல்போன் ஞானமுதிக் கும்.

(இ-ள்.) கல்லையுருவாக்குங் கழற்றியிலேயில்வாழ்க்கைச் சில்லநீர் போலத் தெளிந்துவரும்,, எ-து. கல்லினையோர் பாவை வடிவாக்கு முறைமைபோலருள்வடிவாக்குதற்பொருட்டு மந்தபக்குவர்க் குபதேசமொழிகளாற் பாசத்தை நீக்குமிடத்துத் தேறிட்டநீர் தெளிந்துவருதல்போ லவர்க்கில்வாழ்க்கை யிஃதா ரியாமாறொன்று தெளிவு பிறந்துவரும்.

"தொல்லுலகங் கான்றசோறாகுங் கதலித்தண்டைக்கனலி லூன்றல்போன் ஞானமுதிக்கும்,, எ-து. பழயதாகவரு மிப்பிரபஞ்சங் கக்கினசோறுபோ லருவருப்பாகத்தோற்றும் வாழைத்தண்டை யக்கினியிற் சுடுதல்போ லவர்க்கு ஞானந்தோன்றும். எ-று.

ப-ம். பிறிந்தசேறுந் தெளிந்தநீருங் கலந்துவருதல்போ லில்வாழ்க்கையிற் பற்றும் பற்றின்மையுங் கலந்து வருதலிற் றெளிந்து வருமென்றார். வாழைத்தண்டைப் பன்னாட் பலகாட்டத்தாற் சுடல்போ லிவர்க்குப் பன்னாளிற் பற்பல வுபதேச மொழிகளான் ஞான மேறுமென்பதறிக. (யஎ)

(கவி - யஅ. அ - கை.)

இதுவுமது.

இரும்பைவடி வாக்கு மியல்பினர்க்குப் பச்சை
மரஞ்சுடுமா போன்ஞானம் வாய்க்கு - மிருந்தவிட

நீர்த்தா மரையிலேபோ னீங்கு முலகமெலாம்
பேய்த்தேர்போற் றோன்றும் பிரிந்து.

(இ-ள்.) இரும்பைவடிவாக்கு மியல்பினர்க்குப்பச்சை மாஞ்சுடுமோ போன்ஞானம்வாய்க்கும்,, எ-து. இரும்பினையோர் பாவைவடிவாக்கு முறைமைபோற் பாசத்தைநீக்கி யருள்வடி வாக்கப்பட்ட மந்ததர பக்குவர்க்குப் பச்சைமரத்தை யக்கினியாற் சுடுமாறுபோன் ஞானம்பலிக்கும்.

"இருந்தவிட நீர்த்தாமரையிலேபோ னீங்குமுலகமெலாம் பேய்த்தேர்போற்றோன்றும்பிரிந்து,, எ-து. தாமிருந்த வில்வாழ்க்கை தாமரையிலே நீர்போற் கூடியிருந்து மதிற்கூடாது நீங்குவர் பிரபஞ்சமெல்லா மவர்க்கன்னியமாகக் கானற்சலம்போற்றோன்றும். எ-று.

க-து. சிலகாட்டத்தாற் பச்சைமரஞ் சுடல்போற் சிலவுபதேசமொழிகளா லிவர்க்கு ஞானமேறுமென்ப தறிக. (யஅ)

(கவி - கசுரு. அ - கை.)

இதுவுமது.

மரப்பாவை போலுடம்பின் வாதனையை மாற்றிக்
கரித்திக் கவர்வதுவாங் காமித் - திருத்த
மனைபொதுவின் மண்டபமாம் வானோர்கள் வாழ்வுங்
கனவெனவே தோன்றியிடுங் காண்.

(இ-ள்.) மரப்பாவைபோலுடம்பின் வாதனையைமாற்றிக் கரித்தீக்கவர்வதுவாம்,, எ-து. மரத்தினையோர்பாவைவடி வாக்குதல்போ லருள்வடிவாக்குதற்பொருட்டுத் தீவிரபக்குவர்க் குடம்பின் வாதனையாய பொறிகரண முதலியவற்றைநீக்கி ஞானத்தை யுணர்த்தக் கரி தீயேற்றுக்கொளல்போன் ஞானமுண்டாம்.

"காமித் திருத்த மனைபொதுவின் மண்டபமாம் வானோர்கள்வாழ்வுங் கனவெனவேதோன்றியிடுங்காண்,, எ-து. தாமிச்சித்திருந்த மனைவாழ்க்கை நாலுபேருங் கூடியிருக்கும் பொதுமண்டபம்போ லாகுங் கேள்வியாலறியப்பட்ட விந்திராதி தேவர்கள்செல்வமுஞ் சொற்பனம்போற்றோற்றும். எ-று.

ப-ம். உடம்பின் வாதனையைமாற்றி யென்றமையா னிவர்க்குப்போகவாதனை மாற்றவேண்டுவ தின்றெனபதாயிற்று. வானோர்கள்வாழ்வுங்கனவெனவேதோன்று மென்றமையா னரர்வாழ்வு சுழுத்திக்காட்சிபோற் றோன்றுமென்பதாயிற்று. இருந்தவென்பது இருத்தவென்று வலித்தல் விகாரமாய்வந்தது. (யசுரு)

(கவி - உ௰. அ - கை.)

இதுவுமது.

வெண்ணெயுறு பாவையர்க்கு ஞானம் விளக்கின்மே
லண்ணின்மயிர் பஞ்சாகு மாசையிலை - கண்ணீ
ரொழுகும் பொழுதறியா துள்ளுருகி விம்மி
யழுதுசிரிப் பார்புளக மாம்.

(இ-ள்.) வெண்ணெயுறு பாவையர்க்கு ஞானம் விளக்கின்மே லண்ணின்மயிர் பஞ்சாகுமாசையிலை,, எ-து. வெண்ணெயினைப்பொருந்தா நின்ற வேர்பாவை யாக்குதல்போ லருள்வடி வாக்கப்பட்ட தீவிரதர பக்குவர்க்கு விளக்கின்கொழுந்திற் பிடித்த வண்ணிலின் மயிர்போலு ம் பன்னியபஞ்சுபோலும்பாசநீங்கி ஞானமுண்டா மவர்க்கொன்றினு மாசையின்று.

"கண்ணீ ரொழுகும்பொழுதறியாதுள்ளுருகிவிம்மி யழுதுசிரி ப்பார்புளகமாம்,, எ-து. ஆனந்தக் கண்ணீரோடும்போதுந் தாமறியா துள்ளமெல்லா நெக்குநெக்குருகி விம்மிவிம்மியழுது சிரிப்பாரவர்க் குடம்பெல்லாம் ரோமாஞ்சலியாம். எ-று.

ப-ம். அழுவது முன்பட்டபிறவித்துன்பங்களை நோக்கி. சிரிப்பது துன்பங்களையெல்லா மொருகணத்தின் மாற்றிய வாசாரியர ததிசயத் தை நோக்கி யெனக்கொள்க. பிரபஞ்சத்தின்மே லில்வாழ்க்கைமே லுடம்பின்மேலாகிய மூன்றிடத்து மவர்க்காசை யின்மையாற் பொது ப்படவாசையிலையென்றார். (உ௰)

(கவி - உக. அ - கை.)

இங்ஙனங்கூறும் பக்குவர்க்கேயன்றி மற்றையர்க்கு ஞானம் போ தித்தா லேறுதோவெனின், பக்குவமுடையோர்க்கே ஞானம் போதி த்தாற் பாசநீங்கி யாநந்தப்பேறுளவாமன்றி மற்றையர்க் கங்ஙனமுண் டாகாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

புளிசேர் பழமானுற் போற்புறம்போ டுள்ளின்
முளைதானும் வேறாய் முளைபோய்த் - துளைமாண்ட
வூசிக்குப் பாச மொழிந்ததுபோ லொப்பாருக்
காசைக்கே டானந்த மாம்.

(இ-ள்.) புளிசேர்பழமானுற்போற் புறம்போடுள்ளின் முளைதாஞும்வேறுய்முளைபோய்,, எ-து. முன்னர்ப் பிஞ்சா யிருந்தபோதோடும்வித்தும்பிறிபடா தொன்ருய்ச்சேர்ந்தபுளி யவ்வோடும் வித்தும்பிறிபடும்பழமானுற்போன் முன்ன ரறிவுமுதிராமையிற் பிறிபடாதிருந்தமும்மலங்களு மிப்போ தவ்வறிவுமுதிர்ந்தமையான் மாயைகன்மமாகிய புறம்போ டுயிருள்ளிருந்த முளையாகிய வாணவமுந் தமக்கன்னியமாய்நீங்கி யிவற்ரு னேறுவதாயவாகாமிய முளையும்போய்?

"துளைமாண்ட வூசிக்குப்பாசமொழிந்ததுபோ லொப்பாருக்காசைக்கேடானந்தமாம்,, எ-து. காதற்ற வூசிக்குச் சரடொழிந்ததுபோற் றற்போதத்தோ டெல்லாப் பாசங்களையு மிங்ஙனமொழிந்தோர்க்கப்போதத்தாற் ருேற்றுமாசை நாசமே சிவாநந்தப்பேரும். எ-று.

ப-ம். மாயையுங் கன்மமும் புறம்பாய்க் காணப்படுதலிற் புறம்பென்று மவை நீங்கியபோதுந் தானீங்கா தயிருள் ளிருத்தலி னணவத்தை யுள்ளின் முளையென்று மாகாமியம் பிறவிக்கேதுவாகலி னிதனையு முளையென்றுங்கூறினர்.

காதருமுற் ருெடர்ந்தப்பாச மஃதற்றபோ தொழிந்தாற்போற் போதமருமுற் ருெடர்ந்தபாச மஃதற்றபோ தொழிதலி னூசிக்குப் பாசமொழிந்தாற்போ லொப்பாருக் கென்ருர்.

தேகபோகங்களாகிய துன்பத்தை யின்பம்போன் மாறுபாடாய்த் தோற்றுவித் துயிர்க்காசை யுண்டாக்குவ தாணவம், அதனது வாசனை போதமொழியுமளவு மிருத்தலி னதன்காரியமாகிய வாசைகெடவே காரணமாகிய வவ்வாணவவாசனையு மவ்வாசனையாலெழும் போதமுங் கெடுமாகலி னுசைக்கே டானந்தமா மென்ருர். (உக)

(கவி - உஉ. அ - கை.)

பக்குவர்க்குப் பாசநீங்கி ஞானேதயமானபோது தோற்றுமதிசயகுண மிவையென் றித்திருவெண்பாவிற் கூறுகின்ருர்.

அருண னுதையம்போற் ரும்வீழ்வா ராசை
பெருகுவபோற் கப்பற் பிழைத்துக் - கரைகாணு
மாபோற் சிறையு மரும்பிணியு நீங்கியிடு
மாபோ லதிசயம்போ லாம்.

(இ-ள்.) அருணனுதையம்போற்ரும்வீழ்வாராசை பெருகுவபோற்கப்பற்பிழைத்துக் கரைகாணுமாபோல்,, எ-து. மழையிருளி னேறிதெரியா துழல்வோர்க்குச் சூரியனுதயமானதுபோலுந் தம்மால்விரு

ம்பப்பட்டமாதர்மேலாசை யுள்ளமுமறைய மேன்மேல்வளர்தல்போ லுந் திசைதவறியகப்பல் தப்பித்துறைசேரக் காணுமாறுபோலுந்?

"சிறையுமரும்பிணியுநீங்கியிடு மாபோலதிசயம்போலாம்,, எ-து. விடாச் சிறையிருந்தோர்க் கச்சிறைநீங்கியவாறுபோலு மாறுநோயர்க் கந்நோய்நீங்கியவாறுபோலு மோர் காலமுங் காணாதவதிசயங் கண்டதுபோலுந் திருவருண் ஞானம்பெற்றோர்க்குத்தோற்றும். எ-று.

ப-ம். முன்னராணவ விருளாற்பொய்யிது மெய்யிதுவென் றென்றுந் தோன்றாதிருந்தோர்க் கிப்போ தருளொளியா லெல்லாஞ்சிவமாய்த்தோற்றலின், அருணனுதயம்போ லென்று மவ்வருண் ஞானத்தாற்றோன்று மாநந்தத்திற் றுமேன்மேல்மறைதலிற் "றும்வீழ்வாராசைபெருகுவபோலென்று மிந்தஞானாநந்தத்தை யென்றைக் கடைவோமென்றிருந்ததமக் கிப்போதுகிடைத்தலிற் "கப்பல் கரைகாணுமாபோலென்றும், முன்னுடலாயிருந்ததா மிப்போ ததற்குப்புறனாய் விளங்குஞ் சிவமாயிருத்தலிற் "சிறைநீங்குமாபோலென்றும், முன்னிருந்த பிறவித்துன்ப மிப்போது நீங்கலிற் "பிணிநீங்குமாபோலென்று மோர்காலங்களினுங் கண்டறியாத காட்சியாதலி "னதிசயம்போலென்றுங் கூறினார். (௨௨)

(கவி - ௨௩. அ - ௯.)

பாசநீங்கி ஞானந்தோன்றின லவர்க் கிக்குணங்க டோற்றுவவென்னையெனின், முன்னோர் காலங்களினுங் கண்டறியாராதலி னிப்போதக்குணங்க ளவர்க்குத் தோற்றுமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உடல்பொறிக ளுட்கரணந் தோடுகுணம் வாயு
விடவிடவே நாதாந்த வீடு - நடுநிலையாய்த்
தன்னொழிவும் பேரின்ப சாகரமுஞ் சந்தழிவா
ரென்னபடார் கண்டறியா ரே.

(இ-ள்.) உடல்பொறிக ளுட்கரணந்தோடு குணம்வாயுவிடவிடவே நாதாந்தவீடும்,, எ-து. உடலமும் பொறிகரணங்களு மந்தக்கரணங்களு மவற்றுடனே குணங்களும் பிராணவாயுவுமாகிய விவ்வைந்தையு மொன்றொன்றாயறிந்து நீங்க நீங்கவேவரு நாததத்துவத்தின் முடிவாகிய விடுதலையையும்?

"நடுநிலையாய்த் தன்னொழிவும்பேரின்ப சாகரமுஞ்சந்தழிவாரென்னபடார்கண்டறியாரே,, எ-து. அவ்விடுதலைக்குஞ் சுகாதீதத்திற்கு

நடுநிலையாய்த் தோன்றுந் தற்றெரிசனந் திருவருட்டெரிசனம் பரை தெரிசனம் பராயோகம் பராயோகநீக்கத்தையு மவற்றின்மேற் றற்போத வொழிவையு மதன்மேலாநந்தசாகரத்தையுமநுபவமாகக்கண் டதன்மேற் சிவத்தோ டிரண்டற்றிருக்கின்றாரென்ன வாச்சரியப்படார் முன்னோர்காலங்களினு மவற்றைக்கண் டறியாதார். எ-று.

ப-ம். உடலத்தை யுள்ளபடி யறிந்துநீங்கவே பஞ்சபூதகாரியமாகிய புறக்கருவிக ளிருபத்தைந்து மீடணத்திரயங்களுந் தசநாடிகளு நீங்கும். ஞானேந்திரியங்களை யுள்ளபடி யறிந்து நீங்கவே யவற்றா னபகரிக்கப்பட்ட சத்தாதிகளைந்து மவ்விந்தியங்க ளவ்விடயங்களை யபகரித்தபோது தொழிற்படுங் கன்மேந்தியங்களைந்தும் விடையீகரிக்கப்பட்ட வசனாதிகளைந்து மிவ்விருவகை யிந்தியங்கட்கு மிடமாய்நின்ற பூதங்களைந்து நீங்கும். அந்தக் கரணங்களை யுள்ளபடியறிந்து நீங்கவே சூக்குமையாதி வாக்கு நான்குநீங்கும். முக்குணங்களை யுள்ளபடியறிந்து நீங்கவே யிம்முக்குணகாரமான மூலப்பிரகிருதி நீங்கும். மூலப்பிரகிருதி நீங்கவே யிதாகிதங்களாய்வருங் கன்மஞ் சீவனமின்றி நிற்குமாகலின், அக்கன்மத்தைக் கூட்டாநின்ற காலமு மதனை வரைந்து நிற்கின்ற நியதியு நீங்கும். இவைநீங்கவே யான்மாவிற்குப் புசிப்பின்மையா னிச்சாஞானக்கிரியை சீவியாதாகலிற் கிரியையை யெழுப்புங் கலையு மறிவை யெழுப்பும் வித்தையு மாசையை யெழுப்பு மிராகமு மாசைப்பட்ட பதார்த்தத்தின் மயங்கும் புருடனும் நீங்கும். இங்ஙனங் கலாதிகணீங்கவே காலத்தையு நியதியையுங் கலையையும் பிரேரித்த சத்தி தத்துவமும் வித்தையைப்பிரேரித்த சுத்தவித்தையு மிராகத்தைப் பிரேரித்த வீஸ்வர தத்துவமும் புருடனைப்பிரேரித்த சிவதத்துவமு மூலப்பிரகிருதியைப் பிரேரித்த சாதாக்கியதத்துவமு நீங்கும். இங்ஙனஞ் சுத்ததத்துவங்கணீங்கவே பிராணவாயுவுமாத்திர மியங்கு மிப்பிராணவாயுவை யுள்ளபடியறிந்து நீங்கவே தசவாயுக்களுமசபை நாதமு நீங்கு மிம்முறையே தத்துவந் தொண்ணூற்றாறு நீங்குமாகலின், விடவிடவே நாதாந்தவீடும் என்றார்.

நடுநிலையா யென்றத னானும் பேரின்ப சாகரமு மென்றதனானுந் தற்றெரிசன முதலிய வருவிக்கப்பட்டது.

கண்டத்தானத்திலந்தக்கரணங்களோடுங்கூடி மத்திமைவாக்கை நன்றா யறியப்படுதலின் மத்திமைவாக்குக் காரணமாகிய சூக்குமை பைசந்தியு மத்திமையாற் காரியப்பட்ட வைகரியு மந்தக்கரணங்களை

நீங்கவே நீங்குமாகலி னந்தக்கரணங்களை நீங்கவே சூக்குமையாதிவா க்குகணீங்குமென்று சொல்லப்பட்டது. பிராணவாயு வியக்கத்தை யடக்கத்தொடங்கி னடங்காதுமேன்மேலியங்கு மாகலினின், அவ்வியக் கத்தைத் தன்னா லறியப்படுதலானுந் தன்னை யஃதறியாமையானு மதனைச் சடமென்று மதனையறிந்தவறிவு தானென்றுந் தனக்கறிவித் தது திருவருளென்றுமறிந்து தான் றிருவருணட்டத்தி னிற்கவே யதுநீங்கு மெனக்கொள்க. கண்டறியாரே யென்றதனா லிப்போது கண் டென்பது வருவிக்கப்பட்டது.

உடல்பொறி கரணமுதலிய கருவிகளை உள்ளபடி யறிந்து நீங்குதலை "ஐம்புலனாலா மந்தக்கரண முக்குணமிருவளி யொருங்கியவானோ ரேத்த நின்றனே,,. என்னுந்திருவெழுகூற்றிருக்கையாற்காண்க.(உங

(கவி - உச. அ - கை.)

இங்ஙனம் ஞானத்தாற் பாசத்தை நீங்கிப் பதியை யடைந்தோரை மீட் டப்பாசமயக்காதோ வெனின், தற்போதமிழந்த ஞானிகள் சிவமயமாயிருப்பாரேயன்றி யவரைமீட்டும் பாசமயக்காதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அறிவு மறிவானு மறியா மலையு
மறியிற் றடையே தவர்க்குப் - பிறிவரோ
வாகாயஞ் சூறைகொளி லஞ்சி யடுக்களைக்குட்
போகாது போலாம் பொருள்.

(இ-ள்.) அறிவுமறிவானுமறியாமலையு மறியிற்றடையே தவர்க்குப் பிறிவரோ,, எ-து. உயிர்க்குயிரா யுள்ளும்புறம்பு மோரணுவளவே னும் விட்டுநீங்கா திருந் தறிவிக்கு மறிவாகிய பதியையுந் தற்சுதந்திரமா யொன்றினையுமறியா தப்பதியறிவிக்க வறிவதாகியபசுவையு மிங்ஙனமறியும் பசுவிற்குத் தன்னையுந் தனக்கறிவிக்கும்பதியையு மறிய வொட்டாது மறைத்திருந்த வறியாமையாகிய பாசத்தையு மப்பதியா லுள்ளபடியறியினவர்க்கு முன்போலுந் தடையாது, அஃதன்றியப்பதியை யோர் கணமேனும் பிறிவரோ வாரு லப்பதியை யவர்பிறியாது நாடிக்கொண்டு நிற்பரோவெனின்?

"ஆகாயஞ்சூறைகொளி லஞ்சியடுக்களைக்குட் போகாதுபோலாம்பொருள்,, எ-து. எல்லாப் பொருள்கட்கு மிடங்கொடுத்திருந்த வா

காயந் தானே யப்பொருள்களைக் கொள்ளைகொள்ளுமெனி னதற்கஞ்சி யடுக்களைவீட்டிற் புகுந்தொளிக்கக்கூடாததுபோ லவ்வாகாயமுதலிய வெப்பொருள்கட்கு மாதாரமாகி யிருந்துள்ள மெய்ப்பொருட்டன்னையறிந்தோர்க் கிடம்வேறின்மையா னவரை விழுங்கிக்கொள்வதாம். எ-று.

ப-ம். பாசத்தையறியும்போது முப்பத்தாறு கருவிகளையு மிஃதிதென்றறிந்துசென் றவற்றின் முடிவினின்ற தன்னா லவை யறியப்படலானுந் தன்னை யவையறியாமையானுந் தனக்கன்னியமென்றுஞ் சடமென்று மறியப்படுந் தன்னையறியும்போ தக்கருவிகளையெல்லா மறிந் தவற்றை நீங்கிநின்றவறிவு தானென்றுந் திருவருளா லன்றித் தற் சுதந்திரமா யறிவதிலனென்றுந் தான் கருவிகளோடுகூடியபோ தவைமயமாயு மவற்றைநீங்கித் திருவருளோடு கூடியபோ திதன்மயமாயுமிருத்தலிற் றான்பாசவறிவுமன்று பதியறிவு மன்றென் றறியப்படும். பதியையறியும்போது பெத்தமுத்தி காலத்தினுந் தன்னைவிட்டு நீங்காதிருப்பதென்றுந் தனக்கறிவிப்ப தென்றும் பாசத்தைப் பிரேரகம்பண்ணுவதென்றும் ஞானானந்தச் சொரூபமென்றுமறியப்படு மிங்ஙனநடுநின்றறிந்த பசுபாசத்தை நீங்கிப் பரிபூரணமாகியபதியை யடைந்தப்பூரணமெல்லாந் தானாயிருத்தலி னறியிற் றடையேதவர்க் கென்றும் பிறிதற்கேதுவாய போதமிறத்தலிற் பிறிவரோ வென்று மிங்ஙனம் பிறியா திருந்தோரை மெய்ப்பொரு டன்மயமாய்க்கோடலி “னடுக்களைக்குட்போகா துபோலாம்பொரு ளென்றுங் கூறினர். (உச)

(சவி - உடு. அ - கை.)

இதுவுமது.

பொய்போல மெய்யு மறியப் பெறுப்போக
சையோகர்க் கொன்றேநிஞ் சார்பில்லை - துய்ய
விழிக்கு ளுதித்த விரிகதிர்போற் றம்மை
யழித்ததுவே யாச்சரிய மாம்.

(இ-ள்.) பொய்போல மெய்யு மறியப்பெறுப்போக சையோகர்க் கொன்றேநிஞ்சார்பில்லை,, எ-து. முன்னர்ப் பொய்யாகிய வுடலத்

தோடுங்கூடியபோ தவ்வுடலமென்றுந் தாமென்றும் பிரித்தறியா த தன்மயமா யிருந்ததுபோ லிப்போது மெய்ப்பொருளையுந் தம்மையு ம் பிரிக்கப்பெறு திம்மெய்ப்பொரு ளானந்தத்தோடுங்கூடிக் கலந்தி ருந்தோர்க் கோர் பொருளோடுஞ் சார்பில்லை யஃதெங்ஙனமெனின்;

"துய்யவிழிக்குளுதித்த விரிகதிர்போற்றம்மை யழித்ததுவேயா ச்சரியமாம்,, எ-து. எல்லாவற்றையு மெதிரிட்டறியு மாசற்ற விழிக்கு ள்ளே முன்போ லெதிரிடவொட்டா துதித்த சூரியனைப்போன் ஞா துருஞான ஞேயமென்னுந் திரிபொருளையு மெதிரிட்டறிந்த வான்ம போதத்தை யங்ஙன மெதிரிடவொட்டா திதனுட்சிவசூரியனுதித் தப் போதத்தை யழித்துத் தானாயிருந்ததுவே மிகவு மதிசயமாம். எ-று.

க-து. கதிர் புறம்புதித்தபோதுகண்ட கட்குள்ளுதித்தபோது காண் டற் கிடமின்மைபோற் போதத்தாற் புறம்புபோற்றோற்றிய ஞான சூரிய னிப்போதவொளியைத் தன்னொளியான்மறைத் துயிர்க்குள் ளுதித்தமையா னிதற்கு மெதிரிடுதற்கிடமின்றென்பதறிக. (உரு)

(கவி - உசு. அ - கை.)

இதுவுமது.

தன்னையிழப் பார்க்கென்ன சார்வூழி சங்கார
மென்னிலொளித் தெங்கே யிருக்கலா - முன்னே
புலிபார்க்கப் போனகதை போலிமையா நாட்டஞ்
சலியாமன் மூடுந் தனை.

(இ-ள்.) தன்னையிழப்பார்க்கென்ன சார்வூழிசங்கார மென்னிலொ ளித் தெங்கேயிருக்கலாம்,, எ-து. தற்போத மொழிப்பார்க்கு மற் றைச்சார்புக ளென்னையுள்ளன. முப்பத்தாறு தத்துவமென்பது மவ ற்றின் முடிவினின்ற தாமென்பதுந் தமக் கறிவித்த வருளென்பது மி தனைக்கடந்த வானந்த மென்பதுமின்றி யானந்தாதீதராயிருத்தலி ன வர்க்கிதுவே சர்வசங்காரகாலமென்று மெய்ஞ்ஞானிகள் சொல்லு வாரெனி னவர்க் கெவ்விடத் தொளித்திருக்கலாகும். ஆனாற் சிவத் தை யருளாலறிந் தடையவேண்டுமென்ப தென்னையெனின்?

"முன்னே புலிபார்க்கப்போனகதைபோ லிமையாநாட்டஞ் ச லியாமன்மூடுந்தனை,, எ-து. முன்னே புலியினைப் பார்த் தறியச்செ

ன் ரோர்புருட னஃதிருந்த முழைக் கெதிர்ப்படுந்தறுவாயி லவன் றேகப்பதைப்பற வது பிடித்துக்கொண்டதென்று கூறுங்கதைபோ ற் சிவத்தை யறியவேண்டுமென்று முப்பத்தாறு கருவிகளையுங் கடந் துசென் றருணோர் நிற்குந்தறுவாயி லிவன்றன்னை யிமையா நாட்ட மாகிய வச்சிவந்தானே யிவனது போதப்பதைப் பறும்படி மூடிக் கொள்ளும். எ-று.

ப.ம். இமைத்தல் விழித்தலின்றிய விமையா நாட்டம்போன் மறப் பு நினைப்பின்றிய பேரறிவாகலிற் சிவத்தை யிமையாநாட்ட மென்று ர். புலி முழைவாய்நின்றோரை யதுமூடிக்கொளல்போ லருணோர்நி ன்றோரைச் சிவமூடிக்கோடலா னங்ஙன முவமைகூறினர். (உசு)

(கலி - உஎ.. அ - கை.)

அங்ஙன மிருந்த ஞானிகள் பெற்ற வின்பத்தை யிங்ஙனமிருக் குமென் றவராற் கூறக் கூடாதென் றித்திருவெண்பாவிற் கூறுகி ன்றார்.

அறிந்ததுவாய் நின்ற வறியாமை கண்டு
மறந்தறியார் வாழாது வாழ்ந்த - வெறும்பாழ்
விளைந்தசுகஞ் சொல்லில் வெளியைப் படியா
லளந்தறியு மாபோல வாம்.

(இ-ள்.) அறிந்ததுவாய்நின்ற வறியாமைகண்டு மறந்தறியார்வாழா துவாழ்ந்த,, எ-து. முப்பத்தாறு கருவிகளையுநீங்கி யவற்றின் முடிவி னின்ற தம்மை யருளாலறிந் தவ் வருட்டெரிசனம் பனாதெரிசன மானந்தப் பேறுகிய விவற்றையுங் கடந்து சிவமயமாய் முன்னீங்கிநி ன்ற கருவிகளை மீட்டுங்கண் டச்சிவத்தை மறந்தும் பின்னுமிக்கருவி களை நீக்கி யச்சிவத்தை யறியாதா ரிப்பிரபஞ்சஞ் சிறிதுந் தோன்று தச்சிவத்தோடும் வாழ்வறவாழ்ந்த?

"வெறும்பாழ் விளைந்தசுகஞ்சொல்லில் வெளியைப்படியாலள ந்தறியுமாபோலவாம்,, எ-து. ஓர் பொருளோடுந் தொடர்பின்றிய வெற்றவெறுஞ் சூனியத்திலுண்டாகியபேரானந்தத்தைச்சொல்கோ மெனி னுகாயத்தை காழியா லளந்தளவிடுமாறுபோலுமாம். எ-று,

"அறியாமைகண்டு மறந்தறியா" றென்றமையாற் கருவிகளின் மீளாது சிவமயமா யெக்காலமு மிருப்பாரென்பதாயிற்று. வெளியை யளக்கும்படிக்கு ளவ்வெளி நிறைந்திருத்தலி னதனை யளக்கக் கூடா ததுபோற் கருதிக்கூறு மனவாக் கெல்லா மவ்வானந்த நிறைந்திருத் தலி னதனைக் கூறக்கூடாதென்பதறிக. (உஎ)

(கவி - உஅ. அ - கை.)

பரஞானத்தாற் சிவத்தைக்கூடிப் பிறியாதிருந்தோர்க்கு வேதாகமங்கள் கூறு ஞான மிரண்டுஞ் சரியென்பதும் அபர ஞானிகட்குச் சரியின் றென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அறிவுக் கறிவென்னு மாகமங்கள் சுத்த
வறிவென்னும் வேதத்தி னந்தம் - பிறியா
நிலைக்குச் சரியாகு நீயென்று நானென்
றலைக்கு மரிபிரம னை.

(இ-ள்.) அறிவுக்கறிவென்னு மாகமங்கள்சுத்த வறிவென்னும் வேதத்தினந்தம் பிறியா நிலைக்குச்சரியாகும்" எ-து. சச்சிதானந்த சிவத்தை யுயிராகிய வறிவுக்கு அறிவிக்கும் அறிவென்றுகூறு மாகமாந்தங்கள். வேதாந்தங்கள் அறியு மறிவு மறிவிக்கு மறிவுஞ் சுத்தவறிவு தானேயென்றுகூறுந் தற்போதம்போய்ச் சிவத்தைப்பிறியாத நிலைக்குஞ் சீவத்துவம்போய்ப் பிரமத்தைப்பிறியாதநிலைக்கு மவ்வாகமவேதங்கள்கூறிய வாக்கியஞ் சரியேயாகும்.

"நீயென்றுநானென்றலைக்குமரிபிரமனை,, எ-து. அந்நிலையில்லாது வாசகஞானமாக (நீயதுவென்று லதுநானென்) றிங்ஙனம்விண்டு பிரமாதிகளையு மலைக்கும். எ-று.

நீ யதுவென்ப தாகமம், அதுநானென்பது வேதம்.

இரண்டாவது

சத்திநிபாதத்துத்தமரொழிவு - முற்றிற்று.

ஆ-திருவெண்பா - கூக.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது

இயோகக்கழற்றி.

(அஃதாவது.) சரிதாதியி னிற்போர்களு ளோரொருவர் முன்விட்ட குறையான் ஞானத்திற்குப் பக்குவராய் வருவார்க ளவர்கட்குத் தற்போதத்தை யொழித்து ஞானம் வருவித்தற்பொருட் டத்தற்போதத்தாற் செய்யுஞ் சரிதாதிகளைப் போதனைகளா னீக்கவேண்டுமாகலி னவ்வதிகாரத்தின் பின்னரிவ்வதிகாரங்கள் வைக்கப்பட்டன. ஆயின் முறையே வைத்துக்கூறு தியோகக் கழற்றியை முதற்கண் வைத்த தென்னையெனி னியோகம் ஞானத்திற்கருகமாகலினானு மிவ்வியோகத்தினின்ற ஞானபக்குவ னதிபக்குவனாகலினானு முதற்கண் வைக்கப்பட்டது.

இவ்வதிகார மியோகத்தைக் கழலப் பண்ணின
மையா னிதற் கியோகக் கழற்றியென்று பெயராயிற்று.
இதன்பின்னர் கூறு மிரண் டதிகாரத்திற்கு மதிகார
வரைவும் பெயரு மிம்முறையே கொள்க.

(கவி - க. அ - கை.)

போத மியாதொன்றினைப் பற்றினும்விடாதென்பது மப்பற்றைப் பிறராலும் விடுவித்தலரிதென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சரிந்தை கிரியைகளைச் சற்றாகிச் சாகாக்
கருமயோ கத்தைக் கழற்ற - வரிதவர்க்குத்
தோன்றியது பொய்யாகக் காண்கையிலே தோன்றாத
ஆன்றியபோ தங்கழலு மோ.

(இ-ள்.) சரிதைகிரியைகளைச் சற்றுகிச்சாகர்க் கரும யோகத்தைக் கழற்ற வரிது,, எ-து. சரிதை கிரியைகளைச் செய்வ தற்பமெனக் கரு தி யுட ஞசமாகாவகை செய்யு மியோகிகளது கிரியாயோகத்தை யா வராலு நீக்குதற்கரிது.

"அவர்க்குத் தோன்றியது பொய்யாகக்காண்கையிலே தோன்று த வூன்றியபோதங்கழலுமோ,, எ-து. அக்கிரியாயோகிகளுக் காறு தாரங்களினு மோர்மூர்த்தியைத் தியானித் ததனைவிட்டு மற்றோர்மூ ர்த்தியைத் தியானிக்கும்போது முன் றியானித்தது பொய்ப்பொரு ளாய்ப்போகத் தமக்கநுபவமாகக்காணுமிடத்துந் தெரியா ததனை மெ ய்ப்பொருளாய்ப் பிடித்த போத மெங்ஙனங்கழலும். எ-று. (௯)

(கவி - உ. அ - ௯௪.)

கிரியாயோகஞ்செய்வது துன்பமென்று மங்ஙனந் துன்பப்பட்டு ச் செய்யினு மான்மலாபமின்றென்று மதனது கருத்தை யெடுத்தறி வித் தவ்வியோகத்தை மறுத்தவித் திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அட்டமா சித்திகளு மத்துவா மூர்த்திகளுங்
கிட்டிலதற் கங்கங்கே கீழ்மேலாய் - விட்டு
வரும்போதுந் துக்கமாய் வந்துவந்து மாய்ந்து
பெரும்பாவஞ் செய்யப் பெறும்.

(இ-ள்.) அட்டமாசித்திகளு மத்துவாமூர்த்திகளுங் கிட்டில்,, எ-து. அக்கிரியா யோகத்தா லணிமாமுதலிய வட்டமாசித்திகளுந் தமக்குக் கைவல்லியமாகக் கிடைப்பினும் விநாயகன்முதலிய வாறத்துவா மூர் த்திகளையுஞ் சடாதாரங்களில் வழுவறத் தியானிக்கக் கிடைப்பினும்?

"அதற்கங்கங்கே கீழ்மேலாய்விட்டு வரும்போதுந்துக்கமாய்வந் துவந்துமாய்ந்து பெரும்பாவஞ்செய்யப்பெறும்,, எ-து. அச்சித்திக ளாலெடுக்கு முருவுகளு ளோருருவிற் கோருருவு தாழ்ந்து முயர்ந் துந் தோற்ற வவ்வுருவுகளை யாங்காங்கு விடுத்துவரும்போதுந் துக்க மாயும் மூர்த்திகளை யாறுதாரங்களினும் வெவ்வேறு யாங்காங்குக்கீ ழுமேலுமாய் தியானித்து விடுத்துவரும்போதுந் துக்கமா யவ்வுரு வெடுக்கும்போது மதனை விடுக்கும்போது மம்மூர்த்திகளைத் தியானி க்கும்போதும் விடுக்கும்போதும் பிறந்துபிறந் திறந் திறந் திவற்று ன் மிகுந்த பாவங்களைச்செய்யப்படும். எ-று.

ப-ம். சித்தியா லோருருவை மறைத் தோருருவைக் காட்டலுந் தி யானத்தா லோராதாரம் விடுத்தோராதாரஞ் சேறலுமோர்பிறவியை

நீங்கி யோர்பிறவியை யெய்தலு மோரவத்தையை நீங்கியோ ரவத் தையை யெய்தலும்போ லிருத்தலின் வந்துவந்து மாய்ந்தென்றுஞ், சித்தியாற்சாபாநுக்கிரக முளவாகலின் முனிவுபிறந்தபோது பிறரைச் சபித்தலானுந் தம்மைப்படைத்தழிக்கு மூர்த்தியைத் தாம்படைத் த ழித்தலானும் பாவம்வருதலிற் "பெரும்பாவஞ் செய்யப்பெறு,, மெ ன்றுங் கூறினர்.

வரும்போதுந் துக்கமென்பதனை யாக்கினை சக்கிர மளவுஞ்சென் று மீண்டுவரும்போதுமெனவுங் கொள்க. சகமுகத்திற்செய்யுந் தொ ழிற்போன் றகமுகத்துஞ் செய்யலாற் றுக்கமென்றார்.

அட்டமாசித்திகளாவன; அணிமா-இலகிமா-கரிமா-மகிமா-பிரா த்தி-பிராகாமியம்-ஈசத்துவம்-வசித்துவம். ஆகிய விவை யெண்வகை யெனக்கொள்க அதற்கென்னு நான்கனுருபை யதனுலென்று மூன்ற னுருபாகக்கொள்க. (௨)

(கவி - ரு. அ - கை.)

இதுவுமது.

அறிவடங்கா வாயு வடங்கவசை வற்றுத்
தறியிருந்தாற் போலச் சமாதி - பெறுகி
னடந்த குருட்டமே னஞ்சருந்திப் பாழூர்க்
கிடந்தகுழிப் புக்கதினுங் கேடு.

(இ-ள்.) அறிவடங்காவாயுவடங்க வசைவற்றுத் தறியிருந்தாற்போ லச்சமாதி பெறுகில்,, எ-து. தமதறிவா னதனிச்சைப்படிசென் றட ங்காத பிராணவாயுவைத் தமதிச்சைப்படி யிரேசித்தும் பூரித்துங்கு ம்பித்து முள்ளடங்கச்செய்து தாமு மதனோ டசைவற்றுக் கம்பமிரு ந்ததுபோற் சமாதி பெறுவாராயி னிச்சமாதி?

"நடந்தகுருட்டமேனஞ்சருந்திப்பாழூர்க் கிடந்தகுழிப்புக்கதினுங் கேடு,, எ-து. நடக்கப்பட்டபிறவியந்தகனாகிய வோருமையன் விடத்தி னைப் புசித்துக் குடிபோகிய வூரின்கண்ணுள்ள பாழுங் கிணற்றி லெ டுப்பா ரற்று வீழ்ந்துகிடந்த வதனினுங் கேடாம். எ-று.

ப ம். வாயு வடக்கன்முதலிய தொழிற்செய்தலி னடந்தவென்று ம தற்குமேலாய ஞானமின்மையாற் குருட னென்று மந்தஞானங்கூறு ஞ் சாத்திர மறியாமையா னூம னென்றுஞ் சடமாயுள்ள வாயுவுடன் கூடினமையா னஞ்சருந்தி யென்று முன்செய்ததொழின் மறந்தமை யானு மாண்டுத் திருவருள் விளக்காமையானும் பாழூர்க்கிடந்த கு ழிபுக்கென்று மிங்ஙனமுவமைகூறினர்.

இவற்றுள் நடந்த குருட்டுமே னென்பது அவர்க்குவமையும் நஞ்சருந்திப்பாழூர்க்கிடந்த குழிப்புக்கென்ப தவர்சமாதிக் குவமையுமெனக்கொள்க. அவனறியாது வீழ்ந்தவ னிவரறிந்து வீழ்ந்தவராகலி னதனினுங் கேடென்றார். (௩)

(கவி - ௪. அ - கை.)

கேவலசகலங்க டாக்கா தருள்வடிவாய் நிற்றற்குபாய மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

கவிப்பயனு மாதனமுங் கண்சிமிட்டா நோக்குந்
தவப்பகடி யாட்டங்காண் சார்வைத் - தவிர்க்கின்
மறந்தறிய லாகா மலட்டறிவாய் வான்போ
னிறைந்து துளும்பாம னில்.

(இ-ள்.) கவிப்பயனுமாதனமுங் கண்சிமிட்டாநோக்குந் தவப்பகடியாட்டங்காண் சார்வைத்தவிர்க்கின்,, எ-து. இயோகநூலைக் கற்றுக்கொண்டு பிறர்க் கதனருத்தங்கூறுதலும் பதுமாதன முதலியவாதனங்கட்டலு மனத்தையோர் தானத்தினிறுத்தி இமையா நாட்டமாய்ப் பார்த்திருத்தலு மிவைமுதலிய நீசெய்யுந்தொழில்கண் ஞானதபோதனர் முன்னர்த் தவப்பகடிக் கூத்துக் கட்டியாடுவதாம். இனி யிவ்வியோக வாதனையை நீக்குதியெனி னேரே வீட்டைதற் கோருபாய முண்டோ தெங்ஙன மெனின்?

"மறந்தறியலாகாமலட்டறிவாய்வான்போ னிறைந்துதுளும்பாமனில்,, எ-து. நீயோக சமாதிகூடும்போ தோர் கானினைந்து மோர் கான் மறந்து முன்ன ரறிந்ததுபோ லறியா திப்போ தந்நினைப்பு மறப்பு முதலிய வொன்றுந்தோன்றாத வறிவாயெங்கும் பூரணமா யொன்றோடுந் தாக்கற் றசைவற்றிருந்த வாகாயம்போ னீயுமெங்கும் பூரணமா யொன்றோடுந் தாக்கற் றசைவற்று நிற்றி. எ-று.

ப-ம். கண்சிமிட்டாநோக்கு மென்றது; நாசிநுனி புருவமத்தியங்களிற் பார்த்துக்கொண் டிருத்தல் நல்லகூத்தாடுவான் முன்னர் அவன் வேடந் தானும்போட்டுக்கொண் டக்கூத்திற்குமாறாய வகசியக் கூத்தாடுவானைப்போல ஞானிகளைப்போலும் வேடமு நடையுங்காட்டிப வாது பூரண வறிவிற்கு மாறாகக் கிஞ்சிக்கிய வறிவனாயிருத்தலிற் றவப்பகடியாட்டமென்றார். மலட்டறிவு ஒன்றுந் தலவாதவறிவு. (௪)

(கவி - ரு. அ - கை.)

இங்ஙன மிருவருக்குஞ் சமாதிகூடுதல் சரியெனின், யோகியை ஞானிகளிகழ்ந்து கூறுவதென்னையெனின்; சமாதிகூடுத லிருவருக்கு மொத்ததாயினு மியோகி யிங்ஙனஞ்செய்தலான் ஞானிகளா னிகழ்ந்து கூறப்பட்டானென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தத்துவமுட் டாக்காய்ச் சமாதியினைச் சார்போதப்
பித்தனென்பார் பேரிற் பிழையுண்டோ - புத்திபோய்க்
கம்பக் களிறுகட்டக் கல்லினர்க் காணுமிவ
ரம்பரத்தை வந்துபிடிப் பார்.

(இ-ள்.) தத்துவமுட்டாக்காய்ச்சமாதியினைச்சார்போதப் பித்தனென்பார்பேரிற் பிழையுண்டோ,, எ-து. தத்துவங்களையெல்லா நியதிபண்ணி நீங்கித் தம்மை யருளா லறியு மறிவின்றி யத் தத்துவங்களைத் தன்மேன் முட்டாக்காய் மூடிக்கொண்டு சமாதிகூடுங் கிரியா யோகியைச் சார்போதனாகிய பித்தனென்று கூறும் ஞானிகண்மேற் குற்றமியாது.

"புத்திபோய்க் கம்பக்களிறுகட்டக் கல்லினர்க்காணுமிவ ரம்பரத்தைவந்துபிடிப்பார்,, எ-து. யூகபுத்தியின்றிக் கம்பத்தின்கண் ணடங்காமதகளிற்றைக் கட்டுதற்குக் கல்லின்கண் ணுருரிப்பாருந் தாமிருத்தற் கிடங்கொடுத்திருந்த வாகாயத்தைச்சென்று பிடிப்பாரு மிவர்காணும். எ-று.

ப-ம். தத்துவ முட்டாக்காய்ச் சமாதி யென்றது; மனத்தால் வாயுவை வாங்கி யுண்ணிறுத்தி யதனுட்டாமறைந்திருத்தலின் இங்ஙனமிருப்போர்க் கறிவிக்க வறியும் போதமே யின்மையால் எங்ஙனஞ் சிவத்தை யறிவாரென்பது குறித்துக் "கம்பக்களிறுகட்டக்கல்லினரென்றுந், தம்முயிருட் பூரணமா யிருந்த சிவத்தையறியாது மற்றோரிடத் திருப்பதாய்க் கருதி யதனைப் பிடிக்கச்சேறலி "னம்பரத்தைவந்துபிடிப்பா,, ரென்றுங்கூறினார்.

சார்போதஞ்சேர்ந்த கருவிமயமாயிருத்தன் மனமும்பிராணவாயுவு மிருந்தவிடத் தெல்லாக்கருவிகளு மிருக்குமாகலிற் றத்துவமென்று பொதுப்படக் கூறினார். (ரு)

(கவி - சூ. அ - கை.)

சகலகேவலங்களைநீக்கித் தம்மை யருளாலறிந்து சுத்தாவத்தையி னிற்போ ரியோகிகருதியபொருளை யெண்ணுரென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

நெய்யி னிழற்போ னிழலிற் புருடனைப்போற்
பொய்யில் விகற்பம் புகுவதுவுந் - துய்ய
வொளியோசை யாகி யொடுக்குவதுந் தம்மைத்
தெளியாதார் செய்யுஞ் செயல்.

(இ-ள்.) நெய்யினிழற்போ னிழலிற்புருடனைப்போற் பொய்யில் விகற்பம்புகுவதுவும்,, எ-து. நெய்யின்கட்டோற்றுநிழலைப்போலும் அந்நிழலைப்பார்த் தாகாயத்தைப்பார்க்கில்அந்நிழல்போற்றோற்றுஞ்சாயா புருடனைப்போலுங் கருவிகளாகிய பொய்யிற்கூடிய தற்போத விகற்பத்தாற் றமுமுந் தம்மாற்றியானிக்கப்பட்ட மூர்த்திகளுமா யாராதாரங்களிற் றோற்றுவதும்?

"துய்யவொளியோசையாகி யொடுங்குவதுந்தம்மைத் தெளியாதார்செய்யுஞ்செயல்,, எ-து. நிருமலமாகிய விந்து தரிசனமு நாததரிசனமுமாய்த் தோற்றி யங்ஙனந் தோற்றியவாறேநில்லாது மீட்டுமொடுங்குவதுமாகிய விச்செயல்களெல்லாந் தம்மை யருளாற் றெளிந் தறியாதார்செய்யுஞ் செயல்களாம். எ-று.

க-து. நெய்போற் கருவிக ளதிற்றோன்று நிழலு மந்நிழற்போ லாகாயத்திற் றோற்றுஞ் சாயாபுருடனும்போற் றமுமுந் தம்மாற் றியானிக்கு மூர்த்தியுமென்பதறிக. விந்துநாத தரிசன மாயையுட் டோற்றுவதாகலி னது பொருளன்றென்பதுங்காண்க. (சூ)

(கவி - எ. அ - கை.)

இதுவுமது.

சாக்கிரத்தே கேவலத்தைச் சார்ந்துவிடத் தத்துவத்தை
நூக்கி யொழிப்பார்போ னுழைவதையு - நீக்கியே
கண்ணாடி பார்த்த குரக்கறிவாய்க் காண்பதையு
மெண்ணு ரவத்தையறி யில்.

(இ-ள்.) சாக்கிரத்தேகேவலத்தைச் சார்ந்துவிடத்தத்துவத்தை நூக்கியொழிப்பார்போ னுழைவதையும்,, எ-து. சாக்கிரத்தி லதீதத்தைப்பெறும்பொருட்டுத் தத்துவங்களைத் தள்ளியொழிப்பார்போன் றவற்றூட் டாமறைந்திருப்பதையும்?

"கண்ணாடிபார்த்தக்குரக்கறிவாய்க்காண்பதையு மவத்தையறியினீக்கியேயெண்ணார்,, எ-து. கண்ணாடிபார்த்த குரங்கதனுட் டோற்றிய வுடலைத் தன்னிழலென் றெண்ணாது மற்றோர் குரங்கென் றததனை மெய்யாகக்கருது மதனறிவுபோலத் தற்போதத்தாற் றியானித்தறியும்பொருளை யத்தியானத்தின்படிக் கருவிகளிற் றோற்றுவதென் றறியா ததனை மெய்ப்பொருளாய்க் காண்பதையுஞ் சுத்தாவத்தையி னிலக்கண மறிவாரெனி னவர் பொய்யென நீக்கி யோர்பொருளா யெண்ணார். எ-று.

ப-ம். ஆதாரமாறையு மூடுருவி நிற்கின்றோந் தத்துவங்களையெல்லாங் கடந்தோமென்று கருதிப் பிராணவாயுவன் மறைந் திருத்தலி"னூக்கியொழிப்பார்போ னுழைவதையு மென்றார். சுத்தாவத்தையிலருண்மயமாய் நற்போர்க் கெதிரிட்டவையெல்லாம் பொய்யாகலி னவத்தையறியிலெண்ணா ரென்றார். (எ)

(கலி - அ. அ - கை.)

திருவருளை யறிதற்குந் தற்போதமொழித்தற்கு முபாய மியாதுகூறினுந் தெளிந்துகொள்ளாத யோகியைப்பார்த்து வெறுத்துப்போதத்தையறிந் தடக்கினு லன்றிக் கருவிக ளடங்காதென்பது மப்போதத்தைப்பின்னிட் டருளைமுன்னிட்டுச் செல்லவேண்டு மென்பது மவ்வருளை முன்னிட்டுச்சென்றபோது மதனைத் தற்போதத்தா லெதிரிட்டுப் பார்க்கலாகாதென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உபதேசப் பித்தோ வுபமானப் பித்தோ
விபரீத மோபழக்கோ வேறோ - தபசிநீ
கண்மூடா விண்மூடத் தேடுங் கவுசனைபோ
லெண்மூடா யோகமிது வென்.

(இ-ள்) உபதேசப்பித்தோ வுபமானப்பித்தோ விபரீதமோ பழக்கோவேறோ தபசிநீ,, எ-து. உனக்குக் குருசொன்ன வுபதேசப் பித்தமோ சாத்திரங்கூறிய வுபமானப்பித்தமோ வுனது விபரீதபுத்திதானோ முற்சனனங்களிற் றொன்று தொட்டு நீ செய்துவந்த பழக்கந்தானோ வஃதன்றிப் பிறர்செய்வதுகண்டு பாவனையாச்செய்தன் முதலியமற்றியாதோ தவவேடம்பூண்டு தவத்தைப்பண்ணப்பட்ட நீ யத்தவத்திற்குரிய ஞானயோகம் புரியாது?

"கண்மூடாவிண்மூடத் தேடுங்கவுசனைபோ லெண்மூடாயோகமிதுவென்,, எ-து. விண்ணை மூடவேண்டினு னதனைநாடுங்கண்ணை மூடாதுவைத் தவ்விண்ணை மூடுதற்குக் கவுசனைதேடுதல்போன் றெண்ணப்பட்ட மூடனே பஞ்ச பூதாதிகருவிகளை யொழிக்கத்தொடங்கிய நீ யவற்றைநாடுந் தற்போதத்தைக் கட்கிமைபோ லுனதுயிரை விட்டு நீங்காதிருந்த வருளின்மறைந்தடக்கா திதற்போதத்தா லப்பஞ்சபூதாதிகருவிகளை யொழிப்பலென்று கருதிப் பிராணவாயுவை யுண்மறித்திதனோடும் போராடி நீசெய்யுமியோகமிதென்னைகொல். எ-று.

க து. அருளின் மறைந்தசைந்தோனுக் கவ்வருளே தோன்றுங் கருவியின் மறைந் தசைந்தோனுக் கக்கருவியே தோன்றுமாகலி னவ்வியோகத்திற்கு மிவ்வியோகத்திற்கும் பேத மிவ்வநுபவத்தானுங் காண்க. ஓகாரமடுக்கிவந் திதுவென்னென முடிந்தது. (அ)

(கவி - கூ. அ - கை.)

இதுவுமது.

வாலே முகமாய் வரவானை யேறினர்
போலேயுன் போதமோ போய்த்தீண்டுஞ் - சாலப்
பெருஞ்சிரிப்பாந் தன்னைப் பிடித்தாட்டும் பேயைத்
தெரிஞ்சிருக்கத் தேடுஞ் செயல்.

(இ-ள்.) வாலேமுகமாய் வரவானையேறினர் போலேயுன்போதமோ போய்த்தீண்டும்" எ-து. தான்கருதிய வூருக்குச் செல்லத் தலைப்புறத்தைப் பின்னிட்டு வாற்புறமுகமா யானையேறினனைப்போலும் நீகருதிய சிவத்தை யடைதற் கருளைப் பின்னிட் டுன்போதத்தை முன்னிட்டுச் சென்றா லுன்போதமோ வச்சிவத்தைப்போய்த் தீண்டுவது? ஆயின், அவ்வருளைத் தானடைய வேண்டாவோவெனின்?

"சாலப் பெருஞ்சிரிப்பாந்தன்னைப் பிடித்தாட்டும்பேயைத் தெரிஞ்சிருக்கத்தேடுஞ்செயல்" எ-து. தன்னைவிடாதுபற்றினின்ற தனதிச்சைப்படியாட்டும்பேயை யெதிரிட்டறிந்திருக்க வஃதெங்குளதென் றுதேடு மொருவனதறியாமைபோலப் பெத்த முத்திகளினு முனதுயிரைவிட்டு நீங்காதிருந் தூட்டியுறக்கி யுபகரித்து வீட்டைக்கொடுக்குந் திருவருளை வேறுபிரித் திஃதெங்குளதென்று தேடுவ தித்திருவருண் ஞானம் பெற்றோர்க்கு மிகவு நகையாம். எ-று.

க-து. வாற்புறமுகமாயேறினனை யவன் கருதிய வூருக்குமாறாகியவூரைச் சார்விக்கும், தலைப்புறமுகமாயேறினனை யவன் கருதிய வூருக்குநேரே சார்விக்கு மதுபோ லருளைப் பின்னிட்டுப் போதத்தை முன்னிட்டுச் சென்றானைக் கருவிகளைச்சார்விக்கு மத்திருவருளை முன்னிட்டுப் போதத்தைப் பின்னிட்டுச்சென்றானைச் சிவத்தைச் சார்விக்குமென்பதறிக. (கூ)

(கவி - ௰. அ - கை.)

இதுவுமது.

குறங்குத்திக் கொண்டு குரோக்கைகத்திக் கூட்டை
மறந்தழைத்தாற் றூக்கம் வருமோ - வெறுங்கெடுவீர்
தன்னை யழித்தெழுந்த சச்சிதா நந்தத்தை
யுன்னி லொளித்துவிடா தோ.

(இ-ள்.) குறங்குகுத்திக்கொண்டு குரோக்கைகத்திக்கூட்டை மறந்தழைத்தாற் றூக்கம்வருமோ" எ-து. பாயலிற் படுத்துக்கொண்டு துடைகுத்திக்கொண்டு குரோக்கை விட்டுக்கொண்டு உடம்பை மறந்தாப் பாவித்துக்கொண்டு தூக்கமே நீ வாராயென் றழைத்தாற் றூக்கம்வருமோ வங்ஙன நினைத்துச்செய்யு நினைவையழித்தெழுங் கேவலம் வந்தாலன்றி, அதுபோலு முன்போதத்தாற் பிராணவாயுவைமறித்து நீ செய்யு மியோகத்தா லானந்தநித்திரையை வரச்சொன்னா லந்நித்திரை வருமோ வப்போதத்தை யழித்தெழாநின்ற வருட்கேவலம் வந்தாலன்றி அவ்வருட்கேவல மெங்ஙனம் வருமெனின்?

"வெறுங்கெடுவீர் தன்னையழித்தெழுந்த சச்சிதானந்தத்தை யுன்னிலொளித்துவிடாதோ" எ-து. அந்தோ வெறுங் கெடுவீர் தற்போதத்தை யழித்துத் தானாயிருக்குஞ் சச்சிதானந்த வடிவாகியசிவத்தை யுன்போதத்தா லுன்னி லுன்னையறியா துனக்கு ளொளித்துத் தன்னைவிட வுன்னையொருமுதலாக்கிப் பிறித்துவிடுமாகலி லுனதுயிர்க்குள்ளிருந் தறிவிக்கும் பூரணமெனக்காண்டி. எ-று.

க-து. சுபாவ நித்திரைபண்ணுவோன் செயலெல்லாங்காட்டி நித்திரைபண்ணு திருந்தோனைப்போ லேகாந்தத்திருத்த லாசனங்கட்ட லசைவற விருத்தன் முதல்ய ஞானிக ணடையைக்காட்டி யவனைப்போலு மானந்த நித்திரைபண்ணாது தற்போதத்தோடு மிருத்தலி னிங்ஙன முவமை கூறினார். (௰)

(கவி - ௰க. அ - கை.)

நீர்கூறியவாறே யோகியருஞ்சிவம் வாக்குமனாதீதகோசரமென்றுகூற நீரவனைமறப்ப தென்னையெனின், அவரங்ஙனங் கூறினாராயினு மனாதிதனைக்கடந்துநின்ற பூரணத்தை யுணர்ந்தவ ரலரென்றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மனவாக்குக் காயத்தான் மாய்ந்தளவை மாண்ட
தெனவாய்ப் பறையறையி லென்னு - நினைவதெலாஞ்
சாக்கிரப்பொய் தானுந் தனியனல தற்பரமு
நீக்கமற்ற பூரணமென் னில்.

(இ-ள்.) மனவாக்குக்காயத்தான் மாய்ந்தளவைமாண்ட தெனவாய்ப்பறையறையிலென்னு நினைவதெலாஞ் சாக்கிரப்பொய்" எ-து. மனவாக்குக்காயத்தால் வருந்தி யோகசமாதிகூடிச் சிவத்தைப்பெறு தம் மனவாக்குக் காயங்களா லளவிடப்பட்ட வளவைகளையெல்லாங் கடந்த தச்சிவமென்னப் பிறர்க்கு வாய்ப்பறையறைந்து கூறியவாற்று னவர்க்குப் பயனென்னை யுண்டா மவர் பாவித்ததெல்லாஞ் சாக்கிரப்பொய்யாகலின்?

"தானுந்தனியனலதற்பரமு நீக்கமற்றபூரணமெனில்" எ-து. ஆன்மாவுஞ் சிவத்தைவிட வோர் தனிமுதல்வ னன்றென்று மச்சிவமு மான்மாவைவிட்டு நீங்கா துட்புறம்பாய் நிறைந்துள்ள பரிபூரணமென்றும் வேதாகமங்கள் கூறுமெனின். எ-று.

ப-ம். கூறுமெனின் பொய்யாகலின் பயனென்னை யுண்டாமெனமுடித்துக்கொள்க.

மனத்தால் வருந்துவது; வாயுவை யுண்மறித்தல். வாக்கால் வருந்துவது, சாத்திரம்பார்த்தல். காயத்தால்வருந்துவ தாசனங்கட்ட லவிழ்தம் புசித்தன் முதலியன.

அளவையென்பது; காட்சியநுமான மாகமமுதலியன. அவ்வளவைமாண்ட தான்மாவுஞ் சிவமு மிரண்டற்றிருந்தவிடம். அதனையறியாது மானதக்காட்சியினின் றளவை மாண்டதென்றமையால், வாய்ப்பறை யறையிலென்னு மென்றார். (யக)

(கவி - யஉ. அ - கை.)

பூரணத்தை யடைதற் கீ துபாயமன்றென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

வாயுமனங் கண்ணசையா வாறடக்கி மக்கினமாய்
நீபுதைந்து போய்க்கூட னீதியோ - காயத்துக்
குட்புறம்பாய் நீதானு யுண்டில்லை யாயதற்கு
மப்புறமாய்த் தாக்கற் றதை.

வாயுமனங்கண்ணசையா வாறடக்கிமக்கினமாய் நீபுதைந்துபோய்க்கூடனீதியோ" எ-து. வாயுவு மனமுங் கண்ணுஞ் சிறிது மசையா வா றடக்கி யங்ஙன மடக்கிய போதமுந்தோன்றா தவற்றுண் மறைந்து நீ சென்றடையத்தொடங்குதன் முறைமையோ?

"காயத்துக் குட்புறம்பாய் நீதானாயுண் டில்லையாயதற்குமப்புறமாய்த் தாக்கற்றதை" எ-து: வறுங்கடத் திருந்த வாகாயம்போன் றிக்காயத்திற் குள்ளும் புறம்புமாய் நீயருடானாகியகாலத்துண் டென்று மில்லையென்றுஞ் சொல்லப்பட்ட வநுபவமாயதற்கு மப்பாலாயொன்றோடுந் தாக்கற்றிருந்த சிவத்தை. எ-று.

ப-ம். ஆன்மா வருள்வயப்பட்டபோதெல்லா மவ்வருள் வடிவாய்த் தோற்றலா னுண்டென்று மங்ஙனந் தோற்றிய வருளை யின்னபிரகாரமா யிருக்கின்றதென்று சொல்லக்கூடாமையா னில்லையென்று மதனையுங் கழன்று சுகாதீதப்படுதலி னதற்கு மப்புறமாயென்றுங் கூறினார்.

(கவி - ௰௩. அ - கை.)

யோகியரது கருத்தை யெடுத்துக்காட்டி யிங்ஙனநிற்பி னங்ஙனந் தோற்றுமெனி னெங்ஙன நிலையைப்பெறுவீரென் றவரைமறுத்துத் திருவெண்பாவிற் கூறுகின்றார்.

ஓட்டா திருக்கவென்றா லோட்டா துறக்கமாஞ்
சுட்டா திருக்கிற் சுடர்க்கொழுந்தாந் - துட்ட
மனத்தோடு வாயுவைநீர் மண்டையிலே வைக்க
நினைப்பீ ரிதென்ன நிலை.

(இ-ள்.) ஓட்டாதிருக்கவென்றா லோட்டாதுறக்கமாஞ் சுட்டாதிருக்கிற்சுடர்க்கொழுந்தாம்" எ-து. உமதியோகத்தாற் கருவிகளொன்றுந் தாக்கா தொழிந்திருப்போமென்று நீர்கருதினா லக்கருவிகளொழிந்த போ தவை யொழிந்தபடி நிற்கவொட்டாது கேவலம்வந்து சாரு மக்கருவிக ளொன்றையு மெதிரிடாது பார்த்திருப்போமெனி லாண்டோரொளிதோற்று மனத்தான்வாயுவையடக்கி நிற்பினங்ஙனமாமெனின்;

"துட்ட மனத்தோடு வாயுவைநீர் மண்டையிலேவைக்க நினைப்பீரிதென்னநிலை" எ-து. அக்கொடிய மனத்துடனே வாயுவையும் பிரமரந்திரத்தி னிறுத்துதலே முத்தியென் றப்பிரமரந்திரத்திலவற்றை நிறுத்தக் கருதுவீ ரிஃதென்ன வுண்மை நிலை. எ-று.

ப-ம். மனத்தையும் வாயுவையும் பிரமரந்திரத்தி னிறுத்தினற் கருவிகளெல்லா மொழியு மவை யொழியவே கேவலமூடு மதுமூடவே தம்மோடு தமக்குள்ளிருந் தறிவிக்குந்திருவருளுந் தெரியாதாகலி னந்நிலையை யிதென்ன நிலையென்றார். (௯௩)

(கவி - ௰௪. அ - ௧.)

வாயுவைவிட்டு மனத்தைமாத்திர நிறுத்திற் சிவத்தைப்பெறலாமோவெனின், தற்போதத்தான் மனத்தை யடக்கக் கூடாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

கூட்டிற் குரங்கைநிழற் கோரணிக்கூத் தாமனத்தை
யாட்டிப் பிடித்தா ரடக்குவார் - காட்சியறக்
சும்மா திருக்கி லசையா து சுற்றுவிறி
சம்மானை பம்பரங்கா ணும்.

(இ-ள்.) கூட்டிற் குரங்கைநிழற் கோரணிக்கூத்தாமனத்தை யாட்டிப்பிடித்தாரடக்குவார்" எ-து. கூட்டி லடைத்துவைத்த குரங்கைப்போலு நிழற்பார்வைக் கோரணிக்கூத்துப்போலு மொருவர் பிடியாதிருக்கவுந் தானே சேட்டிக்கு மனத்தினைப் போதத்தாற்பற்றிப் பிடித்தாட்டி யாவரடக்கிக்கொள்வார்?

"காட்சியறச் சும்மாதிருக்கிலசையாது சுற்றுவிறி சம்மானை பம்பரங்காணும்" எ-து. போதமொன்றையு மெதிரிட்டு நாடாது சும்மா திருப்பினு மொருவர் பிடித்தசைக்காது தானே சுற்றப்பட்ட விறிசுபோலு மொருவ ரெறிந்து பிடியாது தானே சுழலு மம்மானைபோலு மொருவராட்டாதாடும் பம்பரம்போலுந் தானே விரைந்தெழுந் தசைவதெனின். எ-று.

ப-ம். உடம்பினின்று சேட்டித்தலிற் கூட்டிற்குரங்கை யென்றும், நிழற்பார்வைக் கோரணிக்கூத்தைக்காண்டன் மாத்திரமன்றிப் பிடிக்கக்கூடாததுபோன் மனத்தினது போக்குவரத் தறிவதேயன்றி யதனையறிந்து பற்றக்கூடாமையி னிழற்கோரணிக்கூத் தென்றும், பன்முகமாய்ச் சிதறியெழலின் விறிசென்றும், குதித்துக் குதித்தெழலி னம்மானையென்றும், ஓர்கணத்தி லனேகஞ்சுழலாச் சுழல்வதனாற், பம்பரமென்றுங் கூறினர்.

கூட்டிற்குரங்கசைவு நிழற்கூத்தசைவுந் தூலமாகலின் போதமசைந்தவிடத் ததனதசைவிற் குவமையும் விறி சம்மானை பம்பரத் த

சைவும் சூக்குமமாகலிற் போதஞ் சிறிதடங்கியவிடத் தம்மனத்தி னை
சைவிற் குவமையுமாகக்கொள்க. (யசு)

(கவி - யடு. அ - கை.)

இதுவுமது.

பற்றுது போதும் பதறும் பழக்கமதைக்
கற்றுலென் ஞகக் கலக்காது - சற்றேநீ
தீண்டிவிடிற் றுன்காண் செனன மரணமது
மாண்டுவிடி னீசிவமா வை.

(இ-ள்.) பற்றுதுபோதும் பதறும்பழக்கமதைக் கற்றுலென்ஞகக்க
லக்காது" எ-து. ஓர்பொருளேயும் போதங்கருதா தசைவற்றிருந்தபோ
து முன்ன ரசைந்த வப்போதத்தோடுங்கூடிய பழக்கத்தான் விரைந்
தெழு மனத்தைப் போதத்தாற் பிடித்துச் சாதித்தடக்குவனெனி னு
ன்னை யெங்ஙன மயங்கக் கலக்காது?

"சற்றேநீ தீண்டிவிடிற்றுன்காண் செனனமரணமது மாண்டுவி
டினீசிவமாவை" எ-து. உன்போதத்தா லம்மனத்தினைக் கணப்போ
தாயினும் பிடித்து விடுத்தியெனி னதுதானே பிறப்புமிறப்புமாம். அ
ங்ஙனம் பிடித்து விடுக்கும்போத மிறக்கு முபாயமறிந் திறத்தியெனி
னம்மனமுமிறக்கு நீயுஞ் சிவமாமை. எ-று.

ப-ம். பிடித்தபோது நினைப்பும் விடுத்தபோது மறப்பும் வருதலிற்
செனனமரண மென்றுர். (யரு)

(கவி - யசு. அ - கை.)

கேவல சகலங்கடாக்காது திருவருட்க ண்ிற்றற் குபாய மித்திரு
வெண்பாவிற்கூறுகின்றுர்.

அறிவா யிரீர்மயக்க மாகா தசையில்
விறிசாய் விடாதோ விகற்பம் - பிறியாத்
தராசி னுனிபோற் சமாதிவரின் ஞான
விராசனுமக் கொப்பா ரெவர்.

(இ-ள்.) அறிவாயிரீர்மயக்க மாகாதசையில் விறிசாய்விடாதோ வி
கற்பம்" எ-து. கருவிக ளெல்லா நீங்கி நின்றவுயி ரறிவைவிட்டு நீங்கா
தவரு ளறிவாயிருங்கோ ளங்ஙன மிருப்பீரெனின் மயக்கம்வந்தடா த
வ்வுயி ரறிவைப் பிறியா தவ்வறிவைத் தற்போதத்தா லெதிரிட்டுப்பா
ர்ப்பதா யசையில் விகற்பஞ் சுழல்விறிசுபோலாய்ச் சுழலுமாகலி ன
ங்ஙனம் பார்த் தசையாது?

"பிறியாத் தராசினுனிபோற் சமாதிவரின்ஞான விராசமுமக் கொப்பாரெவர்" எ-து. இரண்டுதட்டிலு மிட்ட பொன்னுங் கல்லுஞ் சரியானபோது கீழ்நின்றமுள் ளோர்பாற்சாயாது மேனின்ற னுள்ளே ப் பிறியாதிருந்த வத்தராசுமுண் ணுனிபோன் மயக்கமும் விகற்பமு மடா தவ்வருளறிவினேரே யுமதுபோத மசைவற் றிருக்குஞ் சமாதி வருமாயி னப்போது நீர் ஞானராசாவாவீ ரஃதன்றி யுமக்கொப்பாரு மியாவ ரிவ்வுலகத்து. எ-று.

ப-ம். கற்போலுங் கேவலம் பொன்போலுஞ் சகல மக்கன் மிகுந்த போது கற்றட்டுப் புறத்தும் பொன்மிகுந்தபோது பொற்றட்டுப் புற த்துஞ்சாயுங் கீழ்நின்ற முட்போ லான்மா விம்முட் சாய்ந்தபோதுஞ் சாயாதசைவற நேரேநின்றபோது மசைவற மேனின்ற முட்போ ல ருளெனவறிக. மேனின்ற முட்போற் கீழ்நின்றமுள்ளு மசைவற நே ரே நிற்றல்போ லான்மாவருளி லசைவறநிற்கவேண்டு மாகலிற் றரா சுநுனிபோ லென்றார். இங்ஙன நிற்கின்ற சமாதிவருத லரிதாகலின் வரினென்றார். (௰௬)

(கவி - ௰எ. அ - ௩௧.)

இங்ஙனங் கேவல சகலங்களை நீக்கித் திருவளி லசைவறநிற்கக்கூ டாதாயினு மந்தக்கரணங்களை யடக்குதற் குபாயமென்னையெனின்; தி ருவருளை யுள்ளும்புறனும் பரிபூரணமாய்ப் பாவித்தாற் கரணமடங் குமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

நீர்க்குப் பதமு நெருப்புச் சுடுந்தொழிலுங்
காற்றைச் சலிக்கவுமார் கற்பித்தா - ரார்க்குமிது
போகா மனுதி புதைக்குநிழற் போலாநீ
யாகாயம் போற்பா ரறும்,

(இ-ள். நீர்க்குப்பதமு நெருப்புச் சுடுந்தொழிலுங் காற்றைச்சலிக் கவுமார்கற்பித்தா ரார்க்குமிது போகாமனுதி" எ-து. நீர்க்குக் குளிர்ந் து பதஞ்செய்யுங் குணமு நெருப்பிற்குச் சுட்டெரான்றுவிக்குங் குண முங் காற்றிற்குச் சலித்துத் திரட்டுங் குணமுங்கற்பித்தாரியாவ ரவற் றிற் கிக்குணங்க ளியல்பானவாறுபோன்; மனத்திற் கோர்பொருளைப் பற்றுங்குணமும் புத்திக்கதுபற்றியபொருளை நிச்சயிக்குங் குணமு ம கங்காரத்திற் கது நிச்சயித்தபொருளை யபிமானிக்குங் குணமுஞ் சித் தத்துக் கபிமானித்தபொருளைச் சிந்திக்குங் குணமு மியல்பா மாகலி

ளிபாவர்க்கு மனமாதியந்தக்கரணங்க ணீங்காது, ஆயி னீ ரிங்ஙனங்கூறியவாற்று னக்கரணங்க ளெங்ஙன மிருப்பனவன்றி யவற்றை நீக்கவேண்டாவோவெனின்?

"புதைக்குழிழற்போலாநீ யாகாயும்போற்பாரறும்" எ-து. தன்னைப்புதைக்க மண்போடுந்தோறு மண்மீது மேன்மே லெழப்பட்ட புதைக்குமிழற்போலு மக்கரணங்களை யுன்போதத்தா'னடக்குந்தோறு மிப்போதத்தின்மீது மேன்மே லெழுவதாமாகலி னுனதுயிருட்பிறிவற்றிருந்த வருளை யுட்புறனுயொன்றேடுந் தாக்கற்றிருந்த வாகாயம்போ லவ்வருண் ஞானக்கண்ணுற் றேகாதி பிரபஞ்சங்களி னெல்லா முட்புறனுய் நிரந்தரமாய்ப்பா ரிங்ஙனம் பார்த்தபோ தக்கரணங்களாறும். எ-று.

க-து. இதனு லந்தக்கரணம் பொறிவழிச்சென்று பிரபஞ்சத்தை நாடும்பொழுது மங்ஙனஞ் செல்லாவிடத் தவ்வாசனையா லுள்ளேயசையும்போதுந் தற்போதத்தா லடக்கி னடங்காது மேன்மேலெழுமாகலின்; புறம்புமுள்ளுந் திருவருளைப் பரிபூரணமாய்க்காணின் கரணங்களடங்குமென்பதாயிற்று.

நீராதியியற்குணங்களைப் போதத்தா லடக்கக் கூடாததுபோன்மனுதியியற்குணங்களையு மிதனுலடக்கக்கூடாதென்பதுங் காண்க. (௰எ)

(கலி - ௰அ. அ - கை.)

இங்ஙனம் உள்ளும் புறனும் பரிபூரணமாய்ப் பாவிப்பதருளன்றேவெனின்; அருளை யெதிரிட்டறியி லன்னியமாமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மண்ணை மலையை மறிகடலை வானகத்தை
யெண்ணி லளந்தறிய வெய்துமோ - வுண்மைநீ
யுண்டென்னி லோர்வார்த்தை யுண்டல்லா துன்னெழிவைக்
கண்டறியி லன்னியமாங் காண்.

(இ-ள்.) மண்ணைமலையை மறிகடலைவானகத்தை யெண்ணி லளந்தறியவெய்துமோ" எ-து. மண்ணகமுழுதையும் வானகமுழுதையு நீட்டலளவையானு மலையையெடுத்தலளவையானு மறிகடலை முகத்தலளவையானு மெண்ணுமிடத் தொருவரா லிவ்வளவென் றளவிட்டறியக் கூடுமோ வதுபோல?

"உண்மைநீ யுண்டென்னிலோர்வார்த்தை யுண்டல்லா துன்னெறிவைக் கண்டறியிலன்னியமாங்காண்" எ-து. இருநூற்றிருபத்துநாலு புவனங்கட்கு மவற்றுள்ளிருந்த சராசர வுயிர்கட்கு முட்புறம்பாய் நிறைந்துள்ள திருவருளை நீ யுண்டென்று சொற்றியெனி னவ்வோர் சொல்லு முண்டாவதன்றி யிச்சொற்குப் பொருளீதென் றுன்போதத்தா லிதனது நாசத்தாற்றோற்று மவ்வருளைக்கண் டளவிட்டறியக்கூடுமோ; அங்ஙனமென் றளவிட்டறிவேனெனி லுனக்கன்னியமாயிருந்த வவ்வரு ளன்னியமாநீங்கும். எ-று.

ப-ம். இதனாற் போதற்றாற் சிறிதளவிடப்படு மண்ணாதி பொய்ப்பொருளையே முற்று மளவிடக் கூடாதெனி னப்போத நாசத்திருந்த மெய்ப்பொருளை யெங்ஙன மளவிடக்கூடுமென்பதாயிற்று.

அரு ளன்னியமாயிருந்துள்ளதாயினும் போதந் தடித்தபோது மலவாசனை தோன்று,மிம்மலவாசனையோடுங்கூடிய போதத்திற்கு மலாகிதமாயிருந்துள்ளவவ்வருடோற்றாதாகலி "னன்னியமாங்காணென்றார். (௧அ)

(கவி - ௧௯. அ - கை.)

அருளாற் கருவிகளின துண்மையை யறிந்துநீக்கின னீங்குமென்பதும், போதத்தாலடக்கின் மேன்மேலு மெழுமென்பதும்,கருவிகளை நியதிகளைந்து தற்போதத்தையு மடக்கினன் மீட்டுங்கருவிகடோற்றாதென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உதித்தொடுங்கும் பொய்க்கா ருபாதான மென்னு
துதிப்பை யுதிப்பா லொடுக்கிற் - பதைத்தெழுந்த
பந்தன்றோ சாட்சியைப்போற் பார்வோர் பறித்தமரங்
கொந்தலர்ந்து காயாதொக் கும்.

(இ-ள்.) உதித்தொடுங்கும்பொய்க்கா ருபாதானமென்னு துதிப்பையுதிப்பாலொடுக்கிற் பதைத்தெழுந்த பந்தன்றோ சாட்சியைப்போற் பார்" எ-து. ஆகாயத்திற் றோன்றி மறையுங்கார்ப்போன் மாயையிற் றோன்றி யொடுங்கும் பொய்யாகிய கரணங்களை யம்மாயையென் றருளாற்கண்டுநீக்கா ததனை மெய்போற்கருதி யக் கரணங்களைப் போதத்தாலடக்கி லவை கரத்தாலறையுந்தோறும் விரைந்தெழுந்த பந்துபோ லாகாதோ;வப்பந்தைக்கரத்தா லறையாது விடுத்தா னிலத்திற்

கிடக்குமாகலி னிதன்சாட்சியைப்போ லுன்போதத்தா லவற்றை யடக்கின் மேன்மேலெழுமென்பதையு முன்போதஞ் சும்மா திருப்பி லவை தாமே யடங்குமென்பதையும் பார்த்தறிதி. அஃதன்றியும்?

வேர்பறித்தமரங் கொந்தலர்ந்துகாயாதொக்கும்" எ-து. நிலத்தி லூன்றியமுதல் வேர்ப்பறித்தமரம் பூத்துக் காயாததுபோலு முன் போதமற்றபோது கரணவிந்தியங்களொன்றுந் தோன்றாதறும்.எ-று.

ப-ம். உபாதானமென்றது,மாயை. அது காரியத்தைக்காரணமாய்க் கூறியது;கரணம்போற்றோன்றி மறைதலிற் போதத்தையு முதிப்பென்றார். காரணங்கள் போதமிருந்தபோதிருந்து மிறந்தபோ திறந்தும்வருதலின், வேர்க்குவமையாகக் கூறினர். (௰௬)

(கலி - உ௰. அ - கை.)

இங்ஙனங் கருவிகளும்போதமு மிறந்துநின்றவிடத்து வருமிலாபமென்னையெனின்; கருவிகளும் போதமுமிறந்த சுத்தநிலையினின்றூலானந்தலாப முண்டென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சுட்டுப்போ தங்கழன்ற சுத்தமரை மாத்திரையின்
மட்டுத்தா னற்றநிட்டை வாய்க்குமாற் - கெட்டேன்
றலைச்செய்யு மானந்தஞ் சற்றோபால்வாரி
முலைக்கண்ணிற் றோன்று முறை.

(இ-ள்.) சுட்டுப்போதங்கழன்ற சுத்தமரைமாத்திரையின் மட்டுத்தானற்றநிட்டைவாய்க்குமாற்கெட்டேன்றலைச்செய்யுமானந்தஞ்சற்றோ" எ-து. அரைக்கணப்போதாயினு மிது வதுவென்று சுட்டியறியுந் தற்போதமொழிந்த வோர்வரம்பின்றிய சுத்தமாகியநிட்டை வாய்க்குமாயிற் கெட்டேனுண்டுப் பிரவேசிக்கும் பேரானந்த மற்பமோ?

"பால்வாரி முலைக்கண்ணிற்றோன்றுமுறை"எ-து. முலையினது சிறியகட்டுவொரத்திற் பெரியபாற்கட லுதையமான முறைமைபோற் பரிபூரணமாய்த்தோற்றும். எ-று.

ப-ம். சுண்டுச்சுத்தமென்றது;பரையோக மிப்பரையோகத்திலான்மபோத மிகவுந்தேய்ந்திருத்தலி னதனை முலைக்கண்ணென்று, மிங்ஙனமிருந்தபோ தரைக்கணத்திற் பரையோகநீங்கிப் பரிபூரணானந்த மநுபவமாய்த் தோற்றலி னதனைப் பால்வாரியென்றுங்கூறினர். (உ௰)

(கவி - உக. அ - கை.)

அருள்வடிவமா யென்றைக்கிருப்பனென்ற மாணுக்கனுக் கவ்வருள் பூரணமென்று முன்சுட்டும்போதமற்று லதனைவிட நீயொரு முதலன்றென்று மறிவித் தவனது துயரை மாற்றுத லித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

ஆகாயத் தேபலவுந் தோன்றி யடங்காதோ
நீகாயத் தோடழுந்தி நீங்கியரு - ளாகாதோ
வென்று சலிப்பானே னெதிரற்ற பூரணத்தே
யொன்று மிலைகா ணுனக்கு.

(இ-ள்.) நீகாயத்தோடழுந்தி நீங்கியருளாகாதோ வென்றுசலிப்பானேன்" எ-து. நீ காயத்தோடு பொருந்தி யிருப்பதாய்க்கருதி யிக்காய நீங்கி யெனக்கோர்காலந் திருவருள்வடிவ மாகாதோவென்று சலித்துத் துயருறுவரனேன்?

"ஆகாயத்தேபலவுந்தோன்றியடங்காதோ வெதிரற்றபூரணத்தே யொன்றுமிலைகாணுனக்கு" எ-து. ஆகாயத்தினிடமாய்ச் சரவசரதேகங்கள் பற்பலவுந்தோன்றிநின்றழியாதோ வதுபோ லுன்போதமோர்பொருளையு மெதிரிடா தற்றபோ துன்னைவிழுங்கிநின்றவருட்பூரணத்தி லுனக் கத்தேகாதிப் பிரபஞ்சங்களொன்று மில்லைகாணும். எ-று.

ப-ம். ஆகாயத்தினிடமாய்த் தோன்றி யொடுங்குங் காயங்க ளவ்வாகாயத்திற் கன்னியமானதுபோல் முன்றேகாதிகளை யானெனதென்று பற்றிநின்ற போதந் திருவருளி லழுந்திப் பூரணமாய்ப்போகத் தேகாதிப்பிரபஞ்சங்க ளன்னியமாய்த் தோற்றுமாகலி "னாகாயத்தேபலவுந் தோன்றியடங்காதோவென்றும்,பொய்பாய்த்தோற்றலி "னொன்றுமிலைகா,, ணென்றுங்கூறினர். (உச)

(கவி - உஉ. அ - கை.)

அவ னியோகப்பழக்க நீங்கற்பொருட்டுப் பழக்கவிலக்கணமெடுத்து அளவில்காலந் தற்போதத்தாற் றுவித நாட்டத்திற் பழகிவருதலின்;நின்போதமொழித்துச் சிவத்தோ டிரண்டற் றிருத்தற் குபாய மியாதுகூறினும் நீ அங்ஙனமிருத்தலும் பழக்க மிகுதியா லான்மாக்களத்துவிதநாட்ட மொழித்துநிற்றலு மிகவுமறிதென்றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பழக்கங் கொடியதுபார் பாறையினுங் கோழி
கிழிக்கும் பொலியைக் கிளறும் - விழித்துங்
குருடர்க் கொளிபகையாய்க் கூசிக்கோல் கோடா
ரருளைப் பகுக்குமான் மா.

(இ-ள்.) பழக்கங்கொடியதுபார்பாறையினுங்கோழி கிழிக்கும்பொலியைக்கிளறும்" எ-து. யாவர்க்கும் பன்னாட்டொன்றுதொட்டுவரும்பழக்க நீக்கக்கூடாமையின் மிகவுங் கொடிய ததனை நீ பார்த்தறிதி. அஃதெங்ஙனமெனிற்பன்னாட் குப்பைசீய்த்தபழக்கத்தாற் கோழி கற்பாறையாயினுஞ் சீய்க்கு நெற்பொலிமேல் விடுப்பினுஞ் சீய்க்கு மஃதன்றி?

"விழித்துங்குருடர்க்கொளிபகையாய்க் கூசிக்கோல்போடா ரருளைப்பகுக்குமான்மா" எ-து. காசநோய் படர்ந்த குருடர் கண்ணோய் தீர்ந்து விழித்தபோதுங் கதிரொளி யிருட்பகைபோலாய்க்கூசி முன்பிடித்தகோல் கைவிடா ரவர்போ லருளையடையா முன்னதுவிதுவென்று நானுவாய்ப்பகுத்த பழக்கத்தா லிப்போது பகுத்தற் கிடமின்றியெங்குந்தானுயிருந்த வவ்வருளையடைந்து மான்மாவதனைப் பகுத்துநாடும். எ-று.

ப-ம். சீய்க்கக்கூடாதபாறையைச் சீய்த்தல்போற் பகுக்கக்கூடாதவருளைப் பகுத்தலானும், கிளறவேண்டுவதின்றி நின்று தின்னுது பொலியைக்கிளறுதல்போற் பகுக்கவேண்டுவ தின்றியிருந் தருளானந்தத்தை யநுபவியா தவ்வருளைப் பகுத்தலானும்,காசமிருந்தபோது கூசிப்பிடித்தகோலை யக்காசநீங்கிக் கதிரொளிகண்டுமிவ்வொளி முன்றோன்றியவிருளாய்க் கூசிக் கைவிடார்போலு முன்ன ராணவமறைப்பானது விதுவென்று பகுத்த போதத்தை யிப்போ தவ்வாணவநீங்கி யருளொளிகண்டு மிவ்வருளொளியை முன்னராணவவிருளொளிபோற்பாவித்து விடா ராகலினுனு மிங்ஙனமுவமைகூறினர்.

தேகாதிபிரபஞ்சங்களையெல்லாந் திருவருளே வடிவாய்க் காண்பதேயன்றி யவற்றை நானுவாய்ப்பகுப்பினு மிவ்வருளைப் பகுப்பதென்பதுங்காண்க. (உஉ)

(கவி - உ௩. அ - கை.)

இதுவுமது.

கட்டியநாண் விட்டாலுங் கந்தகலாக் கன்றுகளைத்
தட்டிப் புறப்படுத்துந் தன்மைபோ - லொட்டொழித்து

நின்றுற்போ னீசிவமாய் நில்லென்று நீக்கமறத்
தொன்றாக்கி லொன்றிரண்டா கும்.

(இ-ள்.) கட்டியநாண்விட்டாலுங்கந்தகலாக்கன்றுகளைத் தட்டிப் புறப்படுத்துந் தன்மைபோல்" எ-து. தறியோடுங்கட்டிய தும்பைத் தெறித்து விடுப்பினு முற் கட்டியிருந்ததுபோற்கருதி யத்தறியைவிட்டு நீங்காத கன்றுகளைக் கரத்தாற்றட்டியோட்டிவெளியிற் புறப்படுத்து முறைமைபோல?

"ஒட்டொழித்து நின்றுற்போனீசிவமாய்நில்லென்றுநீக்கமறத் தொன்றாக்கி லொன்றிரண்டாகும்" எ-து. முற்பந்தமாயிருந்துள்ள முப்பத்தாறு கருவிகளையும் விடுத்துத் தன்னையுந் திருவருளையு மறிவித் தவ்வருளோடுஞ்சேர்த்தி யவ்வரு ளசைவறநின்றுற்போ னீயுன் போதமசைவற்றுச் சிவமயமாய்நில்லென்றுகூறிச் சிவத்தைவிடத்தானொரு முதலென்றுகருதுந் துவிதபாவனையைமாற்றி யச்சிவத்தோடொன்றாக்கினும்போதவொழிவா லதனோடொன்றானவான்மா போதவசைவா லிரண்டாகுமாகலி னதனது போத மிருந்தவா றென்னை. எ-று.

ப-ம். தும்பு தெறித்து விடுவித்தபோதே தாயைச்சென்று கூடிப் பாலுண்ணுங் கன்றுபோ லொட்டொழித்தபோதே தற்போதமொழிந் தருள்வழிச்சென்று சிவத்தை யடைந்து பேரின்பத்தைப்பெறும் பக்குவர்போ லாகாது"கட்டியநாண்விட்டாலுங்கந்தகலாது, நின்ற கன்றுகளைக் கரத்தாற்றட்டி வெளியிற்புறப்படுத்தித் தாயோடுஞ்சேர்த்தி முலையைப்பிடித்துண்ணவிடுப்பினு முண்ணாது மீளுமாறுபோலொட் டொழித்தலுமன்றி யருளோடுஞ்சேர்த்தித் துவிதபாவனையை மாற்றிச் சிவத்தோடொன்றாக்கினு மச்சிவத்தோ டிரண்டற்றிருந்தானந்தப்பேற்றை யடையாது தற்போதவசைவா னிரண்டாகலானிவர்க் கிக்கன்றுகளை யுவமைகூறினர். (௨௩)

(கவி - ௨௪. அ - கை.)

இதுவுமது.

குரங்கை நினையா திருமென்று கூறத்
திரும்பி யதுவே தியானம் - வருங்கதைபோ
னீசிவமாய் நில்லென்று னீங்கி யது வாய்நினைந்து
மாய்வையது வன்றோ மலம்.

(இ-ள்.) குரங்கைநினையாதிருமென்றுகூறத்திரும்பியதுவேதியானம் வருங்கதைபோல்" எ-து. ஓர்புருட னோர்பேதைக்குக் குரங்கினை

நினையா திருத்தியென்று கூற வவனங்ஙனங்கூறியமாத்திரத்தின் மீ ண் டக்குரங்குத்தியானமே. யிவனுக்குமனத்திற் குடியாயிருந்த தெ ன்றுலகத்தில் வழங்குங்கதைபோல்?

"நீசிவமாய்நில்லென்றுனீங்கியதுவாய்நினைந்து மாய்வையதுவ ன்றோமலம்" எ-து. நீயொன்றையுமெதிரிடாது சிவமயமாய் நில்லெ ன்று கூறினு லங்ஙன மெதிரிடும் போதமொழிவதே யச்சிவமயமாய் நிற்பதென்றறியாது;போதத்தாற் சிவத்தை யெதிரிட்டுப்பார்த் தியா ன் சிவமய மாயினே னுயினே னென்று கருதி வருந்துவா யிங்ஙனங் கருதி வருந்தப்பண்ணுவதன்றோ மலமாவது. எ-று.

க-து. கூறியபுத்தி யுடையோனுக்கு நீகுரங்கை நினையாதிருவென் றுகூறினு லக்கணமே யந்நினைவை யொழித்திருப்ப னதுபோலத் தீ விரதர பக்குவனுக்கு நீசிவமாய் நில்லென்று லக்கணமேசிவமென்று ந் தானென்றுங் கருதுந்துவிதபோதமொழிந்து சிவமாய்நிற்பனென் றதற்கெதிர் மறையும் வருவித்துக்காண்க. (உச)

(கவி - உடு. அ - கை.)

இதுவுமது.

மணிப்பாம் பிருளின் மறைந்திருக்கத் தேடுங்
கணக்காந்தற் போதத்தைக் காட்டி - யுணர்த்துகினு
நீரிற் கிணறு நிழலுயுத்த மும்போலா
மாரித்தை நீக்கியிருப் பார்.

(இ-ள்.) மணிப்பாம்பிருளின் மறைந்திருக்கத்தேடுங் கணக்காந்தற் போதத்தைக்காட்டி யுணர்த்துகினும்" எ-து. 'சென்னியின்மீதுமணி யையுடைய பாம்புதானிருளிடத்து மறைந்திருப்ப விருளைத்தேடு முறைமைபோலாகும்.நீயுன்போதத்தைமுன்னிட்டிருளிடத்துமறை ந்திருப்ப வருளைத்தேடுமுறைமையென்று போதஞ் சீவிப்பதைக்கா ட்டி யருளையு முன்னை விட்டு நீங்காத பரிபூரணமென் றறிவிப்பினு ந் தெளிந்துகொள்ளாது?

"நீரிற்கிணறுநிழலுயுத்தமும்போலாமாரித்தை நீக்கியிருப்பார்" எ-து. பிரளயமாய்க் கோத்துநின்ற சுத்தசலத்திற் கிணறுதொட்டு நீர்தேடு மொருவனைப்போலுந் தனது நிழலை யெதிராய்க்கருதி யத னோடு யுத்தஞ் செய்யு மொருவனைப்போலும்;பின்னரு முன்போத ஞ்சீவியாநிற்குமாகலி னிப்போதத்தைநீக்கிச் சிவமாயிருப்பா ரியா வர். எ-று.

க-து. சென்னியின்மீது மணிச்சுடரை யுடையபாம் பிருளைத்தேடு ந்தோறு மவ்விருணீங்குவதன்றி நில்லாததுபோலத் தற்போதத்தை

முன்னிட் டருளைத்தேடுந்தோறு மிவ்வருணீங்குவதன்றி நில்லா தென்பதும்; பாம்பு சென்னிமணியைப் புழைவழிக்கொணர்ந்து வாய்க்குளடக்கி னிருட்டேடவேண்டுவதின் றதுபோன் முன்னிட்ட போதத்தைப் பின்னிட்டா லருட்டேடவேண்டுவ தின்றென்பது மவ்வி ருணிறைந்தாற்போலிவ்வருணிறைந்திருப்பதென்பதும், நீர்வெள்ள மாயிருக்கவு மந்நீரிற்கிணறுதொட்டு நீர் சம்பாதிக்கத் தொடங்கினே னைப்போ லருளெங்கும் பிரிவற்றபூரணமாயிருக்கவுமவ்வருளுட்டே டி யருளைச்சம்பாதிக்கத் தொடங்கினனென்பதும், தன்றேகவசைவா னிழலசைவதென்றறியா ததற்கோரசைவு வேறுளதென்றுகருதி யத னேடியுத்தஞ்செய்வானைப்போற் றன்போதவசைவாற்கருவிகளசை வதென்றறியா ததற்கோ ரசைவு வேறுளதென்றுகருதி யவற்றைய டக்கத்தொடங்கினேனென்பது மிவ்வுவமைக்குறிப்புகளாற் காண்க.

ப-ம். இங்ஙனமெழும் போத மொழிப்பா ரியாவராகலி னதித் தைநீக்கியிருப்பா ரொன்றார்.

மணிப்பாம்பிருளையென்பது -தற்போதத்தைமுன்னிட் டருளை நாடுதற்குவமை. நீரிற்கிண றென்ப தருளை யேகதேசமாக நாடுதற்கு வமை.

நிழலுயுத்த மென்பது-தன்னையருளுக்கூணுய்க்கொடுத்து நிற்க வே கருவிகளொழியுமென் றறியாது தற்போதத்தா லவற்றை யடக் கத் தொடங்குதற் குவமையெனக்கொள்க. (௨௫)

(கவி - ௨௬. அ - கை.)

ஆயி னிப்பழக்க நீக்குமா றெங்ஙனமெனின்; நீயிந்நாட்பழகிய யோகப்பழக்கத்தைவிட்டு ஞானயோகத்திற் பழகுதியெனிற் சிவத் தைப்பெறலாமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உட்புறம்பாம் பூசனையு மியோக சமாதிகளுஞ்
சுட்டறிவு கெட்டவர்போற் றூங்குவதும் - விட்டுப்
பகல்விளக்கு முச்சிப் படிகமும்போற் பாச
மகலநிற்பார்க் கார்சரியோப் பார்.

(இ-ள்.) உட்புறம்பாம்பூசனையு மியோகசமாதிகளுஞ் சுட்டறிவுகெ ட்டவர்போற் றூங்குவதும்-விட்டு" எ-து. அந்தரியாகம் பகிரியாக

மாய்ச்செய்யும் பூசைகளு மாருதார பாவனுயோக சமாதிகூடுதலு மிதுவதுவென்றுசுட்டியறியுந் தற்போதங்கெட்டுப் பரமானந்தகித்தி ரைபண்ணு மெய்ஞ்ஞானிகளைப்போன் மனத்தாற் பிராணவாயுவை யுண்மறித்துப் பிரமரந்திரத்தி லதனுண்மறைந்து தூங்குவதுமாகிய விவற்றையெல்லாம் பொய்யென்றுவிட்டுநீங்கி?

"பகல்விளக்குமுச்சிப்படிகமும்போற்பாச மகலநிற்பார்க்கார்சரி யொப்பார்" எ-து. பகற்காலத்தேற்றியதீபம்போலு முச்சிக்காலத்து ப்படிகம்போலுங் கருவிகண் முப்பத்தாறு மகன்றுபோகத் திருவரு ளி லசைவற நிற்போர்க் கிணை யொப்பா ரியாவர். எ-று.

ப-ம். இருளிற் றோன்றியதுபோலன்றிச் சூரியப் பிரகாசத்தான் முதல்கெடா தொளிகெட்ட பகல்விளக்குபோன்;முன்னராணவ வந் தகாரத்திற் றோன்றியதுபோலன்றி யருட்பிரகாசத்தான் முதல்கெ டாது போதங்கெட்டுநிற்றலிற் "பகல்விளக்குப்போலென்றும், பொ ழுதேறுங்காலஞ் சாயங்காலத்தன்றி யுச்சிக்காலத்திற் பஞ்சவன்னங் களையுங் கவராத படிகம்போலச் சகலகேவலத்தன்றிச் சுத்தமாகிய வருணேரே கருவிகளொன்றோடுந் தாக்கற்றுநிற்றலி"னுச்சிப்படிகம் போ லென்றும், பாசமகலநிற்பா ரென்றுங்கூறினார்.

பகல்விளக்கென்றது;தற்போதஞ் சீவியாதருளினிற்றற் குவமை யு முச்சிப்படிகம்போ லென்றது;கருவிக ளொன்றோடுந்தாக்கற்றுநி ற்றற்குவமையுமாகக் கொள்க. (உசு)

(கவி - உஎ. அ - கை.)

ஆயி னென்றையுங்கருதா து சும்மாநிற்பிற் சிவத்தையடைவதெ ங்ஙனமெனின்;சுட்டற்றிருந்தாலன்றிச் சிவத்தைப்பெறக்கூடாதென் பது மங்ஙனநிற்பிற் சிவந்தானேவிழுங்கி க்கொள்ளுமென்பது மித்தி ருவெண்பாவிற் கூறுகின்றார்.

இருட்கே வலத்தின் றெழுப்பியெதி ரிட்ட
மருட்கே வலசகல மாற்றித் - திரிச்சுடர்போற்
றன்னறிவு தின்னிக்குத் தானுணர்வாய்ப் போவதல்லா
லுன்னுதலே யொட்டுதல்கா ணும்.

இ-ள்.இருட்கேவலத்தின் றெழுப்பியெதிரிட்ட மருட்கேவல சகலமா
ற்றி" எ-து. கருவிகண்முப்பத்தாறுமிறந் தான்மபோதமுமிற ந்தந்த
காரமாயிருந்த கேவலத்தி னின்று மிப்போது தனதருட்சத்தியாற் க
ருவிகளைக் கூட்டப்பண்ணித் தற்போதத்தை யெழுப்பிச் சுருதிகுருவா
கிய படர்க்கை முன்னிலையாய்நின்று ஞானசமாதிகூட்டப்பண்ணி யத்
தற்போதத்திற் கெதிரிட்ட மருளாகிய கேவலசகலங்களைப் பூரணமா
கிய தன்மையாய் நின்றுமாற்றி?

"திரிச்சுடர்போற் றன்னறிவுதின்னிக்குத் தானுணவாய்ப்போவ
தல்லா லுன்னுதலே யோட்டுதல்காணும்" எ-து. விளக்குத்திரிமே
லேறிய சுடர் சிறுகச்சிறுகத் தின்றுவந்து முடிவி லத்திரிமுழுதையு
ம் விழுங்குதல்போலத் தன்னை யருளாலறிவித்தபோது தானிவ்வரு
ள்வழி வரவரச் சிறுகச்சிறுகத்தின்று முடிவிற் றனதுபோதமெல்லா
ம்விழுங்கித் தானுயிருக்குஞ் சிவத்திற்குத் தான் புசிப்பாய்ப்போவதெ
ன்றித் தான்வேறொரு முதலாய்நின் றச்சிவத்தை யெதிரிட்டு நாடுதெ
லே யதனைநீக்குதல். எ-று.

ப-ம். கருவிகளும் போதமுமிறந்து கேவலவிருளிற் கிடந்தநீ கிஞ்
சிக்கியனாகலி னவ்விருளை நீக்கிக்கருவிகளைக்கூடமாட்டாய். கருவிகள்
சடமாகலி னுன்னையவைவந்து கூடி யெழுப்பமாட்டா ஆகலிற் சுதந்
திரமாயுள்ள வருட்சத்தி கருவிகளைக்கூட்டி யுன்னையெழுப்ப விக்கரு
விகளோடுங்கூடி நீ சுகிர்தனானவை; இங்ஙனமுனக்குப் பெத்தத்திசை
யிற் சுதந்திரமின்மைபோன் முத்தித் திசையினு மின்றாகலி னீயுன்
போதத்தா லொன்றையு மெதிரிடா தசைவற நிற்றியெனி னச்சிவந்
தானே யுன்னை விழுங்கிக்கொண்டுநிற்குமென் றறிவிக்கவேண்டி "இ
ருட்கேவலத்தின்றெழும்பி" யென்றுந் "தன்னறிவு தின்னியென்றுங்
கூறினார்.

இன்றெழுப்பியென்றதனா லனுதியி லெழுப்பியது மிவ்வாறெனக்கொள்க. (உஎ)

(கவி - உஅ. அ - கை.)

ஆயினீரிங்ஙனங் கூறியவாற்றான் வேதாந்தி நிலையே நன்றென்ற
மாணாக்கனைநோக்கி வேதாந்திய ரிங்ஙனநிற்றலி னவர்க்கும் பிறப்புநீ
ங்காதென்பதும் பிறப்புமிறப்பு நீங்குமிடமிவ்விடமென்பது மித்திரு
வெண்பாவிற் கூறுகின்றார்.

௰௫

அறிந்ததெல்லாம் பொய்யென்ற வத்துவிதி யார்க்கும்
வெறும்பாழி லூன்றல் விடாது - பிறந்திறப்பை
யாஞ லுனதொழிவு மானந்த மாமுதிப்பும்
போனற்கா ணுன்பிறப்பும் போம்.

(இ-ள்.) அறிந்ததெல்லாம்பொய்யென்ற வத்துவிதியார்க்கும் வெறும்பாழிலூன்றல்விடாது பிறந்திறப்பையானல்" எ-து. தம்மாலெதிரிட் டறிந்ததெல்லாங் கண்ணினலறிந்த காட்சியெல்லாங் கண்ணுகாதவாறுபோ லியாமல்லோ மிவை மித்தையாருபமென் றவற்றைநீக்கி நின்ற வேதாந்தியாருக்கு மங்ஙன மெதிரீடாய்த் தோன்றுவன யாவுமின்றிச் சர்வசூனியமாயிருந்த பிரமம் நாமென் றிச்சூனியத்திற் றற்போத மூன்றிநிற்ற லவர்க்கும் விடாதாகலின் னீயவர்போ னிற்றியாயினுஞ் செனனமரணப்படுவை. இங்ஙனநிற்பினு முற்பத்திநாச முளவென்றீ ரினியுற்பத்திநாசமின்றாய முத்தியாதெனின்?

"உனதொழிவுமானந்தமாமுதிப்பும்போனற்கா ணுன்பிறப்பும் போம்" எ-து. உனது போதவொழிவாகிய பரையோகமு மிப்பரையோகத்தின் மேலிடு மானந்தோதயமும் போன லப்போ துன்பிறப்பும்போங்காண். எ-று.

ப-ம். பரையோகமு மானந்தப்பேறுமான்மாவிற் கநுபவமாய்த் தோற்றலானு மவ்விடயங்களி லான்மாவிற்குச் சிவத்தோ டத்துவிதமின்றாகலானும் "போனற்காணுன்பிறப்புப்போ,, மென்றார். அவை போனவிடஞ் சுகாதீதம். (உஅ)

(கவி - உகூ. அ - கை.)

இயோகியினது கருத்தையெடுத்துக்காட்டி யிங்ஙனம் ஞானபக்குவன் செய்வது பாவமென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

அறிவுக் கறிவா யகண்டமாய் நின்ற
நிறைவைக் குறைய நினைந்து - மறவையுமாய்த்
தாமே சிவத்தைப் படைத்தழிப்பார் தற்றேடம்
போமா றிலைபிறப்பேன் போம்.

(இ-ள்.) அறிவுக்கறிவாயகண்டமாய்நின்ற நிறைவைக்குறையநினைந்து மறவையுமாய்" எ-து உயிர்க்குயிராய் நின்றறிவிக்கு மறிவாய்க் கண்டிதமெல்லாங் கடந்ததாய்த் திரிவின்றி யோரியல்பிற்றா யெக்காலமும்விளங்காநின்ற பரிபூரணசிவத்தை யேகதேசவடிவாய்த் தற்போ

தத்தாற் றியானித் தங்ஙனந்தியானித்தவடிவை மறந்துபோந் தன்மை யுடையருமாகி?

"தாமேசிவத்தைப் படைத்தழிப்பார்தற்றோடம் போமாறிலை பிறப்பேன்போம்" எ-து. தம்மைப் படைத்தழிக்குஞ் சிவத்தைத்தாமே படைத்தழிப்பாராகலி னிவ ரிங்ஙனஞ்செய்தலான் வருந் தமதுபாவமேநீங்குமா றிலையெனிற் பிறப்பென்னை நீங்கும். எ-று.

ப-ம். தியானித்தபோது வடிவுதோன்றியும் விடுத்தபோதவ்வடிவு நீங்கியும் வருதலிற் "படைத்தழிப்பாரென்றுஞ், சிவத்தைப் படைத்தழிப்பது தோடமாகலிற் றோடமென்றுங்கூறினர். (௨௯)

(கவி - ௯௰. அ - கை.)

தமதாசாரியார் தீக்கையினாற் றம்மைத்திருவடிக்கண்ணைக்கியமாக்கிய முறைமை யறிவித்து நீயு ஞானதீக்கை பண்ணுதியென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மறப்பு நினைப்பு மயக்கும் விகற்பும்
வெறுப்பும் விருப்பும் விடாமல் - விறப்பேனைப்
பானுவும் வேதியும்போற் பார்த்தும் பரிசித்தும்
ஞானபந்தன் றானாக்கி னான்.

(இ-ள்.) மறப்புநினைப்புமயக்கும்விகற்பும் வெறுப்பும்விருப்பும் விடாம லிறப்பேனை" எ-து. மறப்பு நினைப்புமா யுள்ள கேவலமுஞ் சகலமு மாறிமாறிவரலாற் றேகாதி பிரபஞ்சங்கண்மேல் விருப்பும் வெறுப்புஞ் செனனங்கடோறும் விட்டு நீங்காமற் றுன்பத்தை யநுபவிக்கச்சிதைக்கு மதனை யாணவத்தா னின்பமெனக் கருதி யிறுமாந்து கொண்டிருப்பேனை?

"பானுவும்வேதியும்போற் பார்த்தும்பரிசித்தும்ஞானபந்தன்றானாக்கினான்"எ-து. பூதவிருளை நீக்கும் பானுவையுந் தன்னைச் சேர்ந்த செம்பைப் பொன்னாக்கும் பரிசனவேதியையும்போன்று; தமது ஞானப்பிரகாசநோக்கத்தாற் பார்த்துங் கரசரணங்களாற் பரிசித்து மும்மலங்களையு நீக்கித் திருவருளா லெடுத்துத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் தமது திருவடியி லொன்றாக்கினர். எ-று.

ப-ம். தானல்லாத தேகத்தை யானென்றுந் தனதல்லாத போகத்தை யெனதென்றுங் கருதப்பண்ணுவது மயக்கமத்தேகபோகங்களில்

வெறுப்பும் விருப்பும் வரச்செய்வது விகற்பமாகலி னிவற்றைத்தொடர்ந்துநின் றிருவினைகளு மிவ்விருவினைகளாற்பிறப்பிறப்பும் விடாது வரலான் "மயக்கும் விகற்பும் வெறுப்பும் விருப்பும்விடாம"லென்றிம் முறைவைத்துக் கூறினார்.

ஞானதீக்கைபண்ணும்போதுகிருபாநோக்கம் வைத்துத் திருவடிசூட்டவேண்டுமாகலிற் "பார்த்தும்பரிசித்து மென்றார்.

அங்ஙனம் பண்ணுந்தீக்கையிற் பாவனையு மிருத்தலினது கூறாராயினா ரப்பாவனையாற் றமதோ டைக்கம்பண்ணிக்கோடலிற் "றானாக்கினானென்றார். (௩௰)

மூன்றாவது - இயோகக்கழற்றி

முற்றிற்று.

ஆ. திருவெண்பா - ௱௨௧.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

கிரியைக்கழற்றி.

(கவி - க. அ - கை.)

கிரியை யாளனைப்பார்த்து ஞானிகணடையை யெடுத்துக்காட்டி யிவனைப்போ னீருஞ்செய்யா தென்செய்கின்றீரென் றிகழ்ந்து இத் திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தத்துவத்தை யெல்லாஞ் சடமென்று தாக்கற்றுச்
செத்தசத்தின் கண்போற் றிரியாது - வைத்தெடுத்தும்
பூரணமே யென்றழைத்துந் தேடிப் புரண்டழுதுங்
கோரணிகாட் டும்பேய்க் குவால்.

(இ-ள்.) தத்துவத்தையெல்லாஞ் சடமென்று தாக்கற்றுச் செத்தசத்தின்கண்போற் றிரியாது" எ-து. தத்துவங்களையெல்லா மிதுவிது வென்று தன்னாலறியப்படலானுந் தன்னை யவைக ளறியாமையானு மவற்றைச் சடமென்றறிந் தவைக ளொன்றோடுந் தாக்கற்றுச் செத்தாட்டுக்கண்போற் சுட் டறிவுகெட்டுச் சும்மாய்த்திரியாமல்?

"வைத்தெடுத்தும் பூரணமேயென்றழைத்துந்தேடிப்புரண்டழுதுங் கோரணிகாட்டும்பேய்க்குவால்" எ-து. தற்போதநாசத்திருந்த பூரணசிவத்தை யப்போதத்தா லோர்வடிவி லாவாகனம்பண்ணி யதனைமீட்டுந் தியானம்பண்ணி யிங்ஙனம் பூசனைபுரிந்து மவ்வடிவைப் பரிபூரணசொரூபமேயென் றோலிட்டழைத்து மச்சிவ மெங்கணுமில்லை மகாத்தலங்களி லுண்டென்றுகருதி யத்தலங்களிற்றேடிச்சென்று நிலத்தில்வீழ்ந்து புரண்டழுது மிங்ஙனங் கிரியையாளரென்னும் பேய்க்கூட்டங்கள் கோரணிக்கூத்தாடிக்காட்டும். எ-று.

ப-ம். செத்தசத்தின்கண் உயிர் அசத்தின்கண்போ லிருப்பினு மிதனது சுட்டறிவதற் கின்மைபோன் மெய்ஞ்ஞானிகள் பிரபஞ்சிகள் போ லிருப்பினு மிவரதுசுட்டறி வவர்க்கின்றியிருப்ப ரவர்போ னீருமிரா தென்னை செய்கின்றீரென் றவரது நடையை யிவர்க்கறிவிக்கவேண்டி யந்நடையின்றிய விவனைப்பார்த்துச் "செத்தசத்தின்கண்போற் றிரியாது "என்றார்.

சுட்டறிவுகெடுத்துநிற்ப தருள். சுட்டச்செய்வது மருள். ஆகலி னிவனைப் பேய்க்கூட்டமென்று,மிவர் தொழிலைக் கோரணிக் கூத்தென்று மிவர்க் கான்மலாப மின்மையாற் "பிறர்க்குக் காட்டுமென்றுங் கூறினர். (க)

(கவி - உ. அ - கை.)

ஞானபக்குவனுக்கு முன்னிருந்த சரிதாதி வாதனைகளையெல்லாம்போக்கித் தற்போதம் பதையாது மவுனமா யிருக்கும்படி போதிப்பவனே ஞானகுருவென்றும், போதஞ் சிறிதேனும் பதைப்பக்கூறு மவன் குருவலனென்று மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்:-

கிரியைக் கிளைத்துவந்து கேட்பவர்க்குச் சும்மா
திரியச் சுகம்விளைத்த சீமான் - குருவன்றிச்
சற்றே பதைப்பத் தரினுஞ் சகம்படைக்கக்
கற்றானுங் காலனுமாங் காண்.

(இ-ள்.) கிரியைக்கிளைத்துவந்து கேட்டவர்க்குச்சும்மா திரியச்சுகம் விளைத்தசீமான் குருவன்றி" எ-து. மனத்தாற் பாவிக்குந் தொழிலும் வாக்காற்றோத்திரம்பண்ணுந் தொழிலுங்காயத்தா லருச்சனையாகச் செய்யுந்தொழிலுமாகிய விக்கிரியைகளான் மிகவுமதத்துமெலிந்திவற்றை வெறுத்து ஞானத்தைவிரும்பிவந் தடைந்து கேட்ட வதிபக்குவர்க் கிம்மனவாக்குக் காயங்க ளசைதற்கேதுவாய தற்போத வசைவை யொழித் தருள்வடிவாக்கி யெனக்கின்னது வேண்டுமென்ப தொன்றுமின்றிச் சும்மா சஞ்சரிக்கவைத்துப் பேரின்பத்தை யுண்டாக்கிய விவ்வானந்தச் செல்வனே ஞானகுருவன்றி?

"சற்றேபதைப்பத் தரினுஞ்சகம்படைக்கக் கற்றானுங்காலனுமாங்காண்" எ-து. அப்பக்குவர்க்கோ ரணுவளவேனுந் தற்போத மசைதற்கேதுவாய வுபதேசங்களைக்கொடுப்பினு மக்குரு சகத்தைப் படைத்தற்குக் கற்றுள்ள பிரமனு மிவனாற்படைத்துள்ள சகத்திலுண்டாகிய வுடல்களை யழிக்குங் காலனு மாவனன்றி ஞானகுருவலனென் றவாறு. எ-று.

ப-ம். போதம் பதைத்தற் கேதுவாகிய வுபதேசங்களைக் கூறலிற் சகலகேவலங்க ணீங்கா. இவை நீங்காமையாற் பிறப்பிறப் புண்டாமாகலிற் "கற்றானுங்காலனுமாங்கா"ணென்றார். சீவன்முத்தனாய் நிலத்திற் சஞ்சரித்தலின் திரியவென்றார். (உ)

(கவி - ௬. அ - கை.)

மலரகிதமா யானந்தவடிவாயிருந்தசிவத்திற்கு மாயாகாரியமாகிய நீராதி யுபசாரங்களாற் சுத்தமுஞ் சுகமுமுண்டாகாதென்பது மதனைப் போதத்தா லள்விட்டறியக் கூடாதென்பது மித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

அக்கினி தேவற் கசீர்த்தியென் றுசுக்கரைத்து
வைக்கோலான் மூடி மலையடுப்பிற் - றுக்கியாய்
நீரைக் கழுவி நிழலைப் புதைத்தளப்பா
ராரைப்போல் வாரென்ன லாம்.

(இ-ள்.) அக்கினிதேவற்கசீர்த்தியென்று சுக்கரைத்து வைக்கோலான்மூடிமலையடுப்பிற் றுக்கியாய்" எ-து. அக்கினிதேவனுக் கசீரணம் பிறந்ததென்றுகருதி யதுபோவதற்குச் சுக்கரைத்துக் கொடுத்துச் சீதளம் பிறந்ததென் றவனை வைக்கோலான்மூடி யவனுக்குமுன்னரே யிங்ஙனஞ் செய்யா திருந்தோமென்று மலைவந்து தம்மே லடுத்தது போலுந் துக்கத்தையுடையவராகி?

"நீரைக்கழுவி நிழலைப்புதைத்தளப்பா ராரைப்போல்வா ரென்னலாம்" எ-து. நீரை நீராற்கழுவித் தமதுநிழலை மண்ணுட் புதைத்தந்நிழலைத் தம்மடியா லளந் திவ்வளவென்றளவிடுவாரை யாவரைப் போல்வாரென்று கூறலாம். எ-று.

ப-ம். எவரெவர் புசித்த புசிப்புக்களையெல்லா மவரவர் வயிற்றாடிருந்து சீரணிக்கப்பண்ணு மக்கினிதேவனுக்கசீரணம்பிறந்ததென் றுபசரிக்குமுறைமைபோ' லுயிர்கட்கெல்லா முயிராயிருந் தூட்டியுறக்கியுபசரிக்குஞ் சச்சிதானந்தரூபமாயுள்ள சிவத்திற்கோர்குறையுள்ளதுபோற்கருதி அட்டவிதார்ச்சனை சோடசவுபசாரங்களைச் செய்தலா "னக்கினிதேவற் கசீர்த்தியென்றுசுக்கரைத்து வைக்கோலான்மூடி "யென்றும்;

இன்றைக் கிந்நாழிகையளவும் பூசைநைவேத்திய வுபசாரங்களைச் செய்திலமென்றுமனத்திற் றுயருறலாற் றுக்கியாயென்று' மசுத்தத்தையெல்லாஞ் சுத்தமாக்கு நீரைக் கழுவிச் சுத்தமாக்கத் தொடங்குவான்போன்று; தன்னைச்சேர்ந்த வுயிர்களினது மும்மலங்களையுந் துடைத்து நின்மலமாக்குஞ்சிவத்தை நீராட்டி நின்மலமாக்கத்தொடங்கினராகலி "னீராக்கழுவியென்றும், புதைப்பதற் ககப்படா நிழலைப் புதைக்கத்தொடங்கினற்போ லொன்றிற்கு மகப்படாத பொருளைத் தற்போதத்தா லகப்பட்டதுபோற் பாவித் தாவாகனம்பண்ண

லி "னிழலைப்புதைத்தென்றும், தனதுநிழலையளந்து செல்லுந்தோறு மந்நிழல் கடந்து கடந்து சேறல்போ லிங்ஙன மிருக்குமென்று சிவத்தைத்தியானிக்குந்தோறு மத்தியானங்கட் கப்பாலப்பாற்சேறலி "னிழலளப்பாரென்றுங் கூறினர்.

சிவத்தின துண்மையைக் கேட்டிருந்து மிங்ஙனஞ்செய்தலா"ஞாைப்போல்வாரென்னலர் மென்றார். (ரு)

(கவி - ச. அ - கை.)

கிரியாகுரு வுபதேசத்தா லான்மலாபமின்றென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

நீர்க்கும் வழிக்குந் துயரில்லை நீந்திநடந்
தார்க்குத் துயரென் றறிவறியா - மூர்க்கருரை
யாற்றுக்கு வாய்கட்டி யம்பரத்துக் கேணியிட்டுக்
காற்றுக்குக் கால்பிடித்தல் காண்.

(இ-ள்.) நீர்க்கும்வழிக்குந்துயரில்லைநீந்திநடந் தார்க்குத்துயரென் றறிவறியா மூர்க்கருரை" எ-து. வெள்ளமாய் நிறைந்துள்ள நீரிற்கு மோரூர்க்குச்செல்லும் வழிக்குந் துன்ப மேதுமில்லை; யவ்வெள்ளத்தை நீந்திச்செல்வோர்க்கு மவ்வழிநடந்து செல்வோர்க்குந்துன்பமென் றறிவதுபோலப்பூரணமாய் மவுனமா யானந்தமாயிருந்த சிவத்திற் கோர் துன்பமுமின் றதற்கோர்துன்பமுளதுபோற் கருதிப் பூசைநைவேத்திய வுபசாரங்களைச் செய்யத்தொடங்கு மெமக்கே துன்பமென் றறிந் திங்ஙனஞ்செய்யும் பூசனையாதிகளைவிட்டு நீங்கி யச்சிவத்தையறிவித்தற் கேதுவாய ஞானாசாரியனை யடைந்து திருவருண் ஞானத்தை யறியாதகிரியர்குருவாகிய துற்சனர் பிறர்க்குபதேசம்போற் கூறுமுரை?

"யாற்றுக்குவாய்கட்டி யம்பரத்துக் கேணியிட்டுக் காற்றுக்குக் கால்பிடித்தல்காண்" எ-து. பிரளயமாய்ச்செல்லு மாற்றுக்கு வாய்கட்டி யதனையடக்கச் செல்லுதல்போலு மாகாயத்தின்கண் ணேணிநாட்டி யிதன்மேலேறி யதனைப்பிடிக்கச்செல்லுதல்போலுங் காற்றுக்குக் கால்பிடித்தன் முதலிய வுபசாரங்களைச் செய்யச் சொல்லுதல்போலுமாங்காண். எ-று.

ப-ம். மலைக்கணின்று கடலளவு மூடுருவிக் கோத்துநின்ற வாற்றுக்கு வாய்கட்டி யடக்கச் சொன்னதுபோற் பிருதிவிமுதன் முப்பத்தாறு கருவிகளையு மூடுருவிப் பேரானந்தக்கடலாய்நிறைந்திருந்த சிவத்தை யோர்வடிவத் தாவாகனம் பண்ணச் சொல்வதனை "யாற்றுக்குவாய்கட்டி யென்றும்;

ஏணிசிற்றற்கு மதன்மே லேறிச்செல்வோனுக்கு மிடங் கொடுத்துநின்ற வாகாயத்தை யவ்வேணிமேலேறிப் பிடிக்கச் சொன்னது போலந்திரியாகபூசைக்குத் தான்சொல்லுந் தானத்திற்கு மத்தானத்திருந்து பூசனைசெய்வோனுக்கு முட்புறம்பாய் நிறைந்துள்ள சிவத்தை இங்ஙன மிருப்பதென்றறியா தப்பூசனையா லறியென்று சொல்வதனை "லம்பரத்துக்கேணியிட் டென்று, மருவமாயிருந்த காற்றிற்குக் காலேயின், றஃதங்ஙனமிருப்பவு மதற்குக்கால்பிடித்தன்முதலிய வுபசாரங்களைச செய்யச் சொல்வதுபோ லுருவமருவ முருவருவங்களையெல்லாங் கடந்துநின்ற சிவத்திற்கு வடிவேயில்லை. இஃதிங்ஙன மிருப்பவு மிதற்குச் சோடசாதி வுபசாரங்களைச் செய்யச் சொல்வதனைற் "காற்றிற்குக்கால்பிடித்தல்,, என்றுங்கூறினர்.உபசாரஞ்செய்தலை, இருவகைப்பூசைக்கும் பொதுவாகக்கொள்க. (௪)

(கவி - ௫. அ - கை.)

ஆயின்ஞானிக்குக் கிரியைசெய்ய வேண்டாவோவெனின்; ஞானிக்குக் கிரியைசெய்யவேண்டுவ தின்றென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

ஆகாயம் போவார்க்கு மாவிகையோ வாழ்கடலோ
மீகாமன் போற்றிரிய வேண்டுமோ - யோகிக்குங்
கன்மமோ பூரணன்காண் காலமுமா காயமும்போ
லென்ன தொழிலையியற் றும்.

(இ-ள்.) ஆகாயம்போவார்க்கு மாவிகையோவாழ்கடலோ மீகாமன் போற்றிரியவேண்டுமோ" எ-து. ஆகாயகமனம்பண்ணுவோர்க் கோர் பற்றுக்கோடோ வவ்வாகாய மாழ்கடலோ விவ்வாழ்கடலிற் செல்லு மீகாமனைப்போற் பற்றுக்கோடு பற்றி யோர்துறைசார்தற்பொருட்டுத் திசைநாடி யிங்ஙனஞ்சுழல வவர்க்கு வேண்டுமோ வதுபோல?

"யோகிக்குங் கன்மமோபூரணன்காண் காலமுமா காயமும்போ லென்னதொழிலையியற்றும்" எ-து. சிவயோகி யானந்தபூரணனாகலிற் றேகந்தானை யிருந்துள்ள கிரியை யாளனைப்போ லவனுக்குங் கிரியை செய்யவேண்டுமோ.அஃதன்றிக் காலமு மாகாயமுந்தாமிருந்தபடியிருப்பத்தம்மிடத்திற்பிறபொருள்க டொழிற்படுவனவன்றித் தாம்போய்ச்சென் றியாதுதொழிலைச் செய்யு மதுபோற் பூரணனாகிய வச்சிவ

யோகி சந்நிதானத்திற் கருவிக டொழிற்படுவனவன்றித் தானொரு க ருவிகளோடுங் கூடித் தொழிற்செய்யான். எ-று.

ப-ம். ஆகாயகமனம் பண்ணுவோன் ஏனினைத்த தானத்தில் வாயு வினாற் சென்றிருத்தல்போலச் சிவயோகி தான்கருதிய வீட்டை யரு ளா லடைந்திருத்தலின் "ஆகாயம்போவார்க்கு மாவிகையோவென்று ம்; ஆழ்கடலிற்செல்லு மீகாமனுக்குக் கப்பலாகிய பற்றுக்கோடுபற்றி யோர்துறைக்கண் சார்தற்பொருட்டுத் திசைநாடிச்செல்லவேண்டு ம துபோலக் கிரியாவானுக்கோர்வடிவைச் சிவமாய்ப்பாவித் தோர் பத வியை யடைதற்பொருட் டதற்குவிதிமார்க்கமாயருச்சனையாதிகளைச் செய்யவேண்டுவதுபோ லவர்க்குச் செய்யவேண்டுவ தின்றாகலின் "மீகாமன்போற்றிரிய வேண்டுமோ" வென்றுங் கூறினார்.

சிவயோகி தானறிவாயு மானந்தஞ் சிவமாயுங்கண் டறிவாகிய தா னானந்தமாகியசிவத்திற்கலந்திருப்பன். கிரியாவான் றான்றேகமா யுஞ் சிவஞ் சிலையாதிகளாற் செய்யு மோர்வடிவாயுங்கண் டதனைத் தி ரிகரணங்களால் வழிப்பட் டினிமே லோர்பதவியை யடையக் கருதி யிருப்பனாகலி னிவ ரிருவருக்கு மிங்ஙன முவமைகூறினார். (ரு)

(கலி - சூ. அ - கை.)

இதுவுமது.

நெருப்பில் விறகுதியா நெய்யிற்பா றேன்று
வருக்க னிருளையடர்த் தாற்போன் - மருட்கெடுத்த
ஞானத்தின் பேர்கிரியை நாசமெனின் ஞானிகளு
மூனத் தொழிலுளைப்பா ரோ.

(இ-ள்.) நெருப்பில்விறகுதியாநெய்யிற்பாறேன்று வருக்கனிருளை யடர்த்தாற்போன் மருட்கெடுத்த ஞானத்தின்பேர்கிரியைநாசமெனி ன்" எ-து. நெருப்பின்கண் விறகு தோன்றுததுபோலு நெய்யிற் பா ல் தோன்றுததுபோலு மாதித்தன் பூதவிருளை யழித் தெழுந்தாற் போன் மும்மலமாகிய விருளையழித்தெழுந்த ஞான மவற்றினதுகா ரியமாகிய கிரியையுந்தோன்று தழிக்குமாகலி னிந்த ஞானத்தின்பே ர் கிரியா நாசமென்று வேதாகமங்கள் கூறுமெனின்?

"ஞானிகளு மூனத்தொழிலுளைப்பாரோ" எ-து. இந்தஞானத் தைப்பெற் றிதுவே வடிவாயிருந்துள்ள மெய்ஞ்ஞானிகளுங் குற்றம் பொருந்திய கிரியைத்தொழிலைச் செயவாரோ செய்யார். எ-று.

ப-ம். விறகையழித்தெழுந்த நெருப்பில் விறகும், பாலையழித்தெழுந்தநெய்யிற் பாலுந் தோன்றாததுபோற் கிரியை யழித்தெழுந்த ஞானத்திற் கிரியை தோன்றாதாகலி னிங்ஙன முவமைகூறினர்.

கிரியை பிறவித்துன்பத்துக் கேதுவாகலானு மதனாலான்மலாபமாகிய வானந்தமின்மையானு "மௌனத்தொழிலென்று,-முனைப்பாரோ,, வென்றுங் கூறினர். (௬)

(கவி - எ. அ - கை.)

கிரியை யநுஷ்டிக்குங்காலைத் தெய்வகதியாய் ஞானந் தோன்றிற்றாயினு மக்கிரியை மேலீட்டா லந்தஞானம் நிலைபெற்று நில்லாது மறையுமென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

கிரியையான் ஞானங் கிடைத்தாலுங் கேடு
கருவால் வருவதுபோற் காணு - மொருகோடி
சூரியரைக் கூரிருளா லேசுருட்ட னீரகில
காரணனைத் தீண்டநினைக் கை.

(இ-ள்.) கிரியையான்ஞானங் கிடைத்தாலுங்கேடு கருவால்வருவதுபோற்காணும்" எ-து. கிரியைத்தொழிலான் ஞானங் கிடைத்ததாயினு மந்தஞானத்திற்குக் கெர்ப்பத்தின்கண் ணுற்பத்தியாய் வரும்பொருள்கள்போற் கேடுண்டா மஃதன்றி?

"ஒருகோடிசூரியரைக் கூரிருளாலேசுருட்டனீரகில காரணனைத்தீண்டநினைக்கை" எ-து. ஒருகோடி சூரியரை மிகுந்தவிருளினாற் சுருட்டிப் பிடித்தல்போலுஞ் சடசித்துக்களாயுள்ள பிரபஞ்சங்களையெல்லாங் கடந்துநின் று மவற்றை நடத்துங் காரணனாகியிருந்த சிவனை நீ ருமதுகிரியையாற்றொடர்ந்து பற்றக்கருதுவது. எ-று.

ப-ம். சரிதை கிரியாயோகங்கள், ஞானசாரியரை யடைதற்குப் பக்குவமாக்குவனவன்றி ஞானத்தைக் கொடாதாயினு முன்விட்டகுறையாற் கிரியையநுஷ்டிக்குங்காலை யோர்கால் ஞானந் தோன்றிற்றாயினு மந்தஞானம் ஞானசாரியாாற் பெறாமையானுந் தான்செய்யுங்கிரியை மேலீட்டானு நிலைபெறாது மறையுமாகலிற் "கிரியையான்ஞானங் கிடைத்தாலு,,மென்றுங், "கருவால்வருவதுபோற் கேடுண்டாமென்றுங் கூறினர்.

ஞானத்தாற் சிவத்தைப் பெறவேண்டுமென்ப தறியாது மாயாகாரியமாகிய கிரியையா லதனைப் பெறத்தொடங்கலி"னொருகோடிசூரியரைக்கூரிருளாலேசுருட்ட,, லென்றுவமைகூறினர்.

கிரியையேதுவான் ஞானம் வந்ததாயினு நண்டு இப்பி முதலிய தம து கருவா னுசமாவனபோ லந்த ஞானமேலீட்டாற் கிரியைகெடுமெ ன்பது மாம். (எ)

(கவி - அ. அ - கை.)

கருவிகளையும் போதத்தையுங் கடந்துநின்ற சுகாதீதமுத்தியை யவற்றாற்செய்யுங் கிரியைகளா னடையக்கூடாதென் றித்திருவெண் பாவிற் கூறுகின்றார்.

சுகாதீதம் வேண்டிற் றொழில்செய்வோ மென்று
னகரோ துயில்வார் நடந்தோ - விகாரமெனச்
சாத்திரமும் பூசைச் சமாதிகளுஞ் சார்போதக்
கோத்திரங்காண் மாயக் குழாம்.

(இ-ள்.) சுகாதீதம்வேண்டிற் றொழில்செய்வோமென்று னகரோ துயில்வார்நடந்தோ" எ-து. ஆனந்தாதீதமாகிய வீடடைய விரும்பி னதனையறிவிக்கும் ஞானாசாரியனை யடைந் தருண்ஞானம்பெற் றிவ்வ ருண்ஞானத்தா னவ்வீ டடையாது விடுத்துக் கிரியைத்தொழிலான் அவ்வீ டடையலாமென்றுகருதி யக்கிரியைகளைச் செய்வோமெனின்; மெய்ஞ்ஞானிக ணகையாரோ? அஃதென்னெனி னித்திரைபண்ண வேண்டினோ ரோரிடத்துப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணுவத ன்றி யோரூர் வழிநடந்துசென்றோ நித்திரைபண்ணுவா ரஃதன்றி?

"விகாரமெனச்சாத்திரமும்பூசைச்சமாதிகளுஞ்சார்போதக்கோ த்திரங்காண்மாயக்குழாம்" எ-து. ஞானிகளோடு மாறுபட்டதுபோ ன்று நீ ரோதுஞ்சாத்திரமு மந்திரியாகபூசையி லோர்வடிவைத்தியா னித்து நீர்சமாதிகூடுதலு முமது சார்போதத்தின்கூட்டமு மாயை க்கூட்டமு மவைகாண். எ-று.

ப-ம். போதவொழிவி னின்ற சுகாதீதத்தை விரும்பினோர் கருவிக ளொழிந்தபோது மசைவறாத போத மவைகளோடு கூடித் தொழிற் செய்தா லப்போத நெய்சொரி தழல்போன் மேன்மேல் வளர்தலிற் "சுகாதீதம்வேண்டிற்றொழில்செய்வோமென்று"லென்றும், இத்தொ ழிலா லச்சுகாதீதம் பெறுத லரிதென்பதும் ஞானிக ளறிவாராகலி"ன கரோவென்றுங் கூறினர்.

தேகமசைந்து செல்லும்போது நித்திரைவரினு மவ்வசை வந்நி த்திரையை வரவொட்டாது தடுத்தல்போலக் கருவிகளசைந்து தொ

ழிற்செய்யும்போது தெய்வகதியா லானந்தநித்திரைவரினு மித்தொழி லந்நித்திரையை வரவொட்டாது தடுக்குமாகலினானும், தேக மசைவற வேரிடத்துக் கிடந்தபோது நித்திரை நன்றாய்வருவதுபோற் கருவிக டொழிற்செய்யா தடங்கியபோ தானந்தநித்திரை நன்றாய் வருமாகலினானும் "துயில்வார்நடந்தோ வென்றார்.

போதமொன்றாயினு மடுத்த கருவிகடோறு மதனதன் மயமாய்ச்சென்றிருத்தலிற் "சார்போதக்கோத்திரமென்று; பன்மையாகக் கூறினர். "மாயக்குழாம் என்றது; கருவிகளைப் போதமுங் கருவிகளுங் கூடிச்செய்தலா னிரண்டையுங்கூட்டிக்கூறினர். பாசஞானம் பசுஞானமென்றுமாம். (அ)

(கவி - கூ. அ - கை.)

ஞானக்கிரியைமாத்திர மேலைப்பயன்குறியாது செய்கவென்றித் திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தொழிலிறுதி தானே சுகவுதைய மென்றாற்
றொழிதலுயந் துக்கமெனச் சொல்லோம் - தொழில்செயினும்
வந்திப்போ கம்போல வுண்டுடுத்தன் மாத்திரமாய்ச்
சிந்திப்பா ரைப்பேணிச் செய்.

(இ-ள்.) தொழிலிறுதிதானேசுகவுதையமென்றாற்றொழிலுதயந்துக்கமெனச்சொல்லோம்" எ-து. இம்மையைக் குறித்துச்செய்யு முழவாதி யறுவகைத்தொழில்களு மறுமையைக்குறித்துச் செய்யுஞ் சரிதாதிதொழில்களும் வீட்டைக்குறித்துச்செய்யுங் கருவிகளை நியதிகளைவதாகிய தொழில்களு மதற்குமேல் ஞாதுரு ஞான ஞேயமாய் நிற்கும் போதவசைவுகளு மற்றவிடந்தானே சிவானந்தோதய மென்றுவேதாகமங்கள்கூறுமெனின்; அணுவளவேனுந் தொழிலுதயமானவிடத்துத் துன்பமுண்டாமென் றியாங்கூறுகிலோ மாண்டுத் துன்பமுண்டென்பது "தொழிலிறுதிதானே சுகவுதையமென்ற மொழி தானே விளக்கலின், ஆயி னீரிங்ஙனங் கூறியவாற்றாற் றொழில் சிறிதேனுஞ் செய்ய வேண்டாவோவெனின்?

"தொழில்செயினும்வந்திப்போகம்போல வுண்டுடுத்தன்மாத்திரமாய்ச் சிந்திப்பாரைப்பேணிச்செய்" எ-து. இன்றியமையாத சிற்சிலதொழில்களை நீ செய்யினு மினி மேலைக்கு வேண்டுமென் றொன்றையுங் கருதா துண்டுடுக்கும் வந்திப்போகம்போ லிம்மை மறுமை

ப்போகங்களி லொன்றையுஞ் சிந்தியாது காடி கூழேனுங் கிடைத்த தையுண்டலுங் கரித்துணிகந்தை யாதேனுங் கிடைத்ததை யுடுத்தலு மாகிய விம்மாத்திரமே சிந்திக்கும் பெரியோரைப்பார்த் தவரைப் போல நீயுஞ்செய்தி. எ-று.

ப-ம். ஓர்தொழிலுஞ் செய்யாது நிழற்கண்ணிருப்பது சுகமென்று லெழுந்து வெய்யலிற்சென்று தொழிற்செய்த றுன்பமென்பது சொல்லவேண்டுவ தின்றாகலிற் "றொழிலுதயந் துன்பமெனச் சொல்லோ,, மென்றார்.

வந்திசுகத்தைச் சுதரின்மையான் மேலைக் கொன்றையுங் குறியா ததுபோன் ஞானிகட் கிகபரங்களெல்லாம் பொய்யாகலி னிவருமொன்றினையுங் குறியாராகலினுனு மவ ளுண் டுடுத்தன்மாத்திரமாயிருத் தல்போ லிவரு "முண்டுடுத்தன்மாத்திரமா,, யிருத்தலினுனு மிங்ஙன முவமைகூறினார்.

சிந்திப்பாரைப்பேணிச்செய் யென்பது; நீ தொழில்செய்தியாயினும் ஞானிக ணடையைப்பார்த் தவர்செய்யுந் தொழின்மாத்திர மேயன்றி யதிகஞ் செய்யற்கவென்பதெனக் கொள்க. (கூ)

(கவி - ய. அ - கை.)

போதமிறந்துநிற்பதே நிட்டையென்றும் போதத்தோடுங்கூடிச்செய்வது நிட்டையன்றென்று மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சும்மா திருக்கவைத்த சூத்திரமாஞ் சாத்திரத்தை
விம்மாக் கதறுவதும் வேலைகளுந் - தம்மறிவா
னீட்டிப் பிடித்திருக்கு நிட்டைகளு ஞானிகண்முண்
காட்டும் பரியாச கம்.

(இ-ள்.) சும்மாதிருக்கவைத்த சூத்திரமாஞ் சாத்திரத்தை விம்மாக் கதறுவதும் வேலைகளும் தம்மறிவா னீட்டிப் பிடித்திருக்கு நிட்டைகளும்" எ-து. தற்போதத்தை யொழித் தானந்த மவுனமாயிருக்க ஓதி வைத்த வுபாயமாகிய சாத்திரங்களை விம்மியழு தோதலும் நீராடலாதி கிரியைகளைச்செய்தலுந் தமது போதத்தா லோர்வடிவைத் தியானித்துடலை நீட்டிப்பிடித் தாசனங்கட்டியிருக்குநிட்டைகளுமாகிய விவையெல்லாம்?

"ஞானிகண்முன்காட்டும்பரியாசகம்" எ-து. இவைக ளொன்று மின்றி மவுனானந்தமாயிருக்கு மெய்ஞ்ஞானிகண் முன்னர்க் காட்டப் பட்ட பரியாசகமாம். எ-று.

ப-ம். வேதாகமவழிகூறு ஞான சாத்திரங்களெல்லாந் தற்போதத்தையொழித்துச் சிவமாயிருத்தற் குபாயங்கூறுமாகலிற் "சும்மாதிருக்கவைத்த சூத்திரமாஞ்சாத்திரத்தை யென்றும்,ஞானசாத்திரத்தி னருத்தங்களை நாடிக் கலுழ்தலான் விம்மாவென்றும், அவ்வருத்தப்படி நில்லாமையாற் "கதறுவதென்றும், கிரியைக ளியாவுமறிவன் றாகலினானு முலகர் வேலையோ டிதுவுமோர் வேலையாகலினாலும் வேலைகளென்றும்; தற்போதத்தாற் கூடு நிட்டை ஞானநிட்டை யன்மையா "னீட்டுப்பிடித்திருக்கு நிட்டை,,யென்றும், இவையெல்லாம் ஞானிகட்குப்பரியாசகமாயிருத்தலிற் பரியாசகமென்றுகூறினார். "தம்மறிவானீட்டிப்பிடித்திருக்கு,,மென்றமையா னருளறிவா னிட்டைகூடுத னிட்டையென்ப தாயிற்று. (௰)

(கவி - ௰௧. அ - கை.)

அபரஞானத்தால் வீடடையக்கூடாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

குடையுஞ் செருப்புங் கொடுநடப்ப தல்லாற்
படியும் விசும்பும பரப்பி - யிடையாடு
மாத்திரம்போ லேசமைய வாதமனம் போதாத
சாத்திரங்கற் றார்வீடுற் றார்.

(இ-ள்.) குடையுஞ்செருப்புங்கொடுநடப்பதல்லாற் படியும்விசும்பும்பரப்பி யிடையாடு மாத்திரம்போலே" எ-து. ஓரூருக்குச் செல்லவேண்டினோ னுடம்பின் மழை வெயிலாதிகள்படாது கையிற் குடையும்பிடித்துக்கொண்டு காலிற் கன்முள்மண்டாக்காது செருப்புந்தொட்டுக்கொண்டு நடப்பதேயன்றி யாகாயமெங்குங் குடைபரப்பிப் பூமியெங்குந் தோல்பரப்பி யவற்றிற்கிடையேசெல்லுமாத்திரம்போலே?

"சமையவாதமனம்போதாத சாத்திரங்கற்றார்வீடுற்றார்" எ-து. சமயிக ளனைவராகக் கூறுந் தருக்கவாதங்களையு மத்தருக்கவாதத்தாலனந்தபேதமாயத்தோற்று மனோவுத்திகளையு மளவுகூறினு மவ்வளவு போதாத சாத்திரங்களைக்கற்று வீடடைந்தா ரியாவர். எ-று.

ப-ம். ஒரூ ரடையக்கருதினோன் மேலுக்குங்காலுக்குந் துன்பமணுகாவகை குடையுஞ் செருப்பும்பிடித் திட்டுக்கொண்டுசென் றவ்வூ ரடைவதுபோல்,வீடடையக்கருதினோ னாசாரியார்கூறு முபதேசமொழிகளு மவர்கொடுக்கு மோர்சாத்திரமுங் கொண் டவற்றி னருத்தப்

படி திரிகரணங்களா லொன்றையும் வருந்திச்செய்யாது தற்போதத்தையே யொழித் தவ்வீட்டை யடையாதளவிடப்படாத வாகாயத்தினும் பூமியினுங் குடையுந்தோலும்பரப்பி நடுவிடை செல்லத்தொடங்குவோனைப்போலுந் தருக்கவாதங்களையு மவ்வாதத்தாலெழு மனோவுத்திகளையு மளவிடினு மளவிடப்படாத சாத்திரங்களைக்கற்று நீர்வீட்டையத் தொடங்குவதென்பதுஞ் சிலகற்பினு மதனல் வீடு கூடாதென்பது மிதனாற்காண்க. சாத்திரங்களை மிகவுங் கற்றோர்க்குத் தருக்கவாதமு மனோவுத்தியு மிகவும் விரியுமாகலிற் சாத்திரங்கட் களவு கூறுவார் வேறுகூறா தவற்றையே யளவுகூறினர். வாதமென்பது மனமென்பது மாகுபெயர். (௰௧)

(கலி - ௰௨. அ - கை.)

அருளையும் போதத்தையுங் கடந்துநின்ற சிவம் போதத்திற் ககப்படாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அறிவாலே பற்றி யனுபவித்து விட்ட
கிறியால் வருமோ கெடுவீ - ரறிவாய்நீ
ராம்போ தறிவிப்பான் றானு யவையிரண்டும்
போம்போதும் வாராப் பொருள்.

(இ-ள்.) அறிவாலேபற்றியனுபவித்துவிட்ட கிறியால்வருமோகெடுவீர்" எ-து. தற்போதவறிவா லொன்றைப் பாவித்துப் பற்றி யிஃதின்ன மிருப்பதென் றப்போதத்தாலநுபவித்தறிந்து மீட்டு மப்பாவனையைவிடுத்த பொய்யினல் வருமோ கெடுவீர்காள்?

"அறிவாய்நீ ராம்போதறிவிப்பான் றானுயவையிரண்டும் போம்போதும்வாராப்பொருள்" எ-து. கருவிகண் முப்பத்தாறையு நீங்கியவற்றின்முடிவினின்ற வறிவியாமென் றவ்வறிவாய் நீராகும்போ துமமையுந் தன்னையு மறிவிப்பான்றானுகி யந்த வறியுமறிவு மறிவிக்கு மறிவுமாகிய விவையிரண்டு நீங்கியபோதும்வாராத சிவனுகிய மெய்ப்பொருள். எ-று.

ப-ம். பாவனையிற்றோன்றும்வடிவு மாயை. அவ்வடிவிலிதம்பிறத்தல்கருமம். அவ்வடிவை மெய்யாகக்கருதப்பண்ணுவதாணவம். ஆகலிற் "கிறியால்வருமோகெடுவீ" ரென்றார். அருளுமான்மபோதமு நீங்கியபோ தான்மா சிவமயமாயிருக்கு மாகலி னவை யிரண்டும் "போம்போதும் வாராப்பொரு" ளென்றார். (௰௨)

(கவி - ௰௩. அ - கை.)

தற்போத நாசத்தை விரும்பினோர்க்கு மெய்ப்பொருள் கிடைக்குமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அழிப்பே யவனுக்கு மிச்சை யதுவாறு
விழப்பே யுனக்கிச்சை யென்று - யிழப்பை
யறியா ததுகா ணறியாவஞ் ஞானங்
கிறிகேளுன் போதங் கெடல்.

(இ-ள்.) அழிப்பேயவனுக்கு மிச்சையதுவாறு விழப்பே யுனக்கிச்சையென்னுய்'' எ-து. உன்போதத்தை யொழிப்பதே சிவனுக்கு மிச்சை யவன திச்சாசத்தித்தொழிலு மதுவாறு லவரதிச்சைபோ லுன் போதத்தை யொழிப்பதேயுனக்கு மிச்சையாக்கருதுவாய். நீவீடடைய விரும்பினையெனின்; ஆயி னீரிங்ஙனங் கூறியவாற்றா லஞ்ஞானங் கெடுதல் வீடன்றென்பதும் போதங்கெடுதல் வீடென்பதுமாயிற் றினி அஞ்ஞானமாவதியாதெனின்;

''இழப்பையறியாததுகா ணறியாவஞ்ஞானங் கிறிகேளுன்போதங்கெடல்,, எ-து. அப்போதவிழப்பை யறியாது கிரியையாதிகளை நீ செய்தலே யறியாமையாகியவஞ்ஞானமென்றறிதியாயி னப்போத விழப்பை யறிதற் குபாய மெங்ஙனமெனின்; பொய்யனே யினியுன்போதங்கெடுதற் குபாயஞ் சொல்லுது நீகேட்டி. எ-று.

ப.ம். சிவன் பெத்தத்திசையி லுடலையொழித்து மாயையில்வைத் திளப்பாற்றுதல்போன் முத்தித்திசையிற் போதத்தையொழித் தானந்தக் கடலில்வைத் திளப்பாற்றுவனுயினு மவனொழிக்கு மிச்சைபோற் றன்னையிழக்கு மிச்சைவைத்த வான்ம போதத்தையொழிப்பனன்றி யப்போதத்தை யொழிக்கு மிச்சையின்றிய வான்ம போதத்தை யொழியானுகலி ''னிழப்பேயுனக்கிக்சையென்று' யென்றார். (௰௩)

(கவி - ௰௪. அ - கை.)

போதமடக்குதற் குபாய மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மருந்து பிணியோடே மாண்டு புகைதீ
யெரிந்த விறகோ டிறக்கில் - விரிந்த

தொழின்மனத்தின் மட்டேநீ தோயுமதென் னாடி
நிழல்புதைத்தாற் போலெதிர்போய் நில்.

(இ-ள்.) மருந்துபிணியோடே மாண்டுபுகைதீ யெரிந்தவிறகோ டி-
றக்கில்,, எ-து. பிணிமாண்டபோ தது நீங்கற்பொருட் டுண்ட மருந்
து மப்பிணியோடு மாண்டுபோமெனி னெரிந்த விறகிறந்தா லவ்வி
றகோடும் புகையுந் தீயுமிறக்குமெனி னவைபோ லுன்போதமிறந்தா
லப்போதத்தோடுங் கிரியை யிறக்குமென்றுங் கிரியை யிறந்தா லத
னோடு கருவியும் போதமு மிறக்குமென்று மறியா துன் போதத்தாற்
கிரியை செயயாநின்றனே?

"விரிந்ததொழின்மனத்தின்மட்டேநீ தோயுமதென்னாடி நிழல் பு
தைத்தாற்போலெதிர்போய்நில்,, எ-து. நானுவாய்விரிந்த வுனதுகிரி
யைத்தொழிலின்கண் மனத்தினளவேயன்றி வேறின்றாகலிற் கருவிகள்
முப்பத்தாறையும் போதத்தையுங் கடந்துநின்ற சிவத்தைக் கிரியை
யேதுவாகக்கொண் டப்போதத்தானாடி யச்சிவத்தை யடையத்தொட
ங்குமுன் கருத்தென்னை; நீ யக்கருவிகளை நியதிகளாந் தவற்றின்முடி
வினின்ற வுன்னை யருளாலறிந்து பெரியநிழலிற் சிறியநிழன்மறைந்தா
ற்போ னீ யத்திருவருளின்மறைந் ததிரீடெல்லாம்போய் நிற்றி. இ
ங்ஙன நிற்றியெனிற் போதமொழித்தற் குபாயமுஞ் சிவத்தைப்பெறு
தற் குபாயமு மிதுவேயாம். எ-று.

ப-ம். போதந்தோன்றியபோது கிரியைதோன்று மப்போதஞ் சிவ
த்திலிறந்தபோ தப்போதத்தோடுங் கிரியை யிறக்குமாகலிற் போத
த்தைப் பிணியாகவுங் கிரியையை மருந்தாகவும் வைத்துக்கூறினார்.

விறகெவ்வளவிருந்த தவ்வளவும் புகையுந்தீயு மிறவா தவ்விறகி
றந்தபோ தததனுடனே புகையுந்தீயுமிறக்கு மவைபோற் கிரியை யெ
வ்வளவிருந்த தவ்வளவுங் கருவிகளும் போதமுமிறவா தக்கிரியை சி
றிதுந்தோன்றா திறப்பி னதனோடு மிக்கருவிகளும் போதமு மிறக்கு
மாகலின் "புகைதீயெரிந்த விறகோடிறக்கி" னென்றார்.

கிரியை யிறந்தபோது கருவிகளும் போதமுமிறக்குமென்ற தெ
ங்ஙனமெனிற்; கிரியையிருந்தபோது போதம் வளர்வதேயன்றி யிற
வா தக்கிரியை யிறந்தாற் போதத்திற் கசைவின்றிக் கெடு மிப்போத
ங்கெடவே யிதனைத் தொடர்ந்துநின்ற கருவிகளுங்கெடுமாகலி னிங்ங
னமென் றறிதி.

பெரியநிழலிற் சிறியநிழற் புறம்போகா தடங்கின்மறையு மது போற் பூரணமாகிய சிவபோதத்திற் கிஞ்சிக்கியமாகிய வான்மபோத மெதிரிட்டசையா தடங்கி யதின் மறையுமாகலி "னிழல்புதைத்தாற் போ" லென்றார். நீங்கிநின்ற கருவிகளையு மடைந்துநின்ற நிருவிகளை யுமெதிரிடாதுநிற்கவேண்டுமாகலி"னெதிர்போய்நில் லென்றார (௩௪)

(கலி - ௰௫. அ - கை.)

கருவிக ணீங்குதற் குபாயமு மவற்றைநீக்கித் தன்னையருளாலறி ந் தருட்பூரணம் விளங்கியபோது போதஞ்சீவியா தருளின் மறைந் துநிற்றற் குபாயமு மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

காணு மறிவுநீ காட்டறிவு நாமவற்றைக்
காணக் கழலுங் கழற்றியிலே - நாணி
நமைத்திரும்பிப் பாராதே நான்றானென் னாதே
யமிழ்த்துகர கம்போனிற் பாய்.

(இ-ள்.) காணுமறிவுநீகாட்டறிவுநாமவற்றைக் காணக்கழலுங்கழற் றியிலே" எ-து. கருவிகளை யிதுவிதுவென்று காணு மறிவுநீ யவற்றை யுனதுயிர்க்குயிராயிருந் துனக்குக்காட்டு மறிவு நாம். அக்கருவுகளின து குணங்களை நீகாணக்காண வவைகளெல்லா முனக் கன்னியமாய் நீங்குநீக்கத்தி லவற்றின் முடிவினின்ற வுன்னைக்கண்டபின்னர்?

"நாணிநமைத்திரும்பிப்பாராதேநான்றானென்னாதேயமிழ்த்து கரகம்போனிற்பாய்" எ-து. அக்கருவிகளை பறிந்து நீங்கவு மென்னையு ள்ளபடியறியவு மியான்காணு மறிவாகலி னெனக்குச் சுதந்திரமின்றெ ன்று நீநாணி யெனக்குக்காட்டு மறிவொன்றுளதென் றெம்மை யெ திரிட்டுப்பாராதே, யங்ஙனங்காணுமறிவுங் காட்டு மறிவுமாயிருந்தோ மாயினுங் கண்ணொளியு மாதித்தனொளியும் பிறிபடாததுபோற் பிறி படாதிருப்போமாகலி னஃதன்றி யிங்ஙனம் பிறிப்டாதிருந்த பரிபூர ணத்தை நான்றானென்று கருதாதே கடலி லமிழ்த்திய கரகஞ் சலத் தை யுள்ளேமொண் டக்கடலின் மறைந்தாற்போ னீயு மப்பரிபூரண த்துக்குள்ளே யமிழ்ந்தி நீதோன்றாததனுண் மறைந்துநிற்பாய். எ-று.

ப-ம். கருவிகளினது குணங்களை யெதிரிட்டறியாதபோ தவைகளா ன்மாவிற் கன்னியமாய் நீங்காதாகலிற்,"காணக்கழலு"மென்றார். கருவி களையெல்லாநீங்கி யான்மா வருள்வடிவாயபோ தவ்வருட் பூரணமெ ல்லாந்தானாய்த்தோற்றுமாகலி,"னான்றானென்னாதே" யென்றார்.(௩௫)

(கலி - ௰௬. அ - கை)

போதத்தாற்செய்யுங் கிரியை முத்திக்கேதுவன்றென்பதும், போதத்தைச் சிவனுக் கூணாகக்கொடுத்து நிற்றலே யேதுவென்பது மித் திருவெண்பாவிற் கூறுகின்றார்.

வதுவைச் சடங்கதனை மைதுனமாக் கொண்ட
புதுமைச் சிவானந்தம் போதும் - பதையா
விளக்கொளியி லெண்ணெய் வியாபியா னாற்போற்
கொளக்கொடுத்தல் சத்தியமாக் கொள்.

(இ-ள்.) வதுவைச்சடங்கதனை மைதுனமாக்கொண்ட புதுமைச் சிவானந்தம்போதும்" எ-து. தன்புருடனைக்கூடி யின்புறுதற் கேதுவாய்ச்செய்யுங் கலியாணச் சடங்கினை யவனோடுங்கூடி யின்புறுதலாகக் கருதிக்கொண்ட பேதைப் பெண்போற் சிவனாகிய புருடனை ஆன்ம நாயகி கூடி யின்புறுதற் கேதுவாச்செய்யுங் கிரியைத்தொழிலை யவனோடுங்கூடி நீ யின்புறுதலாகக் கருதிக்கொண்ட விந்தப்புதுமையாகிய சிவானந்த மமையு மினிக்கிரியையைச் சிவானந்தமாகக் கருதுங் கருத்தைவிட்டு?

"பதையாவிளக்கொளியிலெண்ணெய் வியாபியானாற்போற்கொளக்கொடுத்தல் சத்தியமாக்கொள்" எ-து. அசையாது நின்று விளக்கொளிக்குள்ளெண்ணெய் வியாபியானாற்போ னீசிவத்தில் வியாபியாயசைவறநின் றதுவிழுங்கிக்கொள்ள வுன்னைக்கொடுத்த லுண்மையாயுள்ள முத்தியென் றறிந்துகொள்ளுதி. எ-று.

ப-ம். விளக்கொளியி லெண்ணெய் வியாபித்துக்கொண்டுநிற்க விவ் வெண்ணெயை யவ்வொளி விழுங்கித் தான் பிரகாசித்தல்போலச்சிவபூரணத்தி லான்மா வியாபித் தசைவறநிற்கவே யச்சிவபூரண மிவ்வான்மாவை விழுங்கிக்கொண்டு தான் பிரகாசிக்கு மாகலின் "விளக்கொளியிலெண்ணெய் வியாபியானாற்போற் கொளக்கொடுத்த" லென்றார். தன்னைக்கொடுப்பது சத்தியமெனவே தன்னாற்செய்யுங்கிரியை யசத்தியமென்பது தானேயாயிற்று. (௰௬)

நான்காவது - கிரியைக்கழற்றி

முற்றிற்று.

ஆ திருவெண்பா-௱௩௨.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது

சரிதைக்கழற்றி.

(கவி - க. அ - கை.)

வீடடையத்தொடங்கினு ரறியாமையா னித்தொழிலைச்செய்துவரு ந்துகின்று ரந்தோவென்றிரங்குதலித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

நடந்துங் குளித்துமிது நல்லநா ளூணை
விடுந்தொழிலான் மெய்வருந்தி வீடென் - றடங்காதார்
என்றுசுக மேயிருப்ப ரிப்போதே துக்கமிவர்க்
கென்றெதிர்போ யின்பமுதிக் கும்.

(இ-ள்.) நடந்துங் குளித்துமிது நல்லநாளூணை விடுந்தொழிலான் மெய்வருந்திவீடென் றடங்காதார்" எ-து. பூப்பிரதெக்கணமாய் நட ந்துசென்றுங் கங்கைமுதலிய தீர்த்தங்களாடியு மிதுநல்ல நாளென்ன வூணைவிடுத்து மிவைமுதலியன செய்யுஞ் சரிதைத்தொழிலான் மெ ய்வருந்தி யிங்ஙனஞ் செய்வனவே வீடென்றுதுணிந்து தற்போதமட ங்காதார் ?

"என்றுசுகமேயிருப்ப ரிப்போதே துக்கமிவர்க் கென்றெதிர்போ யின்பமுதிக்கும்" எ-து. யெக்கால மோர்தொழிலையுஞ் செய்யாது சு கமேயிருப்ப ரித்தொழில்களா ணிவர்க் கிம்மைக்கண்ணேதுன்ப மித் தொழில்வாசனை மறுமைக்கண்ணுந் தொடருமாதலி னெக்காலந் தா னென்றுஞ் சிவமென்று மெதிரிடும் போதமொழிந் தானந்தந் தோ ன்றும். எ-று.

ப-ம். தாங்குறித்தது வீட்டின்பமாயிருந்து மதனைப் பெறுதற்கே துவல்லாத சரிதைத்தொழிலை மிகவு மெய்வருந்திச்செய்தலா னவ்வி ன்பத்தைப் பெறுதற் கேதுவாய்த் தற்போதத்தையு மெளிதிலொழி த் ததனை யெக்காலம் பெறுவரோவென்னுங் காருண்ணியத்தா "லெ ன்றெதிர்போ யின்பமுதிக்கு" மென்றார். (க)

(கவி - உ. அ - கை.)

அவர்கேட்ட வுபதேசத்தைமறுத் தித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உடலா லுழைத்தா லுடலொழியு மென்று
கெடுவீ ரிதையெங்கே கேட்டீர் - உடலே
நடையா டியபிணம்போ னான்போய்த் திரியக்
கிடையாதோ வென்றுகே ளீர்.

(இ-ள்) உடலாலுழைத்தா லுடலொழியுமென்று கெடுவீ ரிதையெங்கேகேட்டீர்" எ-து. உடலால்வருந்தி யாத்திரை சேறன் முதலிய விச்சரிதைத் தொழிலைச்செய்தாற் பிறப்பு நீங்குமென்று கெடுவீர்காளிந்த வுபதேசத்தை யெந்தக் குருவினிடத்துக் கேட்டீர்?

"உடலேநடையாடிய பிணம்போனான் போய்த்திரியக் கிடையாதோவென்றுகேளீர்" எ-து. இந்தவுடம்பானே நடையாடியபிணம்போலத் தற்போதங்கெட்டு நிலத்தின்கண் ணுலாவவெமக்குண்டாகாதோ வென்று ஞானசாரியனைக்கேளாத நீங்கள். எ-று.

ப-ம். ஞானசாரியனையடைந் தனுக்கிரகம்பெற்ற மெய்ஞ்ஞானிகட்குக் கருவிகண் முப்பத்தாறுந் தற்போதமுங்கெடலா னக்கருவிச்சேட்டையும் போதச்சேட்டையு மின்றுமாகலி னவரது திருமேனி யுள்ளும் புறனும் வறுங்கடத் தாகாயம்போற் சிவமே நிறைந்திருக்கு மவர் நிலத்திற் சரிக்கும்போது மக்கட மாகாயத்திற் செல்வதுபோற் றோற்றுமாகலி "னடையாடியபிணம்போ னான்போய்த்திரிய" வென்றார்.

"கேளீ ரெங்கேகேட்டீரெனமுடிகக வீடடையத்தொடங்கி யிங்ஙனஞ்செய்தலாற் "கெடுவீ ரென்றார். (உ)

(கவி - ௩. அ - கை.)

ஞானசாரியராலன்றி யான்மாக்கள் சுதந்திரத்தால் வீடடையக் கூடாதென்று சுதந்திரவீன மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

எந்தவூர் நீரென்று லிப்போ திருந்துநாம்
வந்தவூர் தன்னை மறந்தோமே - லந்தவூர்க்
கின்றுநாம் போம்வழியே தென்னிலுமக் கேழுலகு
மொன்றுமே லொன்றுதோன் றும்.

(இ-ள்.) எந்தவூர்நீரென்று லிப்போதிருந்துநாம் வந்தவூர் தன்னை மறந்தோமேல்" எ-து. இயாமிந்த வூரிலிருந்து மற்றோரூருக்குச்சென்றபோ தவ்வூரிலிருந்தா னொருவ னெந்தவூர் நீரென்றெம்மைக்கே

ட்டா லிப்பொழு திருந்துவந்த வூர்தன்னை யவனுக் கின்னவூரென்று சொல்ல மறந்தோமெனின்;

"அந்தவூர்க்கின்றுநாம்போம்வழியே தென்னிலுமக் கேழுலகு மொன்றுபோலொன்றுதோன்றும்" எ-து. முன்னிருந்து வந்தவூரு க் கிப்போது நாம்போதற்கு வழி யாதென்று நீர் நாடி னுமக்கேழுல கு மொன்றுபோற்றோன்றி யந்தவூருக்குச்செல்லும் வழிபோன் மற் றோரூருக்குச் செல்லும்வழி தோன்றுமெனி னிங்ஙனங் கேட்டோ னுக் கூர்ப்பெயருஞ்சொல்ல மறந் தவ்வூருக்குச் செல்லும் வழியுந் தெரியாது மயங்கிய விப்போதங்கொண்டோ திரிகரணங்களையுங் கட ந்துநின்ற பூரணசிவத்தை நீரடையத் தொடங்கினீர். எ-று.

ப-ம். அவர்க்குத் தம்மைப்போ லிவருந்தோற்றலா னவனையிவர் தம்மோடுங்கூட்டி "மறந்தோமே" லென்றார். ஊர்ப்பெயர் சொல்ல மறந்துபோவது தூலபுத்தியாற்றெரியா தியா மங்ஙனமறப்ப திலமெ ன்றவனைத் தம்மைவிடப் பிரித்துநோக்கி உமக்கேழுலகு மொன்று போ லொன்றுதோன்றுமெனத் தூலமாகிய வழித்திகைப்பையெடுத் துக்காட்டினார்.

நெறிக்கட் டிசைதப்பியபோது முன்போ னல்குதிசையும் பிரி ந்துதோன்று தாகலி "னேழுலகுமொன்றுபோ" லென்றார். (ந)

(கவி - ச. அ - கை.)

வேடத்தான் மிகவுஞ்சிறப்புளராயினு மகத்துஞான மிலரெனிற் சிறப்பில ரென்பதும் வேடமியாது மிலராயினு மகத்துஞான முள் ளார் சிறப்புளரென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லுங்
காட்டுவது ஞானக் களவுகாண் - தேட்டமற்றோன்
பூரணன்காண் சிற்றறிவன் பொய்ப்பாச மென்றறிந்தார்க்
கோர்வடிவும் வார்த்தையுமுண் டோ.

(இ-ள்.) வெட்டியுந்தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லுங் கா ட்டுவதுஞானக்களவுகாண்" எ-து. காவிவேட்டியு முருத்திராக்கத் தா ழ்வடமு மெய்முழுதும்பூசும் வெண்ணீறு மடைக்காய் தின்னாத வெ ண்பல்லு மிவைமுதலிய சிவவேடங்களை மெய்யிற்காட்டுவது ஞான த்திருட்டுக்காண்?

"தேட்டமற்றோன்பூரணன்காண் சிற்றறிவன்பொய்ப்பாசமென்றறிந்தார்க் கோர்வடிவும்வார்த்தையுமுண்டோ,, எ-து. ஓர்பொருட்கண்ணும்விருப்ப மற்றோனாகிய சிவன் பரிபூரணன் சீவன் சிற்றறிவன் பாசம் பொய்யென் றறிந்தஞானிகட் கோர்சமையவேடமுஞ் சமைய வபிமான வார்த்தையு முளவோவில. எ-று.

ப-ம். அகத்து ஞானமின்றிப் புறத்து வேடத்தானும் வசனத்தானும் ஞானிபோற் காட்டினமையான்"ஞானக்களவுகா" ணென்றார்.

அகத்து ஞானமும் புறத்து வேடமு முளவெனின்;ஞானக்களவன்றாயிற்று. சிவ மனுத்திரண் முதலிய பொருள்கட்கெல்லா முட்புறனாகிய பரிபூரண வறிவாகலி னதற் கோர்சமையமில்லை. சிற்றறிவு பொய்யாகிய பாசத்தைவிட்டு நீங்கி யப்பரிபூரண வறிவோடுங் கலந்தபோ தப்பரிபூரண வறிவாய்நிற்குமன்றி யதுவிதுவென்னும் பகுப்பில்லையாகலி "னோர்வடிவும் வார்த்தையுமுண்டோ" வென்றார். (ச)

(கவி - ரு. அ - கை.)

ஞானநிட்டையன்மையா னவரதுநிட்டையைமறுத் தித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

கல்வியாய்ப் புத்தகமாய்க் காவிகடுக் குட்கட்டாய்ப்
பல்லின்வெளுப் பொத்த பசுமார்க்க - மெல்லை
கழன்றறியா னத்திற் கண்சிமிட்டு மாங்காண்
சுழன்றபெரு மாயைத் தொழில்.

(இ-ள்.) கல்வியாய்ப்புத்தகமாய்க் காவிகடுக்குட்கட்டாய்ப் பல்லின் வெளுப்பொத்த பசுமார்க்கம்" எ-து. தாங்கற்ற கல்விகளைப் பேசுவதாய்ப் புத்தகங்கையிற்கொள்வதாய்க் காவிவேட்டியுடுப்பதாய்த் திருமேனிக்கடுக்கன் காதிலேயிடுவதாய்க் கண்டத்திற் கெவுடங்கட்டுவதாய்ப் பேச்சிற்கும் வேடத்திற்கு மொப்ப மேற்பல் வெளுப்புமொத்திருந்த பசுஞான நெறியினையுடையார்?

"எல்லைகழன்றறியானத்திற்கண்சிமிட்டுமொங்காண் சுழன்றபெருமாயைத்தொழில்,, எ-து. பிருதிவிமுத னாதமீறென் றளவு கூறப்பட்டகருவிகண் முப்பத்தாறையுங்கழன்ற சிவத்தியானத்தை யுடையனைப்போலக் கண்மேற்செருகி யாசனங் கட்டிக்கொண்டிருப்ப ரிவ ரிங்ஙன மிருப்பதாங்காண் கறங்குபோற் சுழலாநின்றபெரியமாயையினது தொழிலாவது. எ-று.

ப-ம். ஞானமின்றி வேடங்கொண்டோர் வேட்தாரிகளோடொப்பாகலிற் "பசுமார்க்க" மென்றார். அகத்துப் பரிபூரண ஞானமின்றிக் கண்சிமிட்டிப் பத் திந்தியங்களையு மப்போதடக்கி யாசனங்கட்டி யிருப்போர்க்கு முன்னர் ஞானேந்தியங்களா லறிந்து கன்மேந்தியங்களாற் றொழில்செய்யுமன மப்பத்திந்தியங்களு மடங்கலினவற்றின் வாசனையோடு முன்னரேறிய வாசனையோடு முள்ளேசுழலுமன்றி யடங்காதாகலிற் "சுழன்றபெருமாயைத் தொழில்" என்றார். (ரு)

(கவி - கூ. அ - கை.)

ஞானமின்றி ஞானுசாரமாத்திரஞ் செய்வோர்க்குப் பிறப்பின்பமேயன்றி வீட்டின்ப மின்றென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

ஞானக் கிரியை நடிப்பவர்க்கு நாடோறும்
போனத் தளவே புசிப்பன்றி - யேனுந்
துறவா யவாவறுத்து மெய்யுணர்ந்த தூய
வறிவார்க் கறியாவின் பம்.

(இ-ள்.) ஞானக்கிரியைநடிப்பவர்க்குநாடோறும் போனத்தளவேபுசிப்பன்றி" எ-து. அகத்துஞானமின்றிப் புறத்து ஞானுசாரமாய் நடிப்பவர்க் கெக்காலமு மன்னபானத்தளவு வரும் விடயானந்தானுபவமன்றி?

"துறவாயவாவறுத்துமெய்யுணர்ந்ததூய வறிவார்க்கறியாவின்பமேனும்" எ-து. துறவினையுடையராகித் துறந்தவப்பொருள்கண் மேன் முன்னர் வாசனையாலேறு மவாவினைமறுத்து மெய்ப்பொருளை யுணர்ந்த நிருமலஞானிகட்குந் தோன்றாத சொரூபானந்தானுபவ மேனுண்டாம். எ-று.

ப-ம். இவர்செய்யுமாசாரத்தைப் பிறர்கண்டு பெரியரெனப் போனகங்கொடுத்தலிற் "போனத்தளவே புசிப்பன்றி" யென்றார். பேரின்பம் போதநாசத்திற்றோன்றுமதற் றோன்றலா "வறிவார்க்கறியாவின்ப" மென்று, மிவ்வின்பம் பெறுதற்கேதுவாய ஞானமின்மையா "லேனு" மென்றுங் கூறினர்.

துறவுபுறப்பற்று நீங்குதல். அவா வறுத்த லகப்பற்று நீங்குதல். அவ் விருவகைப்பற்று நீங்கவே சகலகேவலங்களு நீங்கு மிவை நீங்

கவே மெய்யுணர்வு தோன்றுமாகலிற் "றுறவாயவாவறுத்து மெய்யு ணர்ந்ததுாய வறிவா" ரென்றார். (௬)

(கவி - எ. அ - கை.)

இந்தவின்ப மியாவரா லறியக்கூடுமென் றிரங்கிக்கேட்ட மாணு க்கனை நோக்கி விடை யித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

இன்பே யறிவுக் கிடம்புள்ளி னைந்ததுபோற்
றுன்பே யணுப்பொருப்பாய்த் துக்கிக்கு - நன்குணத்தாற்
பேரின்புக் கிச்சை பிறந்ததினிக் கேளுனக்குப்
பேரின்பந் தேடிப் பெறும்.

(இ-ள்.) இன்பேயறிவுக்கிடம்,, எ-து. இந்தப்பேரின்பம் பரிபூரண மாகலி னிவ்வின்பமே யான்மாவிருத்தற் கிடம். ஆனு லவ்வின்ப மிங் ஙன மிருக்குமெனி னிதனையா னிப்போ தடையவேண்டு மினிப்பிற வித்துன்பஞ் சிறிதும் படமாட்டேனென்ற மாணுக்கனைநோக்கி மேற் கூறுகின்றார்?

"புள்ளினைந்ததுபோற் றுன்பேயணுப்பொருப்பாய்த் துக்கிக்கு நன்குணத்தாற் பேரின்புக்கிச்சை பிறந்ததினிக்கேளுனக்குப் பேரின் பந்தேடிப்பெறும்,, எ-து. உரப்பொலி சிறிது தோன்றினு மதனைப் பேரொலியாகக்கண் டசுணப்புள் வருந்தியதுபோ னீயித்தேகாதிப்பி ரபஞ்சங்களான் வருந் துன்ப மணுவளவாயினு மதனைப் பொருப்பள வாகக்கண்டு துன்புறுநற்குணத்தா லுனக் கிப்போது பேரின்பத்தின் மே லிச்சைசெனித்ததாகலி னினி யதனையடைதற்குபாயஞ்சொல்லு துங் கேட்டி யப்பேரின்பத்தை யாங்கூறிய வுபாயப்படி தேடிப் பெ றுதி. எ-று.

ப-ம். விடயசுகத்தைத் துன்பமெனக்கூறினு லிதனை யங்ஙனங் கண் டோர்க்குச் சொரூபசுகத்தின்மே லிச்சை செனிக்கு மாகலிற் "றுன் பே யணுப்பொருப்பாய்த்துக்கிக்கு நன்குணத்தாற் பேரின்புக்கிச்சை பிறந்த தென்றார். (எ)

(கவி - அ. அ - கை.)

பேரின்ப மான்மாவைவிட்டு நீங்காதென்பது மதனைப் பெறுத ற்குபாயமு மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பேரின்ப முன்னைப் பிரியாதுன் னுண்மையது
வோரின்ப மாய்விடயத் தூடுதிப்பும் - பேரின்

பழிவிலே தோன்று மறிவு மயலா
மொழியு மிரண்டின்ப மும்.

(இ-ள்.) பேரின்பமுன்னைப் பிரியாதுன்னுண்மையது,, எ-து. அந்தப்பேரின்ப முன்னைவிட் டெக்காலமு மோரணுவளவேனும்பிறியாதிருப்பது. அவ்வின்பமே யுனக்குரித்தாய மெய்ம்மையாயுள்ளது. அங்ஙனமென்னைவிட்டு நீங்காதெனக்குரித்தாய மெய்ம்மையா யிருப்பதெனக்குத் தோன்றா திருப்பானேனெனின்;

"ஓரின்பமாய்விடயத்தூடுதிப்பும்பேரின்பழிவிலேதோன்றும்" எ-து.உன்னாலறியப்பட் டோரின்பமாய் வனிதையர்விடயத்தூடு தோன்றுவது மியாங்கூறிய வந்தப் பேரின்பமு மெதிரீடற்ற விடத்துத் தோன்றும்?

"அறிவுமயலாமொழியுமிரண்டின்பமும்,,எ-து.ஆணறிவும் பெண்ணறிவு மெதிரிட்டபோ தவ்வறிவுகளு மயலாம். அறிவுமயலாமென்றவும்மையா லாண்குறியும் பெண்குறியு மெதிரிட்டபோ திக்குறிகளுமயலா மிவைக ளயலாகவே யிவ் விருவகைக் கூட்டரவுகளால் வரு மிரண்டின்பங்களு மயலாயொழியும். எ-று.

ப-ம். ஆண்குறியும் பெண்குறியுங்கலந் தெதிரிட்டழிந்தபோது மாணறிவும் பெண்ணறிவுங்கலந் தெதிரிட்டழிந்தபோது மவ் வின்பமு மிவ்வின்பமுந் தோன்றலா "னழிவிலேதோன்று"மென் றிருமைக்கும் பொதுவாகக்கூறினர். குறிகளு மறிவுகளு மெதிரிட்டபோ தின்பமின்மையா "லொழியு மிரண்டின்பமு"மென்றார்.

இருவகைக்குறிகளுங் கலந்தபோ தவையிருந்துந் தோன்றா தழிதலானு மாண்குறி பெண்குறிக் குள்ளீடா யிருத்தலானு மின்பந்தோற்றலானு மவற்றினது கூட்டரவை யிவற்றினது கூட்டரவிற் குவமையாகக் கூறினர்.

"அழிவிலேதோன்று" மென்றவுமையா னழியா தெதிரிட்டபோதென்பதும் வருவிக்கப்பட்டது. விடயானந்த மேலீட்டாற் பரவசமாவதுபோற் சொரூபானந்தமேலீட்டாற் பரவசமாவதுங்கொள்க. (அ)

(கவி - கூ. அ - கை.)

விடயானந்த மறிதல்போ லவ்வானந்தமுமறியக்கூடாதோ வெனின்; இவ்வின்பம்போ லவ்வின்பம் போதத்தா லறியக்கூடாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

விடய முதித்துநின்று விட்டவிடங் கீழ்மே
லிடைவிடா தேநிறைந்த வின்பந் - தொடுவரோ
தோன்றி யழிவதுவே துக்கசுக முன்னுண்மை
தோன்ற வடங்காச் சுகம்.

(இ-ள்.) விடயமுதித்துநின்றுவிட்டவிடங்கீழ்மே லிடைவிடாதேநிறைந்தவின்பந் தொடுவரோ" எ-து. ஓர்விடயத்தின்கட் டோன்றிநின் றழியப்பட்ட வின்பங் கீழாயவின்பம். வெவ்வேறு வகைப்பட்ட பொருள்களினு மிடையறாது பரிபூரணமாய் நிறைந்தவின்ப மேலாய வின்ப மாகலினிவ்வின்பத்தைப் பெற்றுள்ளார் தற்போதத்தா லதனைப் பற்றுவரோ; வஃதெங்ஙனமெனின்?

"தோன்றியழிவதுவே துக்கசுகமுன்னுண்மைதோன்றவடங்காச்சுகம்" எ-து. போதத்தாற் பற்றியறிந் தனுபவிக்கு மவ் வின்பந்தோன்றி யழிவ தங்ஙனந் தோன்றி யழிவதுவே சுகமுந் துன்பமு மாகலினு முனதுண் மெய்ம்மையாயிருந்தவின்ப மோர்காலங்களினு முற்பத்தி நாசமின்றாய வீட்டின்பமாகலினானும். எ-று.

ப-ம். அவ்வின்ப மோர்விடயத்திற்றோன்றி யழிதலாற்பற்றிவிடப் பட்டது. இவ்வின்பம் பூரணமாகலானு முற்பத்திநாசமின்மையானும் பற்றுதல் விடுத லிதற் கின்மையாயிற்று. தோன்றியபோது சுகமு மறைந்தபோது துன்பமும் வருதலிற் "றோன்றியழிவதுவே துக்கசுக" மென்றார்.

இச்சுகதுன்பங்களால் விழைவு வெகுளியு மிவ்விழைவு வெகுளிகளா லிருவினைகளு மிவ்விருவினைகளாற் பிறப்பு முண்டாமென்பதுங்கொள்க. அவ்வின்பம் பற்றியபோது தோன்றும் விடுத்தபோது மறையு மிவ்வின்பம் பற்றியபோது மறையும், விடுத்தபோது தோன்றுமென்பதுங் காண்க. (௬)

(கவி - ம். அ - கை.)

ஆயி னவ்வின்ப மித்தலத்திற்றோன்றுவ தில்லையாகலின்; மற்றோர்தலத்திற் சென்றிருந்து தவத்தைப் பண்ணி யதனைப் பெறுகின்றே னென்ற மாணாக்கனை நோக்கி பூரணவின்ப முறுதற்குத் தலமிடமின் றென்றும் போதநாசமிடமென்று மித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

எங்கும் பரிபூ ரணமென்னி லீதல்ல
வங்கங்கா மென்னும்போ தங்கிலையோ - பங்காகேள்

ஆகாயந் தீண்டிவிடு மற்ப வறிவழிவி
லேகாண்பே ரின்பமுதிக் கும்.

(இ-ள்.) எங்கும்பரிபூரணமென்னிலீதல்லவங்கங்காமென்னும்போ தங்கிலேயோ ப்ங்காகேள்" எ-து. அப்பேரின்ப மிருநூற்றிருபத்துநா லு புவனமெங்கு முட்புறனுய் நிறைந்துள்ள பரிபூரணமென்று வே தாகமங்கள் கூறுமெனி னவ்வின்பம்பெறுதற் கேது இத்தலமன்று. காசிமுதலிய வந்தந்தத் தலங்களிற்பெறலாமென்று நீ கூறும்பொழு து நீ யிருந்த வத்தலத்தி லவ்வின்ப மின்ருயதோ பகுப்பறிவு நீங்கா தவனே கேட்டி ?

"ஆகாயந்தீண்டிவிடுமற்பவறிவழிவி லேகாண் பேரின்பமுதிக்கும்" எ-து. பரையோகமாகிய ஞானகாசத்தைப் பெற்றவிடத் ததற்கு மேற்ருென்று மநுபவத்தைநாடித் தானின்ற நிலையை வழூவு மற்பவ றிவழிந்தவிடத்திலே யுனக்குப் பேரின்பந்தோன்றுமென்றறிதி.எ-று.

ப-ம். பரையோக நிட்டைபெற்றகாலே யதற்குமேற் ருென்றுஞ் சி வத்தை நாடா தவ்வருளேயு மறவாதிருப்பிற் சிவதரிசனந்தானேதோ ன்று மதுதோன்றவே கிஞ்சிக்கியபோத மழியு மஃதழியவே பேரின் பந்தோன்றுமாகலி "ஞகாசந்தீண்டிவிடு மற்ப வறிவழிவி லேகாண் பேரின்பமுதிக்கு" மென்ருர்.

(உதாரணம்) சித்தியார் "வாடாதே குழைந்திருப்பையாகிற், பி றியாதசிவந் தானே பிறிந்துதோன்றும் பிரபஞ்சபேதமெல்லாந்தானு ய்த்தோன்றி, நெறியாலேயிவையல்லா மல்லவாகி நின்றென்றுந்தோ ன்றிடுவை நிராதாரனுயே,, என்றும் ?

(திருவாசகம்) "இரைதேர்கொக்கொத் திரவுபக லேசற்றிருந்தே வேசற்றேன், கரைசேரடியார்களிசிறப்பக் காட்சிகொடுத்துன்னடியே ன்பாற், பிரைசேர்பாலி னெய்போலப் பேசாதிருந்தாலே சாரோ,,எ ன்று மற்றும் வருவனவற்ருற் காண்க. (௰)

(கவி - ௰௧. அ - கை.)

அப்பேரின்பமடைதற் கிச் சிற்றின்பமாகிய விடயந்தடையாகலி னிதனையொழித் ததனை யடைவேனென்ற மாணக்கனைநோக்கிக் கரு விகளை யுள்ளபடி யருளா லறிந்துநீங்கி யவ்வருளின் மறைந்துநின்ரு ன் மீட்டு மவைகள்வந்து வாதிபாதென் றித்திருவெண்பாவிற் கூறுகி ன்ருர்.

உடம்புள்ள மட்டும் விடய மொடுங்கா
வொடுங்குகிலோ கேவலமா மும்ப - ரிடம்புட்
பறந்தாற் கலங்குமோ பாசத்தி னுண்மை
யறிந்தாற் சுடாத்தடைபோ லாம்.

(இ-ள்.) உடம்புள்ளமட்டும்விடயமொடுங்கா வொடுங்கிலோகேவல மாம்" எ-து. விடயசுகங்க ளநுபவித்தற்கேதுவாய வுடம்பிருக்கு மளவு மவ்விடயங்க ளொழியாவுடம்போ டொற்றுமையாயிருந்த ஞானேந்திியங்க ளைந்திற்கு மெதிரீடாய் விடயங்க டோன்றுந்தோறு மவற்றை யொழிப்பேனெனி னங்ஙன மொழிக்கிற் கருவிகளெல்லா மொழியு மவையொழியிலோ கேவலம்வந்தடுக்கும் ஆயி னவற்றையொழிக்குமா றெவ்வாறெனின் ?

"உம்பரிடம்புட்பறந்தாற்கலங்குமோபாசத்தினுண்மையறிந்தாற்சுடாத்தடைபோலாம்" எ-து. ஆகாயத்தினிடமாய்ப் புட்பறந்தா லவ்வாகாய மசையாததுபோ னீயிம்மாயா வடிவத்தை யானலனென்று நீங்கி யருள்வடிவா யிருத்தியெனி னப்போது விடயங்கள் வந்தடுப்பினு நீ யசையாதிருப்பையாயின்; மாயாவடிவமா யிருந்தபோது வருத்தியவிடயந் திருவருள்வடிவாயிருந்தால் வருத்தாதிருப்பதெங்ஙனமெனின்; அசுத்தந் துக்க மனித்திய மன்னியமென்று பாசத்தினுண்மையைத் திருவருளா லறிந்தனையாயி னக்கினிச்சூட்டைத் தடுக்கு மந்திரம்போ லவ்வறிவு கருவிச்சேட்டையைக் கெடுக்குமாகலி னக்கினி யிருந்துஞ் சுடாததுபோற் கருவிகளிருந்து முன்போல வாதியா தாகும். எ-று.

ப-ம். தான் கருவிகட் கன்னியமாய்ப்பிறித்துநின் றருளாலடக்கா தக்கருவிகளோடுங் கூடிநின்று போதத்தா லடக்கினமையாற் "கேவலமா,, மென்றார்.

அருள்வடிவாயிருந்தபோது கருவிக ளசைவதே யன்றித் தானசையானாகலி "னும்பரிடம் புட்பறந்தாற்கலங்குமோ" வென்றார்.(௰௧)

(கலி - ௰௨. அ - கை.)

விடயங்களை யிந்தியங்களா லறிந்தநுபவித்தற் கேதுவாய விவ்வுடலையொழித் திவ் வின்பத்தைப் பெறுவேனெனின்; அவ் வின்பம் பெறுதற்குடலொழித்தலேதுவன் றிவ்வுடலாதிகளை யெல்லாந் தனக்

கன்னியமென் றருளாற்கண்டு நீங்கி யவ்வருளி னிற்றலேயேதுவென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உடலிருந்தென் போயென் னுருவருவ மூன்று
மடைவர் தொழிலு மறுதி - குடமுடைத்து
மண்ணென்ன வேண்டுமோ மாயா வயிந்துவத்து
முண்ணின்று பார்த்தியிப்போ தும்.

(இ-ள்.) உடலிருந்தென்போயென் னுருவருவமூன்றுமடைவர்தொ ழிலுமறுதி" எ-து. இவ்வுடலிருந்தகனு லவ்வின்பம் வருதற்குத் தடையென்னை யிதுபோயதனு லவ்வின்பம் வருமாறென்னை யவ்வின்பம் வருதற்குத் தடை யிவ்வுடலால்யாதுமின் றுருவமு மருவமு முருவருவமுமாகிய விம்மூன்று வடிவத்தினையுமுடைய சர்வக்ஞ ரனுதியிலே யாணவமலத்திற் கிடந்தவுன்னைக் காருண்ணியத்தாலெடுத்து மாயையிற் றநுகரணபுவனபோகங்களைக்கொடுத் திருவினை யொப்பு மலபரிபாகம் வருவித்து வீடடைவிக்கும்பொருட்டுச் செயயும் பஞ்சகிருத்தியங்களுந மனுதியாகலி னீ யிக்காயத்தை யொழிப்பலெனக்கருதற்க;

"குடமுடைத்துமண்ணென்ன வேண்டுமோ மாயாவயிந்துவத்து முண்ணின்றுபார்த்தியிப்போதும்" எ-து. ஒருவருக்குக்கடத்தை மண்ணென் றறிவிப்பதேயன்றி யக்கடத்தை யுடைத்து மண்ணென்றறிவிக்கவேண்டுமோ. அதுபோ லுனக்கிவ்வுடம்பைமலமென்றறிவிப்பதேயன்றி யிதனையழித்துமலமென்றறிவிக்கவேண்டுமோ வாகலி னிதனுளிருந்தே யிவ்வுடம்பையு மற்றுமுள்ளனவாய கருவிகளையு மாயாமலமென்று முனக்கன்னியமென்றுங்கண்டுநீங்கி வயிந்துவமாயையாகிய சுத்ததத்துவத்தின் முடிவினின் றுன்னை யருளாற்கண் டவ்வருளி லசைவறவிருத்தி; யிப்போது மவ்வானந்தமுறையமாந் தேகமுடிந்த வப்போது மவ்வானந்தமயமே யாவை. எ-று.

ப-ம். பெத்தத்திசையிற் பஞ்சகிருத்தியத்தாற் பஞ்சாவத்தைகளையு முண்டாக்கி நடத்தாநின்ற சர்வக்ஞ ரிப்போது முத்தித்திசையினு முனக்குப் பஞ்சாவத்தைகளையு நீக்கித் தமது திருவடியானந்தத்தைக்கொடுப்பர். நீ யுடலை யொழிக்கவேண்டுவ தேதுக்கென் றறிவித்தற்

"கடைவர்தொழிலுமனுதி" யென்றார். இப்போதுமென்றமையா னப்போதுமென்பது வருவிக்கப்பட்டது. (யஉ)

(கவி - யரு. அ - கை.)

வேதாந்தமுத்தியோ சித்தாந்தமுத்தியோ வுண்மையென்ற மாணாக்கனைநோக்கி வேதாந்தசித்தாந்த முத்தியிரண்டுந் தற்போதமொழிந்தோர்க்குச் சமனென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

கயிற்றரவுங் கட்டையினிற் கள்ளனும்போன் மாயா
மயக்கமற்ற வேதாந்த வாழ்வு - முயற்சிகெட்ட
வானந்தா தீதத்தே யாணவரா மாகமமுந்
தானந்தி னார்க்குச் சமன்.

(இ-ள்.) கயிற்றரவுங்கட்டையினிற் கள்ளனும்போன்மாயா மயக்கமற்றவேதாந்தவாழ்வும்" எ-து. உள்ளகயிற்றினிடத் தில்லாதபாம்பு கற்பிதமாத் தோற்றுதல்போலு முள்ள கட்டையி னிடத்தில்லாத கள்வன் கற்பிதமாத் தோற்றுதல்போலும் உள்ளபிரமத்தினிடத் தில்லாதமாயை கற்பிதமாத்தோன்றுகிறதென் றறிந் திம்மாயாமயக்கஞ் சிறிதுந்தோன்றாதிருந்தவிடம் வீடென்றுகூறும்வேதாந்தச்செல்வமும்?

"முயற்சிகெட்டவானந்தாதீதத்தேயாணவராமாகமமுந்தானந்தினார்க்குசசமன்"எ-து. தற்போதமுயற்சி சிறிதுந்தோன்றாதிருந்த வானந்தாதீதத்திற் பெத்தத் திசையி லாணவராகி யிருப்பானைப்போலு மிருப்பதே வீடென்று கூறுமாகமச் செல்வமுந் தானென் றெதிரிட்டெழும் புல்லறிவு கெட்டார்க்குச்சமனும். எ-று.

ப-ம். அவித்தியாகதமாயிருந்த சிவனது புன்மையறிவாயிருந்து நானென்றெதிரிடு மவ்வறிவு கெட்டபோ தச்சீவ சாட்சியாயிருந்த பிரமந் தானாகலானு மாணவமயமாயிருந்த வான்மாவினது புன்மையறிவாயிருந்து நானென் றெதிரிடு மப்போதங் கெட்டபோ தவ் வான்மா தனக்கு முதலாகிய சிவமயமாதலானு மிங்ஙன மாயபோ திருவர்க்கு மானந்தாநுபவ மிருத்தலானுந் "தானந்தினார்க்குச்சம" னென்றார். தானந்தாநுபவபரஞானிகட்குச்சமனன்றென்பதுதானேயாயிற்று.

(கவி - ௰௪. அ - கை.)

முத்திநிச்சயமீதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

என்னுணை என்னுணை யென்னுணை யேகமிரண்
டென்னுமற் சும்மா திருவென்று - சொன்னான்
றிருஞான சம்பந்தன் சீகாழிநாட
னருளாளன் ஞானவினோதன்.

(இ-ள்.) என்னுணையென்னுணையென்னுணை யேகமிரண்டென்னுமற் சும்மாதிருவென்று சொன்னான்" எ-து. முக்காலுந்தமதுபேரிற் றிருவாணைகூறி முத்தியில் வேதாந்தியைப்போ லேகமென்றும் பேதசித்தாந்த வாதியைப்போ லிரண்டென்றுங் கூறு,திங்ஙனங் கூறுதற் கேதுவாய வுன்போதத்தை யொழித்து நீ மவுனானந்தமா யிருத்தியென் றருளிச்செய்தார் ?

"திருஞானசம்பந்தன்சீகாழிநாட னருளாளன்ஞானவினோதன்," எ-து. திருஞான சம்பந்தப்பிள்ளையாரென்னு நாமதேயத்தை யுடையார் சீகாழிநாட்டிற் கதிபதியான வருளாட்சியுடையார் ஞானத்திருவிளையாட்டினையுடையார், எ-று.

ப-ம். ஒன்றெனிற்பெறுவானும் பேறுமின்று மாகலினானு மிரண்டெனிற் பதமுத்தியேயன்றி,யயிக்கியமுத்திகூடா தாகலினானும், போதவறிவி லிரண்டாயும் போதவொழிவி லொன்றாயு மிருத்தலினானும் "ஏகமிரண்டென்னுமற் சும்மா திருவென்றுசொன்னா" ரென்றார்

ஐந்தாவது - சரிதைக்கழற்றி

முற்றிற்று.

———

ஆ திருவெண்பா - ௱௫௪.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஆறாவது

விரத்திவிளக்கம்.

அஃதாவது, இங்ஙனஞ் சரிதாதிகளை நீத்து நின்றாராயினு முட்டுறவில்லார்க்கு ஞானம்விளங்காதாகலி னிவ்வதிகாரத்தினுட் டுறவு விளக்கக்கூறி யுட்டுறவினதிலக்கண மறிவித்தாராகலி னிவ் வதிகாரத்திற்கு விரத்திவிளக்கமென்று பெயராயிற்று. விரத்தியெனினுந் துறவியெனினுமொன்று.

(கலி - க. அ - கை.)

ஆன்மா வொன்றுண்டென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

அறிந்தவிடத் தின்பதுன்ப மாகா ததுவு
மறந்தவிடத் தின்ப மயக்கு - மறிந்த
வலியறிவு நீயென்று னத்துவிதா னந்த
முலையமுத முண்ட முனி.

(இ-ள்.) அறிந்தவிடத்தின்பதுன்பமாகாததுவு மறந்தவிடத்தின்பமயக்கு மறிந்த வலியறிவுநீயென்றான்" எ-து. கருவிகண் முப்பத்தாறையுங்கடந் தருளை யறிந்த விடத்தாண் டின்பமுந் துன்பமுமுண்டாகாதவ்வருளை மறந்தவிடத்து முன் னீங்கிநின்ற கருவிகள்வந்து கூடலானத்துன்பமும் மின்பமும்வந் தீண்டு மயக்கு மாகலிற் பதியறிவோடுங்கூடி யின்பதுன்பமின்றிய வப்பதி யறிவாயும் பாசவறிவோடுங்கூடி யின்பதுன்பமாயுநின் றதனையு மிவற்றையு மறிந்த வலியறிவு நீயென்றெனக் கருளிச்செய்தார்?

"அத்துவிதானந்த முலையமுதமுண்டமுனி" எ-து. இரண்டற்றவத்துவிதத்திற் றோன்றும் பேரானந்தமாகிய திருமுலையமுதத்தையம்மை பொற் கிண்ணத்தோடுங் கொடுப்ப வாங்கியுண்ட திருஞானசம்பந்தப்பிள்ளையார். எ-று.

ப-ம். பதியறிவு ஆணறிவு. பாசவறிவு. பெண்ணறிவு. இவ் விருவகையறிவும்போலன்றிப் பதியறிவோடுங்கூடிப் பதியறிவாயும் பாசவறிவோடுங்கூடிப் பாசவறிவாயு மாண்வடிவும் பெண்வடிவுந் தழுவிநின்ற வலிபோலிருத்தலிற் பசுவறிவை யலி அறிவென்றார்.

"அம்மை யானந்தவடிவமாகலி னவளது திருமுலைப்பாலை யானந்தவமுத மென்றார். அதுவுமென்பதனை;யத்துன்பமு மின்பமு மயக்குமெனக்கூட்டுக. (க)

(கலி - உ. அ - கை.)

உட்டுறவு புறத்துறவுடையவனைச் சமையிகளெல்லாரும் ஞானிகளென் றங்கீகரிப்பாரென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அறுசமையத் தோர்க்கு மறுதியிட்ட கூடற்
றுறவா யவாவறுத்த றூய்மை - பிறவா
முடிகள்சமு சத்தி முயற்சியெல்லா மூத்த
கடைகரும நாசமிது காண்.

(இ-ள்.) அறுசமையத்தோர்க்கு மறுதியிட்டகூடற் றுறவாயவாவறுத்தறூய்மை" எ-து. அறுவகைச்சமையத்தோர்க்கும் வீடடைதற்கு மட்டிட்டுவைத்த பொதுநெறியாதெனிற்; கூடற்கட் சங்கப்பலகையி லேறியிருந் துட்பற்றுப் புறப்பற்றென்னு மிருவகைப்பற்றினையுந் துறப்பதா யித்துறவுகளான் மெய்ப்பொருளை யுணர்வதாய்ப் பிராரத்துவ வாசனையா னோர்காலையி னுள்ளத்தெழு மவாவினையு மறுத்த றூய்மையாய்க் கூறிய விம்மூவகை யதிகாரங்களி னெறிகளேயாம்?

"பிறவாமுடிகள்சமுசத்தி முயற்சியெல்லாமூத்த கடைகருமநாசமிதுகாண்" எ-து. அஃதன்றியும் பிறவாமைக்கேதுகூறிய பலவாற்றுள்ளுஞ் சிரசாய கருவிகண் முப்பத்தாறையும் போக்கப்பட்ட வீடுந் தற்போத முயற்சியெல்லா முதிர்ந்த கடையாகிய கருமநாசமு மிம்மூவகை யதிகாரத்திற் கூறிய நெறியாங்காண். எ-று.

ப-ம். சமையிகளறுவரும் வீடடைதற்கு மட்டு வேறுவேறு கூறினாராயினு மொருவர் கூறிய தொருவர்க்குச் சம்மதமன்று துறவாய் மெய்யுணர்ந்து அவாவறுத்த லனைவர்க்குஞ் சம்மதமாமாகலின் "அறுசமையத்தோர்க்கு மறுதியிட்டகூடற்றுறவா யவாவறுத்த" லென்றார். துறவு மவாவறுத்தலுங் கூறினமையா னிடையின் மெய்யுணர்வு வருவிக்கப்பட்டது.

இங்ஙனஞ் சங்கப்பலகையின் மேலேறிக் கூறிய மூன்றதிகாரங்க ளென்றது; (திருக்குறளுள்,)துறவாதி மூன்றதிகாரங்களையு மாமென் றறிக.

இம்மூவகையதிகாரங்களி னெறிகளி னொழுகுதலுயிர்ச்சுத்தி.இங்ஙன முயிர்ச்சுத்திபண்ணுவோர்க் குடற்சுத்தி பண்ணவேண்டுவ தின்மையாற் "கடைகருமநாசமிதுகா" ணென்றார். (உ)

(கவி - ௩. அ - கை.)

அருந்தல் பொருந்தல்களி லாசையற்றோர்க்கே யிந்நூலாமென்றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

வாசிக்குச் சாவீரர் வைதாற் பொறுததுபோ
லாசைக்கே டர்க்கிதுவா மட்டதென - நேசித்த
வொட்டையைப்போல் வார்க்கா முடம்பார வூண்பழகும்
பெட்டருக்கீ தாகாப் பிழை.

(இ-ள்.) வாசிக்குச்சாவீரர் வைதாற்பொறுததுபோ லாசைக்கேடர்க்கிதுவாம்" எ-து. வாசியென்றவார்த்தைக்கு மனம்பொறு திறந்துவிடத்துணிந்த வீரனை வைதான் மனம் பொறுததுபோற் பெண்ணாசை யாகாதென் றோர்வார்த்தை கூறியமாத்திரத்தி னவ்வாசை மனத்தின்கண் மீட்டெழா தடக்கு மவ்வாசை நாசர்க்கே யிவ் வதிகாரத்தி னருத்தஞ் சம்மதமா மஃதன்றி?

"அட்டதெனநேசித்தவொட்டையைப்போல்வார்க்கா முடம்பாரவூண்பழகும் பெட்டருக்கீதாகாப்பிழை" எ-து. அறுசுவையடிசில்போல் வேப்பந்தழையாதி கைப்பினை யிச்சித்தவொட்டகத்தைப்போற் காடி கூழ் களி முதலியவற்றைச்சுவையாய் விரும்புவோர்க்குஞ் சம்மதாம். உடல்பருக்கும்படி யறுசுவை யடிசில்களை நன்றுதிதென்று பகுத் தூண்பழகும் பேடிகளுக்குங் காமிகளுக்கு மித னருத்தஞ் சம்மதமாகாத குற்றமாம். எ-று.

ப-ம். மற்றநாலின்கண் ணேரிடத்துப் பெண்ணாசை யாகாதென்று கூறக்கண் டதனை விடுத்தோர்க்கே யவ்வாசை யுடையோனை மிகவு மிகழ்ந்துகூறு மிதனருத்தஞ் சம்மதமாமாகலின் "வாசிக்குச்சாவீரர் வைதாற்பொறுததுபோ லாசைக்கேடர்க்கிதுவா,, மென்றார்.

அருந்த லாசைவைத்துக் கூறினமையா லாசைக்கேடர்க்கென்றதைப் பொருந்த லாசையாகக்கொள்க. (௩)

(கவி - ச. அ - கை.)

நீரிங்ஙனங் கூறியவற்று ளசையறுதலோ முத்தியெனின்; ஆன்மாவிற்குப் பாசமுழுதும் நீங்கிற் பதியைத் தேடவேண்டுவ தின்றென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பாசங் கழன்றாற் பசுவுக் கிடம்பதியா
மூசல் வடங்கழன்ற தொவ்வாதோ - நேசித்த
பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் பாட்டுமக்கோ
மற்றச் சமையமெங்கு மாம்.

(இ-ள்.) பாசங்கழன்றாற்பசுவுக்கிடம்பதியா மூசல்வடங்கழன்றதொவ்வாதோ" எ-து. உயிர்ச்சார்வு பொருட்சார்வாகிய விருவகைச்சார்வு மிச்சார்வுகளை நீங்கியபோது மிவற்றின்மே லெழாநின்ற வவாவு மிவ்வவா நீங்கியபோதுங் கண்ட பொருள் கண்மேற்சென்று பற்று மிந்தியங்களு மிவ்விந்தியங்க ளடங்கியபோது முன்னேறியிருந்த வாசனையா லுள்ளெழு மனநினைவுகளு மிவைமுதலிய பாசங்களெல்லாங்கழன்றபோ திவற்றினின்றபசுவுக்குப் பதியேயிடமா. அஃதெங்ஙனமெனி; னந்தரமாநின்ற வூசற்கயிற்றிலிருந்தோனுக் கவ்வூசற்கயி றற்றபோது நிலமிடமாமதுபோ லஃதொவ்வாதோ? வதனைநீ யறிதி. யஃதன்றி ?

"நேசித்தபற்றற்றகண்ணே பிறப்பறுக்கும்பாட்டுமக்கோ மற்றச்சமையமெங்குமாம்" எ-து. தம்மா லிச்சிக்கப்பட்ட பற்றுக்களெல்லா மற்றபோதே யப்பற்றறுதி பிறப்பினையறுக்குமென்று(திருவள்ளுவனாயனார்,) கூறிய குறள் வெண்பாப்பாட் டுமக்குமாத்திரமோ சம்மத மற்றைய சமையங்களுக்கெல்லாஞ் சம்மதமாம். எ-று.

க-து. ஊசலிருந்தபோது மொழிந்தபோது மதனு ளிருந்தோனுக் கசைவு மசைவின்மையு முண்டாவதுபோற் பாசமிருந்தபோது மொழிந்தபோது மசைவு மசைவின்மையு மான்மாவிற்குண்டாமென்பதுங்காண்க. (ச)

(கவி - ரு. அ - கை.)

தனுவாதிகளைத் தனக்கன்னியமாக்காணிற் றிருவருடோற்றுமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உனக்குமெய்யாய்த் தோன்றி யொழித்துவிடும் பாசம்
வினைச்சடமே யென்னில் விடம்போ - லுனைச்சுழற்று
மானாலுந் தன்னை யறியாத துன்னறிவு
தானாகு ஞானத் தடை.

(இ-ள்.) உனக்குமெய்யாய்த்தோன்றி யொழித்துவிடும்பாசம் வினைச்சடமேயென்னில்விடம்போ லுனைச்சுழற்றுமானாலும்" எ-து. உனக்குத் தோன்றும்போ தியா னெனதென்று கருதும்படி மெய்யாகத் தோன்றி நீங்கும்போ துன்னைப் புறம்பாயொழித்து நீங்கிவிடுந் தேகபோகங்களாகிய பாசம் வினைக்கீடாய்வரு மாயாகாரியமாகியசடமென் றறிவிப்பினும் நீ யிங்ஙனமறியாமையா னின்னை விடம்புசித்தவனை மயக்குதல்போன் மயக்குமெனினு மப்பாசம் ஞானத்தடையன்;இனி ஞானத்தடையாவ தியாதெனின் ?

"தன்னையறியாததுன்னறிவு தானாகுஞானத்தடை" எ-து. தனுவாதிகளையெல்லா மிதுவிதுவென்று நானாவாய்ப் பகுத்தறிந்து மவற்றையறிந்த தன்னை யறியாத துனது புல்லறிவாகலி னிவ்வறிவே ஞானத்திற்குத் தடையாகும். எ-று.

ப-ம். ஆணவத்தான் மறைபட்டிருந்த வான்மாவிற்குச் சிவன் மாயையிற் றனுகரணபுவன போகங்களைக்கொடுத் திச்சாஞானக்கிரியைகளை விளக்குவித்தலானு மித்தனுவாதிகளாற் சுருதி குருசுவானுபூதிகளையறிந்து வீடடைதற் கேதுவாகலானு மிவற்றைச்சடமென்றுந் தனக்கன்னியமென்று மறிந்தபோது மயக்காமையானு"முனைச்சுழற்றுமானாலு மிவை ஞானத்தடை"யலவென்றுந் தானென்றுந் தனதென்றுந் தன்னாலறியப்பட்ட தேகபோகங்களைத் தானுந் தனதுமலவென்றவற்றைத் தனக் கன்னியமாகக்கண்டு தன்னையுள்ளபடி யறியமாட்டாததன தறிவே ஞானத்தடையாகலி"னுன்னறிவுதானாகுஞானத்தடை" யென்றுங் கூறினர்.

தனுவாதிநான்கினுட் டனுவோடு கரணமும் போகத்தோடுபுவமுன மொற்றுமையா யிருத்தலிற் றேகபோகமென் றிரண்டாகக்கூறப்பட்டன. (ரு)

(கவி - சூ. அ - கை.)

ஆன்மாவிற் கிவை யுருவ மன்றாயி னிவற்றின் மயமாயிருப்பதென்னையென்றமாணாக்கனைநோக்கி; ஆன்மாவின துருவசொரூப சுபாவ மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சிற்றறிவ னாய்மறைப்பைச் சேர்ந்தவடி வொண்படிகம்
பற்றுகினு மொன்றாகாப் பான்மைபோ - லுற்ற
வுருவ சொரூப சுபாவ முனக்கு
வருமடைவு சொன்னோ மதி.

(இ-ள்.) சிற்றறிவ னாய்மறைப்பைச் சேர்ந்தவடிவொண்படிகம் பற்றுகினுமொன்றாகாப் பான்மைபோல்" எ-து. கிஞ்சிக்ஞ வறிவனாய்ச் செம்பிற்களிம்புபோன்ற வாணவமறைப்பைச் சேர்ந்தவடி வான்மாவினது சுபாவம் படிக மடுத்த வன்னமயமா யிருப்பினுந் தன்னிற மந்நிறத்தோ டொன்றாகாத முறைமைபோலத் தானடுத்த கருவி மயமா யிருப்பினுந் தன்னறி வக்கருவியறிவோ டொன்றாகா திருப்ப தான்மாவின துருவம் படிகம் பற்றுகினுமொன்றாகாவெனவே யொன்றையும் பற்றாதிருந்தபடிக நிருமலமா யிருத்தல்போ லான்மா மும்மலங்களையும் நீங்கி நிற்ற லதனதுசொரூபம்?

"உற்ற வுருவசொரூப சுபாவமுனக்கு வருமடைவு சொன்னோ மதி" எ-து. இங்ஙன முனக்குற்ற சுபாவ வுருவசொரூபங்கள் வருமுறையைச் சொன்னோ மிவற்றை நீயறிந்து கொள்ளுதி. எ-று.

ப-ம். ஆணவஞ் சகசமலமாகலி னதனைச்சேர்ந்தவடிவு சுபாவமென்றும், படிகத்திற்குச் சிவப்பு வன்னமுதலிய செயற்கையாய்வந்தது போ லான்மாவிற்குக் கருவிகள் செயற்கையாய் வந்துபொருந்தலி னிதனை யுருவமென்றும்,படிகம் வன்னங்களை நீங்கியபோது தனது சுய சொரூபத்தோ டிருத்தல்போ லான்மா கருவிகளையெல்லாம் நீங்கிய போது தனது சுய சொரூபத்தோ டிருத்தலி னிதனைச் சொரூப மென்றுங் கூறப்பட்டது. (௬)

(கவி - எ. அ - கை.)

சிவன துருவசொரூப சுபாவ மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

நினைப்புமறப் பற்று நிறைந்த வறிவா
யனைத்துட னு நின்றம் பரமாய்த் - தனக்கருளித்
தன்னானந் தத்தைத் தனக்களித்த சர்க்கரையே
யன்னானுக் கின்னவைமூன் றாம்.

(இ-ள்.) நினைப்புமறப்பற்றுநிறைந்தவறிவா யனைத்துடனுநின்றம்பரமாய்த் தனக்கருளி" எ-து. நினைப்புமறப்பாகிய சகலகேவலங்களை

யனாதியிலேநீங்கி யெங்கும்பரிபூரணவறிவா யெல்லாவற்றோடுங்கூடி நின்ற வாகாயம்போலொன்றோடுந் தாக்கற்றிருப்பதா யான்மாவிற் கருள்செய்து மும்மலங்களையும் நீக்கி?

"தன்னானந்தத்தைத் தனக்களித்தசர்க்கரையே யன்னானுக்கின் னவைமூன்றும்" எ-து. தனதுபேரானந்தத்தை யவ்வான்மாத் தனக் குக் கொடுத் தருளிச்செய்த நாவிற்குச்சர்க்கரையே யன்ன சிவனுக்கு மின்னவுருவ சொரூப சுபாவமூன்று முண்டாம். எ-று.

ப-ம். "நினைப்புமறப்பற்று நிறைந்தவறிவா" யெனவே,சிவனது சுபாவ மனாதியிலே நின்மலமா யிருத்தலெனவு "மனைத்துடனு நின்ற ம்பரமா" யெனவே யிங்ஙனமிருப்ப தருளாகலி னவனதுருவ மிச்சா ஞானக்கிரியைக ளெனவுந் "தன்னானந்தத்தைத்தனக்களித்த,, வென வே யானந்த மவனது சொரூப மெனவுங்காண்க. (எ)

(கவி - அ. அ - கை.)

பரிசுத்தமாகிய துற விதுவென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அறிந்துபற்றி நின்றழுந்து மற்ப வறிவை
யறிந்துசுத்தி யேபே ரறிவாய் - நிறைந்துசிவந்
தோயாம னின்றதுபோற் றோற்றமுத லேந்துடனுந்
தோயாமற் சுத்தத் துறவு.

(இ-ள்.) அறிந்துபற்றிநின்றழுந்துமற்பவறிவையறிந்துசுத்தியேபே ரறிவாய்" எ-து. பஞ்சவிடயங்களையும் ஞானேந்தியங்களாலறிந்து கன் மேந்தியங்களாற் பற்றி யந்தக்கரணங்களா லவற்று ளழுந்துங் கிஞ்சி க்ஞபோதத்தை யான்மாவின தியற்கைக்குணமன்றென்று மதுபானங் கொண்டோனுக்கு லகிரி தோன்றியதுபோ லவ்விருவகை யிந்தியங்க ளையுங்கரணங்களையுங்கூடியவிடத்துத் தோன்றிய விடயபோத மிதெ ன்றறிந் தவ்விந்தியங் கரணங்களோடு மப்போதத்தை நீத்துத் தன்னை யுள்ளபடியறிந் தங்ஙனந் தன்னை யறிந்தபோது தனக் கிந்திய கரணங் களையும் வேறாக்கித் தன்னையு மறிவித்த தருளெனக்கண் டவ்வருளே வடிவாகியிருந்து தான் மலமுமாகாமற் சிவமுமாகாமற் சிவானுபோ கத்தி லிரண்டற வழுந்தி நிற்ப தான்மசுத்தி. யிந்தவான்மசுத்தியே சி வத்தில் வியாபகமாகிய பேரறிவாகலி னிப்பேரறிவாகி?

"நிறைந்துசிவந் தோயாம னின்றதுபோற் ஞேற்றமுதலைந்துட னுந் தோயாமற்சுத்தத்துறவு" எ-து. தனக்குவியாத்தியாயிருந்தசிவ மெல்லாவற்றோடும் பூரணமாய்நிறைந்திருந்து மொன்றோடுந்தோய் வற்றுநின்றாற்போலச் சிருட்டியாதி யைந்தொழில்களோடுந் தோயா மனிற்பதே பரிசுத்தமான துறவு. எ-று.

ப-ம். இச்சா ஞானக்கிரியைகள் சிவதத்துவங்களைச் செலுத்தச் சிவதத்துவங் கலாதிகளைச் செலுத்தக் கலாதிக ளான்மாவினிச்சாஞா னக்கிரியைகளை யெழுப்ப வான்மாவினிச்சை யந்தக்கரணங்களினிட த்தும் ஞானம் ஞானேந்திரியங்க ளிடத்துங் கிரியை கன்மேந்திரியங்களி டத்துநின்று விடயங்களையறிந்து பற்றியழுந்துமாகலி னிவ்விருவகை யிந்திரியங்களுங் கரணங்களும் நீங்கவே ஆன்மாவி னிச்சா ஞானக்கிரி யைநீங்கு மிவைநீங்கவே கலாதிகணீங்கும் இவைநீங்கவே சிவதத்து வநீங்கும் இவைநீங்கவே தன்னையறியப்படுமாகலி "னறிந்துபற்றிநின் றழுந்து மற்பவறிவையறிந்" தென்றார்.

அவ னவ ளது முன்னிலையா யிதாகிதங்கள்வருதலையு மவற்றை த்தான்பெறுதலையுந் திருவருட்கண்ணாற் பார்த்தழித்துப் பேய்பிடியு ண்டவனைப்போற் சிவத்துண்மறைந்து நின்றமையாற் றான் மலமுமா காமமென்று மங்ஙனநின்றழியாத வானந்தபோகம் பெறுதலாற் றான் சிவமு மாகாமமென்றுங் கூறப்பட்டு மிங்ஙனமிருப்ப தான்மசுத்தியா கலிற் சுத்தி யென்றார்.

ஒன்றையும் பகுத்துக்காணாது வியாத்தியாய் நின்ற சூரியனொ ளியில் வியாபகமாகியகண்ணொளியு மொன்றையும்பகுத்துக் காணாது நிற்பதுபோ லொன்றையும் பகுத்தறியாதுநின்ற சிவவியாத்தியில் வி யாபகமாகிய வான்மாவும் பஞ்சகிருத்தியங்களால் விளங்கும்பிரபஞ்ச ங்க ளொன்றையும் பகுத்தறியாது நிற்கவேண்டுமாகலின் "சிவந்தோ யாமனின்றதுபோற்றேற்றமுத லைந்துடனுந் தோயாமற்சுத்தத்துற" வென்றார்.

பஞ்சகிருத்தியங்களாவன; வோரிந்தியத்திற் பிரவேசித்தல் சிரு ட்டி,யவ்விந்தியத்தினின் றோர்விடயத்தைப்பற்றுதறிதி,பற்றியவிடய த் திரண்டற வழுந்துதல் சங்காரம், அதிலிதம் பிறத்தறிரோபாவம், அதனைத்தெளிந்து கோட லநுக்கிரகம்,இங்ஙனமோரிந்தியத்திற் பஞ் சகிருத்தியங்களும் வரலா லைந் திந்திரியங்களினுந் தோயாமனிற்பதே யைந்தொழிலினுந் தோயாமனிற்பதெனவறிக.

அறிந்துபற்றி நின்றழுந்துதலே விடயபோத மென்றறித லான்ம ரூபக மவற்றைநீங்கித் தன்னையருளாற்கண்டவிட மான்மதரிசனம், தான்மலமு மாகாமற் சிவமுமாகாமற் சிவத்தோடிரண்டறக்கலந்து நிற்பதான்ம சுத்தியெனக்கொள்க. (அ)

(கவி - ௬. அ - கை.)

ஞானிகளிங்ஙனம் பிரபஞ்சத்திற் றோயாமனிற்பரோ வெனின்; ஞானிக ளுலகத்தையறியாரென்றும் ஞானம் நின்மலாவத்தையி னின்றுற் பெறலாமென்று மித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

கூரிருளின் மின்மினியின் கூட்டம்போல் வாழ்சகத்தை
யாரறிவா ரந்த வறிவுதயஞ் - சூரியன்கா
ணுன்னீ மூலக்கெடுத்த வுச்சியிலே வூனமறச்
சொன்னா ரவத்தைகளைந் தும்.

(இள்.) கூரிருளின் மின்மினியின் கூட்டம்போல் வாழ்சகத்தை யாரறிவாரந்த வறிவுதயஞ் சூரியன்காண்" எ-து. மழைக்காலத்தனையிருளின் மின்மினிப்புழுக்கூட்டம்போன் றுணவாந்தகாரத்தி லான்மாக்கள் கிஞ்சிஞ்ஞபோதத்தோடுங் கூடிப்பொய்ம்மையாய் வாழா நின்றவிப்பிரபஞ்சத்தை ஞானிகளாயினுரியாவரறிவர். அவர்சகத்தோடுங் கூடியிருக்கச்சிதேயுமதனையறியாரென்று நீர்கூறியதென்னையெனவர்க்கந்த ஞானோதயஞ் சூரியோதயம்போற் றோற்றுமாகலி னச் சகத்தையறியார், ஆயினிந்தஞானத்தை யடியேன்பெறுமா றெங்ஙனமெனின்?

"உன்னீமூலக்கெடுத்த வுச்சியிலேவூனமறச் சொன்னாரவத்தைகளைந்தும்" எ-து. காலையினு மாலையினு நீரு முனதுநிழலைக்கெடுத்த வுச்சிகாலத்தைப்போற் சகல கேவலங்களிற் செல்லு முன்போத மடங்கியகடுவிடத் துனதாணவக் குற்றமறவும் ஞானச்செல்வம் வரவுமேதுவாகச்சுத்தாவத்தைக ளைந்தினையுஞ்சொன்னார்பெரிய ரவற்றை யாஞ்சொல்லக்கேட்டு நீயறிதி. எ-று.

ப-ம். இருளைப்போலாணவ மின்மினிபோற் கருவிப் போதத்தோடுங்கூடிய வான்மாக்கண் மின்மினிமின்னியவாறே தோன்றுது மறைந்து மறைந்து மின்னல்போ லான்மாக்களினது மறப்பு நினைப்புகளா

கவிற் "கூரிருளின் மின்மினியின்கூட்டம்போல்வாழ்சக" மென்றார்.
சூரியோதயத்திற் பூதவிருளு மின்மினியொளியுந் தோற்றுததுபோ
ன் ஞானோதயத்தி லாணவவிருளுங் கருவிப்போதமுந் தோற்றுதா
கவி "னறிவுதயஞ்சூரியன்கா" ணென்றார்.

இந்தியங்கள்பத்தும் பஞ்சபூதங்களிடமாய் நின்று விடயங்களை
நேரேயபகரித்து விசற்கரிக்கப் பொருந்தியபோத மிறக்க விருந்தவி
டநின்மலசாக்கிரம். அவ்விந்தியங்களிடமாய் விடயங்களைப் பகுத்தறிய
ப்பட்ட வான்மாவி னிச்சா ஞானக்கிரியைகளுக் கிடமாகிய மனம் பு
த்தி யாங்காரங்களின் வியாத்தியறுமிடநின்மலசொற்பனம். ஆன்மசை
தன்னியத்திற் கதிட்டானமான சித்த விகற்பமொடுங்கினவிட நின்மல
சுழித்தி. அச்சைதன்னிய வாகனமான பிராணவாயுநீங்கினவிட நின்ம
லதுரியம். ஊசல்வடமற்றபோ ததற்குவீழ்ந்தவிட மாதாரமானாற்போ
லிங்ஙனங் கருவிப்போதமெல்லாங் கழிந்தவிடத் தான்மா வருளாதா
ரமாய்நின்ற சுத்தாவத்தை நின்மலாதீதம். இக்கருவிப் போதங்கழன்ற
சுத்தாவத்தையிற் சுடர்காட்டக்கண்ட கண்போ லருளாற் றன்னையறி
வது நின்மலசாக்கிரம். இங்ஙனந்தன்னை யறிந்தவிடத்துத் தனக்கொரு
சேட்டையற் றந்தவருளே தனக்காதாரமா யவ்வருளிற் றனசைவற
நின்றவிட மவ்வருட்டரிசனம். இங்ஙனமிவ்வருளைத்தரிசிப்பதுநின்மல
சொற்பனம் இச்சாஞானக்கிரியைதோன்றாது நின்றவிடம் பனை. இந்த
ப்பனையினது நின்மலமெல்லாந் தனதிச்சாஞானக்கிரியை தோன்று
துதனதாகி யெதிரீடு சிறிதுமின்றி யிப்பனையே தானாகியிருந்தவிட நி
ன்மலசுழித்தி. தானிப்பனையாகியவிடத்துக் கதிரொளி நேரேநின்றக
ண் ணக்கதிரிடத் ததீதப்படுந்தறுவாயி லிக்கண்ணுக் கந்தக்கதிரினது
வட்டப்பளபளப்புமாத்திரந் தோற்றுவதுபோற் பனையைநீங்கி யான
ந்தசத்தி நேரேநின்று தான்சிவத்தி லதீதப்படுந்தறுவாயி லானந்தா
நுபவம்பெறுவது நின்மலதுரியம். அக்கதிரினது வட்டப்பளபளப்பா
கிப சோபையைக்கண்டகண் ணக்கதிராகா திருக்கச்சிதேயுந் தன்பார்
வையுமிழந்து தன்னாற்காணப்பட்ட முதலையு மிழந் தக்கதிர் தானாய்
மிகவுமதீதப்பட்டாற்போ லங்ஙன மானந்தாநுபவம் பெற்ற வான்மா
வந்தவானந்தமாகா திருக்கச்சிதேயு மவ்வானந்தாநுபவத்தை யறிந்த
தானுமின்றி யானந்தமாய் நின்றமுதலுமின்றி யவ்வானந்தமே தானா
யதீதப்பட்டவிட நின்மலாதீதம். முன்சொன்னவைந்துங் கருவிகண்மு
ப்பத்தாறு நீங்குதற்கேது. பின்சொன்ன வைந்துந் தற்போதங்கெட்டு

ச்சிவத்தி லதீதப்படுதற்கேது. "சொன்ன ரவத்தைகளைந்து,, மென்ற திவையெனக்கொள்க.

"உச்சியிலேசொன்ன ரவத்தைகளைந்து" மென்றமையா னவ்வுச்சி சேர்பபுதற் கேதுவாகிய வவத்தைகளைந்தினையுஞ் சொல்லப்பட்டது.

இருளைப்போற்கேவலம், முடுக்களைப்போற்சகலம். உமுடுவின்றியி ருளைமாத்திரங் காணுங்கண்போலவு மிருளிடத்துடுவாற்காணுங் கண் போலவுங்கேவல சகலங்களையறியுமான்மா சூரியவுதயத்தி லிருளுமு டுவுமின்றிச் சூரியப்பிரகாச மாத்திரங்கண்ட கண்போ லருடோற்றிய காலத்து முன்றோன்றிய கேவலவிருளுங் கருவிக்கூட்டங்களுந் தோ ன்ற தவ்வருளைமாத்திரங் கண்டுகொண்டிருப்ப தருட்டரிசனம். சூரி யப்பிரகாசத்தைக்கண்ட கண் புடைபெயர்ந்து நோக்கா தச்சூரியப்பி ரகாசத்தி லேகீபாவமாய்நிற்பதுபோ லருளென்றுந் தானென்றுஞ் சி றிதுந் தோன்ற தவ்வருளேதானாய் நிற்பது பரைதரிசனம்.

சூரியப்பிரகாசத்தைவிட் டச்சூரியனது வட்டப் பளபளப்பைப் பார்த்தகண்போ லான்மா பரையைநீங்கி யானந்தபோதம் பெறுதல். சூரியனது வட்டப் பளபளப்பைப் பார்த்தகண் டன்பார்வையு மிழந் தப்பளபளப்பாகிய காட்சியையு மிழந்தச்சூரியனு ளதீதப்பட்டதுபோ லானந்தபோகத்தைப் பெற்றவான்மா வதனைப்பெற்ற தானென்பதும வ் வானந்தமென்பது மின்றி யவ்வானந்தந் தானா யதனு ளதீதப்ப டுவதீண் டிருவகையாய்க் கூறிய வவத்தைகட் குவமை யிதனானுங் காண்க. (௬)

(கவி - ௰. அ - கை.)

அந்த ஞானத்தைநீர் கூறிய நின்மலாவத்தையினின்று பெறுவ தேயன்றித் துறவின்கண் ணின்று தவத்தைப்பண்ணிப் பெறக்கூடா தோவெனின், கருவிகளின துண்மையைக்காணி னெல்லாம் பொய் யாய்விட்டு ஞானந்தோன்றுமன்றித் தவத்தா னங்ஙனம்விடுதலு ஞா னந் தோற்றலுமின்றென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்

மெய்யாகத் தோன்றிவிடும் பொய்யை விசாரிக்கிற்
பொய்யாய்ச் சுவர்ப்பாம்பாய்ப் போமன்றி - யையா
தொழிலைச் செயிற்றானுஞ் சோரனைப்போற் றோன்றிக்
கழலப் பறையறைதல் காண்.

(இ-ள்.) மெய்யாகத்தோன்றிவிடும் பொய்யைவிசாரிக்கிற் பொய்யாய்ச் சுவர்ப்பாம்பாய்ப்போமன்றி யையாதொழிலைச்செயில்" எ-து. விசாரியாதபடியினாலே மெய்யாகத்தோன்றும் பொய்யாகிய கருவிக்கூட்டங்களை துண்மையை நின்மலாவத்தையினின்று விசாரித்தறியிற் சுவரிலெழுதிய பாம்புபோலாய்ப் பொய்யாய்த்தோன்று மஃதன்றி யவற்றை யங்ஙனம் விசாரித்தறிந்து நீக்காது வைத்துக்கொண் டவைபோம்படிக்கு மாணுக்கனே நீதவத்தொழில்களைச் செயதியெனி னதுதான் ?

"தாணுச்சோரனைப்போற்றோன்றிக் கழலப்பறையறைதல்காண்" எ-து. சடமாகிய கட்டையைத் தீபத்தாற் பாராதபடியினாற் கள்வனைப்போற் றோன்றக்கண்டுவெருண் டக்கள்வ னீங்கும்படிக்குப் பறையறைத லோடொக்கும். எ-று.

ப-ம். சுவரிலெழுதியபாம்பிற்குத் தோற்றரவுமாத்திரமேயன்றிச் சேட்டையின்றாயதுபோற் கருவிகளை யெதிரிட் டறிந்தபோது பிரபஞ்சந் தோற்றரவு மாத்திரமேயன்றி முன்போற் சேட்டியா தாகலினங்ஙனமுவமைகூறினார். நின்மலாவத்தையினின் றருட்கண்ணா லெதிரிட்டுப்பார்க்கும்போது சடமாய் நீங்குங் கருவிகளை மெய்யாகக் கருதிக்கொண் டவைநீங்கும்படிக்குத் தவத்தொழிலைச் செய்யத்தொடங்கினமையா லிங்ஙன முவமைகூறினார். (௰)

(கவி - ௰௧. அ - கை.)

கருவிகள துண்மையை யறிந்தா லெல்லாம் பொய்யாய்ப்போமென்றீ ரப்பிரபஞ்சமுந் தேகமும் பரிச்சேதமின்றாய்ப் போமோவெனின், கருவிகள துண்மையறிந்தவிடத்துத் தேகாதிப்பிரபஞ்சங்கள் முன்போன் மயக்குதலின்றிக் காட்சிவாதனைமாத்திரையாய் நிற்குமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உலகத்தை மாயா வுடலைப்பொய் யென்றா
லலகைத்தேர் போலறிவ தல்லால் - விலகித்
துடைத்தொழித்த லாகுமோ சொற்பனத்தீச் சூழ்ந்தாற்
கடக்கவிடுஞ் சாக்கிரம்போற் காண்.

(இ-ள்.) உலகத்தை மாயாவுடலைப் பொய்யென்றா லலகைத்தேர் போலறிவதல்லால் விலகித் துடைத்தொழித்தலாகுமோ" எ-து. மா

யாகாரியமாகிய விப்பிரபஞ்சத்தினையு முடம்பினையும் பொய்யென் றறிவித்தாற் பேய்த்தேர்போற்பொய்யாகக்கண் டறிவதன்றி யத்தேகாதி பிரபஞ்சங்களைப்பரிச்சேதமாய் நீக்கித்தள்ளியொழிக்கக்கூடுமோ; நீரிங்ஙனங்கூறியவாற்றான் ஞானமு மஞ்ஞானமுங் கூடியிருக்குமோ வெனின் ?

"சொற்பனத்தீச்சூழ்ந்தாற் கடக்கவிடுஞ் சாக்கிரம்போற்காண்" எ-து. சொற்பனவத்தையி லொருவனைக்கடக்கும்வழியின்றி யக்கினி சூழ்ந்துகொண்டா லவ்வக்கினியைக் கடக்கவிடுஞ் சாக்கிராவத்தைபோ லுன்னைச் சூழ்ந்துகொண்டுநின்ற தேகாதிப் பிரபஞ்சங்களைஞானசூரியன் வந்துதோன்றி லுனக்குப்பொய்யாகக் காட்டிவிடுமென்றறிதி. எ-று.

ப-ம். பேய்த்தேர்நீரைப் பொய்யென்று கண்டபோது நீர்போற்றோற் றரவு முன்னர் மெய்யென்றுகண்ட வாசனையு மிருக்கும், சொற்பனத்தீயைக் கடக்கவிட்ட சாக்கிரத்தி லித்தோற்றரவின்றி முன் கண்டவாசனைமாத்திர மிருக்கு மங்ஙனம்போற் சுத்தாவத்தையினிற் போர்க்குஞ் சுத்தத்தி னிற்போர்க்கும் பிரபஞ்சந் தோற்றுமாகலி னவ்விரண் டுவமையுங்கூறினார். (௪௧)

(கவி - ௪௨. அ - கை.)

கருவிகண் முப்பத்தாறையும் பொய்யாகக்கண்டு நீங்கினா லந்த ஞானந் தோன்றுமோவெனின், கருவிகளனைத்தும் பொய்யாக வுள்ளபடி யறிதலே ஞானமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பொய்யென்ற வார்த்தை புரையற்று மெய்யானான்
மெய்யென் பதுதேட வேண்டுமோ - மையிருளைத்
தீர்த்த வெயிலைத் திரும்பி யசைத்திமைத்துப்
பார்த்ததிலென் சந்தையம்வைப் பாய்.

(இ-ள்.) பொய்யென்றவார்த்தை புரையற்றுமெய்யானான்மெய்யெபது தேடவேண்டுமோ" எ-து. கருவிகளெல்லாம் பொய்யென்று நீ சொன்ன வார்த்தைபோற் குற்றமற் றுனதறிவிற் கவைபொய்யென்பதுண்மையாய்த் தோற்றுமெனின்; மெய்யாகிய ஞான மென்பது வே

றுதேடவேண்டுமோ; வவத்தையைப் பொய்யாய்த் தோற்றுவித்தது தானே ஞானமன்றோ வாயி னிங்ஙனந்தோற்றுவித்த ஞானத்தை யான்கண்டுகொண்டிருக்க வேண்டாவோவெனின் ?

"மையிருளைத்தீர்த்தவெயிலைத்திரும்பி யசைத்திமைத்துப்பார்த்ததிலென்சங்கையம் வைப்பாய்" எ-து. மயக்கமாகிய வாணவ விருளைத்தீர்த்த ஞானப்பிரகாசத்தை யுன் போதத்தா லெதிரிட் டசைத்துப்பார்த்து மங்ஙனம் பாராதொழிந்து மந்த ஞானப் பிரகாசத்தை யிதஃதாமோ வன்றோவென்று நீயென்னை யையுறுகின்ற யங்ஙனமையுறா ததனு ளசைவற நிற்றி. எ-று.

ப-ம். சூரியப்பிரகாசத்தா லிரு ணீங்கி யப்பிரகாசத்தைக்கண்ட கண் ணீதப்பிரகாசமோ வன்றோவென் றதன்மே லையுறா தவ்வொளியி லேகீபாவமாய் நிற்பதுபோ லருளி லசைவற நிற்கவேண்டுமாகலி னங்ஙனமுவமை கூறினர். (௯௨)

(கவி - ௯௩. அ - கை.)

தேகாதிப்பிரபஞ்சமெல்லாம் பொயயென்றும் பிறவி துன்ப மீதாகாதென்றும் ஞானிகளும்ஞானிகளல்லாருங்கூறுகின்ற ரிவருண் ஞானிகளை யறிவதெங்ஙனமெனின்; வாசகஞானிகளையும் அநுபவஞானிகளையு மறிதற்கேது வித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

வேண்டாம் பிறப்பென்ற வார்த்தையினின் மெய்விடயந்
தீண்டா ததிலே தெரியாதோ - காண்பீ
ருடம்பு மிகையொன் றிலாமையே நோன்பென்
றடங்க வடங்கின ரா.

(இ-ள்.) வேண்டாம்பிறப்பென்றவார்த்தையினில்" எ-து. பிரபஞ்சம் பொய்யென்றும் பிறவியாகாதென்றும் மெய்ஞ்ஞானிகளும் பொய்ஞ்ஞானிகளுங் கூறிய வார்த்தையின லவர்களைப் பிறித்துக்காணக்கூடாதாயினும் ?

"உடம்புமிகையொன் றிலாமையேநோன்பென் றடங்கவடங்கினரா மெய்விடயந் தீண்டாததிலேதெரியாதோ காண்பீர்" எ-து. உ

டம்பைச் சத்துருவென்று மோர் விடயங்களினும் பற்றிலாமையே நோன்பென்றுமறிந் தத்தேகபோகங்களை யானெனதென்று கருதும் புறத்து நின்ற போதமடங்க வுண்ணின்ற போதமடக்கிய மெய்ஞ்ஞானிகளை யவர துடம்பு விடயங்களைப்பற்றாததனாற் றெரியுமாகலி னிக் குறிப்பாற் கண்டுகொள்வீர். எ-று.

ப-ம். மெய்யாற்காண்பீ ரென்றமையால், வார்த்தையிலே காணக்கூடாதாயினுமென்பது வருவிக்கப்பட்டது. மெய்யோடு இந்தியங்களொற்றுமையா யிருத்தலின் "மெய்விடயந் தீண்டாதென்று" ஆகுபெயராகக்கூறினர். என்று என்பதனை யுடம்புமிகை யென்றதனோடுங் கூட்டுக. (௰௩)

ஆறாவது - விரத்திவிளக்கம்.

முற்றிற்று.

ஆஉ திருவெண்பா - ௱௯௪.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது

துறவு.

(அஃதாவது,) எத்தனை யுட்டுறவுடையாராயினும் புறப்பற்றோ டிருப்பி னிப்பற் றோரோர்காலை யறிவை மயக்குமாகலிற் புறத்துற வும் வேண்டுமென் றிதனுட் புறத்துற விலக்கணங் கூறினாராகலி னி வ்வதிகாரத்திற்குத் துறவென்று பெயராயிற்று.

(கவி - க. அ - கை.)

இளமைக்கண்ணே வனிதாதிபோகங்களைத் துறந்து ஞானாசாரி யனை யடைந்து வீடடையவேண்டுமென் றித்திருவெண்பாவிற்கூறு கின்றார்.

தேடப் படும்பொருளைச் சிக்கனவா கப்புதைத்துக்
கோடிக் கொருநிமிடங் கொள்ளுகினுங் - கூடாத
வாணாளை வீண்கழிக்கு மானிடனைப் போன்மயக்கம்
பூணார்பொய் கண்டுதுறப் போர்.

(இ-ள்.) தேடப்படும்பொருளைச் சிக்கனவாகப்புதைத்துக் கோடிக் கொருநிமிடங்கொள்ளுகினுங்கூடாத வாணாளைவீண்கழிக்கும்" எ-து. தம்மாற்றேடப்பட்ட திரவியங்களையெல்லாஞ் சிலவழியாது பத்திரமா கச் சேமஞ்செய்து வைத்துக்கொண்டு தாமுடலைவிட்டுப்போங்காலை நிமிடகால மவ்வுடலிருக்கக் கோடிதிரவியத்துக்குப் பிறர்கையி லாயு ள் வாங்கிக்கொள்ளுவோமெனினுங் கூடாத விவ்வுடலோ டுயிர் வா ழ்நாளைத் தவத்திற்கழியா தவத்திற்கழிக்கும் ?

"மானிடனைப்போன்மயக்கம் பூணார்போய்கண்டுதுறப்போர்" எ-து. பேதை மானிடனைப்போற் றேகாதிப்பிரபஞ்சங்களை மெய்யா

க்கண் டிவற்றின் மயக்கம் பூணுர்க ளிவற்றைப் பொய்யாகக்கண்டுது றப்போர். எ-று.

ப-ம். கடவுளராயினு மங்ஙன மாயுட் கொடுக்கவுங் கொள்ளவுங்கூ டாதாகலிற், கூடாதவென்முர். (க)

(கவி - உ. அ - கை.)

மனைவியாதிகுடும்பம் வினைக்கீடாய் வந்ததன்றித் தமக்குறவன் றென்பது மனித்தியமென்பது மித்திருவெண்பாவிற்கூறுகின்ருர்.

ஊர்க்குருவி யும்வளர்த்த குஞ்சு மொருமனையிற்
பாக்கனையும் பார்த்திதுநம் பற்றென்னே - மூர்க்க
ரரிபிரம ரிந்திரர்கள் வாழ்வனித்த நம்வாழ்
வொருபொருளோ வென்றொழிவா ரோ.

(இ-ள்.) ஊர்க்குருவியும்வளர்த்தகுஞ்சுமொருமனையிற் பாக்கனையு ம்பார்த்திதுநம் பற்றென்னே மூர்க்கர்" எ-து. ஓர்மனையில் வாழாநி ன்ற ஊர்க்குருவியு மதுவளர்த்த குஞ்சுகளு மம்மனையிற் பூனையு ம ப்பூனையினது குட்டிகளு மிளமையி னல்வினைக்கீடாய்த் தம்மு ளுற வாய்க் கூடியிருந்ததையு முதிர்ந்தபோது தீவினைக்கீடா யுறவாயிருந் த தாமே தம்முட்பகையாய்ப் பிரிந்துபோனதையு மம்மனையு ளிருந் து நாம் பார்த்திருந்து மங்ஙனம் வினைக் கீடாய்வரு மனைவி மக்கண் முதலிய விப்பிரபஞ்சத்தினைத் துறவா திதன்மேன் மனதுபற்றியிருத் த லிதென்னைகொலோ? ஆயி னவற்றைப்பார்த்திருந்து மெல்லோரு மில்வாழ்க்கையோடு மிருக்கவில்லையோ நீ ரிங்ஙனங் கூறிய தென்னை யெனின்; அம்மனைவிமக்கண் முதலிய விப்பிரபஞ்சம் வினைக்கீடாய் வந்ததென் றறியா தப்பிரபஞ்சத்தோடுங் கூடி வாழ்பவர் மூர்க்கர்?

"அரிபிரமரிந்திரர்கள்வாழ்வனித்தநம்வாழ் வொருபொருளோ வென்றொழிவாரோ"எ-து. அப்பிரபஞ்ச மிருவினைக்கீடாய் வந்ததெ ன்றறிந்தவுத்தமராயினு ரியாவர்க்கு மேலாய வரிபிரம ரிந்திரர்முதலி ய தேவர்கள்வாழ்வு மனித்தியமென்று வேதாகமங்கள்கூறுதலா ன மதற்பவாழ் விதோர் பொருளோவென்று கருதி யப்பிரபஞ்சத்தைத் துறவாதொழிவாரோ. எ-று.

க-து. ஒருவனல்வினை யநுபவிக்குங்காலத்துத் தாய் தந்தை மனைவி ம க்கள் சுற்றம் நட்பினர் முதலியோ ருறவாயிருந் திதஞ்செய்வர். அவன் தீவினை யநுபவிக்குங்காலத் தங்ஙன முறவாயிருந்தவர்தாமே பகை யா யகிதஞ்செய்வாராகலி னிவ ரிருவினைக் கீடாய்வந்தவரென் றறிந் து துறக்கும்படிக் கவைகளை யுவமை கூறினர். (உ)

(கலி - ௩. அ - கை.)

இங்ஙன மெல்லாமவற்றையுந் துறந்தவ ரியாவரெனின், செல்வ மிளமை யழகு முதலானவற்றுட் சிறந்திருந்து மவற்றின்பற் றோரணுவளவுமின்றி யவற்றையெல்லாந் துன்பமென்று துரிசறக் கைவிட்ட பட்டினத்துப்பிள்ளைநாயனுர் பத்திரகிரிநாயனுர் போன்று? துறந்தோரே யெல்லாவற்றையுந் துறந்தோராவ ரென்பதும்; அச்செல்வ முதலியவற்று ளொன்றேனு மின்றாகவுந் துன்பந் தருதற்கிடமாகிய மனைவியாதி குடும்பத்தை யின்பமெனக்கருதிக்கைவிடற் கஞ்சுவாரே ஆணவத்தான் மறைப்புண்டவராவ ரென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பட்டினத்துப் பிள்ளையினைப் பத்திரகிரி யையப்பாவி
விட்டுவிட மாட்டார் வெறுவீடர் - வெட்ட
வெறுவெலும்பை நாய்கறண்ட வேந்தர்வர நாய்பார்த்
துறுமுவதைக் காட்டுவோ மோ.

(இ-ள்.) பட்டினத்துப்பிள்ளையினைப் பத்திரகிரியைப்பாவி விட்டுவிடமாட்டார்வெறுவீடர்" எ-து. அளவற்ற செல்வராயிருந்து மச் செல்வங்களெல்லாந் துரிசறத்துறந்த பட்டினத்துப்பிள்ளை நாயனுரையும் பத்திரகிரிநாயனுரையுந் தோத்திரம்பண்ணி மனைவியாதிய பற்றுக்களைவிட்டுத் துறக்கமாட்டார்கள். மிகுந்தமிடியரா யிருந்தாராயினு மனைவி மக்கண் முதலாயினோரையாம் விடுத்துத் துறந்தோமே லவரை யயலார் கைக்கொண்டுபோவாரோவெனின்?

"வெட்டவெறுவெலும்பை நாய்கறண்டவேந்தர்வர நாய்பார்த் துறுவமுதைக்காட்டுவோமோ"எ-து. ஊன்சிறிது மின்றிய வெள்ளெலும்பை யோர்நாய் தனது பற்கொடுகறண்ட வந்நாய் முன்ன ரரைய ரெதிர்வர வந்நாயவ்வெலும்பை யவர்கவர்ந்து கொள்வரென்றுகருதி யவரைப்பார்த் துறுமுவதைப்போ லியாமுங் காட்டுவோமோ.எ-று.

ப.ம். அளகேசனைப்போன்ற செல்வத்தினையு மருந்ததிபோன்ற கற்பினையுடைய மனைவியையுங்காமனைப்போலுங் கட்டழகினையுந் துறந்தோர் பட்டினத்துப்பிள்ளை நாயனுரும் பத்திரகிரி நாயனுரு மாகலி னவரைத் துறந்தோரென் றெடுத்துக்காட்டி யம்மூவகையு ளொன்றேனு மில்லாரு மவரைப்போற் றுறக்கமாட்டாமையால், "விட்டுவிடமாட்டார்வெறுவீடர்" என்றார்.

"எஃலும்புகறண்டு நாய்க்குத் தனதெயிற்றி லதுதைத்த துன்பந் தெரியா தின்பமாத் தோற்றல்போல வனிதாதிபோகங்களாகிய துன்பத்தை யாணவ மின்பம்போன் மாறுபடுத்திக்காட்ட வின்பமாகக்கருதலான், "வெறுவெலும்பை நாய்கறண்ட" வென்றார். தான்பற்றிய வெலும்பை யாரையர் கவர்வரெனக்கருதி யவரைப்பார்த் துறுமுவதுபோற் ரும்பற்றிய குடும்பத்தைப் பிறர்கவர்வரெனக் கருதிக்கூறலானு "முறுமுவதைக்காட்டுவோமோ, வென்றார். (௩)

(கவி - ௪. அ - கை.)

நீ ரிங்ஙனங்கூறியவாறே துறந்தோர் பிறப்பு நீங்குவரோவெனின், போகவாதனைக ளெல்லாம்பற்றரத்துறந்தோர் தேகவாதனையாதிகளற்று ஞானத்தால்வீடடைவது மெய்ம்மையாகலி னவர்க்கினி யென்றும் பிறப்பின்றென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

நாடுநகர் வீடுடையா டாய்தந்தை நட்புமக்கண்
மாடுகுலம் பொன்னுடம்பின் வாதனைகள் - கூடத்
தொடுத்தவலைக் கண்ணித் துடக்கிதனை யிப்போ
விடப்பெறுவா ரேன்பிறப்பார் மேல்.

(இ-ள்.) நாடுநகர் வீடுடையாடாய்தந்தை நட்புமக்கண் மாடுகுலம் பொன்னுடம்பின்வாதனைகள்" எ-து. நாடுந்நகரும் வீடுமனைவியுந் தாயுந் தந்தையும் நட்பு மக்களு மாடுஞ் சாதியுந் திரவியமு மிவைமுதலிய வுடம்பு வாதனைகளும் ?

"கூடத்தொடுத்தவலைக்கண்ணித்துடக்கிதனையிப்போ விடப்பெறுவாரேன்பிறப்பார்மேல்" எ-து. தாமகப்படப் பிணித்தவலையும் கண்ணியுமாகிய தொந்தனையென்றறிந் தித்தொந்தனை யிப்போது விடப்பெறுவா ரினிமே லேன் பிறப்பார். எ-று.

ப-ம். உடம்பின்வாதனைக ளென்றமையா லாடையாபரண மியானை குதிரை கவிகை சிவிகை சாய்மனை முதலியவுங்கொள்க. இங்ஙனங்கூறிய வெனதென்னும் போகப்பற்றை நீத்துத் தவஞ்செய்வோர்க் கியானென்னுந்தேகப்பற்றுமறும். இத்தேகப்பற்றறவே யிவற்றை யானெனதென்று புறத்துநின்ற போதமறும். இப்போதமறவே வுண்ணின்ற போத மகத்தவாசனைபண்ணுது சுத்த வாசனைபண்ணு மிவ்வாசனையான் ஞானக்கிடைக்கு மிஞ்ஞானத்தால் வீடுளவாமாகலின் "என் பிறப்பார்மே" லென்றார். (௪)

(கவி - ரு. அ - கை.)

நீர்கூறிய மனையாதிய பற்றுக்களையெல்லா துறந்து பொன்னை மாத்திரம் பிடித்துக்கொண்டு தவஞ்செய்யலாகாதோவெனின், பொன் மனத்தானினைப்பினு மாலரு மயக்கந்தருதலானும்; ஈட்டலாதியான் விழைவு வெகுளியாதிகளடுத்துத் தவப்பய னன்றி யில்லறப் பயனு மழிதலானும்; பெண்ணாசையினும் பெரும்பாவந் தருவதாகலினதனைப் பற்றலாகாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தின்னிற் றிமிரில் விடம்பிடித்துத் தீர்ந்துவிடும்
பொன்னை நினைக்கப் பொறாதுகாண் - பின்னை
மருந்தாலு மந்திரத்தி னாலுந் தவிராப்
பெரும்பாவம் பெண்ணிற் பெரிது.

(இ-ள்.) தின்னிற்றிமிரில்விடம்பிடித்துத்தீர்ந்துவிடும் பொன்னைநினைக்கப்பொறாதுகாண் பின்னை மருந்தாலுமந்திரத்தினாலுந் தவிராப் பெரும்பாவம்" எ-து. கோபாதிகளாகிய திமிரினால் விடமுண்டா லவ்விடஞ் சிறிதுபோதுதாழ்ந்து தலைமீக்கொண்டு பின்னர் மணிமந்திர வவிழ்தங்களாற் றீர்ந்துபோம் பொன்னைக்கரத்தானும் பற்றாது வாக்கானுங்கூறாது மனத்தா னினைக்கவே யப்பொன்னாசையாகியவிடமரைக்கணமேனுந் தாழா தந்நினைவினும்விரைந்து தலைமீக்கொண்டு பின்னர் மணியானு மருந்தானு மந்திரத்தானுந் தீராதபெரும்பாவமாகலின் ?

"பெண்ணிற்பெரிது"எ-து. நீவிடுக்கின்றேனென்ற பெண்ணாசைவிடத்தைப்பெற்றவிப்பொன்னாசைவிட மிகவும்பெரி திதனைமனத்தானும் நினையாது விடவேண்டும். எ-று.

ப-ம். துறந்தோர்பொன்பிடித்தா லதனைப்பாதுகாத்தற் கிடம் பிடிக்கவேண்டு மஃதன்றி யப்பொன்னை வளர்த்தற் கவாத்தோன்றி அப்க்குவர்க்கு ஞானசாத்திரங்களைக் கூறிப் பொன்கொடுத்தார்மேல் விழைவுங் கொடாதார்மேல் வெகுளியுந் தோன்று மிவைதோன்றவே துறவான்வருந் தவப்பயனுமின்றி முன் பெண்ணோடுங்கூடிச்செய்த வில்லறப்பயனுமின்றிக் கேடுவருமாகலிற் "பெரும்பாவம் பெண்ணிற்பெரி" தென்றார். (ரு)

(கவி - சா. அ - கை.)

இங்ஙனந் தேகாதிப்பிரபஞ்சமெல்லாம் பொய்யென்று நீர்சொல்லக்கேட்டதேயன்றி மற்றியாவருஞ்சொல்லக்கேட்டிலேனென்றமா

ணுக்கனைநோக்கி, உடம்புமுதலிய பிரபஞ்சந் தோன்றியழிவது பிரத்தியக்கமாகவிருத்தலிற் கானற் சலம்போன் றழிவதென்று ஒருவர் கூறக் கேட்கவேண்டுவதின்றென்பதும், இங்ஙனம் பிரத்தியக்கமாயிருப்பினு மறியா ரஞ்ஞானிகளென்பதும், சுட்டறிவு போய்ப் பிரபஞ்சத்தை யநித்தியமென்றறிந்து விரைந்துவிட்டுத் துறப்பதே ஞானமென்பது மித்துறவுடையோ ரீண்டுமீண்டும் பிறவா ரென்பதுந் தவக்குறைவான் மீண்டாராயினுமொன்றினும் பற்றுதலற் றிருப்பரென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

செல்வ மிளமை யுடம்புபேய்த் தேரென்று
சொல்லுவதென் காணுரோ சுட்டதுபோ - யொல்லை
விடுவோர் பிறப்பிறப்பின் மீளார்கண் மீண்டாற்
றொடுமோ சிவனைத் தொடா.

(இ-ள்.) செல்வமிளமையுடம்புபேய்த்தேரென்று சொல்லுவதென்காணுரோ" எ-து. செல்வமு மிளமையு முடம்பு மிவை முதலிய பிரபஞ்சங்களுங் கானற் சலம்போலப் பொய்யென் றியாங் கூறவேண்டுவதென்னை; யவைமெய்போற்றோன்றியழிவனவற்றைத் தாங் காட்சிப்பிரமாணமாகக் காணுர்கொல்லோ? ஆயினெல்லோரும் ஞானத்தாற் பிறப்பறுமென்று கூற நீர் துறவாற் பிறப்பறுமென்று கூறியதென்னையெனின்?

"சுட்டதுபோயொல்லை விடுவோர்பிறப்பிறப்பின் மீளார்கண் மீண்டாற் றொடுமோசிவனைத்தொடா"எ-து. தேகாதிப்பிரபஞ்சங்களை யெனதியானென்று சுட்டி யறியு மிச்சுட்டுப்போதம்போ யப்பிரபஞ்சத்தைச் சீக்கிரத்தில்விட்டுத் துறப்போர் பிறப்பிறப்பின் மீண்டு வாரார்கள். ஞானக்குறைவினுன் மீண்டார்களேனு முற்றுறந்து தவம்பண்ணிய வாசனையா லப்பற்றுக்களைக்கடந்து நிற்பரேயன்றி யவைப் பற்றுந் தீண்டுமோ. தீண்டாதாயினும் பிறப்பின் மீண்டோரைத் தீண்டாதோவெனி னவர் சிவனைப்போலு மொன்றோடும்பற்றற்றுடையாராகலிற் றீண்டாது. எ-று.

ப-ம். அனித்தியவிவேகந்தோன்றிய வக்கணமே தாழ்த்திரா தெல்லாவற்றையும் விடவேண்டுமாகலி "னொல்லைவிடுமோ"வென்றார். முற்பிறப்பி லவாவுடையார்க் கிப்பிறப்பினு மதுதொடர்தல்போல முற்பிறப்பி லவாவறுதியுடையார்க் கிப்பிறப்பினு மவ் வவாவறுதியே தோற்றுமாகலிற் "சிவனைத்தொடா"வென்றார். (௬)

(கவி - எ. அ - கை.)

இந்த வவாவறுதியினால் வரப்பட்ட வின்ப மென்னையென்ற மாணாக்கனை நோக்கி; அவாவினா லற்பவின்பம் பெறுதல்போ லவாவறுதியாற் பேரின்பம் வருமென்பதும், அவாவினாற் றமக்கு நேரிடு மநர்த்தத்தை யுண்மையாய் விசாரித்தறியி னவ் வவாவறுதி வருமென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

ஆசையினா லற்பசுக மாயழிந்தாற் பேரின்ப
மாசையின்போக் கென்றறிய லாகாதோ - வாசை
நளிகைக் கழுக்குவந்த நாசமென நாடித்
தெளியப்போ மற்றிவையைந் தும்.

(இ-ள்.) ஆசையினாலற்பசுகமாயழிந்தாற்பேரின்ப மாசையின்போக்கென்றறியலாகாதோ" எ-து. ஆசையினாலே போதஞ் சகமுகமாய்ச்சென்று விடயங்களிலழுந்தத் தமக் கவற்று ளற்பமாய சுகந்தோன்றியழியுமாணா லிவ்வாசை நாசமே சிவத்திற்றோன்றும் பேரின்பம் பெறுதற் கேதுவென் றறியலாகாதோ? வாயி னவ்வாசைபோமா றெங்ஙனமெனின்;

"ஆசை நளிகைக்கழுக்குவந்த நாசமெனநாடித் தெளியப்போ மற்றிவையைந்தும்" எ-து. அவ்வாசை போதத்தின்கண் ணேறுவது நெய்யாதி வார்த்தடைக்கு மூங்கிற்குழாய்க் கழுக்குவந்த நாசம்போலத் தமக்கு நாசமாமென விசாரித்தறிய வவ்வாசையின் போதமாய விடயங்களிற் பிரிந்துசெல்லு மிவ்வைந்தவாவு நீங்கும். எ-று.

ப-ம். ஆன்மா வாசையினால் விடயத்திலழுந்திச் சிற்றின்பம் பெறுதல்போ லவ்வாசைநாசத்தாற் சிவத்திலழுந்திப் பேரின்பம்பெறுமாகலிற் "பேரின்பமாசையின் போக்கென் றறியலாகாதோ" வென்றார்.

தேனெய் யெண்ணெயாதிவார்க்கு மூங்கிற்குழாய்ச் சிறுதுவாரத்தின்கண் மரவட்டை முதலிய நுழைந்தா லதிற் சுழல்வதேயன்றியழுக்கினான் மீளமாட்டா தாகலின்; முற்போற்றேனாதிவார்த் தங்கிகரியா ததனைப்புறம்பாய் விடப்படும் அதுபோ லாசை போதத்தினேறி மிகுந்தபோ தெவ்விதத்தாலுமீளா ததனா லப்போதத்தில் வீட்டின்பத்திற்கேதுவாய துறவு மெய்யுணர்வுமுதலிய நற்குணங்களேறு திக்குணங்க ளேறாமையின் முன்போற் பிறவித் துன்பத்தையே பெறுமாகலி னங்ஙன முவமைகூறினார்.

நனிகையின்மரவட்டையாதி நுழையும்போ தின்பம்போ லெ ளிதி னுழைந்து மீளமாட்டாததுபோற் போதத்தின்க ணாசையேறும் போ தின்பம்போற்றேன்றி யெளிதிலேறி மீளாமைக்குங்கொள்க. ந னிகையென்பது மூங்கிற்குழாய். அதுதிசைச்சொல். (எ)

(கவி - அ. அ - கை.)

இனித்துறவினதுமுடிவுந் துறந்துசெய்யுந் தவத்தினதுமுடிவும டியேற் கருளிச்செய்யவேண்டுமென்ற மாணாக்கனைநோக்கி;உள்ளும் புறம்பு நிராசையோடிருப்பது துறவினது முடிபென்பதும், போத மொழிந் தொன்றோடு தாக்கற்றிருப்பது தவமுடிபென்பது மித்திரு வெண்பாவிற் கூறுகின்றார்.

உதயந் தொழப்போவார்க் குள்ளும் புறம்பும்
புதையவொளி வீசுமா போலே - பதிமோகி
தீக்காட்டி லேகொடுக்கச் சென்றவா கண்டக்காற்
றாக்காத தன்றோ தவம்.

(இ-ள்.) உதயந்தொழப்போவார்க் குள்ளும்புறம்பும் புதையவொ ளிவீசுமாபோலே" எ-து. சூரியவுதயந்தொழச்செல்வோர்க் குள்ளு ம்புறம்பு மிருண்மறைய வொளிவீசுமாறுபோலே மனைசுதர் முதலி ய பற்றுக்க ளெல்லாவற்றையும்விட் டவற்றின்மே லுளத்தெழு மவா வினையு மறுத்துக் கண்டவிடயங்கண்மேற் சென்றுபற்று மிந்தியங்க ளையு மடக்கி யுள்ளும்புறம்பு மாசையாகிய விருளற நிராசையாகிய வொளிவீச நிற்றலே துறவினதுமுடிவு ?

"பதிமோகி தீக்காட்டிலேகொடுக்கச்சென்றவாகண்டக்காற் றாக் காததன்றோதவம்" எ-து. தனது புருடன்மே லதிமோகியாயிருந்து ளா ளவன் மரித்தகாலை யவனுக்குத் தன்னைக் கொடுக்கச் சுடுகாட்டிற் சென்றவாறு கண்டவளைப்போலுந் தற்போதத்தைச் சிவனுக் கூண கக் கொடுத்துத் தாமொன்றோடுந் தாக்கற்றிருத்தலன்றோ தவத்தின து முடிவு. எ-று.

ப-ம். உதயந்தொழுவார்க்குக் கண் விழித்தபோது மிமைத்தபோ து மொளி வீசுதல்போலுந் துறந்தோர்க்குப் பொறிகளால் விடயங் களைக் கண்டபோதுங் காணாதிருந்தபோது "முள்ளும்புறம்பு நிரா சையோ டிருக்கவேண்டுமாகலி" னங்ஙனமுவமைகூறினர். "தவமெ ன்றமையாற்,, றுறவு வருவிக்கப்பட்டது. (அ)

(கவி - கூ. அ - கை.)

இங்ஙன நிராசையோடிருந்தோர்க்குத் தற்போத மறுமோவென் றமாணாக்கனை நோக்கி; நிராசையுடையோரை வலிந்து விடயங்களடுக் கினும் போத மசையாதாகலி னிராசைவரிற் போதவொழிவு தானே வருமென்பது மிங்ஙன மிருத்தல் பக்குவர்க்கரிதென்பது மங்ஙனமா யினுமவர்க்குமுபாயத்தா னவாவறுதிவருமாயினப்போதச்சேட்டை யளவிட் டெறியப்படுமென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

ஊமைமணி யாட்டுகினு மோசையழிந் தாற்போல
வாமதுபோ னிற்க வரிதுகா - ணுமாய்
வளர்ந்த வசத்தையெலா மாளமரக் காலா
லளந்தெறிந்து போட்டதுபோ லாம்.

(இ-ள்.) ஊமைமணியாட்டுகினு மோசையழிந்தாற்போல வாம்' எ-து. நாவிழந்தமணியைப்பிடித்தசைப்பினு மோசையொழிந்துநின் றாற்போலப் பஞ்சவிடயங்களும் வலியவந்தடுப்பினு மதிதீவிரபக்குவ ர்க்குப் போதங் கலங்காது நிராசையே யுண்டாம்?

"அதுபோனிற்கவரிதுகாணுமாய் வளர்ந்தவசத்தையெலா மாள மரக்காலா லளந்தெறிந்துபோட்டதுபோலாம்" எ-து. அவரங்ஙன நி ற்கு மதுபோனிற்க மற்றையபக்குவர்க்குமிகவுமரிதுகாண். நானுவுபா யத்தானு மங்ஙன் னிற்கவருமாயி னுசையான் முன்னர்ப்போத மேலி ட்டு மேன்மேல்வளர்ந்த வதனதுசேட்டையெல்லா மிறந்து போம்ப டி யறிவாகிய மரக்காலா லிவ்வளவென்றளந்து புறம்பாயெறிந்துபோ ட்டதுபோலாம். எ-று.

க-து. நிராசையோடிருப்போரைக் கருவிகள் சேட்டியாது நீங்கு ம க்கருவிக ணீங்கவே திருவருடோன்று மத்திருவருளாற் போதத்தை யீதென் றளவிட்டறிந் தொழிக்கலாமாகலி னிங்ஙனமுவமை கூறினார்.

(கவி - ௰. அ - கை.)

தனுகரணபுவனபோகங்களிற்சிறிதேனும் பற்றின்றி நிற்றற்குபா ய மெங்ஙனமென்ற மாணாக்கனை நோக்கி; புவன போகங்களைத் தான ன்றென் றுள்ளபடியறிந்து களைந்து அவற்றின்கட் சார்ந்துநின்றபோ தச்சார்வுகெட் டருட்சார்பினின்றாற் புவனபோகப்பற் றறுமென்பது

ம், தநுகரணங்களைத் தனக்கன்னியமென் றறிந் தவற்றேடுந் தாக்கற் றுத் தனக்கன்னியமான வருளாய்நிற்பி னத்தநுகரணப்பற் றறுமென் பதும், இங்ஙனமறவே மற்றை தத்துவங்க டாமே யறுமென்பது மித் திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தநுவாதி நான்கினுக்குஞ் சார்வழிந்து சற்று
நினையா திளைப்பாறி நின்றான் - மனையாமோ
காந்தக் கடத்தூசி காற்றற்ற தீபமென
வாந்தத் துவங்களய லாம்.

(இ-ள்.) தநுவாதிநான்கினுக்குஞ் சார்வழிந்துசற்று நினையாதிளைப் பூறிநின்றான் மனையாமோ" எ-து. போகமு நானல்ல புவனமு நான ல்ல தநுவுநானல்ல கரணமு நானல்லவென் றுள்ளபடியறிந்து நியதி களைந் தத்தநுவாதி நான்கினிடத்து மியானெனதென்று சார்ந்துநின் ற போதச்சார்வுகெட் டவற்றை மீட்டுஞ் சற்றும்பற்ற தருளி லிளைப் பாறி யசைவறநின்றான் மனையாகிய புவனத்திடத்து மம்மனையைப் ப ற்றியிருந்த வனிதாதிபோகத்திடத்து முன்போற் பற்றுண்டாமோ? ஆயிற் புவனபோகங்களிற் பற்றின்றி நிற்பினுந் தநுகரணங்களிற் பற் றின்றிநிற்ப தெங்ஙனமெனின்?

"காந்தக்கடத்தூசிகாற்றற்றதீபமென வாந்தத்துவங்க ளயலாம்" எ-து. காந்தக்கடத்திற் கெதிர்முகமாயபோது பற்றியு மதனுட்கிடந்த போது பற்றுதுமிருந்த காந்தக்கடத் தூசிபோலுங் காற்றிலிருந்தபோ தசைந்துங் காற்றின்றியபோ தசையாதுமிருந்த காற்றற்றதீபம்போலு மத்தநுகரணங்களைத் தனக்கன்னியமாய்க்கண்டு நீங்கிநிற்பி லவற்றோ டுந் தாக்கற்றுநிற்பதுண்டா மவற்றோடுந் தாக்கற்றுநிற்கவே மற்றைய தத்துவங்களு மயலாய்நீங்கும். எ-று.

ப-ம். தநுவாதிகளிற் கறங்குபோற் சுழன்றதன்மை திருவருட்க ணின்றபோ தின்மையா "லிளைப்பாறி,, யென்றார்.

காந்தக்கடத்திற்கெதிர்முகமாயபோது பற்றியவூசி யதனுட் கிட ந்தபோது பற்றுதிருந்ததுபோற் சகமுகமாய்நின்றுதேகத்தையானெ ன்றுபற்றிய போத மகமுகமாய்நின்று திருவருளையடைந்தபோ தத் தேகத்தை யானென்று பற்றுதாகலிற் "காந்தக்கடத்தூசி" யென்று மப்புவனபோகத் தநுகரணங்களைப் போதம்பற்றுது நின்றபோதுகர ணந் தற்சேட்டையற் றடங்கு மப்போது போதந் திருவருளோடுங்கூ டிக் காற்றற்றதீபம்போலாகி மீட்டுங் கரணத்தோடுங் கூடாதாகலிற்

"கொற்றற்றதீப" மென்றுங், கரணங்களறவே யக்காரணங்களினது சேட்டைக் கேதுவாய கலாதிகளு மக்கலாதிகளைப் பிரேரகம்பண்ணுஞ் சுத்த தத்துவங்களு நீங்குமாகலிற் "றத்துவங்களயலா"மென்றுங் கூறினர். (ய)

(கவி - யக. அ - கைக.)

உத்தமராயினோர் கற்புடைய மனைவியைத் துறப்பரோவென்ற மாணுக்கனைநோக்கி; பெண்க ளின்ப மிகச்சிறிதென்பது மதனால்வருந் துன்ப மிகப்பெரிதென்பது மவர்கூட்டரவு மாயையென்பது மவர்கட்செய்யு மைம்புலநுகர்ச்சி பெருங்கேட்டைத் தருமென்பது மிங்ஙனம றிந்தோர் தம்மனைவி யருந்ததிக் கற்பின ளாயினுந் துறப்பரென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

நாயலகை நெய்விரும்பி நக்குவது நஞ்சிட்ட
பாயசமு மெய்ப்பரிசப் பாவைமிகச் - சாயாநீர்
வேட்கை யசுணமிபம் விட்டின்மீன் வண்டிவையின்
சாட்சியைக்கண் டார்துறவா தார்.

(இ-ள்.) நாயலகைநெய்விரும்பிநக்குவதுநஞ்சிட்ட பாயசமுமெய்ப்பரிசப் பாவைமிகச்சாயாநீர்வேட்கை" எ-து. நாயானதுவாள்வாயிற் படிய நெய்விரும்பி யவ்வாள்வாயை நக்குவதுபோலும், விடங்கலந்த பாயசத்தை யொருவன் சுவையென விரும்புவதுபோலு மாகும் பாவையரது மெய்ப்பரிசத்தை யின்பமாய்விரும்புத லாகலினும் பொய்யாகிய வப்பாவையரது மெய்ப்பரிசத்தை மெய்யாகக்கண் டநுபவிக்க விழைதன் மிகவும் பொய்யாகிய கானனீரை மெய்யாகக் கண்டு தாகத்திற் குண்ண விரும்புதல்போலா மாகலினும்?

"அசுணமிபம்விட்டின்மீன்வண்டிவையின் சாட்சியைக்கண் டார்துறவாதார்"எ-து. அசுணப்புட் சத்தத்தானு மியானை பரிசத்தானும் விட்டிற்பூச்சி யுருவத்தானு மீ னிரதத்தானும் வண்டுகந்தத்தானுங் கெடுமென விவைகளைச் சாட்சியாகக் கண்டிறலானு மிவ்வைந்துவிடயங்களு முளவாகிய வப்பாவையரைத் துறவாதா ரியாவர். எ-று.

க-து. வாள்வாயி னெய்யை நக்கினநாயக்கு நஞ்சிட்ட பாயசமுண்டோனுக்கு முன்ன ரணுவள வின்பம்போற் றோன்றிப் பின்னர்தனுன் மலையளவு துன்பம் வருவதுபோ லநுபவிக்கும்போது சிறி தின்பம்போற்றோன்றிப் பின்னைத் துன்பம் வரு மென்பதும், பொய்யாய்த்

தோன்றுங் கானனீரை மெய்யாக்கருதி யுண்ணத்தொடங்கினேனைப் போற் பொய்யாய்த்தோன்றும்பாவையரை மெய்யாக்கருதியநுபவிக் கத்தொடங்குவதென்பது மோரோர்விடயத்தைவிழைந் தொவ்வொன்று கெடுமெனி லைந்துவிடயங்களு முளவாகியபாவையரைவிழைந்தா லவரால்வருங் கேட்டிற் களவின்றென்பது மிதனாற்காண்க. (௰௧)

(கவி - ௰௨. அ - கை.)

எல்லோரு மனைவியாதிய குடும்பத்தோடிருந் தின்பங்களை யநுபவித்துக்கொண்டு பூரிப்போடு மிருக்க வக் குடும்பத்தை நீர் துன்பமென்றீ ரிதென்னையெனின்;உத்தமபக்குவராயினோர் குடும்பத்தோடுங் கூடியிராரென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

இடும்பைக்கே கொள்கலமா யேழ்நரகுக் கீடாங்
குடும்பத்தைக் குற்ற மறைந்கி - னடுங்காரோ
வைவர்க் கொருவ னறுதொழிலைச் செய்தலான்
மெய்யைப் பொய்யாக்கி விடும்.

(இ-ள்.) இடும்பைக்கே கொள்கலமா யேழ்நரகுக்கீடாங் குடும்பத்தைக்குற்றமறைக்கி னடுங்காரோ" எ-து. அஞ்ஞானிகள் இம்மைக்கண்ணே துன்பங்களையெல்லாந் தாமநுபவித்தற் கேற்றுக்கொள்வதாய கப்பலாய் மறுமைக்கண்ணே யெழுவகைப் பிறவியாகிய வெழுவகை நரகத்தையுமுண்டாக்குங் கனதையினையுடைய மனை சுதர்முதலிய குடும்பத்தை இங்ஙன மிகபரங்களினுந் துக்கத்தைத்தருவதென் றறியார். இங்ஙனமறியவொட்டா தாணவமாகிய குற்ற மவரை மறைத்தலா லிவ்வாணவக் குற்றம் நீங்கினோர் குடும்பக்குழாத்தைக்கண்டாலு முளம்வெருவி நடுக்கமுறுவர்கொலோ? ஆயினீர்மெய்யென்று கூறிய சிவ மொருவர்க்குந் தோன்று திருப்பானேனென்னில் ?

"ஐவர்க்கொருவனறுதொழிலைச்செய்தலான் மெய்யைப்பொய்யாக்கிவிடும்" எ-து. ஐந்திந்தியங்கட்கு மோர்முதல்வனாகிய வான்மாவவ்விந்தியங்களா லறிந்தநுபவிக்கும் விடய சுகத்தின்பொருட் டுழவு முதலிய வறுவகைத்தொழில்களின் முயற்சிப்படலா னிம்முயற்சியச் சிவத்தைத்தெரியவொட்டாது பொய்யாக்கிவிடு மிதனைநீயறிதி. எ-று.

ப-ம். குடும்பத்தா லிம்மைகட் டேகதுக்க மனோதுக்கங்க ளிடையறாது வருதலி "னிடும்பைக்கேகொள்கலமா" யென்று, மிக்குடும்ப

வாசனையான் மறுமைக்கட் பிறவிக டொன்றுதொட்டு வருமாகலி "னே ழ்நரகுக்கீடா" மென்றுங் கூறினர்.

அறுதொழிலைச்செய்தலான் மெய்யைப்பொய்யாக்கிவிடு மென வே, குடும்பத்தின்பொருட்டுச் செய்யு மறுவகைத் தொழில்களின் மு யற்சியைவிட்டுச் சிவயோகமுயற்சியிற்றொடங்கின்மெய்ப்பொருடோ ற்றுமென்பதாயிற்று.

அறுவகைத்தொழில்களாவன; உழவு-தொழில்-வாணிகம்-எழு த்து-சிற்பம்-பரதம்-இவை யாறுமெனக்கொள்க. (௰௨)

(கவி - ௰௩. அ - கை)

மனைவியாதிய குடும்பந் துன்பங்கட்கும் பிறவி வாதனைகட்கு மு றைவிடமென்பதும், இதனை யிங்ஙனமென் றுணவமறைப்பா னஞ்ஞா னிக ளறிந்திலரென்பதும், ஞானிக ளிதனைக்காணினுங் கேட்கினு நடு ங்குவரென்பது மிக்குடும்பமுயற்சி சிவத்தையறியவொட்டாது மறை க்குமென்பதும், உத்தமபக்குவர் விடாது சூழ்ந்துவாதிக்கு மிக்குடும் பவாதனையான்வரு நட்டங்களை முற்றுமறிந்ததனையக்கணத்தே விடுவ ரென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

குரங்குத் துனிசிக் குடும்பக் குழாமும்
பெருங்குப்பை யிற்கரடிப் பெண்டும் - பொருந்துவரோ
காலனுந் தீயுங் கடலுமிருங் கல்லுமாய்
மேலு நரகாய் விடும்.

(இ-ள்.) குரங்குத்துனிசிக்குடும்பக்குழாமும் பெருங்குப்பையிற்கர டிப்பெண்டும் பொருந்துவரோ,, எ-து. ஓர்குரங்கைப் பலகுரங்குவந் து சேட்டித்தல்போலத் தாய்தந்தை சுதர் சுற்றமுதலியோர் தம்மை வந்து வாதிக்குங் குடும்பக் கூட்டத்தையு மக்குடும்பக் கூட்டமாகிய பெரியமலக்குப்பைக்கட் கரடிபோலும் பற்றப்பட்ட பெண்டிராது கூ ட்டரவினையும் பொருந்தியிருப்பரோ? உத்தம ராயினு ரெல்லோரும வரோடுங் கூடியிருக்கவில்லையோ விவரென்னை யங்ஙன மிராதுபோவ தெனின்?

"காலனுந்தியுங்கடலுமிருங்கல்லுமாய் மேலுநரகாய்விடும்,, எ-து. அக்குடும்பக்கூட்டம் காலனைப்போலுந்தீயைப்போலுங் கடலைப்போ லும் பெரியமலையைப்போலு மிம்மைக்கண்ணே துன்பந் தருவதாய்

மறுமைக்கண்ணு மதனோடுங் கூடியிருந்தவாசனையாற் பிறப்பாகிய நரகத்தையுந் தருவதாய் விடுமெனவறிந் ததனோடுங்கூடியிரார். எ-று.

ப-ம். சோறுகூறை முதலியன கொடுக்கும்போதுங் கொடாதபோதும் வரும் பிணக்கானு மவற்றிற்கேதுவாகிய திரவியந் தேடுதலானு மதனைப் பாதுகாத்தலானு மவர்க்கு வியாதியாதி துன்ப மபிமானபங்கம் வந்தகாலையினு மவ ரிறந்தகாலையினு மிவை முதலியவற்று லக்குடும்பத்தாற் றேகதுக்க மனோதுக்கங்க ளிடையறாதுவருதலிற் "சூரங்குத்துனிசிக்குடும்பக்குழா,, மென்றார்.

இத்துன்பக் குழுவிற் கரடிபோலுங் குணத்தானுஞ் செய்கையானு மிழிவாயபெண்டுடனாக் கூடுவரோவென்பதனைப் "பெருங்குப்பையிற் கரடிப் பெண்டும்பொருந்துவரோ" வென்று குறிப்பாற் கூறினர்.

காலனுயிர்களைப் பாசத்தாற் பிணித்துக்கொடு சென்று நிரயத்துள் வீழ்த்தி வருத்துதல்போற் றுறந்து செல்கின்றேனென் றிரண்டடிச் சென்றோனை மனை சுதர் முதலியோர் கரசரணங்களைப் பற்றிக்கொண் டோலிட் டழுதவனுள மிளகப்பண்ணி மீட்டுக்கொடுவந்து குடும்பமாகிய துன்பத்து ளகப்படுத்தி வருத்துதலிற் "காலனுமென்று" மொருவனைத்தீச் சூழ்ந்துகொண்டதுபோற்சூழ்ந்துகோடலிற் "தீயென்று" நடுக்கடலில் வீழ்ந்தோனுக்குக் கரைகண்டேறக் கூடாததுபோலக் குடும்பசாகரத்தில் வீழ்ந்தோனுக் கிக்கரைகண்டேறக்கூடா தாகலிற் "கடலென்று" மலையிருத்திக்கொண்டதுபோற் குடும்பபாரந்தந்தலைச்சுமையா யிருத்துதலி "னிருங்கல்லென்று" மிறக்கும்போ துயிர்க்குகந்தவாசனை யிருந்த தந்தவாசனையோடுஞ்சென்று பிறத்தலின் "மேலுநரக" மென்றுங் கூறினர். (யஞ)

(கவி - யசு. அ - கை)

இங்ஙனந் துன்பமென்றறிந்து துறந்துசெல்வோர் தம்மைநம்பியிருந்த குடும்பத்தைப் பாதுகாத்தற்குச் சகோதரர் முதலாயினோருளொருவனைத் துணையாகவைத்துப் பின் றுறந்து சேறலாகாதோவெனின்; குலமுதலியவற்றி னபிமானமின்றி யசித்திய விவேகம் வருமள

வு மவற்ரோ டுண்ணுக்குதலற்றுக் கூடிநின்றந்தவிவேகம்வரி னொருவரோடும்விடைபெருது சென்றவனே துறவிகளுட்சிறந்தவனென்றித்திருவெண்பாவிற் கூறுகின்ரூர்.

கன்னனைப்போற் றன்னை யறிவனோ காக்கையுடன்
மன்னு குயில்போன வாறுபோ - லன்னியமாய்ப்
பேசாது போன துறவி பிறப்பறுப்பார்க்
காசானு மென்றே யறி.

(இ-ள்.) கன்னனைப்போற்றன்னை யறிவனோகாக்கையுடன் மன்னுகுயில்போனவாறுபோ லன்னியமாய்ப் பேசாதுபோனதுறவி" எ-து. இயா னின்னசாதி யின்னர்குலந் தாய்தந்தையின்னரென்று தனதுகுலக்குடும்பங்களை யறியாத கன்னனைப்போலு முத்தம பக்குவ னியானின்னசாதி யின்னர்குல மின்னர் தாய்தந்தையென்று தனது குலக்குடும்பங்களைப்பகுத்தறிவனோ? இங்ஙன மொன்றையும் பகுத்தறியாது காக்கையுடன் பருவம் வருமளவுந் தனதினம்போற் கூடிச்சென்று பருவம் வந்தகாலை யதற் கன்னியமாய்ப் பேசாது சென்ற நிலைபெற்ற குயில்போலு மனித்தியவிவேகம் வருமளவு மவரினம்போற் கூடியிருந் தந்த விவேகம் வந்தகாலை யவர்க்கன்னியமாய்ப்பிறிந் தவரோடுஞ் சொல்லாதுசென்ற துறவியே மெய்த்துறவி ?

"பிறப்பறுப்பார்க் காசானுமென்றே யறி" எ-து. அத்துறவி பிறப்பறுக்கும்பொருட்டுத் துறந்தார்க் காசாரியனுமாவன். எ-று.

ப-ம். தருமன்முதலிய துணைவரையுங் குந்தியாகியதாயையுங் கண்டிருந்துங் கன்ன னறியாததுபோ லிவன் குடும்பத்தாரைக் கண்டிருந்து மனித்தியவிவேகத்தாற் பொய்யாய்க் கண்டானுகலிற் "கன்னனைப் போற் றன்னையறிவனோ" வென்றும்; குயில் காக்கையோடு கூடியிருந்தபோதுந் தன்குரலைக் காட்டினுற் கொத்துமென்றடங்கியிருந்து செல்லும்போதுங் கூவாது சென்றதுபோற் குடும்பத்தோடு கூடியிருந்தபோதுந் தான்றுறந்து சேறலை யவரோடுஞ் சொன்னுற் பற்றுவரென்ப தறிந்து சொல்லா தடங்கியிருந்து செல்லும்போதுஞ் சொல்லாது சென்றமையாற்"குயில்போனவாறுபோற் பேசாதுபோனதுறவி" யென்றுங் கூறினர்.

அறிவுந் துறவுமுள்ள ஞானி சிறப்புளனாகலினிவனை "யாசானு" மென்றார். (௰௪)

(கலி - ௰௫. அ - கை.)

இங்ஙனந் துறந்துசெல்வானை மாதாபிதாக்கள்வந்து தடுத்தாலெங்ஙனஞ் செல்வாரெனின்; குடும்பபாரம் பொறுத்தற் காற்றாது வருந்தி யிறித்துவிட்டு விரைந்துசெல்வோர், தாய்தந்தைய ராதியர் தடுத்தற்குச் சிறிதுமுட்படாரென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

நித்திரைசெய் வீட்டி னெருப்பும் பெரும்படையு
முற்றிப் புறப்பட்டார் முற்றத்தே - பித்தரைப்போ
னில்லென்று சொன்னானு நிற்பரோ வப்படிகா
ணில்லறத்தை நீத்தா ரியல்பு.

(இ-ள்.) நித்திரைசெய்வீட்டி னெருப்பும்பெரும்படையு முற்றிப்புறப்பட்டார்முற்றத்தே பித்தரைப்போ னில்லென்றுசொன்னானுநிற்பரோ" எ-து. தா நித்திரைபண்ணுகின்ற வீட்டினுள்ளே நெருப்பும்பெரும்படையுஞ் செறிந்துவர விழித் தவற்றைக்கண்டு வெருண் டவ்வீட்டின் வாயில்கடந்து முன்றிலிற் புறப்பட்டார் தமக்கனுகூலராயினுமவற்றி னடுநிற்பீரென் றறியாது கூறினும் பித்தரைப்போலு மவர்மொழியை யுட்கொண்டு கணப்போதாயினு நிற்பரோ?

"அப்படிகா ணில்லறத்தைநீத்தாரியல்பு" எ-து. அவ ரெப்படி நில்லா தோடிச் செல்வரோ வப்படிகாண் மாதாபிதாக்கள் வந்து தடுப்பினு நில்லா தில்வாழ்க்கையைத் துக்கமாகக்கண்டு துறந்து செல்வார து முறைமையும். எ-று.

க-து குடும்பந் துக்கமென்றறியாதபோ ததனோடுங் கூடியிருப்பாரென்பதுந் துக்கமென் றறிந்தபோ ததனைத் துறந்துசெல்வரென்பதுந் துறந்துசெல்லும்போ தியாவர் தடுப்பினு நில்லாரென்பது மிவ்வுவமைக்குறிப்புகளாற் காண்க. (௰௫)

(கலி - ௰௬. அ - கை)

இங்ஙனந் துறந்து செல்வாரியல் பின்னுங்கூறுகின்றார்.

கட்டு நெகிழ்த்துவிட்ட கள்ளனைப்போற் கங்குலிற்பேய்
வெட்டு களத்தின் வெருவினர்போன் - முட்டத்

தொடர்ந்த படைபிழைத்துத் தோன்றப்போ வார்போ
லடங்கத் துறந்தேகு வார்.

(இ-ள்.) கட்டுநெகிழ்த்துவிட்ட கள்ளனைப்போற்கங்குலிப்பேய் வெட்டுகளத்தின்வெருவினர்போன் முட்டத் தொடர்ந்தபடை பிழைத்துத் தோன்றப்போவார்போல்" எ-து. பொருள்திருடிய கள்வனைச்சிலர் வந்துபற்றிப்பிணித்துவருத்த அவருளரு ளுளத் தொருவன்வந் தப்பிணியை யவிழ்த்துவிட்டகாலை விரைந்துசெல்லு மக்கள்வனைப்போலு மரையிரவிற்பெரும்பேயைக்கண்டு வெருவினர் விரைந்துசேறல்போலும், உயுத்தகளத்தின் வெருவினர் விரைந்து சேறல்போலுந் தம்மைப்பிடிக்கப்பின்றொடர்ந்த படைக்குத்தப்பி மிகவுங்கைகடந்து செல்வார்போலும் ?

"அடங்கத்துறந்தேகுவார்" எ-து. தாய் தந்தை மனை சுற்ற முதலிய குடும்பக்கூட்டங்களையெல்லா மொருங்கே துறந்துசெல்வா ரன்றி யவர்க்கோர் தடையுமின்று. எ-று.

க-து. மலபரிபாகம்வராமுன் றுஞ்செய்த விருவினைக் கீடாய்க்குடும்பபாசத்தாற் பிணிப்புண்டுவருந்துவரென்பதும், அப்பரிபாகம்வந்தகாலைத் தோன்றுநின்ற வருட்சத்தி யக்குடும்ப பாசந் துக்கமென்றறிவிக்க வறிந்து துறந்து செல்வாரென்பது மப்போ திரவிற்றோன்றும் பேய்போலு முயுத்த களம்போலும், குடும்ப மவர்க்குத்தோற்றுமென்பது மக்குடும்பக் குழாங்கள் பின்றொடர்வரென் றறிந்து தூரதேசத்திற் செல்வாரென்பது மிவ்வுவமைக் குறிப்புகளாற்காண்க. (௰௬)

(கலி - ௰எ. அ - கை.)

தாந்துறந்துபோதற்குக் குடும்பத்தார் சம்மதித்தா லப்பதியி லிருந்து தவம்பண்ண லாகாதோவெனின்; தேகாபிமானம்விடுத் ததனைப் பகையாகவு மெதிரிட் டவைகளைத் துன்பமாகவுங்கண் டனைத்தையுமிழந்து பூரணவருள்கொண்டோ ரிதுநா டிதுகாடென்று மிவரடுத்தா ரிவரயலாரென்றும் பகுத்தறித லின்றாகலின், முன்னிருந்த பதியிலிப்போதிருப்பதனா லவர்க்குவரும் பயனென்றுமின்றென்று மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உடுக்கை மறந்தவருக் கூர்காடென் றுண்டோ
வடுத்தயலா ருண்டோபே யானுற் - சுடப்போட்

டெதிரிட்ட தெல்லா மிழந்தார்க் கிருந்த
பதியைக்கொண் டுண்டோ பயன்.

(இ-ள்.) உடுக்கைமறந்தவருக் கூர்காடென்றுண்டோ வடுத்தயலா ருண்டோபேயானல்" எ-து. குடும்பக்கூட்டங்களையெல்லாந் துரிசற த்துறந்து தேகத்தையுஞ் சத்துருவாகக்கண் டத்தேகத்தி னுன்குமுழ ஞ் சுற்று முடுக்கையு மறந்துதிரிவோர்க் கீதூரென்று மிதுகாடென்று ம் பகுத்துக்காணு நினைப்பு முண்டுகொல்லோ? அஃதன்றிப் பூரணப் பேய் வயமாகையினு லவர்க்கடுத்தாரு மயலாரு முண்டுகொல்லோ யிங்ஙனமுடுக்கை மறந்தடுத்தா ரயலாரென்பதுந் தோன்ரு திருப்ப துமன்றி;

"சுடப்போட்டெதிரிட்டதெல்லாமிழந்தார்க்கிருந்த பதியைக்கொ ண்டுண்டோபயன்" எ-து. கரத்திலெடுத்தபொருண் மிகவுஞ்சுட விரைந்து போட்டுகின்ருற்போற் றமதறிவிற் கெதிரிட்ட கருவிகளையெ ல்லாந் துன்பமாகக்கண்டு ஞானக்கினியினு லெரித் திவற்றையு மிழந் தார்க்குத் தாமுன்னிருந்த பதியி லிப்போதிருந்ததுகொண்டு பயனெ ன்னை யுண்டுகொல். எ-று. (யஎ)

(கவி - யஅ. அ - கை.)

முன்னிருந்த பதியைவிட்டு மற்ருேர் சிவதலத்தி லோரிடம்பற் றியிருந் தொருவர் முன்னிலையா யுதராக்கினிக் கன்னமாத்திரம் வாங் கியுண்டு தவத்தைப்பண்ண லாகாதோவெனின்; பிரபஞ்சங்களையெல் லா மானந்தமயமாகக்கண்ட துறவினர்க்குத் திசையாதியெவ்விடத்து ஞ் சிவாலயமாகுமென்பதும், பிச்சையாதி யுளவாகலி னன்னபானுதி யோரிடத்திற் குறியாரென்பதும், ஒருவரோடும்கூடா தேகாந்தமௌ னத்திருப்பதே யவர்க்கிச்சையென்பது மித்திருவெண்பாவிற் கூறுகி ன்ருர்.

துக்கஞ் சுகமான சுட்டறிவு கெட்டவர்க்குத்
திக்குண்டோ வெங்குஞ் சிவாலயமா - மக்கினிக்குப்
பிச்சை பொதுநிழனீர் பேரிதுவே பேசார்தம்
மிச்சையிருப் பேகாந்தத் தே.

(இ-ள்.) துக்கஞ்சுகமானசுட்டறிவுகெட்டவர்க்குத்திக்குண்டோவெ ங்குஞ் சிவாலயமாம்" எ-து. முன்கண்ட பிரபஞ்சதுக்கமெல்லா மிப் போ தானந்தமாகக்கண் டச்சுட்டுப்போதங்கெட்டோர்க் கின்னதிசை யென்று மின்னவிடமென்றும் பகுப்புண்டாமோ. அவர்க் கெத்திசை யு மெவ்விடமுஞ் சிவாலயமேயாகு மஃதன்றி?

"அக்கினிக்குப்பிச்சைபொதுநிழனீர்பேரிதுவேபேசார்தம் மிச்சையிருப்பேகாந்தத்தே" எ-து. உதராக்கினி யவித்தற் கூரின்கட்பிச்சையு மிருத்தற்கிடம்பொதுச்சாவடிமரநிழலுந் தாகந்தணித்தற் கேரியாதிநீர்களு முளவாகலி னன்னமிட நீரென்னு மிவற்றினதுபெயரையே சொல்லாராயி னவர்க்கிச்சைதானேதெனி னொருவரோடுங் கூடியிராது பேசா தேகாந்தத்திருப்பதே யிச்சையாம். எ-று.

ப-ம். சிவத்தையுணர்ந்தோர்க் கெங்கும் பரிபூரணமாய்த் தோற்றுமாகலின் "எங்குஞ் சிவாலயமாகு" மென்றார். (௰௮)

(கவி - ௰௬. அ - கை.)

ஒருவரோடு கூடியிருந்துபேசுதலு மாகாதோ வெனின்; பிரபஞ்சிகள் ஒருவரோடொருவர் கூடலும் நானாவிதமாய் வார்த்தையாடலுமே யின்பமாய்க்கருதி மயங்குவரென்பதும், துறவோர் அங்ஙனஞ் செய்வது துன்பமென்று விடுப்பதுமன்றித் தம்முடலோடுங்கூடியுங் கூடாதிருப்பரென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அங்கக்கா ரன்றுதிப்பு நாவிசுவை யானதுவுஞ்
சிங்கி குளிர்ந்ததுவும் போற்செகத்தோர் - சங்கத்தைத்
தீண்டுமன மேபகையாய்ச் சேரா துடலோடே
மாண்டுதிரி வார்துறவா வார்.

(இ-ள்.) அங்கக்காரன்றுதிப்புநாவிசுவையானதுவுஞ் சிங்கிகுளிர்ந்ததுவும்போற் செகத்தோர்" எ-து. நானாவேடங்கொண்டு நடிக்கும் வேடதாரி யவ்வேடங்கட் கேற்ற பாடை பேசுதல்போலவும், கொல்லாநின்ற வற்சநாபி யொருவர்க்குச் சுவையானதுபோலவுந் தன்காலிற்பூண்ட விலங் கொருவர்க்கிதமானதுபோலவும், தத்தஞ் சாதிகட்குந் தொழில்கட்கு மேற்ற சொற்களைச் சொல்லியுந் துன்பமாயுள்ள விடயங்களை யின்பமாகக்கருதிக்கொண்டு மனைவி முதலிய பாசவிலங்கை யிதமாகக் கைக்கொண்டு மயங்கிச் சுழலாநிற்ப ரிச்செகத்தோர் ?

"சங்கத்தைத்தீண்டுமனமேபகையாய்ச்சேராதுடலோடேமாண்டுதிரிவார் துறவாவார்" எ-து. இங்ஙனஞ் சுழலாநின்றார் கூட்டத்தைக்கூடவேண்டுமென்று கருது மனநினைவே தம்பகையாகி யந் நினைவோடுங்கூடா துடலோடுங் கூடியிருந்துங் கூடா தவ்வுடல்வாதனை மாண்டுதிரிவாரே துறவினையுடையா ராவரென்றறிதி. எ-று.

ப-ம். "உடலோடேமாண்டு திரிவா" ரெனவே, போகவாதனை தேகவாதனை போதவாதனையாகிய விம்மூன்றுவாதனையுந் தீர்ந்தாரென்பதாயிற்று. (யகூ)

(கவி - உய. அ - கை.)

ஞானிகட்கு மஞ்ஞானிகட்குந் தாரதம்மியமு மவரை யிவரெண்ணும லழைப்பது மிங்ஙனமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்

பொன்மலைமே லாகாயம் போவார்க்குப் பூமியுள்ளோ
ரென்னவே நாதாந்த மெய்தினரை - யென்னருகே
வாவென்று பாற்கடலில் வாழரியை மண்டூகங்
கூவுந் தகைமையதொக் கும்.

(இ-ள்.) பொன்மலைமேலாகாயம்போவார்க்குப்பூமியுள்ளோ ரென்னவே"எ-து. பொன்மலைமுடிமே லாகாச கமனம்பண்ணுவோர்க் கிந்நிலத்தின்கண் ணுள்ளார் மிகவுந்தாட்சியானதுபோன் ஞானிகட்கும் பிரபஞ்சிகட்கு முயர்ச்சி தாழ்ச்சி யிருப்பவும்?

"நாதாந்தமெய்தினரையென்னருகே வாவென்றுபாற்கடலில்வாழரியைமண்டூகங் கூவுந்தகைமையதொக்கும்,,எ-து. நாததத்துவத்தின் முடிவாயிருந்த திருவருளையடைந்த ஞானிகளைப் பஞ்சபூதகாரியந் தானாகிய தேகந் தானாகி யிந்திரியவழி நுழைந்து செல்லும் பிரபஞ்சியொருவ னென்மனைக்கு நீர்வருகவென்றழைத்தல் பாற்கட னுப்பணரவணையிற் பள்ளி கொள்ளாநின்ற பெருமாளைப்பார்த் தோர் தவளை நீரு மிக்கடன்மிசை மிதந்து துயில்கின்றீ ரியானு மிக்கடன்மிசை மிதந்து துயில்கின்றே னுமக்கு மரியென்றுபெய ரெனக்கு மரியென்று பெயராகலி னெனதருகே நீர்வருகவென் றழைக்கு முறைமையதொக்கும். எ-று.

ப-ம். பொன்மலைமுடியை நாதாந்தத்திற்கு மம்மலை முடிமேற்றோன்று மாகாயத்தை யிந்நாதாந்தத்திற் றோன்றுந் திருவருளுக்கு மவ்வாகாயத்திற் கமனம்பண்ணுவோனை யித் திருவருளையுங் கடந்து செல்லும் ஞானிகளறிவிற்கு முவமித்துக்கூறியவாறு காண்க.

ஞானிகள், தத்துவங்கட்கெல்லா முடிவாய் நின்ற பரிபூரணத்தை யடைந்தவர். பிரபஞ்சிக டத்துவங்கட்கெல்லா மடியாயுள்ள பஞ்சபூத

காரியந் தானுயுள்ள தேகத்தை யடைந்தவராகலின் "பொன்மலைமேலாகாயம் போவார்க்குப்பூமியுள்ளோ" ரென்னவேயென் றங்ஙன முவமை கூறினர்.

ஞானிகளது மகிமையையறியாததா லவரு முலகத்தின்கண் ணிருக்கின்றார் யானு முலகத்தின்கண் ணிருக்கின்றேன், அருமனித ரியானு மனிதனென்று கருதி யழைத்தானகலிற் "பாற்கடலின்வாழரியை மண்டூகங் கூவுந் தகைமைய தொக்கு,, மென்றிங்ஙன முவமை கூறினர். (௨௰)

(கவி - ௨௧. அ - கை.)

ஆயிற்புத்தியோடு மனமொழி மெய்களா லவனைவணங்கி யென் மனைக்குத் தேவரீ செழுந்தருளுக வென்றொருவ னழைத்தாற் செல்வரோவெனின்; மேற் கூறுகின்றார்.

கும்பிட்டுங் கீர்த்தித்துங் கோடி யுபசாரம்
வம்பிட்ட பத்தி வலைவழியை - நம்புவரோ
வூணாதி வாதனைக ளொன்றாத வப்பெருமை
வீணே விளைக்கு மெனின்.

(இ-ள்.) கும்பிட்டுங்கீர்த்தித்துங்கோடியுபசாரம் வம்பிட்டபத்தி வலைவழியை நம்புவரோ,, எ-து. ஒருவன்வந் தஷ்டாங்க பஞ்சாங்கத்தோடு வணங்கியு மனேகதோத்திரங்களைப் பண்ணியுஞ் சுவாமிக ளடியேன்மனைக் கெழுந்தருளுகவென்று கோடிபேதங்களா யுபசாரங்களைச்செய்து மிங்ஙனமழைக்கும் புதுமைபொருந்திய பத்தியாகிய வலைநெறியை ஞானிகளாயினு ரோர்பொருளாகக் கருதிச் செல்வரோ? ஆயி னன்போடுவணங்கி யன்னங்கொடுக்கிறே னென்றழைத்தா லவ்வன்னமாத்திரஞ் சென்று வாங்கிக்கொள்ளலாகாதோ வெனின் ?

"ஊணாதிவாதனைகளொன்றாதவப்பெருமை வீணேவிளைக்குமெனின்,, எ-து. ஊணுடுக்கைமுதலிய வாதனைகளையும் விரும்பாத அந்தவவா வறுதியாகிய பெருமை யவரிருக்குமிடத் தவர் வேண்டாவென்று தள்ளவும் வீண யவ்வூணாதிகளைக் கொடுப்பிக்குமாயின். எ-று.

ப-ம். உபசாரமிகுதியைக் கோடியென்று மொருவரு மங்ஙனஞ்செய்யக்கண்டதின்மையால் "வம்பிட்ட,, வென்றுங் கூறினர்.

"ஊணுதிவாதனைக ளெனவே; நோய் குளிர்கட்கு மருந்துமுறை யுளும் வேண்டாரென்பதாயிற்று. (உக)

(கலி - உஉ. அ - கை.)

தாமூணுதிகளைவிரும்பி யொருவரைப் பின்சேறலாகாதன்றி யொருவரன்போடும் வணங்கி யூணுதிகொடுத்தற்குத் தம்மனைக் கழைத்தாலுஞ் செல்லாதிருப்ப தேதுகாரணமெனின், மேற்கூறுகின்றார்

கருமந் திரிவிதத்திற் கட்டவிழுங் கால
மரவுந் தவளையும்போ லாகி - யிருதலையிற்
கொள்ளியெறும் பாயுடம்பே கூற்றாகித் தோற்றுமெனி
னுள்ளினரு மூருமென்னு கும்.

(இ-ள்.) கருமந்திரிவிதத்திற்கட்டவிழுங்கால மரவுந்தவளையும்போலாகியிருதலையிற் கொள்ளியெறும்பா யுடம்பே கூற்றாகித் தோற்றுமெனின்,, எ-து. ஞானசாரியர் கிருபாநோக்கத்தானுங் கரசரண பரிசத்தானுந் திருவாக்கானு மவர தாணவமாயை கருமங்களாகிய கட்டுவிடுதலையாகாநின்ற காலமாகலிற் றம்முடம்பே பாம்புந் தாமோர் தவளையும்போலாகி யவ்வுடம்பே யிருதலையு மெரிசூழ்ந்த கொள்ளியாகித் தா மக்கொள்ளிக் குழலுட்சுழலு மெறும்பாகி யவ்வுடம்பே தம்மைப் பறித்துச்செல்லுங் கூற்றாகித்தோற்றுமெனின் ?

"உள்ளினருமூருமென்னுகும்,, எ-து. இங்ஙனம் பகையாய்த்தோற்றுமுடம்பிற் குபசாரஞ்செய்யக்கருதினோரு மவரழைத்துச்செல்லு மூரு மென்ன பயனைத்தருமவர்க்கும். எ-று.

ப-ம். பாம்பு தவளையைப்பற்றி நிற்றல்போ லுடம் பவரைப்பற்றி நிற்றலானு நெருப்பவியுமளவுங் குழற்கண் வருந்திச் சுழலு மெறும்புபோ லூழ்வினையறுமளவு முடம்புள் வருந்தியிருத்தலானுங் கூற்று உயிரைப்பிணித்துச்சேறல்போ லவரைப்பற்றி நின்று பிச்சையாதிக்குச் செல்லப்பண்ணுதலானு மங்ஙன முவமை கூறினர்.

ஒருவன் றனக்குப்பகையானார்மேல் வெறுப்புண்டாவது மன்றி யப்பகைவர்க் கிதஞ்செய்வார்மே லும் வெறுப்புண்டாவதுபோ லவர்

க்குப்பகையாகிய வுடம்பின்மேல் வெறுப்புண்டாவதுமன்றி யவ்வுடம்பிற் கிதஞ்செய்வார் மேலும் வெறுப்புண்டாமாகலி "னுள்ளினரு மூருமென்னுகு,, மென்ருர்.

திரிவிதத்திற் கட்டவிழுமென்றமையா லிரண்டுமலமும் வருவிக்கப்பட்டது. (௨௨)

(கவி - ௨௩. அ - கை.)

ஞானசாரியனை யடைந்தோரு மோரூரின்கண் ணெருவன் செய்யு முபசாரத்தை யங்கீகரிக்கவில்லையோ விவரென்னை யங்ஙனமங்கீகரியா திருப்பதெனின்; மேற்கூறுகின்ருர்.

பிறவாத யோனி பிறந்துபிறந் தெல்லா
மறிவானு ஞரென் றறியா - வறிவை
யறிந்துமீ னண்ட வழிபருந்திற் குஞ்சாய்ப்
பிறந்தவர்க ளேன்பார்ப்பார் பின்.

(இ-ள்.) பிறவாதயோனிபிறந்துபிறந்தெல்லா மறிவானுஞரென்றறியா வறிவையறிந்து,, எ-து. தேவமானிடப் பிறப்பின்றி மற்றப்பிறவாத யோனிபேதங்க ளெல்லாவற்றுள்ளு மளவில்காலஞ் சென்று சென்று பிறந்தெய்த்துப் பின்னர்த் தெய்வகதியாய்ப் பிறவிகட்கெல்லாந் தப்பித் தன்னையறிதற் கேதுவாய விம்மானிடப்பிறவியிற்பிறந்து மித்தேகத்துள்ளிருந் தெல்லாவற்றையு மறிவானுகிய யான் யாரென்றறிதற் கரிதாய வறிவை யிம் மானிடதேக மனேகத்தாற்செய்த சிவபுண்ணிய மேலீட்டா லிப்போதறிந்து ?

"மீனண்டவழிபருந்திற்குஞ்சாய்ப் பிறந்தவர்களேன்பார்ப்பார்பின்,, எ-து. நீரினுழைந்துசெல்லு மீன் முட்டை வழித்தோன்றுங்குஞ்சாகாயத்திற்செல்லும் பருந்தின்முட்டைவழித் தோன்றுங் குஞ்சாய்ப்பிறந்ததுபோற் பிறப்புக்கேதுவாய்ப்பிறந்த பிறப்புக்கணீங்கி வீட்டிற் கேதுவாய்ப் பிறந்தோர்கள் மற்றையரைப்போலு மூருறவென்றேன்பார்ப்பா ரிப்போது. எ-று.

ப-ம். முட்டைவழித்தோன்ற லிரண்டிற்கு மொத்ததாயினு முன்னீருட் சென்றதும் பின் னுகாயத்திற்செல்வது மொவ்வாததுபோன்

முன்னரு மிப்போதும் பிறந்தமானிடப் பிறப்பொத்ததாயினு முன் பிறப்பிற்சென்றது மிப்போது வீட்டிற்செல்வது மொவ்வாதாகலி னி ங்ஙன முவமை கூறினர்.

முற்பிறப்பிற் சிவபுண்ணிய மேலீட்டா லிப்பிறப்பி லெளிதிற் றன்னை யறிந்தமையா லறிந்து பிறந்தவர்களென்றார். தன்னையறிந்தா ற் றலைவனையு மறியலா மாகலி "ஞானரென்றறியாவறிவையறிந்,, தெ ன்றார். (உரு)

(கவி - உச. அ - கை.)

இங்ஙன மூருறவாதி யொன்றும்வேண்டார்க்குப் பெருமை தா னியாதெனின்; மேற்கூறுகின்றார்.

அரசர்க் குடைமை யளவற்ற பேறே
பெருமையா னற்போலப் பெற்ற - வரிபிரமர்க்
கப்பாலாம் வாழ்வு மணுவாகி யாதுமற
லிப்போ பெருமை யிவர்க்கு.

(இ-ள்.)அரசர்க்குடைமையளவற்றபேறே பெருமையானற்போல" எ-து. அளவற்றதிரவிய மாடை பூடணதிகளைப்பெறும் பேறே யர சர்க்குப் பெருமையானற்போல?

"பெற்றவரிபிரமர்க் கப்பாலாம்வாழ்வு மணுவாகியாதுமற லிப் போபெருமையிவர்க்கு,, எ-து. அவ்வரசர் சுரர்முதலியோர் வாழ்விற் குமேலாய வாழ்வினைப்பெற்றவரிபிரமர் வாழ்விற்குமப்பாலாகிய பத முத்திவாழ்வுகளு மணுமாத்திர மின்பமா யழியுமெனக் கண்டிருந்த விகபரவாழ்வுகளி லியாதொன்றினும் பற்றற்ற விப்பற் றறுதியே யிவ ர்க்கிப்போது பெருமையாம். எ-று.

ப-ம். அரசர்க்குடைமை" யென்று பொதுப்படக்கூறினமையா னு ல்வகைச்சேனை நால்வகையரணனதேசங்கண் முதலியவுங்கொள்க.

அவர்க்கப்பேறு மேன்மேற் பெறுவது பெருமையானற்போ லி வர்க்கப்பேறு மேன்மேல் விடுவது பெருமையென்பது மவர்க்கப்பே றின்மை சிறுமையாவதுபோ லிவர்க் கப்பேறு பெறுவது சிறுமையெ ன்பதும்,பேற்றின்மேற் பற்றுப் பிறவிக்கேது. அப்பேற்றின்மேற்பற்ற றுதி வீட்டிற் கேதுவென்பதும், பிறப்பையடைதல் சிறுமை.வீட்டை யடைதல் பெருமையென்பது மிதனாற்காண்க. (உச)

(கவி - உ௪. அ - கை.)

இங்ஙனமிருந்தஞானிகள் வீட்டிற்கேதுவாகிய சரிதாதிகளைத் தான்செய்யார்களோவெனின்; அவர்செய்யுஞ் சரிதாதிக ளிவையெ ன்றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சரிதை யுடல்வெறுத்த றன்னை யறிதல்
கிரியோகங் கூடாமை கேளாத் - திருஞானம்
வேறின்மை பேரின்பம் விட்டுதியா மேலீடு
பேரின்மை தானே பெறல்.

(இ-ள்.) சரிதையுடல்வெறுத்த றன்னையறிதல் கிரியோகங்கூடா மை" எ-து. அவர்க்குச் சரிதையாவது; மலச்சுமை துக்கம் விளக்கு ங் குரம்பை யனித்தியவிருதெனக்கண் டிண்டிசுருக்குதன் முதலிய வற்றா னுடலத்தைவெறுத்தல். கிரியையாவது, தத்துவ முப்பத்தா றையு நியதிகளைந் தவற்றின் முடிவினின்ற தம்மை யுள்ளபடியறிதல். யோகமாவ தங்ஙனந் தம்மையறிந்தவிடத்துத் தமக்குயிர்க்குயிரா யி ருந்த திருவருளைக்கண் டவ்வருளேவடிவாகியிருந்து முன்னீக்கினின் ற கருவிகளோடுங் கூடாமை ?

"கேளாத்திருஞானம் வேறின்மைபேரின்பம்விட்டுதியாமேலீடு பேரின்மைதானேபெறல்" எ-து. அம்மூவகையானுமுண்டாங் கேட் டறியலாகாதவழகியஞானமாவது,அவ்வருளேவடிவாயிருந்துதாஞ்சி றிதுந்தோன்றாது பரையேயாகிய வேறின்மையினையு மதன்மேற்பே ரின்பம்விட்டுத் தோன்றாத மேலீட்டினையு மிவ்வின்பத்தைப் பெற் றோ மென்னும் பேறின்மையும் பெறுதராேனயாம். எ-று.

ப-ம். ஞானசாரியர் மவுனமொழியா லறிவிக்கவறிதலாற்"கேளாத் திருஞான" மென்று மின்ப மேலிடாமுன் விட்டுத்தோன்றலான்"வி ட்டுதியாமேலீ" டென்றுங்கூறினார். பேறின்மை யின்பாதீதம்.

க-து. கும்பிட்டென்னுந் திருவெண்பாமுத லிவை யைந்துதிருவெ ண்பாவானு ஞானிகளின தியற்கை நெறிகளினதுமுறைமை யறிவித் தனரென்பது.

துறவு - முற்றிற்று.

ஆக திருவெண்பா-௱அ௬.

உ

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது

அருளவத்தைத்தன்மை.

(அஃதாவது,)இங்ஙனஞ் சரிதாதிகளை நீத்து வுட்டுறவு புறத்துற வுடையராய்ப் பிருதிவிமுத னாதத்துவ மீறாகச் சொல்லப்பட்ட தத்துவ முப்பத்தாறையுங்கடந் தாணவ விருளையுங்கடந் தான்மதரிசன முதலிய சுத்தாவத்தையி னிற்போரது தன்மை கூறினமையா லிவ்வதிகாரத்திற் கருளவத்தைத்தன்மையென்று பெயராயிற்று.

(கவி - க. அ - கை.)

சுத்தாவத்தையினின் றருளைத் தரிசித்தோர்க்கு விடயந் துன்பமாய்த் தோற்றுமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உண்டொழித்துத் தேடு முடம்பரா யொன்றுமுத
லண்டர்பதத் தப்பாலு மைம்புலத்து - முண்டு
மழுங்கினர்க்குப் போகம் வருத்தமாய்த் தோன்ற
வெழுந்தவருள் கெட்டே னிதென்.

(இ-ள்.) உண்டொழித்துத்தேடுமுடம்பராயொன்றுமுத லண்டர்பதத்தப்பாலுமைம்புலத்து முண்டு மழுங்கினர்க்கு" எ-து. ஒருடம்பிற் பிராரத்துவத்தை யுண்டொழித் தவ்வுடம்பிலவ்வினையையுண்டொழித்தற்கிடையே யிதா கிதங்களாகிய தொடர்பாற்றேடு மாகாமியத்தாற் றென்றுதொட்டுவரு முடம்புகளையுடையரா யிப்பூலோகமாகிய வொன்றுமுதற் றேவர்பதவிக்கப்பாலு மாண்டாண்டுச்சென் றிருந் தைம்பொறிகளானு மவ்வவ் வுடம்புகட்கேற்ற விடய போகங்களை யின்பமாகக்கண்டுண் டளவில்காலந் தழூம்பெறினர்க்கு?

"போகம்வருத்தமாய்த்தோன்ற வெழுந்தவருள்கெட்டேனிதென்" எ-து. அப்போ தின்பமாய்த்தோன்றியபோக மிப்போது துன்பமாய்த் தோன்ற வுதயமாகிய திருவருள்கெட்டேனிதென்கொல்.எ-று.

ப-ம். ஓர்பிரகாரமின்றிச் செய்தவினையின் பேதப்படியே தநுகரண புவன போகங்களும் பேதித்துத்தோன்றலாற்"றேடுமுடம்பரா யண்டர்பதத் தப்பாலுமைம்புலத்துமுண்டு மழுங்கினர்க்"கென்றார்.

தநுவாதிகள் பேதிப்பதாவன; நல்லதேசத்து நல்லோர்களங்கீகரித்த போகத்தைப்புசித்தலானு நல்ல நினைவோடு நல்லசொல்லோடு நற்றொழிலைச்செய்தலானும், பொல்லாததேசத்துப் புவனபோகங்களைப் புசித்தலானும் பொல்லாத நினைவோடும் பொல்லாத சொல்லோடும் புன்றொழிலைச்செய்தலானு மிவற்று ளொன்று நன்று மொன்று தீதுமாய் மாறிமாறிவருதலானு மிவைமுதலாயவற்றாற் பேதிப்பதெனக்கொள்க. (க)

(கவி - உ. அ - கை.)

சொரூபானந்தத்தை விரும்பிச் சுத்தாவத்தையினிற்போர்க்கிச் சொரூபானந்தங் கிடைத்திலதாயினு மிவ் வானந்தத்தையே விரும்புவதன்றி யசுத்தாவத்தையிற்றிரும்பி யவ் விடயானந்தத்தை விரும்பலாகாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

வாசகத்துங் கோவையினு மாணிக்க மாகவழங்
காசைத் துறையனந்த மாமதிலே - யாசை
யிருதலைப்பா லேக மெனவிரண்டா மித்தி
லொருதலைக்கா மந்துறவன் றே.

(இ-ள்.) வாசகத்துங்கோவையினுமாணிக்கமாகவழங்காசைத்துறையனந்தமாம்" எ-து. மாணிக்கமணிபோலாகப் புலவரானெடுத்துவழங்காநின்ற சங்கத்தார்முதலியோர்கூறியவாசிரியப்பாக்களினும், மாணிக்கவாசக சுவாமிக ளருளிச்செய்த திருச்சிற்றம்பலக்கோவையார் முதலிய கோவைகளினும், காமத்தி னிலக்கணமாகக் கூறப்பட்ட கிளவித்துறைக ளனந்தமாகும்?

"அதிலேயாசை யிருதலைப்பாலேக மெனவிரண்டாமித்தி லொருதலைக்காமந் துறவன்றே" எ-து. அக்கிளவித் துறைகளுட் காமந் தலைவனுந் தலைவியுமாகிய விருவர்பாலுஞ் சமனொத்துக்கூடுவதாகிய விருதலைக் காமமெனவு மொருவர்பான் மிகுந்து மொருவர்பாற் குறைந்துங் காமமொவ்வாது கூடுவதாகிய வொருதலைக்காமமெனவு மிரண்டுளடங்குவதாம். இவற்றுட்டலைவன் விழையா திருப்பத் தலைவி விழைந்து பற்று மொருதலைக்காமம்போல விஷயானந்தத்தைத் துறந்து சொரூபானந்தத்தைப் பெறும்பொருட்டுச் சுத்தாவத்தையி னிற்போற் கிச்சொரூபானந்தங் கிடைத்திலதாயினு மிவ்வானந்தத்தையே பெற விரும்பித்தொடர்ந்து நிற்பதன்றே துறவாவது. எ-று.

ப-ம். தலைவன்கூடி யின்பங் கொடாதிருப்பினுந் தலைவி தனது கற்பாற் பிறனை விழையா தத்தலைவனையே விழைந்து நிற்றல்போற்சொ

ரூபானந்தந் தனக்குக் கிடைத்திலதாயினுந் தனது தவக்கற்பால் விடயானந்தத்தை விழையாது சொரூபானந்தத்தையே விழைந்து நிற்க வேண்டுமென்பதுந் தலைவி கற்பினைக்கண்டு தலைவன் காருண்ணியத்தா லவட்கின்பங் கொடுத்தல்போ லிவன் றவக்கற்பினைக்கண்டு சிவங் காருண்ணியத்தாற் றன்தானந்தத்தை யிவனுக்குக் கொடுக்கவேண்டு மென்பது மிவ்வுவமைக் குறிப்புகளாற்காண்க. "வாசகம்போலிருந்த லி ளுசிரியப்பாவை வாசக"மென்றார். (உ)

(கவி - ந. அ - கை)

ஞானசாதகரிலக்கணமுஞ் சாத்தியர திலக்கணமு மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சாத்துவித மெட்டாய்த் தசவவத்தை யாய்த்தன்னை
நீத்தவனுய்த் தானுய்ப்பின் னேயமாய்க் - கூர்த்ததெல்லாஞ்
சுத்த வவத்தைத் துவட்சித் துகளற்ற
வத்துவிதர்க் கேதுமுதி யா.

(இ-ள்.) சாத்துவிதமெட்டாய்த் தசவவத்தையாய்த்தன்னை நீத்தவனுய்த்தானுய்ப்பின்னேயமாய்க் கூர்த்ததெல்லாஞ்சுத்தவவத்தைத்துவட்சி"எ-து. ராசத தாமத காரியங்களையெல்லா நீக்கிச் சாத்துவித காரியமாகிய நிராசைமுதலிய வெண்குணங்களையு முடையவனுகி அருக்கியநோக்க முதலிய பத்தவத்தைகளையு முடையனுகி இந்த நற்குணங்களாற் றத்துவ முப்பத்தாறையுங்கடந்து தன்னையறிந் தருளைத் தரிசித்துத் தற்போத மடங்கினவனுகிப் பின்னர்ப் பரையே தானுகிப் பின்னர் நேயத்தழுந்தினேனுகி யிங்ஙன மொருவ னுண்ணிதா யறிந்து சென்றதெல்லாஞ் சுத்தாவத்தை யநுபவங்களாகும்?

"துகளற்றவத்துவிதர்க்கேதுமுதியா"எ-து. யிந்தசுத்தாவத்தைகளை யறிந்துசென்ற போதமற்றுச் சிவத்தோடு மிரண்டறக்கலந்த வத்துவிதத்தை யுடையோர்க்கு முற்கூறியவநுபவங்களுள் யாதொன்றேனுந் தோன்று திவர் மவுனனந்தமா யிருப்பர். எ-று.

"சாத்துவிதமெட்டாவன; நிராசை-தவம்-பொறுமை-கிருபை-சந்தோடம்-வாய்மை-அறிவுடைமை-அடக்கமுடைமை-இவை யெண்வகையுமெனக்கொள்க. தசவவத்தையாவன; பிரபஞ்சத்தை மாயாவடிவமாய்க்காணு தருள்வடிவாய்க் காணு மருக்கியநோக்கமும், கருவிகளை நியதிகளையுஞ் சிந்தனையும், முற்பிறவியிற்பட்ட துன்பங்களை நி

னைத்து நெட்டுயிர்ப்பெறிதலும், திருவருள்மேலீட்டா லுடம்பி லிளஞ்சூடெழுதலும், ஊணுதிகளைத்துறத்தலும், ஒருவரோ டுரையாடற்கு மானமுறுதலும், மவுனமாயிருத்தலும், பித்தேறினாற்போலப் பிரபஞ்சப்பகுப்புத் தோன்றாதிருத்தலும், பிராணவாயுவிறந்து மூர்ச்சித்திருத்தலும், போதமிறந்து நிற்றலுமாகிய விவை பத்துமெலக் கொள்க.

சுத்தாவத்தைகளோடுங்கூடி யவற்றிற்றோன்று மநுபவங்களைப் போதஞ் சுருங்கியின் றறிதலானு மப்போதந் தேய்தல்வளர்தற்குத்தக்கதா யோர்காலுயர்ந்த வநுபவமாயு மோர்காற்றாழ்ந்த வநுபவமாயு மாறித்தோன்றலானுங் "துவட்சி" யென்றார்.

கேவலாவத்தையோ டாணவ நீங்கிற்றாயினு மதனது காரணம் போதமிறக்குமளவு மிருத்தலின்; போதத்தைத் துகளென்றார். (௩)

(கவி - ௪. அ - ௯)

அவ்வநுபவங்களை யறிந்துசொல்வது வாக்காகலி னிவ்வாக்கினை மவுனமாக்குவது முத்தியன்றோவெனின்; முத்திநிலையி தென்றித்திரு வெண்பாவிற் கூறுகின்றார்.

உரையொடுங்கிற் போத முதிக்கு மொழிவே
யருளா மதன்போக் கசையாப் - பரையோகம்
போனாற் சுகாதீதம் புண்ணியர்க்குப் பொய்யுதியா
தேனோர்க்குப் பல்விதமா கும்.

(இ-ள்.) உரையொடுங்கிற்போத முதிக்குமொழிவே யருளாமதன் போக்கசையாப் பரையோகம் போனாற்சுகாதீதம்" எ-து. வாக்கினை மவுனமாக்கி னுள்ளே போதந்தோன்றுமாகலி னவ்வாக்கு மவுனமுத்தியன்று. ஆயிற்போதமடங்கின் முத்தியோவெனின், போதமடங்கினருட்டரிசனமாகலி னப்போத மடங்கன் முத்தியன்று. ஆயினருட்டரிசன நீங்குதன் முத்தியோவெனி னவ்வருட்டரிசன நீங்கிற் போதஞ் சிறிதுமசையாத பரையோக மாகலி னவ்வருட்டரிசன நீங்குதன் முத்தியன்று. ஆயிற் பரையோக நீங்குதன் முத்தியோவெனின், பரையோகநீங்கிற் சுகப்பேறாமாகலி னப்பரையோக நீங்குதன் முத்தியன்று. ஆயி னச்சுகப்பேறு நீங்குதன் முத்தியோவெனி னச்சுகப்பேறு நீங்குதலே சுகாதீத மிச்சுகாதீதமே முத்திநிலை ?

"புண்ணியர்க்குப் பொய்யுதியா தேனோர்க்குப்பல்விதமாகும்;" எ-து. இச்சுகாதீத முத்தியையடைந்த புண்ணியர்க்கு மேற்கூறிய சுத்தாவத்தையிற் றோன்றும் பொய்களியாவுந் தோன்றாது. இம்முத்தியைப்பெறா தச்சுத்தாவத்தையி னிற்போர்க் கநுபவம் பலவிதமாய்த் தோற்றும். எ-று.

ப-ம். பரையோகங் கூறியதற் கப்பாற் சுகாதீதங் கூறினமையாலிவற்றிற் கிடையிற்றோன்றுஞ் சுகப்பேறுவருவிக்கப்பட்டது.

பரிபூரணசிவத்திற்குத் தம்மைக்கொடுத்தலான் மெய்ஞ்ஞானிகளைப் "புண்ணிய" ரென்றார். சுகாதீதத்திற்குச் சுத்தாவத்தைக் காட்சிப் பொய்யாகலிற் "பொய்யுதியா" தென்றார். (சு)

(கலி - டு. அ - கை.)

அச்சுகாதீத முத்தியையடைதற்கேதுவாகிய சுத்தாவத்தையினிற்போரது குணங்களியாவையென்ற மாணாக்கனைநோக்கி, கருவிகணீங்கியவிடத்து வருங்குணமுந் தன்னையறிந்தவிடத்து வருங் குணமுந் திருவருடோன்றியவிடத்து வருங்குணமு மானந்தந் தோன்றியவிடத்து வருங்குணமு மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

கருவி கழல வவைநோக்காஞ் சிந்தை
பெருமூச்சாம் போதம் பிறியி - லருளாய்
வெதும்பி யுடல்வெறுக்கு மின்பாய் விகள
முதிர்ந்துறையு நாணுமொடுங் கும்.

(இ-ள்.) கருவிகழலவவைநோக்காஞ்சிந்தை பெருமூச்சாம் போதம் பிறியில்" எ-து. கருவிகணீங்கவே மலமேனின்று நோக்குவோர்க்கு நிலத்தின்கண்ணுள்ள பொருள்க ளருகித் தோற்றுமாப்போலப் பிரபஞ்சமெல்லாம் பொய்யாய்த் தோற்றுவதா மக்கருவிகளு ளதோமுகமாய் நின்ற போதமவற்றைப் பிறியி லூர்த்தமுகமாய் நின்று தன்னையறியு மங்ஙனந் தன்னையறிந்தபோ திங்ஙனமிருக்கின்றயா னெறும்புகளா னுங்கூ றரிப்புண்டதுபோ லளவில்கால மக்கருவிகளா லரிப்புண்டேனேயென்னுஞ் சிந்தனையா னெட்டுயிர்ப்புளவாம்!

"அருளாய்வெதும்பி யுடல்வெறுக்குமின்பாய்விகள முதிர்ந்துறையுநாணுமொடுங்கும்" எ-து. தன்னையறிந்தபின்ன ருட்டரிசனமுண்டாய்ப் பின்ன ரவ்வருளே தனக்குவடிவாகி யிம்மாயாவுடலம்வெ

தும்பி யிதனைவெறுப்பன். பின்ன ரானந்தமுண்டா யிவ்வானந்தமே வீடாகிய வுன்மத்தந் தலைமீக்கொண்டு மவுனமாயிருப்ப னஃதன்றிப் பிரபஞ்சத்தார்க்கு நாணுவதாய நாணமுநீங்கும். எ-று.

"போதம்பிறியி" லென்றதனுற் றன்னை யறிந்தென்பது வருவிக்கப்பட்டது. "அருளா" யென்றதனு லருட்டரிசனம் வருவிக்கப்பட்டது. நாணமொடுங்கலாவது; நீராடல் பூசனையாதி செய்திலனென் றுலகத்தார் பழிப்பது குறித்துவரு நாணமெனக்கொள்க. (ரு)

(கவி - ௬. அ - கை)

கருவிகளைப் பொய்யென் றறிந்தவிடத்துவருங் குணமுந் திருவரு ளுதித்தவிடத்து வருங்குணமு மித்திருவெண்பாவிற்கூறுகின்றார்

வேர்க்கும் விழிததும்பும் பொய்யறியின் மெய்வெதும்பி
யார்க்கும் விறைக்கு மருளுதிப்பின் - வாக்குமன
நின்றுபரி பூரணமா நேயத்தே கார்க்கதமாய்க்
கன்றிப் புளகிதமாங் காண்.

(இ-ள்.) வேர்க்கும்விழிததும்பும் பொய்யறியின்மெய்வெதும்பியார்க்கும்விறைக்கும்,, எ-து.பொய்யாகியகருவிகளை யுள்ளபடிபொய்யாயறியின் மெய்யில் வெயர்வை யரும்பும் விழியி னீர்த்ததும்பு மெல்லாம் பொய் யென்றறிந்து கொண்டேனென் றுடலத்திளஞ்சூடெழ வாரவாரிப்பன். பின்னர்த் தன்னை யுள்ளபடிகண் டொன்றினையு நாடாதுடல மசைவறவிருப்பன்.

"அருளுதிப்பின்வாக்குமன நின்றுபரிபூரணமாநேயுத்தேகார்க்கதமாய்க் கன்றிப்புளகிமாங்காண்,, எ-து. பின்னருடோன்றுமிடத்து வாக்கு மனங்களினின் றவ்வருட் பரிபூரணமாய்த்தோன்ற விதற்குமுதலாய நேயத்தை யென்றைக் கடைவேனென் றந்நேயத்தைநாடி மேக்குமுறுவதுபோலா யுள்ளேகுமுறி யுளம்வெதும்பி யுடல முரோமாஞ்சலியாம். எ-று.

க-து. வாக்கு மனங்களினின் றருட்பூரணமாய்த்தோன்றுவதாவது, மனத்தா னினைந்தநினைவு நினைந்த தில்லையாயும் வாக்காற் சொன்ன சொற்கள் சொன்னதில்லையாயுந் தனக் கநுபவமாய்த் தோன்றுவதாமெனக்கொள்க. (௬)

(கலி - எ. அ - கை.)

அருள்மேலிட்டநா ணடக்குங்குண மித்திருவெண்பாவிற் கூறு கின்றார்.

பேயைப்பெண் ணென்றிருந்தும் பித்தளைக்குப் பொன்றோற்று
மாயத்தா ணுண்டுமன மாண்டுமயல் - போயத்
திடுக்கமே பித்தாய்த் தெளிமயலா ணற்போ
னடக்குமருண் மேலிட்ட நாள்.

(இ-ள்.) பேயைப்பெண்ணென்றிருந்தும் பித்தளைக்கும்பொன்றோற்றுமாயத்தூணுண்டு மனமாண்டு மயல்போய்” எ-து. பெண்களைப் பேய்களைப்போலும் பிடித்து வாதிப்பவரென்று கண் டிருப்பதாயும் பித்தளைக்குப் பொன் றோற்றுப்போவதாய்க் காண்பதாயு முதரவெரி வாய்த்தோன்று மாயத்திற்குக் காடி கூழ்முதலியவூண்க ளியாது கிடைப்பினும் வாங்கியுண் டவைகண்மேல்வைத்த மயலும்போ யவற்றை மெய்ப்பொருளாகக்காணு மனமுமிறந்து?

“அத்திடுக்கமேபித்தாய்த்தெளிமயலாணற்போ னடக்குமருண் மேலிட்டநாள்,, எ-து. அப்பொருந்த லருந்தல்களையு மவற்றிற்கேதுவாய பொன்னையும் விழைந்து நெடுநாட் பிறவித் துன்பத்தால் வருந்தினேமேயென்னு மந்தத் திடுக்கந்தானே விடாப்பிராந்தியா யறிவு பயித்தியங்கொண்டோனைப்போலவும் விளங்குக் திருவருண் மேலிட்ட காலத்து. எ-று.

ப-ம். பேய்பிடியுண்டு விடுபட்டோனுக் கோர்காலத்ததனைக்கண்டபோது பயந்தோற்றல்போன் முன் பெண்களால் வருந்திய வருத்தத்தைநோக்கி யவளைக்கண்டபோது பயந்தோற்றலா னங்ஙன முவமை கூறினர். “பித்தளைக்குப்பொன்றோற்று,, மென் றதனினு மிழிவாய்க்கூறினமையா லோட்டுச் சின்னங்களையுஞ் சிறுகற்களையும்போற்காண்பாரென்ற தாயிற்று.

எங்கும் பரிபூரணமாய வருள்வடிவாயிருத்தலானும் பொன்பெண் மண் ணானுடலென்னு மைவகையும் வெறுத் துலகத்தாரோடு மாறுபட் டிருத்தலானுங் “தெளிமயலாணற்போ,, லென்றார். (எ)

(கவி - அ. அ - கை.)

கழிந்தநாட் கிரங்குவனென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

மலட்டுமக னீங்கி வரக்கண்ட தாய்தா
லலத்தி மகிழு மதுபோ - லுலப்பிலாக்
காலங் கழிந்ததையுங் காணாத்தைக் கண்டகளிப்
பாலு மழுதுசிரிப் பார்.

(இ-ள்.) மலட்டுமகனீங்கிவரக்கண்டதாய்தா லலத்திமகிழுமதுபோல்" எ-து. நெடுநாண் மலடிருந்து பின்ன ரரிதாய்ப்பெற்ற புதல்வன் றன்மனைவிட்டுநீங்கி யயன்மனையிற் சென்று மீண்டுவர வெதிர்கண்ட தாய் சென்றெடுத்து மார்போடணைத்து முன்னரவனைப்பெறாத காலத்தையு மிப்போ தவனைப் பெற்றுக்கண்டகாட்சியையு நினைந்துதாலாட்டுதலோ டழு தவ்வழுகையோடுஞ் சிரிக்குமதுபோல ?

"உலப்பிலாக்காலங் கழிந்ததையுங்காணாத்தைக் கண்டகளிப்பாலுமழுதுசிரிப்பார்" எ-து. திருவருளைப்பெறா தளவிறந்தகாலம் பிறவியில் வீணாளாய்க் கழிந்ததைக் கருதியவதனாலு மக்காலங்களுளோர்காலமாயினுங் காணாத வத்திருவருளை யிப்போது கண்ட களிப்பாலு மவ்வருளைத் தோத்திரம் பண்ணலோடழு தவ்வழுகையோடுஞ் சிரிப்பார் திருவருண்மேலீ டடையப்பெற்றோர். எ-று.

ப-ம். "தாலலத்தியென்" றுவமைகூறினமையா லருளைத் தோத்திரம்பண்ணுதல் வருவிக்கப்பட்டது. அரு டம்மிடத்துத்தோற்றலானதனை மகவாவுவமித்துக்கூறினார். தால்-தாலாட்டுதல். அலத்தல் அழுதல். (அ)

(கவி - கூ. அ - கை.)

சுகாதீதமுத்தியைப் பெறா திங்ஙனந் திருவருண் மேலீட்டைப் பெற்றோர்க்குப் பிறப்புண் டாகாதோவெனின், அருண்மேலீட்டையுடையோர்க்கும் பிறப்பின்றென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

நடைதளர்ந்து மெய்ம்மறந்து நாண மழிந்து
வுடறளர்ந்து கீழ்க்குரலிட் டுண்போய் - மடலெடுப்பாய்ச்
சத்தாதி கெட்டுமனந் தாக்கற்றுச் சந்தழிந்த
பித்தர்க்கு மாகாப் பிணி.

(இ-ள்.) நடைதளர்ந்துமெய்ம்மறந்துநாணமழிந்து வுடறளர்ந்து கீழ்க்குரலிட்டேன்போய்" எ-து. கருவிச்சேட்டைகளடங்குதலி னடைதளர்ந் தருளேவடிவாயிருத்தலி னுடம்புமறந் துடம்புமறத்தலிற் பிரபஞ்சிகள் பழிப்பாரென்பது குறித்துவரு நாணமழிந் துண்டிமேல் விருப்பின்மையா னுடறளர்ந்து மன மவுனியாயிருத்தலிற்கீழ்க்குரற்பேச்சா யருளமுதம் புசித்தலிற் சிற்றூணுண்பதாய் ?

"மடலெடுப்பாய்ச்சத்தாதிகெட்டுமனந் தாக்கற்றுச்சந்தழிந்த பித்தர்க்குமாகாப்பிணி,, எ-து. அருளையேயன்றி மற்றொன்றையு நாடாமையின் மடலெடுப்பான்போலா யைந்தவாவு மற்றமையாற் சத்தாதி விடயங்களுமிறந் திச் சத்தாதிவிடயங்க ளிறந்தமையான் மன மொன்றோடுந் தாக்கற்று மன மொன்றோடுந்தாக்கற்றமையா லருளென்றுந் தானென்று மின்றி யிரண்டற்ற விவ்வரு டலைமீக்கொண்ட பித்தர்க்குஞ் சுகாதீத முத்தியை யடைந்தோரைப்போற் பிறவிநோயுண்டாகாது. எ-று.

ப-ம். அருண்மேலீட்டையும் பிரபஞ்சப் பற்றொழிவையு முடையோர் தேகாந்தத் தறிவோடுஞ்சென்று சுகாதீதமுத்தியை யடைவராகலிற் "பித்தர்க்குமாகாப்பிணி" யென்றார். (௬)

(கலி - ம. அ - ௯.)

ஆனந்தம்பெற்றோர் குண மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

குறும்பாட்டும் புன்சிரிப்புங் கூர்த்திமையா நோக்கும்
வெறும்போகஞ் சாய்ந்து விழினு - மறந்த
திகைப்பும் விதிர்ப்புந் திமிர்ப்பும் விறைப்பு
முகைப்புந் தெளிந்தறித லும்.

(இ-ள்.) குறும்பாட்டும்புன்சிரிப்புங்கூர்த்திமையாநோக்கும்,,எ-து. தாமறிந்த பாட்டுகளுட் சிலபாட்டா னருளைத் தோத்திரம்பண்ணுவதாய குறும்பாட்டும், ஆனந்த மகிட்சியாற்றோன்றும்புன்சிரிப்புமுட்புறனு மவ்வானந்த பூரணத்தை நுண்ணிதாய்ப் பார்த்துக்கொண் டிருப்பதாய விமையாநாட்டமும் ?

"வெறும்போகஞ்சாய்ந்துவிழினு மறந்ததிகைப்பும் விதிர்ப்புந் திமிர்ப்பும்விறைப்பு முகைப்புந்தெளிந்தறிதலும்" எ-து. தாமொன்றையும் விழையாதிருப்பினுந் தமதுசந்நிதியிற் பொய்ப்போகங்கண் கமிவுஞ்சாய்ந்துவந்து கிடப்பினு மித்துன்பங்க ளீண்டேன் வந்தவெ

ன் றவற்றைச்சிறிதுநினையாததிகைப்பு மவற்றைக்கண்டபோ துடன டுக்குறுதலும் பஞ்சேந்தியங்கட்குரிய விடயங்கணேர்படி னவ்விடய ச்சுவை தோன்றாத் திமிர்ப்பும், பூதம்-பேய்-புலி-கரடி முதலிய வந்த காலத்துக் கற்றூண்போலத் தேகமசைவறவிருக்கும் விறைப்பு மான ந்த மிகவும்வந்து தாக்குதலா னெழுந்துகுதித்தாடு முகைப்பு மங்ங னமாடிய வானந்த மேலீட்டாற்றேன்றாது அவ்வானந்தமேலீடு சிறி துநீங்கியபோ திப்போ தியாமென் செய்தோமென்று தெளிந்தறிந்து கோடலுமாகிய விக்குணங்களெல்லாம் பனையோக நீங்கி யானந்தம் பெற்றோர்க்குத் தோன்றுவனவாம். எ-று.

ப-ம். இங்ஙன மறிவுந்துறவுமுடைய ஞானிகளைப் பத்தராயுள்ளா ரெல்லாரு மன்னபானங் காய் பழ மாடைமுதலிய கொடுவந்து வைத் து வணங்குவராகலின் "வெறும்போகஞ்சாய்ந்துவிழினு" மென்றார்.

வெறும்போகம்-பொய்ப்போகம். சாய்ந்தென்பது மிகுதிமேலே நிற்று. (ய)

(கவி - ௰௧. அ - கை.)

இங்ஙனம் பூரணானந்தம்பெற்றோர்க் காடலும் பாடலு முண் டாவதென்னையெனின்; ஞானிகட்குப் பூரணவடிவம்பெற்றமையா லா டலும், ஆனந்தம்பெற்றமையாற் பாடலுமுண்டாமென் றித்திருவெ ண்பாவிற் கூறுகின்றார்.

கால்வந் தவர்க்காட்டங் கைவந் தவர்க்காட்ட
மால்முந்தி வந்தவர் வாய்ப்பாட்டு - மேல்கொண்ட
வானந்த வுல்லாசத் தாச்சரிய மாரறிவா
ருனம்போற் காணு முலகு.

(இ-ள்.) கால்வந்தவர்க்காட்டங்கைவந்தவர்க்காட்ட மால்முந்திவந்த வர்வாய்ப்பாட்டும்,, எ-து. பிறவி முடவராயிருந் திடையிற்றெய்வகதி யாற் கால்நடக்கவந்தவர் க்காட்ட முண்டாவதுபோலுங் கைவராதிருந் திடையி லங்ஙனங் கைவந்தோர்க் காட்ட முண்டாவதுபோலுந் தாங் கூடி யநுபவித்த பெண்மே லாசை தலைமீக்கொண்டு வந்தவர் வாய்ப் பாட்டுப்போலும் ?

"மேல்கொண்டவானந்தவுல்லாசத்தாச்சரியமாரறிவா ருனம்போ ற்காணுமுலகு,, எ-து. தம்மைமறைத்து மேற்கொண்டெழுந்த வான ந்த வுல்லாச வதிசயத்தா லவர்க்காடலும் பாடலுமுண்டா மவ்வான்

ந்தாதிசயத்தை யதனைப்பெற்ற ஞானிகளறிவதன்றி மற்றை யாரறிவா ரவர்க்காடல் பாடல்களைப் பயித்தியமிகுதியா லுண்டாவனபோற் கா ண்பாருலகத்தார். எ-று.

ப-ம். நெடுநாட் கா லுங்கையும் வராதிருந் திடையி லவைவந்தோர் க் காட்டமுண்டாவதுபோ லளவிறந்த காலமு மலச்சிறையிற் கிடந் தோர்க் கிப்போ தச்சிறை விடுதலையாய்ப் பரிபூரணவடிவைப் பெற்ற மையா னிவர்க்காடலும், தாமநுபவித்த பெண் ணின்பவாசனை யுள த்திருத்தலா னவர்க்குப் பாடலுண்டாவதுபோற் றுன்ப போகத்தை யே யளவில்காலம் பொசித்தோர்க் கிப்போது நிரதிசயானந்தங்கிடை த்தமையாற் பாடலு முண்டென்ப திவ்வுவமைகளாற்காண்க.

"ஊனம்போ" லென்றமையா லூனமன்றென்பதாயிற்று. உல கென்பதாகுபெயர். "கைவந்தவர்க்காட்ட" மென்பதற் கருத்த மோ ர்வித்தையாதி முன்கைவராதிருந்து பின்கைவந்தபோ தாட்டமுண் டாவதுபோலு மென்கினுமாம். (யக)

(கலி - யஉ. அ - கை.)

ஆனந்த மவுனமதனை யடைந்த ஞானிகள் போதமிழந்தோராக லின், இங்ஙன நிர்விகாரியாயிருந்தோர்க் கந்தவிகாரிகள்போலு மாட ல்பாட லெங்ஙன முண்டாமென்ற மாணக்கனைநோக்கி, அவர் நிர்வி காரிகளாயிருந்தே யாடுவர் பாடுவரென் றித்திருவெண்பாவிற் கூறுகி ன்றார்.

அறிவு பறிகொடுத்திவ் வாக்கையற மாறிப்
பெறுதி யிழப்புதியாப் பித்தி - னறிசென்
றலையற்ற நீத்தமோ ராளற்ற கப்ப
லுலைவுற்ற தோநிற்ப தோ.

(இ-ள்.) அறிவுபறிகொடுத்திவ்வாக்கையறமாறிப் பெறுதியிழப்புதி யாப்பித்தி னறிசென்று,, எ-து. முன்னர் விடயானந்தத்திற்குத் தம தறிவைப் பறிகொடுத்ததுபோ லிப்போதுமாறிச் சொரூபானந்தத்தி ற் கவ்வறிவைப்பறிகொடுத்து முன்னர்க்கூடியிருந்த விம்மாயாவடிவ மறந்துபோக விப்போ தருள்வடிவாய் மாறிப்பெற் றவ்வருளே வடி வாகலி னேர்பொருளைப் பெற்றோமென்னும் பெறுதியு மோர் பொ ருளை யிழந்தோமென்னு மிழப்பு மிவற்றுன்வருமிதாகிதங்களுந்தோ

ன்றுத வானந்தப்பயித்திய மீக்கொண் டோரிடத்துச் சிறிதேனும் விகாரமுண்டாகாது. இதனை யறிவிற்சென்று பார்த்தறிதி. இஃதன்றி?

"அலையற்றநீத்தமோராளற்றகப்பலுலைவுற்றதோனிற்பதோ,, எ-து. அலையின்றிய சாகரத்தினிற்கு மோரரளுமின்றிய கப்ப லசைவுறுகின்றதோ வசைவற்று நிற்கின்றதோ? அஃதெங்ஙனமசைவற்று நிற்கின்ற ததுபோலு மவுனானந்தசாகரத்தின் முப்பத்தாறுதத்துவங்களுந் தற்போதமு மிறந்துநின்ற ஞானிகளு மசைகிலரென் றித்திட்டாந்தத்தானுங் கண்டுகொள்க. எ-று.

க-து. "அலையற்றநீத்தத்தை" மவுனானந்தத்திற்கு மாளற்றிருத்தலை கருவிகளிறந்து நிற்றற்கு மசைவற்றகப்பலைப் போதமிறந்தஞானிகளதறிவிற்கு முவமித்தார். அறிவுபறிகொடுத்தல்-ஆனந்தமயமா யழுந்தல். (௰௨)

(கவி - ௰௩. அ - கை.)

அவர்பாடினராடினராயினும் விகாரிகளலரென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

செகஞ்சிரிக்கத் தாஞ்சிரித்துஞ் சீபேயென் றோட்டி
லகம்புறங்காட் டேச்சுக்குற் றற்றுத் - திகம்பரியாய்த்
தானந்தம் பாடிவிண்ணிற் றட்டத் துணங்கையடித்
தானந்தக் கூத்துநடிப் பார்.

(இ-ள்.) செகஞ்சிரிக்கத்தாஞ்சிரித்துச்சீபேயென்றோட்டி லகம்புறங்காட்டேச்சுக்குற்றற்றுத் திகம்பரிபாய்,, எ-து. உலகநடைதெரியாத பேயரென்று சகத்தோர் தம்மைப்பார்த்துச் சிரிப்ப ஞானநெறிதெரியாத மலப்பேயரென்று தாமு மவரைப்பார்த்துச் சிரித்துப்புறந்திண்ணைப் பொதுச்சாவடிகளிற் றாமிருந்தவிடத் தவர்வந்து சீ பேயரே போமென் றோட்டின லியாதொன்றுங் கூறு தவ்விடம்விட்டுநீங்கிப் புறங்காட்டை நன்மனைபோறகண் டசுத்தமென்னு மருவருப்புச் சிறிதுமற்றுத் திகம்பரிகளா யவ்விடத்திருந்து?

"தானந்தம்பாடிவிண்ணிற்றட்டத்துணங்கையடித்தானந்தக்கூத்துநடிப்பார்,, எ-து. தமது போதஞானமானவிடத்துப் பாடிச் சிதாகாசவெளியிற் பொருந்தி நின்று துணங்கைக்கூத்திற் குரித்தாம்படி கையடித் தானந்தநடனம்பண்ணுவா ரவ்வானந்தபூரணராயினோர். எ-று.

ப-ம். உலகர்க்கு ஞானிகண் மாறுபாடா யிருத்தலானும். ஞானிகட் குலகர் மாறுபாடாயிருத்தலானுஞ் "செகஞ்சிரிக்கத் தாஞ்சிரித்" தென்றார். உலகத்திற்குஞானம்-பேய். ஞானத்திற் குலகம்பேய். என்முனுலகவழக்கமு மதுபிரபஞ்சமெல்லா மானந்தபூரணமாய்த்தோற்றலிற்சுடுகாட்டசுத்த மவர்க்குத் தோற்றாதென்றதறிக.

"தானந்தம்பாடி" யென்றதனாற் போதமிறந்து நின்றுபாடினாரென்பதும் "விண்ணிற்றட்டநடிப்பா" ரென்றதனாற் பரிபூரணானந்த மாறாது நடிப்பாரென்பதுங் காண்க. (யஙு)

(கவி - யிசு. அ - கை.)

நீர்கூறியவாறே யெல்லாவற்றையுந் துறந்து சிவவேடம்பூண்டு கொண்டு தவங்களைச்செய்து சிவாலயங்கடோறு மாடிப்பாடியழுது சிரிக்கின்றோர் நிருவிகாரி ளலரோவெனின்; ஞானிகள்போ னடிக்கின்றோரைப் பொய்ஞானிகளென் றித்திருவெண்பாவிற் கூறுகிறார்.

விபரீதப் பூணு முடையும் விளியா
லபிமா னமுமவரா லாட்டுந் - தபசுபோற்
செய்யுஞ் சடங்குந் திகைப்புஞ் சிதம்பரத்தி
லையன் றனக்கறிய லாம்.

(இ-ள்.) விபரீதப்பூணுமுடையும்விளியா லபிமானமுமவரா லாட்டுந்தபசுபோற் செய்யுஞ்சடங்கும்,, எ-து. பார்த்தபேருக்குவிபரீதமாய்த் தோன்றும்படி சிரஞ் செவி களங் கர மார்புகளின் மிகவும்பூண்டு கொள்ளு முருத்திராக்கப் பூண்களு முத்தூளனமு மொட்டுவேட்டியுடையும் வார்த்தையினு லியாஞ் சிவமதமென்று பிடித்துப்பேசு மபிமானமு மவரிடத்துண்டா மாடல்பாட்ல்களுந் தவசுபோற்செய்யு ஞானசாரங்களும் ?

"திகைப்புஞ்சிதம்பரத்திலையன்றனக்கறியலாம்,, எ-து. அவ்வேடத்திற்கு நடைக்கு முரிய பரிபூரணஞான மகத்தின்றித் திகைத்திருத்தலுமாகிய விவை யுடையாரது கருத்தினைச் சிதாகாசத்திற் பஞ்சகிருத்திய நடனம் பண்ணுநின்ற பரமசிவனது திருவுளத்திற்கே யறியலாமன்றி மற்றையர்க் கறியலாகாது. எ-று.

ப-ம். ஆபரணம்போற் பூண்டுகோடலி, னுருத்திராக்கத்தைப் பூணென்றார். உருத்திராக்கங் கூறினமையா லுத்தூளனம் வருவிக்கப்பட்டது.

அகத்துஞானமின்றிப் புறத் திங்ஙனங் காட்டுவனவெல்லாந் தற்போதத்தா லுண்டாவதாகலி னிவர் நிருவிகாரிக ளலரென்பதுங் காண்க. இவர்களும் ஞானிகள்போற் பிறர்க்குத் தோற்றலிற் "சிதம்பரத்தி லையன்றனக்கறியலா,, மென்றார். (யச)

(கவி - யடு. அ - கைக்)

மெஞ்ஞானிக ளஞ்ஞானிகளது பொய்யுலகாசாரத்தைக்கண்டு சிரக்கம்பனுதிகளுந் தம்முண்மையு மாநந்தானுபவமுங் கண்டு நடனாதிகளுஞ்செய்வரென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மாலயனு யிந்திரனுய் வாழுவதாய் மாளுவதாஞ்
சாலமயல் பார்த்துத் தலையசைப்பர் - ஞாலமயங்
குன்மத்தக் கோரணிபார்த் தோகோ வெனச்சிரிப்பர்
தன்னைப்பார்த் தாடுவர்தாந் தாம்.

(இ-ள்.) மாலயனுயிந்திரனுய் வாழுவதாய்மாளுவதாஞ் சாலமயல் பார்த்துத்தலையசைப்பர் ஞாலமயங் குன்மத்தக்கோரணிபார்த் தோகோவெனச்சிரிப்பர்,, எ-து. தேவர்கட்கெல்லா மேலாய மாலென்னும்பெயரை யுடையனுகியும், அயனென்னும் பெயரை யுடையனுகியுமிந்திரனென்னும் பெயரை யுடையனுகியுஞ் சிறந்துள்ளார், தத்தம்பதவிகளி லழிவின்றி வாழ்வதாய்க் கருதிக்கொண்டிருந்து பன்னளின்மாண்டுபோவதாகும். அவரது மிகுந்தவாணவமயக்கத்தைப்பார்த் திவ்வாணவ மவர்களையும் பொய்யாகிய தேகாதிகளையு மெய்யாக் கருதப்பண்ணி மயக்கிற்றுக் கண்டீர் கொலோவென் றுள்ளத்து நாடிச் சிரக்கம்பங்கொள்வர். அவ்வாணவத்தா னிவ்வுலகத்தார்மயங்காநின்ற பயித்தியக்கோரணிக் கூத்தைப்பார்த் தோகோவெனப் பிறர்க்குக் கேட்கச்சிரிப்பார்?

"தன்னைப்பார்த்தாடுவர்தாந்தாம்,, எ-து. அஃதன்றி தம்மைப்பார்த்துத் தம்மைச் சிவபூரணம் விழுங்கிக்கோடலாற் காணுது தாமச்சிவபூரணந் தாமென நடனம்புரிவார். எ-று.

ப-ம். மாலயனிந்திரன் முதலியோ ரிறந்துபோவ தாகமப்பிரமாணத்தா லறிவதாகலி னவரது "மயல்பார்த்துத்தலையசைப்ப,, ரென்றார். பித்தமேறினேன் றன்னுடம்பு தெரியா துலகர்நடைக்கு மாறுபாடா

ய்த் திரிவதுபோ லாணவமேலீட்டாற் றம்மைத் தெரியாது ஞானிக ணடைக்கு மாறுபாடாய்த் தேகபோகங்களை விழைந்துகொண் டறுவகைத்தொழில்களி னுறு பேதமாய் முயற்சிப்பட்டலா "னுன்மத்தக் கோரணி,, யென்றார். அவர்மருளான் மயங்கி நடிக்கின்றார். இவ ரருளாற்றெளிந்து நடிக்கின்றா ரென்பதுங்காண்க. தாந்தா மென்ப தந்நடனத்திற்கோர்தாளமு மாமெனக்கொள்க. (யரு)

(கவி - யகூ. அ - கை.)

இதுவுமது.

ஆசைமுத லான வனைத்தும்போய் நானதுவாம்
வாசனையு மாண்டு மறந்தறியா - நேசத்
துறும்போக வுல்லாச வூமைக்கூத் தாடிக்
குறும்போக்கு வந்துநடப் பார்.

(இ-ள்.) ஆசைமுதலான வனைத்தும்போய்நானதுவாம் வாசனையுமாண்டுமறந்தறியா நேசத் துறும்போக வுல்லாச வூமைக்கூத்தாடி,, எ-து. ஐந்தவாமுதலிய கருவிகளனைத்து மிறந்து நானச்சிவத்தோ டத்துவிதமானே னென்பதாகிய வாசனையுமிறந்து தற்றரிசனந் திருவருட் டரிசனங்களி னின்றோ ரோர்காலை யவற்றைமறந்து மீண்டு மறிவதுபோன் மறந் தறியாதநேயத்துத் தோன்றும் பரிபூரணானந்தபோகவுல்லாசத்தோடு மவுனக்கூத்தாடி?

"குறும்போக்குவந்துநடப்பார்,, எ-து. பின்னர்ச் சிறிதிடஞ்சென்று மீண்டுவந்து மூலாவுவா ரவ் வத்துவிதானந்தம்பெற்றோர்.எ-று.

ப-ம். விடயங்களிற்செல்லு மைந்தவாவு நீங்கவே யவ்விடயங்களை யறிந்துபற்றி யவற்றுளழுந்துவதாய விருவகை யிந்தியங்களு மந்தக்கரணங்களுநீங்கும். இவைகணீங்கவேயொழிந்தகருவிகளுநீங்குமாகலி "னுசைமுதலானவனைத்தும்போயென்" றாசையைமுன்வைத்துக் கூறினார். நேயத்தழுந்தியபோது போதமிறத்தலின் "மறந்தறியாநேச" மென்றார். சிறுபிள்ளைகள்போலுலாவி விளையாடுவ ராகலிற் "குறும்போக்கு வந்துநடப்பா,, ரென்றார். (யகூ)

(கவி - யிஎ. அ - கை.)

கருவிகளும் போதமுமிறந்து நேயத்தழுந்திஞோரக்கருவிகளும் போதமுமுடையோராது மயக்கமுந்தமதுதெளிவு மெங்ஙனமறிவாரெனின்; சீவன்முத்தராய மெய்ஞ்ஞானிகள் ஜகமுகமும் அகமுகமுந் தோன்றப் பற்றுது பார்த்தறிவாரென் றித்திருவெண்பாவிற் கூறுகின்ருர்.

கேடுஞ் சுகமு முதலெல்லாங் கீழ்ப்படுத்திக்
கூடுஞ் சுகம்போலக் கொள்ளாதே - நாடுநகும்
பூனைக்கண் ணேரி பொருப்பேறி போலுச்சிப்
பானுப்போ னீயவனைப் பார்.

(இ-ள்.) கேடுஞ்சுகமுமுதலெல்லாங்கீழ்ப்படுத்திக்கூடுஞ்சுகம்போலக்கொள்ளாதே,, எ-து. துக்கமுஞ்சுகமு மிவற்றிற்கு முதலாயுள்ள தேகாதிப் பிரபஞ்சமெல்லாமுங் கீழ்ப்படுத்தி நீக்கி நேயத்தைக்கூடும் பரமுத்தர் குணம்போலச் சீவன் முத்தர்குணத்தை நீ கருதிக்கொள்ளாதே. அஃதெங்ஙனமெனின்?

“நாடுநகும்பூனைக்கண்ணேரிபொருப்பேறிபோலுச்சிப் பானுப்போனீயவனைப்பார்” எ-து. நாட்டின்கண்ணுள்ளார்பார்த்து நகையாநின்ற விருட்டைச் சிறிதேனுமின்றி யிரவினுமறியும் பூனையினது கண்ணைப்போலும் ஏரிகரைமே லேறிஞேனைப்போலு மலைமே லேறிஞேனைப்போலு மத்தியானத்துச் சூரியனைப்போலு நீயச்சீவன்முத்தரறிவையும் பார்த்தறிதி. எ-று.

ப-ம். பூனைக்கண்ணிற் கிரவினும் பகலினும் பொருள்கடோன்றுவபோலு மேரிகரைமே லேறிக் கிருபாலுந் தோற்றுவபோலும் பொருப்பேறிக்கு நிலத்திற்பொருளும் பொருப்பிற் பொருளுந் தோற்றுமாபோலு முச்சிப் பானுவிற் குதயமாகுந் தானமு மத்தமிக்குந் தானமுந் தோற்றுமாபோலவும், பிறப்பிற்றுன்பமும் வீட்டி னின்பமுமவர்க்குத்தோற்றுமாகலி னிங்ஙன முவமைகூறிஞர்.

இருளா னறியுங்கண்ணிற் கொளியிற் பொருடோற்ருததுபோற் பெத்தர்களென்பதும்; ஒளியானறியுங்கண்ணிற் கிருளிற் பொருடோற்ருததுபோற் பரமுத்தரென்பதும். இருளினு மொளியினு மறியுங் கண்ணைப்போற் சீவன்முத்தரென்பதும், “பூனைக்கண்,, ணென்னு முவமைக்குறிப்பாற்காண்க.

பரமுத்தர், தநுவாதிகளைநீக்கி நேயத்தழுந்தினோர். சீவன்முத்தர், தநுவாதிகளோடு கூடியுங்கூடாமனின்று நேயத்தழுந்தினோர்.ஆகலி னிச்சீவன்முத்தராவா ரிவரென் றிதனுட் பகுத்தறிவித்தார். ஏரியென்பதனைக், கரைமேலேறியென்பதனோடுங்கூட்டுக. "நாடுநகு"மென்பது பூனைக்கண்ணிற்கடை. (௰எ)

(கலி - ௰அ. அ - கை)

ஞானிகளாயினோர் மவுனமாயிருப்பதன்றி யிவ்வாடலாதிகளைச்செய்வ தென்னையென்று சரிதாதியி னிற்போர் சொல்லார்களோவெனின்; மெய்ஞ்ஞானிகளது ஆடலாதிகளைக்கண்டு கருமிகள் பழிப்பினும் மது பழிப்பின்பாற்பட்ட தன்றென் றித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

சூலையும் பேயும் பிடித்துழல்வார் சும்மாநம்
போலறிவீ ரென்றுரைத்த புத்திபோன் - மூல
விருளான் மறந்தறிவா ரீதென்னு னென்பா
ரருளா லறிந்தறிவா ரை.

(இ-ள்.) சூலையும்பேயும் பிடித்துழல்வார்சும்மாநம் போலறிவீரென்றுரைத்தபுத்திபோல்" எ-து. பொதுமாதர் கூட்டரவான்வருஞ் சூலைநோயு நற்குணத்தை மாறுபடுத்தும் பேயும்பிடித் தவற்றான்வருந்திச் சுழல்வா ரிச்சூலையும் பேயுங்கொண்டு சும்மா வெமதறிவைப்போ னீருமறிவீரென்று நற்குணத்தோர்க்குச்சொன்னபுத்திபோல?

"மூலவிருளான்மறந்தறிவா ரீதென்னுனென்பா ரருளாலறிந்தறிவாரை" எ-து. மூலமலவிருளாற் றம்மைமறந்து மாயா காரியமாகிய தநுவாதிகளை யானெனதென்றறிவா ரருளாலத்தநுவாதிகளைப் பொய்யென்றறிந்து நீங்கித் தம்மையுந் தமக்குரிய பேரின்பத்தையுமறிந்துளாரைப்பார்த்துப் பித்தரைப்போ னீர்செய்யுமாடல்பாடல்களிதென்னையென்றுசொல்வர். அதுகொண் டிவர்க்கோரிகழ்ச்சியுமின்று.எ-று.

ப-ம். சூலையும் பேயும்பிடித்துளோர் புத்தியை யவை பிடியாதநற்குணத்தோர் கேளாததுபோற் சகலகேவலத்தி னிற்போர்சொற்களையவற்றைநீங்கிச் சுத்தத்திருப்போர்கேளாரென்ப திவ்வுவமையானறிக.

சூலையும் பேயுமென்றது; ஏகதாரவிரதியா யிலிங்கவிரதியா யிருப்போர்க்குப் பொதுமாதர் கூட்டரவு மைவாசர்முதலிய மருளேற்றிக்கொள்வது நன்றென்று பிறர் கூறுவனபோ லென்பதுமாம். (௰அ)

(கவி - ௰௯. அ - ௯.)

ஞானிகள்மகிமையையுலகத்தாருஞ்சரிதாதிகளினிற்போருமறியா திருத்தலேனெனின்; ஞானிகளது மகிமையை யுலகத்தாருஞ் சரிதாதிகளி னிற்போரு மெய்யுணர்ச்சி யின்மையா னறியார்களென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மருண்மூகர் வாக்கறிய வல்லரோ மாயா
விருளே யொளியா யிருப்ப - ரருளுருத்த
பேயனைப்பே யென்னுரோ பித்தநாப் பாலிருட்கண்
பார்வைக்குப் பானுப் பகை.

(இ-ள்.) மருண்மூகர்வாக்கறிய வல்லரோமாயா விருளே யொளியா யிருப்பர்" எ-து. பித்தமேறிய வூமர்க ணல்லறிவாளர் கூறு மறமெ றிவாக்கினை யுட்கொண்டறியவல்லரோ! அதுபோ லுலகத்தார் ஞானிகள்கூறுந் திருவாக்காணுயினு மவர்களை ஞானிகளென்றறியவல்லரோ? அஃதன்றித் தாங்கற்ற நூலறிவுஞ் சரிதாதிகளுமாகிய மாயாவிருளைத் தானே ஞானப் பிரகாசமாகக் கருதிக்கொண்டிருப்போர்?

"அருளுருத்தபேயனைப்பேயென்னுரோபித்தநாப்பாலிருட்கண் பார்வைக்குப்பானுப்பகை"எ-து.மும்மலங்களையுந் தற்போதத்தையுங் கோபித்தவருளாகிய பூரணப்பேய் பிடித்த பேயனைப் பேயரென்று சொல்லார்களோ? அங்ஙன மிருந்தோ ரிங்ஙன மிருந்தோனைப் பேயரென் றிகழ்வானேனெனின்; மதுரமாகியபால் பித்தமேறிய நாவிற்குப் பகையானதுபோலும், பேரொளிப்பிரகாசமாயிருந்த பானு விருளையொளிவாகக் காணு மிருட்கண்பார்வைக்குப் பகையானதுபோலுமானந்தமுந் திருவருளு மலமேலீட்டா லவர்க்குப்பகையா மாகலினிவற்றைப்பெற்ற ஞானிகளும் பகையாத் தோற்றுவ ரிஃதே யவரிகழ்தற்குக் காரணமென்றறிதி. எ-று.

ப-ம். "மருண்மூகர்வாக்கறியவல்லரோ"வென்ற துலகத்தார்க் குவமை நாலுணர்ச்சியோடுஞ் சரிதாதிகளி னிற்போ ரிகழ்வாரென்பது; பரஞானமின்மையா லெனக்கொள்க.

"பானுப்பகை" யென்பதனைப் பாற்பகை யென்றதனேடுங்கூட்டுக.கைப்பாயுமிருளாயுமாறுபடத்தோற்றலிற்"பகை"யென்ருர்.(௰௯)

(கவி - உ௰. அ - கை.)

ஞானிகண்மகிமையை மானிடரறியாராயின் அறிவாரரெனின்; ஞானிகண் மகிமையை மானிடர்களறியாரெனினுந் தேவர்களறிந் தே வல்புரிவாரென் றித்திருவெண்பாவிற் கூறுகின்ருர்.

அடைப்புள்ளா யாளடர்ந்த வாமையாய்த் திக்கே
யுடுப்பதா யோர்ந்துழல்வார்க் கூரார் - நடைப்பிணமே
யூமைப்பே யாரெனினு மோலமிடுந் தேவர்குழாஞ்
சேமக்கோ லாளிந் திரர்.

(இ-ள்.) அடைப்புள்ளாயாளடர்ந்த வாமையாய்த்திக்கே யுடுப்பதா யோர்ந்துழல்வார்க்கூரார்" எ-து. நேயநிட்டை மாறுதிருத்தலின் மு ட்டைகளைவைத் தவையங்காக்கு மடைப்புட்போலாய்த் தாமிருந்தவி டந்தேடிச் சில ரன்னுதிகளைக் கொடுவந்து நேரேவைத்துவணங்கி யு பசாரங்களைக் கூறினு மிந்தியங்க ளைந்தையு மவற்றிற் செல்லவொட் டா துள்ளடக்கிக்கொண்டிருத்தலினுளடர்ந்த வாமைபோலா யிவ்வு டையைத் துறந்து திக்கெல்லாம் பரிபூரணமாயுள்ள வுடையைத் தம் மைத்தெரியாது சூழவுடுத்திக்கொண்டிருத்தலிற் றிக்கை யுடுப்பதா யிங்ஙனந் தேர்ந்துலாவுவார்க் கூரின்கண்ணுள்ளார் நன்றுகூறினுந்தீ துகூறினு முறவரோ பகைவரோ விவர்யாவர் ?

"நடைப்பிணமே யூமைப்பேயாரெனினு மோலமிடுந்தேவர்கு ழாஞ் சேமக்கோலாளிந்திரர்" எ-து. அஃதன்றி நடையாடிய பிணம் போற்றிரிந்தாரெனினு மூமைப்பேயனாப்போ லிருந்தாரெனினு மவ ரதுமான்மியத்தைத் தேவர்கூட்டங்களெல்லாமறிந்து சூழ்ந்துகொண் டு தோத்திரம்பண்ணுமிற்ப ரிந்திரர்க ளவர்க்கேவற்பணிவிடைசெய்யு ஞ் சேமக்கோலாள்களாய்த்திரிவர். எ-று.

ப-ம். அடைப்புண்முட்டையைச் செட்டையா லடக்கிக் கோடல் போ லண்டங்களையெல்லாந் தமது பூரணத்தான் மறைத்துக்கொண் டிருப்ப ரென்பதுமாம். ஆளடர்ந்தபோதாமை யைந்துறுப்பையு ம டக்கிக்கோடல்போல, விடயங்க ணேர்படி னவனைந்தையு மடக்கலி னிங்ஙன முவமைகூறினுர்.

உளரென்ப தூரின்கண்ணுள்ளார்மேலேறிற்று. தேர்ந்துழல்வா ர்க் கூரினுள்ளா ரியாவரெனக்கூட்டுக. கருவிச்சேட்டைக ளிறந்துநி

ற்றலி "னடைப்பிண" மென்றும், மவுனனந்தமா யிருத்தலி னுமைப் பேயரென்றும், ஒன்றினு மவாவற்ற மெய்ஞ்ஞானி தேவருலகத்து மின்மையா "லோலமிடுந் தேவர்குழா" மென்றுஞ் "சேமக்கோலா ளிந்திர" ரென்றுங்கூறினர்.

அந்தஞானிகட் கேவல்செய்வது மிகவுஞ் சிறப்பாகலி னவர்பிடிக் குங்கோலைச் "சோமக்கோ" லென்றார். உபேந்திருளராகலி னிந்திர ரென்று பன்மையாகக்கூறினர். (உய)

(கவி - உக. அ - கை.)

இங்ஙனமகிமையுடைய ஞானிக ளெத்தேசத்திற்செல்வ ரெவ்வி டத்திருப்பரெனின்; ஞானிகள் செல்வதற்கு மிருப்பதற்குந் தேசமு மிடமுங் குறியி டின்றென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

செத்தவனைப் போலத் திரும்பாமற் போகலுமா
மெத்திசையு மொன்றென் றிருக்கலுமா - முத்தர்தமக்
கண்ட மணுச்சிற்றி லாடரங்கந் தேகமலாற்
கண்டிடுகைக் கேதுமிலை காண்.

(இ-ள்.) செத்தவனைப்போலத் திரும்பாமற்போகலுமா மெத்திசை யுமொன்றென்றிருக்கலுமா முத்தர்தமக்கு" எ-து: முத்தர்தமக்குச் செத்தவனைப்போலத் தாமிருந்து நீங்கிய பதியின் மீட்டுந்திரும்பாம ற்சேறலுமாகு மஃதன்றி யெல்லாம் பரிபூரணமாய் தோற்றலி னெம க்கெல்லாத்திக்கு மொன்றுதானேயென் றோரிடத்திருத்தலுமாகும்?

அண்டமணுச்சிற்றிலாடரங்கந்தேகமலாற் கண்டிடுகைக்கேதுமி லைகாண்" எ-து. அஃதன்றித் தேகங்க ளான்மாக்கட்குச் சிற்றி லிழை த்தற் கிடமெனவு மண்ட மவ் வான்மாக்கட்கு மாயா கோரணிக்கூத் தாடற் கோ ராடரங்கெனவுங் காண்ப தல்லாம லம்முத்தர் தமக்கு வேறுகாண்கைக் கியாதொரு பொருளுமில்லை. எ-று.

ப-ம். உடற்கண்ணிருந்து நீங்கிய வுயிர் மீட்டும்வந் ததனுட் புகா ததுபோற் றாமிருந்துநீங்கிய பதியின் மீட்டும்வந்து புகாமையிற் "செ த்தவனைப்போலத் திரும்பாமற்போகலுமா" மென்றார்.

அணுவென்பது-ஆன்மா. தேகஞ் சிற்றிலெனவு மண்டமாடரங் கெனவு மாறிக்கூட்டுக. பிரபஞ்சமெல்லா மண்டபிண்டங்களு ளடங் குமாகலிற் "கண்டிடுகைக்கேதுமிலைகா" ணென்றார்.

முத்தர்தமக்கென்பது நடுநின் றிருபாலுங்கொண்டு முடிதலிற் ரூப்பிச்சைப்பொருள்கோளு நடுநிலைத்தீபகமுமாங்காண்க. (உக)

(கவி - உஉ, அ - கைக.)

அந்தஞானிகள் போகாதவூர் ஒன்று மின்றேவெனின்; ஞானிக ட்கு நிற்குநிலையு நடக்கும்போ துள்ளகுணமு மோரூர் நிற்கை யோ ரூர் தவிர்கையுமாகிய நியதி யின்றென்பது மித்திருவெண்பாவிற் கூ றுகின்றார்.

உடற்போகம் போக வுயிர்ப்பகைபோய்ப் பேறுங்
கெடத்தானுந் தன்னறிவுங் கெட்டோர் - நடக்கும்போ
தாகாயஞ் சாணிடல்போ லாவதல்லாற் பூரணர்க்குப்
போகாவூ ருண்டோ புகல்.

(இ-ள்.) உடற்போகம்போகவுயிர்ப்பகையோய்ப்பேறுங்கெடத்தா னுந்தன்னறிவுங் கெட்டோர்" எ-து. உடம்பா னனுபவிக்கும் விடய போகம் போக வப்போகமாகிய துன்பத்தை யின்பம்போன் மாறுபா டாய்த் தோற்றுவிக்கு முயிர்ப்பகையாகிய வாணவம்போய்ப் பேரின் பத்தைப் பெற்றேமென்னும் பேறும்போகத் தன்னையுந் தனக்கறிவி ப்பதாய வருளையு மிழந்துளோர்?

"நடக்கும்போதாகாயஞ்சாணிடல்போலாவதல்லாற்பூரணர்க்கு ப்போகாவூருண்டோ புகல்" எ-து. ஓர்திசையிற் செல்லும்போ தா காயத்தைச் சாணிட் டளப்பதுபோ லப்பரிபூரணர்க்குத் தமது பூர ணத்திற் றுஞ்செல்வதுபோற் றோற்றுமல்லாம லிது தீதென்று பகு த்துப்பார்த்துப் போகாதுதவிரு மூருமுண்டுகொ ணீபுகலுதி. எ-று.

ப-ம். ஆணவத்தா லின்பமாய்த்தோன்றிய போகந் துன்பமாய்த் தோன்றியபோ தவ்வாணவங்கெடு மவ்வாணவங் கெடவே தற்றரிசன முந் திருவருட் டரிசனமும் பரையோகமு மானந்தப்பேறுமுண்டா ம். ஆனந்தப் பேறிழந்தவிடத்துத் தானுந் தனக்கறிவித்த வருளு மி ன்றுமாகலி னுண்டாமவைக்கு மின்றுமிவைக்குங் காரண மிவையெ ன் றுடற்போக விழப்பையு முயிர்ப்போக விழப்பையு மெடுத்தறிவி த்தார்.

ஆகாயத்தைச் சாணிட் டளக்கும்போ தளப்பதுபோற் றேன்றி விடுத்தபோ தளந்தது மின்றுய்விடுத்தது மின்றுயிருத்தல்போற்,பூர ணர்க்கு நடக்கும்போது மப்பூரணமாறு ததனுண்டப்பதுபோற்றே

ன்றி யோர்தானத் திருந்தவிடத்து முன்னடந்தோமென்பது மிப்போ திருந்தோமென்பதுந் தோன்றாதாகலி“னுகாயஞ்சாணிடல்போ”லெ ன்றுவமை கூறினர். (உ௨)

(கவி - உ௩. அ - கை.)

ஆயினவர்க்கு நற்றானமுந் தீதாயதானமுஞ் சரியோவெனின்; ஞா னிகட்கு எவ்விடமுஞ் சமனென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தருவனமென் றண்டுகுடை சாய்மரையாய் வாழு
நரவனமென் மேல்கீழ் நடுவென் - பரமசிவன்
றாக்கற் றதுபோ லருள்சிவனைச் சாராபோற்
றாக்கற்றார்க் கெங்குஞ் சமன்.

(இ-ள்.) தருவனமென்றண்டுகுடைசாய்மரையாய்வாழு நரவனமெ ன்மேல்கீழ்நடுவென்” எ-து. தருக்கணெருங்கிய சோலையாயி னென் னே; முட்செறிந்த வனமாயினென்னே, சிவிகை கவிகை சாய்மரை மு தலியன வுடையராய் வாழு நராகிய வடிவியாயினென்னே, யுத்தமம த்திம வதமமாயுள்ள தலங்களாயினென்னே ?

பரமசிவன்றாக்கற்றதுபோலருள்சிவனைச்சாராபோற் றாக்கற்றார் க்கெங்குஞ்சமன்” எ-து, பரமசிவ னெல்லாவற்றோடுங் கூடியிருந்து மவற்றுட் டாக்கற் றிருந்ததுபோலுந் திருவருளானது கிருத்தியங்க ளைந்துந் தன்னனடக்கவுஞ் சிவத்தைவிட்டு நீங்காதிருப்பதே யன்றி யிக்கிருத்தியங்க ளைந்தையு மொழித் தச்சிவத்தைச் சார்வோமென்று சாராதவாறுபோலு மொன்றோடுந் தாக்கற்றஞானிகட்கு முற்கூறிய விடமெல்லாஞ் சரியாம். எ-று.

ப-ம். கருவிகளெல்லாவற்றோடுங் கூடியிருந்து மவற்றுட் டாக்கற் றுநிற்றலாற் “பரமசிவன்” றாக்கற்றதுபோலென்றும், தேகவிந்திய வ ந்தக்கரணங்க டம்மாற் றொழிற்படினுந் தாஞ்சிவத்தைவிட்டு நீங்காதி ருப்பதேயன்றி யித்தேகவிந்தியாதிகளினது தொழில்களையொழித் த ச்சிவத்தை யடைவோமென்றதின்றிப் பரிபூரணமாயிருத்தலி“னருள் சிவனைச் சாராபோ” லென்றுங்கூறினர். (உ௩)

(கவி - உ௪. அ - கை.)

ஆயினவர்கட்கு இடந்தான் யாதெனின், ஞானிகட்குப் போதமி றந்திருக்குமிடமே கருத்தன்றி மற்றொன்றுமின்றென் றித்திருவெண் பாவிற் கூறுகின்றார்.

தன்னையரு ளாலறிந்து தானறிந்த தெல்லாம்போ
யிம்மைப் பெருவாழ்வை யெய்தினர்க்கு - முன்னே
நடந்தறிந்த போத நசிப்பே யிருக்கு
மிடம்புறங்கா டென்ப திலை.

(இ-ள்.) தன்னையருளாலறிந்துதானறிந்ததெல்லாம்போ யிம்மைப் பெருவாழ்வையெய்தினர்க்கு" எ-து. கருவிகண் முப்பத்தாறையுங்க டந்து தம்மையருளாலறிந் தங்ஙனந் தம்மை யறிந்தபின்னர்த் தம்மை யறிவித்த வருட்டரிசனமுதலாய்த் தாமறிந்தவையெல்லா நீங்கியிம் மைக்கண்ணே சுகாதீதமாகிய பெருவாழ்வை யடைந்தோர்க்கு?

"முன்னேநடந்தறிந்தபோதநசிப்பேயிருக்கு மிடம்புறங்கா டென்பதிலை" எ-து. கருவிகளையுந் தற்றரிசனமுதலியவற்றையு மிதுவிது வென் றறிந் தவற்றை நீங்கிச்சென்று சிவத்தையறிந் ததனுள்ளிறந்த போத மீண்டெழா ததனைக் கெடுப்பதே யிருக்குமிடமன்றி யிதுசுத் தமாகிய விடமென்பது மிது புறங்காடென்பதுமின்று. எ-று.

ப-ம். தற்றரிசன முதலியவற்று ளுறுதியாய் நின்றோர் மறுமைக்க ண்ணடையுஞ் சுகாதீதமுத்தியை யிவரிம்மைக்கண்ணே யடைந்தாரா கலி "னிம்மைப்பெருவாழ்வையெய்தின"ரென்றார். எல்லாவற்றையு நீங்கிச்சென்றமையா "னடந்" தென்றார். (உச)

(கவி - உடு. அ - கை.)

இங்ஙனமிருந்த ஞானிகட்குச் சாதினடை சமையனடை யின்றோ வெனின்; ஞானிகணடை சாதிசமயங்களோ டொவ்வாதென் றித்திரு வெண்பாவிற் கூறுகின்றார்.

காமாதி விட்டுக் கரமே கலமாகிப்
பூமீதே கைகாலைப் போர்த்துறங்கி - நாமகுணஞ்
சாதி கருமமெனும் வாதனையிற் றுக்கற்றார்க்
கேது சமையமென லாம்.

(இ-ள்.) காமாதிவிட்டுக்கரமேகலமாகிப் பூமீதேகைகாலைப்போர்த் துறங்கி" எ-து. காமக்குரோத லோபமோகமத மாச்சரியங்களையெல் லாம்விட்டு நீங்கிக் கரமே யுண்கலனாகி மனைதோறும் பிச்சையேற்று

ண்டு பொதுச்சாவடி புறந்திண்ணை பாழுங் கோவில் முதலியவற்றுட் பூமியாகிய மலரணைமீது கரங்களையுந் தாள்களையும் போர்வையாகப்போர்த்துக்கொண் டானந்த நித்திரைபண்ணி?

"நாமகுணஞ் சாதிகருமமெனும்வாதனையிற் றுக்கற்றார்க்கேது சமையமெனலாம்" எ-து. பெயர்குணஞ் சாதி கிரியையென்னு மிவற்றின் வாசனையோடுந்தாக்கற்ற மெய்ஞ்ஞானிகட்குச் சாதியாதென்று கூறலாஞ் சமைய மியாதென்றுகூறலா மாகலி னிவற்றினடைகளு மவர்க்கின்று. எ-று.

ப-ம். காமாதி விட்டெடன்றமையரன் மாயாகுணமொன்று மிலரென்பதாயிற்று. நாமாதிகளிற் றுக்கற்றாரென்ற தவற்றின் வாசனையிற் றுக்கற்று ரென்றமையா னவற்றை மறந்துபோயினா ரென்பதாயிற்று.

"சாதிகரும" மென்றமையாற் சாதி யேதெனலாமென்பது வருவிக்கப்பட்டது. (உரு)

(கலி - உ.சூ. அ - கை.)

ஞானிநடை சாதிநடை சமையநடைகளோடொவ்வா திங்ஙனமிருப்ப தென்னையெனின், ஞானி மாயாதீதமான சிவஞானமுடையனாகலிற் சாதிசமயநடையாகிய மாயைக் குட்படானென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

ஞானிக் குலக நடையென்று நாம்பார்க்கிற்
சீனக்கண் ணாடியொடு தீபமுமா - மேனோர்க்கும்
விப்பிரட்ட மேபோல வேறும் விகாரியோ
வப்பராக் கன்றியறி யான்.

(இ-ள்.) ஞானிக்குலக நடையென்றுநாம்பார்க்கிற் சீனக்கண்ணாடியொடுதீபமுமாம்" எ-து. ஞானியினதுநடையை யுலகரதுசாதிநடைபோலென் றியாம்பார்ப்போமெனி னவனதுநடை யிருளிற் றீபத்தைக்கொண்டுபொருள்காண்பதுபோலுமாம். இவரதுநடை யவ்விருளிற் சீனக்கண்ணாடிகொண்டு பொருள்காண்பதுபோலுமா மாகலி னிவரது நடையோ டவனதுநடை யொவ்வாதானுற் சமையிக ணடையோ டொவ்வாதிருப்ப தெங்ஙனமெனின்?

"ஏனோர்க்கும்விப்பிரட்டமேபோலவேறும்விகாரியோ வப்பராக்கன்றியறியான்" எ-து. சமையிக டத்தங்கடவுளரைத்தமக்குரிய நூல்

கூறியவாறே வழிபடுவார். அவனக்கடவுளரையெல்லாங் கடந்துநின்ற பரிபூரணசிவத்தையடைந்தவனுகலினச்சமயிகணடைக்குமவனடை சுத்தப்பிரட்டமேபோல வொவ்வாதுவேறு மிங்ஙனஞ் சாதிநடை சமயநடை யொவ்வா தாயி னிவ்விருவகை நடையுமில்லாத பாமரர் போலு மவன் விகாரியோவெனின், அவன் சிவனைப்போலு நிருவிகாரியவ னிருவிகாரியேயானுல் விகாரமற் றிருக்கவேண்டுமேயன்றிக் கரபிச்சைவாங்கி யுண்டன்முதலிய நடை நிகழ்வானேனெனின், அங்ஙனங் காயத்தி னிகழ்ந்ததாயினு மவ னிருவிகாரமாகிய பராக்கேயன்றி யிவ்விகாரமாகிய பராக்கினு ளொன்றினையுமறியான். எ-று.

ப-ம். உலகநடையென்றதனுன், ஞானிநடைவருவிக்கப்பட்டது. ஞானிநடை தீபம்போலெனவு, முலகநடை சீனக்கண்ணுடிபோலெனவு மாறிப் பொருள்கொள்க.

இருளிற்றீபத்தாற் பொய்ப்பொரு டோன்றுவனபோன், ஞானதீபநடையான் மெய்ப்பொரு டோற்றுமென்பது மவ் விருளிற் சீனக்கண்ணுடியாற் பொய்ப்பொருள் சிறிதுந் தோற்றுததுபோன், மாயாந்தகாரத்தோடுஞ் செய்யுஞ் சாதிநடையான் மெய்ப்பொருட் சிறிதுந் தோற்றுதென்பது மிவ்வுவமைகளாற் காண்க.

"விகாரியோ" வென்றமையானு "மப்பராக்கன்றியறியா" னென்றமையானு மவற்றிற்கிடையில் வேண்டுவனவருவிக்கப்பட்டது. (உசு)

(கலி - உஎ. அ - கை.)

ஞானியினதுநடைமுதலியவற்றை யறியக்கூடாதோ வெனின்; ஞானியினது நடையுந் தெளிவும் யாவராலுமறிந் தளவிடக்கூடாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மூர்க்க னநுசாரி மூடனெனப் பண்டிதனு
மேற்குலமா மாசார வித்தனெனப் - பார்க்கி
லளவைக் களவாகி யப்பலா ஞானி
தெளிவைத் தெளியாத தென்.

(இ-ள்.) மூர்க்கனநுசாரிமூடனெனப்பண்டிதனுமேற்குலமாமாசாரவித்தனென" எ-து. உலகநடைசமயநடைகளினிற்போர் ஞானி நடையைப்பார்த்துத் தமதுநடையோ டொவ்வாமையா னிவன்பிரட்டு நடையையுடைய மூர்க்கனெனவு மாசார வீனனெனவு மொன்று மறியாத மூடனெனவுங் கூற விவேகிகளாயினு ரவ னடையைப்பார்த்

தெல்லாவற்றையுந்தெளிந்த பண்டிதனுமெனவு மேலாய ஞான குலமாமெனவு மாசாரத்திற் கெல்லா மோர்வித்தாமெனவுங்கூற ?

"பார்க்கில்லளவைக்களவாகியப்பாலாஞானி தெளிவைத்தெளியாததென்" எ-து: அவனடையை விசாரிக்குமிடத் திவராலிவ்வளவென்றளவிடுதற் களவிடுவதா யிவ்வளவையுங்கடந் தப்பாலுமாகிய வந்த ஞானியினது நடையினையுந் தெளிவினையு மிவ்வளவென் றொருவராலு மறியக்கூடாதிருந்த தென்கொலோ. எ-று.

ப-ம். உலகநூல் சமையநூல்களை யுணர்ந்தோர்க ளந்நூல்களினடையின்மையா னிகழ்ந்துகூறினர். ஞானநூ லுணர்ந்தோர் ஞானநடையென்றறிந்து புகழ்ந்துகூறினராகலி"னளவைக்களவாகி"யென்று மிங்ஙனஞ் செய்வோமென்று செய்யாதவனிடத்தின் ஞானநடையியல்பாய் நிகழ்தலின் ஞானநூலுணர்ச்சியாற்புகழ்ந்துகூறினர். அளவையுங்கடந்து நின்றானாகலி னிம்மூவளவைக்கும்பொதுப்பட "வப்பாலா ஞானி தெளிவைத் தெளியாத" தென்னென்றுங் கூறினர். (௨௭)

(கவி - ௨௮. அ - கை.)

சுகாதீதத்தி னிற்போர்க் கந்நடைக ளிலவாயினு மருட்டரிசன முதலியவற்றி னிற்போர்க் கந்நடைக ளிலவாயி னது பிரட்டன்றோ வெனின்; திருவருண்மேலிட்டவிடத்து வருமநுபவமு மதனையுடையோரும் ஞானிகளென்பது மவரது நடையை மாயையுடையோ ரறியாரென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அஞ்சனக்கண் ணுளர்க் கருநிதியந் தோன்றுவபோ
னஞ்சலகை மாற்றியதி னுணுவர்போல் - வெஞ்சாப
வீடுபோற் றோன்றுமருண் மேலிட்டால் விப்பிரட்டா
மோடையின்மண் கேமொப்போர்க் கு.

(இ-ள்.) அஞ்சனக்கண்ணுளர்க்கருநிதியந்தோன்றுவபோ னஞ்சலகைமாற்றியதினுணுவர்போல் வெஞ்சாபவீடுபோற்றோன்று மருண் மேலிட்டால்" எ-து. பாதாள வஞ்சனம்போட்டுப்பார்க்குங் கண்ணினையுடையார்க் கரியசேமநிதி தோன்றுவபோலுந் தம்மே லேறியிருந்தவிடத்தையும் பேய்யுமாற்றி னதனாற் றெளிவுபிறந்து முன்னரென்செய்து கொண்டோமென் றவற்றான் மயங்கிச்செய்த செயல்க

ளை நாடி நாணுவானைப்போலுங் கொடியசாபத்தினல் வருந்தினோர்க் கச்சாபம் விடுதலையானாற்போலுந் தோன்றுந் திருவருண் மேலிட்ட காலத்து ?

"விப்பிரட்டாமோடையின்மண்டுக மொப்போர்க்கு" எ-து. அத்திருவருண்மேலீட்டைப்பெற்ற ஞானிநடை யோடையின் மூழ்கிக் கிடக்குந் தவளைபோன் மாயாசமுத்திரத்தின் மூழ்கிக்கிடப்போர்க்குப் பிரட்டுநடைபோற் றோன்றும். எ-று.

ப-ம். டுண்மறைப்பாற் றெரியாதிருந்தநிதி யஞ்சனம்போட்டுப்பார்த்த கண்ணுளர்க் கம்மண்ணூடுருவி யந்நிதிதோன்றுவபோன், மலமறைப்பாற் றெரியா திருந்தவரு ளவ்வருட்கண்ணாற் பார்த்தபோ தம்மலமறைப்புநீங்கி யவ்வரு ளெங்குந்தானாய்த் தோற்றுமாகலி "னஞ்சனக்கண்ணுளர்க் கருநிதியந்தோன்றுவபோ லென்றும், விடமும் பேயும் நீங்கியவிடத்துத்தெளிவுவந்து முன்ன ரவற்றான்மயங்கிச்செய்த செயல்களை நாடி நாணுவானைப்போலச் சகலகேவலங்களை நீங்கி யருளைக்கண்டவிடத்து முன்ன ரவற்றான் மயங்கிச்செய்த செயல்களை நாடி நாணம்வருமாகலி "னஞ்சலகைமாற்றியதி னணுவர்போ" லென்றும்,தேவனுயிருந்துளான் சாபத்தால்விலங்காதிகளாயிருந்து பின்னரச்சாபம்விடுதலையானபோது தேவத்துவத்தையடைந்தாற்போல அளவிறந்தகால மலதேகந் தானாயிருந்தவ ரிப்போ தத்தேகநீங்கித் தன்னையறிவென் றுள்ளபடி யறிந்தமையால் "வெஞ்சாபவீடுபோ" லென்றுங் கூறினர்.

"ஓடையின்மண்டுகமொப்போர்க்" கென்றது, கிணற்றுக்குட்டவளை கடலின்வளப்பமறியுமோ வென்னு முலகவழக்கக்குறிப்பான் மாயையின் மூழ்கிக் கிடப்போர்க்கு ஞானிநடை தெரியுமோவென் றறிவித்தது. (உஅ)

(கவி - உகூ. அ - கை.)

நீ ரீண்டு கூறியவாறே துறவு ஞானகடையு முடையோரை ஞானிகளென்பதன்றி யிவை யில்லாரையு ஞானிகளென்பதென்னையெனின்; துறந்துள ஞானிகள தூ வாக்குக்காயங்களி னிகழு ஞானிநடைக் கவாதீதமா யிருந்துபோ லிங்ஙனங் குடும்பசகிதராயிருந்த ஞானிகளது வாக்குக்காயங்களி னிகழுமுலககடைக்கு மிவ ரதீதமா யிருப்பரென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அவரவனைப் போலிருப்பர் தாமவரா கார்போ
லிவரவர்க்கொப் பில்லை யெனினு - முவமைசொலின்
வேசிபணம் வெய்யோன் வீணை வெளிவிசிறி
யாசியர்போ லென்கினுமா வார்.

(இ-ள்.) அவரவனைப்போலிருப்பர் தாமவராகார்போ லிவரவர்க் கொப்பில்லையெனினு முவமைசொலின்" எ-து. குடும்பத்தோடுகூடி யிருந்தும் ஞானிகளாயிருப்போ ரறிவினு லக்குடும்பநிவிர்த்தியாயிரு ந்தஞானிகளைப்போலேயிருப்பர். இக்குடும்பத்தோடு மிருந்த ஞானி கடாம் நடையினு லக்குடும்ப நிவிர்த்தியாயிருந்த ஞானிகளைப்போ லாகா ரதுபோல விந்தக்குடும்பிக ளந்தக்குடும்பத்தோடு மிருந்தஞா னிகளுக்கு நடையினுலொப்ப ரறிவினு லிந்தக்குடும்பிக ளந்தக்குடும் பத்தோடு மிருந்த ஞானிகட்கொப்பிலரெனினு மின்னுமந்த ஞானிக ட் குவமைகூறுமிடத்து?

"வேசிபணம்வெய்யோன்வீணைவெளிவிசிறி யாசியர்போலென் கினுமாவார்" எ-து.வேசிபோலென்று கூறினும் பணம்போலென்று கூறினும் வெய்யோன்போலென்று கூறினும் வீணைபோலென்றுகூ றினும் வெளிபோலென்று கூறினும் விசிறிபோலென்று கூறினும் யாசிப்பார்போலென்று கூறினுஞ் சரியாவார். எ-று.

ப-ம். வேசி,தன்மே னசைகொண்டுவந்தார்மேற் றானு மவர்மேன சைகொண்டாள்போலும் வாக்குக்காயங்களிற் காட்டி மனத்தி னவர் மே னசையின்றிப் பொருண்மே னசைகொண் டிருப்பதுபோன், ம னைவிமுதலிய குடும்பத்தார் தம்மே னசையுற் றிருப்பத் தாமு மவர் மே னசையுற்றார்போ லும் வாக்குக் காயங்களிற்காட்டி மனத்தி னவ ர்மே னசையின்றி மெய்ப்பொருண்மே னசையுற் றிருத்தலின்;வேசி யென்றும், பண மெவரெவ ரெமதெமதென் றபிமானிப்பினுந் தனக் கவர்மே லபிமான மற்றிருத்தல்போல் சுற்றத்தார் நட்பு முதலியோ ரெம்மவ ரெம்மவரென்றபிமானிப்பினுந்தாமவர்மேலபிமானமற்று?

நிர்விகாரிகளா யிருத்தலிற் பணமென்றும், வெய்யோனு லுலகத் தார் தொழிற்படினு மிவர்செய்யு நன்றுதீது அவனுக்கின்றுயதுபோ ற் றமது வாக்குக்காயங்களி லியாது நிகழினு மிவற்றான்வரு மிதாகித

ங்களிற் ருஞ் சாராதிருத்தலின் வெய்யோனென்றும்,வீணை வாசியா திருந்தபோதும் வாசித்து விடுத்தபோதுஞ் சும்மாவிருந்து வாசிக்கு ம்போ தவன்பாடும் பாட்டின்படி தான் சொல்வதேயன்றி மற்றொன் றுஞ் சொல்லா தொழிதல்போ லொருவ ரோர்காரியம்வந்து பேசா முன்னரும் பேசி யொழிந்தபின்னருந் தா மோர் காரியவிசாரணை ப ண்ணாது சும்மாயிருந்து காரியக்காறர்வந்து பேசும்போ தவர்பேசுங் காரியப்பேச்சுமாத்திரம் பேசி மற்றொன்றுஞ் சொல்லா தொழிதலி ன் வீணையென்றும், வெளியெல்லாவற்றிற்கு மிடங்கொடுத் திருந்து மவற்றுட் டாக்கற்று நிற்றல்போற் குடும்பத்திற்கெல்லாந் தாம் பிரதா னமாயிருந்து மவற்றோடுந் தாக்கற்றிருத்தலின் வெளியென்றும்,விசி றி தன்னையெடுத்து விசிறிக்கொள்வார்க்குப் பயன் கொடுப்பதன்றி ய வரால் றனக்குப்பயன் வேண்டாதிருத்தல்போற் றம்மைக்கொண்டு பி றர் பயன்படுவதன்றி யவரால் றனக்குப் பயன் வேண்டாதிருத்தல்போ ற் றம்மைக்கொண்டு பிறர் பயன்படுவதன்றி யவரால் றனக்குப் பயன் வேண்டா திருத்தலின் விசிறியென்றும், யாசியர் குற்றமுடையனையு ங் குணமுடையனையுஞ் சமனாகக்கண்டு நன்மொழி கூறலின், யாசிய ரென்றுங் கூறினர். போலென்கினு மென்பதனை யெல்லாவற்றோடு ங் கூட்டுக. (உகூ)

(கலி - கூ). அ - கை.)

இங்ஙனங் குடும்பத்தோடு கூடியிருந்தும் பற்றற் றிருப்போனை ஞானிகளென்பது சுபாவம், சிவிகை கவிகை முதலியவற்றோடு மரச ர்போல வாழ்கின்றோனை; மெங்ஙன ஞானியென்று சொல்வதெனி ன்; பிராரத்தத்தால் வந்த பெருவாழ்வின்கட் பற்றின்றி யவ்வாழ்வது பவிப்பைப் போதத்தாற் றுமனுபவியாது சிவத்துக்கு அற்பிதஞ் செ ய்கின்றோரும் ஞானிகளேயென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தண்டுகுடை யாளராய்ச் சாதுரங்கப் பேரரசாய்த்
தொண்டர்குழாம் போற்றச் சுகித்தாலு - முண்டுசுத்தர்
போகத்தா ரோசுடர்போற் பொய்ப்போக மெய்ப்பெருக்காய்ச்
சாகப்போ வார்கடன்றீர்த் தல்.

(இ-ள்.) தண்டுகுடையாளராய்ச்சாதுரங்கப்பேரரசாய்த் தொண்ட ர்குழாம்போற்றச்சுகித்தாலு முண்டுசுத்தர்போகத்தாரோ" எ-து.கா

ல்வனகச்சேனையுஞ் சிவிகை கவிகை முதலியவுடையரா யடிமைக்கூட்டங்கள்சூழ்ந்துநின்று பரிசரிப்ப மகாபோகங்களை யநுபவித்தா ரெனினு மவற்றோடுந் தாக்கற்றுநின்று சுத்த நிலைபெற்றாரு முண்டு. அவ ரிப்பிரபஞ்சிகள்போலும் போகமயமா யழுந்துவரோ?வழுந்தா ரஃதெங்ஙனமெனின் ?

"சுடர்போற்பொய்ப்போகமெய்ப்பெருக்காய்ச் சர்கப்போவார்கடன்றீர்த்தல்" எ-து. எண்ணெய் வார்க்குந்தோறுந் தன்னிடத்தில் வாங்கிக்கொண்டு தான்மிகவும் பிரகாசிக்குந் தீபம்போற் பொய்ப்போகம் வருந்தோறு மதனைத் தற்போதத்தாற்பற்றியநுபவியா தருட்கண்ணாற் பார்த்துத் தாமற் றநுபவித்தலி னது மெய்ப்பொருட்காய்ப் பொய்ப்போகத்தான் மெய்ப்பொருண் மிகவும் பிரகாசமாய்த்தோன்றுமாகலி னிங்ஙனமென் றறிதியாயின்,மெய்ப்பொருளை யுணர்ந்தோர் பொய்ப்போகத்தோடுங் கூடியிருந் தநுபவிப்பதென்னையெனி; னக்கினியில் வீழ்ந் திறக்கப்போவார் தமக் குரியரா யுள்ளார் கொடுக்கும் போகமாகிய கடனைவாங்கி யதனுள் விருப்பற்றுண்டு தீர்த்துக்கோடல்போ லவரு மித்தேகத்தை யெப்போ தொழிவோமென்னுங் கருத்தரா யிதற்கமைத்த பிராரத்தக்கடனை விருப்பற் றநுபவித்துத்தீர்த்துக்கொள்வ ராகலி னவ ரதனோடுங் கூடியிருத்த லிம்முறை யென்றறிதி. எ-று.

ப-ம். போகம்வருந்தோறுந் தமக்கென்று தற்போதத்தாற்பற்றியநுபவியா தப்போதமற் றருள்வடிவாயிருந் தப்போகத்தைத் தாமநுபவிப்பதுபோற் சிவத்திற்காக்குவது மெய்ப்பத்தி. இப்பத்தியினு லச்சிவமாவது போதஞ் சிறிதெழினு மதனை விழுங்கிக்கொண்டு நின்று பிரகாசிக்கு மாகலிற் "பொய்ப்போகமெய்ப்பெருக்கா" யென்றார். சாகப்போவார் போகத்தை விரும்பாதிருக்கவுஞ் சுற்றத்தாராயுள்ளா ரவரை வேண்டிக்கொடுவந்து புசிப்பித்தல்போன், ஞானிகள் போகத்தை விரும்பா திருக்கவும் பிராரத்தம் வலியக்கொடுவந்து புசிப்பித்தலி னிங்ஙன முவமைகூறினார். (ருய)

(கவி - ருக. அ - கை.)

ஞானிக ளநுபவிப்பதும் பிராரத்த மற்றைய ரநுபவிப்பதும் பிராரத்தமாயி னவர்க்கு மிவர்க்கும் பேதமென்னையெனின்; ஞானிகள் தேகபோகங்களிற் பற்றிலராகலி னவர் பிராரத்த மத்தேகத்தோடு கழியுமென்று மஞ்ஞானிகள் பற்றுளராகலி னவர் பிராரத்தமிதா கிதங்

கள் வருவித்துப் பிறப்புக் கேதுவாகுமென்று மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

பெருநோவுக் கேயென்னப் பெற்றதுடற் போக
நரகேழு மூட்டுமிது நாஞ்செத் - துருவத்துத்
தாமல்லாற் போகிப்ப தல்லவது வன்பர்பதங்
காவலாட் கைத்தலைபோற் காண்.

(இ-ள்.) பெருநோவுக்கேயென்னப் பெற்றதுடற்போக நரகேழுமூட்டுமிதுநாஞ்செத் துருவத்துத் தாமல்லாற்போகிப்பதல்ல" எ-து. உடலாகிய பெருநோவுக்கென்னகருதிப் போகத்தை யநுபவிப்பது தானே பிறவியாகிய நரகமேழினுங் கொடுசென் றவற்றி லுண்பாகிய துன்பங்களைப் பொசிப்பிக்கும். இஃதெங்ஙனமெனி,னிவ ரநுப்விக்குமிப்பிராரத்தங் தற்போதமாண் டித்தேகத்துத் தாமிருப்ப தல்லாமலருள்வடிவாயிருந் தநுபவிப்பதல்லவாகலின் ?

"அதுவன்பர்தங்காவலாட்கைத்தலைபோற்காண்" எ-து. திருவடியைப் பிரியாது நின்றவம்மெய்யன்பர் தம்பிராரத்தந்தற்போதமாண்டு தேகந் தாமல்லாது திருவருடாமாயிருந் தநுபவிப்பதாகலி னப்பிராரத்தந் தேகமிருக்குமளவுங் காவலாட்போலுங் கைத்தலைபோலுமிருந்து தேக நீங்கும்போ ததனோடுந் தானு நீங்குமாகலி னவர்க்கு மறுபிறவி யுளவாகாவென் றறிதி. எ-று.

ப-ம். தேகந்தானும் போகந்தனதாயுங் கருதிக்கொண்டு தற்போதத்தா லப்போகத்தைப் பற்றி யநுபவித்தலி னிதாகிதங்களு மிவ்விதாகிதங்களா லிருவினைகளு மிவ்விருவினைகளான் மறுபிறவியு மிங்ஙனந் தொன்றுதொட்டு வருமாகலி "னரகெழுமூட்டு" மென்றார்.

போதமிறந் திருத்தலானும் பூரணவடிவாயிருத்தலானும் வினைசார்தற் கிடமின்மையா னவர்க்கு மறுபிறவி யின்றென்பதுகாண்க.

உடம்பு மூப்புப்பிணிக்கிடமாகலி னதனைப்பெருநோவென்றார். "நாஞ்செத்துருவத்துத் தாமல்லாற் போகிப்பதல்ல" வென் றவர்க்குண்மையாய குணங்களை யிவர்க் கின்மையென் றெடுத்துக்கூறினமையா லவர்க்கவை வருவிக்கப்பட்டது.

இதுவென்ப திவர் பிராரத்தமேனின்றது. அதுவென்பதவர் பிராரத்தமேனின்றது. பதம்-திருவடி. பதத்தினையுடைய வன்பரெனப் பொருள்கொள்க.

போகமாய்வந்து சூழ்ந்து கோடலானும், பரமுத்தனுகவொட்டாது தேகத்தி லவனைத் தடுத்து நிற்றலானும், பிராரத்தத்தைக் காவலாளென்றுங் கைத்தளையென்றுங் கூறினர். (௩க)

(கவி - ௩உ. அ - கை.)

ஒருவர்செய்தவினை மற்றொருவனைச்சாராமையா னவர்செய்த வினை யவனைச்சாராதிருப்ப தெங்ஙனமெனின்; ஞானிகள் சிவானந்தானுபவராகலி னவரை வினைகள்சாராவென்றும், அவர்க்கு இதாகிதங்களைச் செய்வோரிடத்தே யவை சாருமென்று மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சுகிக்கில்லை துக்கஞ் சுடுகாடு சொர்க்க
மகத்துக்குஞ் சொர்க்கநர காய்ந்தார் - சுகிப்பதுவு
மத்துவிதா னந்தர்க் காகார மற்றது
பத்திசெய்வார்க் கேற்கும் பயன்.

(இ-ள்.) சுகிக்கில்லைதுக்கஞ்சுடுகாடுசொர்க்க மகத்துக்குஞ்சொர்க்கநரகாய்ந்தார் சுகிப்பதுவு மத்துவிதானந்தர்க்காகாரமற்றது" எ-து. பரமசுகமே வடிவாயிருப்போர்க்குத் துக்கமென்பதில்லை துக்கமின்மையாற் சுகமுமின்றி அசுத்தமாகிய வீடமென்னுங் கருத்துச் சிறிதெழினு மதுவேநரகமாய்த்தோற்றலி னசுத்தமாயுள்ள சுடுகாடேயவர்க்குச்சுவர்க்கம். அஃதன்றித் தா மாநந்தவடிவா யிருத்தலே சுவர்க்கமெனவுந் தேகந்தாமென்று சிறிதெழுங்கருத்தே நரகமெனவும் புறத்திற்குச் சொர்க்கநரகாய்ந்தாற்போ லகத்திற்குஞ்சொர்க்க நரகாய்ந்தார். அஃதன்றி யவரநுபவிப்பது மத்துவிதாநந்தமேயாம். இங்ஙன மிருந்த வத்துவிதாநந்தர்க் கவ்வாகாமியவினை புசிப்பற்றுநின்ற திங்ஙனமவர்க்குப் புசிப்பற்றுநின்ற லவ்வினைதா னெவ்விடத்துச் செல்லுமெனின் ?

"பத்திசெய்வார்க் கேற்கும்பயன்" எ-து. அவர்மே லன்பா யிதஞ்செய்வோர்க்கும் வெறுப்பா யகிதஞ் செய்வோர்க்கு மவ்விருவினைப்பயன்களுஞ் சாருமென்றறிதி. எ-று.

ப-ம். ஆநந்தமேவடிவாயிருத்தலிற் றனுவில்லை யவ்வடிவிற்றற்போ தமின்மையாற் கரணமில்லை சுடுகாடே சுவர்க்கமாய்க்காண்டலாற் புவனமில்லை யவ்வாநந்தத்தையே யநுபவித்தலாற் போகமில்லை யிங்ஙனந் தநுகரண புவனபோகங்களையெல்லாங் கடந்து நின்றோனை யவ்வினை சாரமாட்டாமையி "னைகாரமற்றது"வென்றார். தேகத்தையுடையவனைத் தேகியென்றாற்போலச் சுகவடிவாயிருந்தோனைச் சுகி யென்றார். (௯உ)

(கவி - ௯௯. அ - கை.)

இங்ஙனமிருந்த ஞானியடைந்த பேரின்பத்திற் குவமை யாதென்றமாணுக்கனைநோக்கி ஞானிகள தின்பப்பெருமை யித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

அரிபிரம ரிந்திரர்க ளாதிகளார் தானச்
சரிவிரத்த வின்பத்தைச் சாற்றிற் - பரமசிவன்
றானே சரிமீட்டுச் சாற்றுகிற்றான் றன்சரிவே
றானா வேதமறி யா.

(இ-ள்.) அரிபிரமரிந்திரர்களாதிகளார்தானச்சரிவிரத்தனின்பத்தைச்சாற்றில்" எ-து. அரிபிரம ரிந்திரர்முதலிய தேவர்கள தின்பமெல்லா மொன்றாகக்கூட்டி னவ்விரத்த னின்பத்திற் குவமைசொல்லுமிடத்துச்சரி?

"பரமசிவன்றானேசரிமீட்டுச் சாற்றுகிற்றான்றன்சரிவே றானாவேதமறியா" எ-து. அஃதன்றிப் பரமசிவனது பரிபூரணானந்தந் தானேசரி பின்னுஞ் சொல்லுமிடத்துத் தன்னின்பத்திற்குத் தன்னின்பமேசரி யிங்ஙனமெய்பொருள்கட்கும் வேறாய் நின்றடைந்தா ரின்பத்தை வேதங்களு மிவ்வளவென் றளவிட்டறியமாட்டாது. எ-று.

ப-ம். பரமசிவனது பரிபூரணாநந்தமெல்லாந் தாமாகிநின் றநுபவித்தலிற் பரமசிவன்றானே சரியென்றும், தன்னின்பம்போன் மற்றியாவர்க்கு மின்மையாற் றன்றன் சரியென்றும், அவ்வின்பமுந் தாமாகா ததனையநுபவிப்போரா யிருத்தலின் "வேறானா" யென்றுங்கூறினார். இன்பத்திற் குவமைகூறினமையான் அவர்சரியென்றதை யவரதின்பஞ் சரியென்று கூறப்பட்ட தஃதாகுபெயர். (௯௯)

(கவி - ௩௪. அ - கை.)

சித்தாந்த ஞானம்போலே வேறு ஞான மின்றென்று மிந்தஞானம்பெற்றோரை வழிபடுவோர் பெருமையே பெருமையென்று மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சாலோக மாதி தருஞ்சைவ சித்தாந்தி
பாலேகம் பார்க்கப் பணியுமவன் - மேலே
யுருகித் திருவுளத்துக் குற்றபணி செய்வார்
பெருமைக்கே துண்டோ பிற.

(இ-ள்.) சாலோகமாதிதருஞ்சைவசித்தாந்தி பாலேகம்பார்க்கப் பணியுமவன்மேலே,, எ-து. தன்னைவந்தடைந்தோரது பத்தி பணிவிடைக்கேற்ப வவர்க்குச் சாலோகசாமீப சாரூபமாகிய பதமுத்திகளையுங் கொடுக்குஞ் சித்தாந்தஞானிபா லேகமாயிருந்த மெய்ப்பொருளையறியும்பொருட்டுவந்து மனமொழி மெய்களான்வணங்கு மதிபக்குவன்மேல் ?

"உருகித்திருவுளத்துக்குற்றபணிசெய்வார் பெருமைக்கேதுண்டோபிற,, எ-து. பேரன்புவைத் துள்ளுருகி யவனது திருவுளத்திற்கேற்றபணிவிடைச்செய்வோரது பெருமைக்குமேலாய பெருமை பிறிதுயாதுண்டு. எ-று.

ப-ம். வந்தடைந்தோர் பக்குவாபக்குவங்களை யறிந்து சரிதாதிகளை வருவித்துச் சாலோகமாதி பதமுத்திகளைக்கொடுப்பதும், அதி தீவிரபக்குவனாய் வந்தோனுக்குத் தற்போதத்தைக் கெடுத்து நிரதிசயவின்பத்தைக்கொடுப்பதும்,மற்றச்சமையங்களி லின்மையாற்"சாலோகமாதிதருஞ்சைவசித்தாந்தி பாலேகம்பார்க்கப் பணியுமவ,,னென்றார்.

இங்ஙனமிருந்த சித்தாந்தியைப் பணியுமவனைப் பணிவோர்க்கு மம்முத்தியின்ப முண்டாமாகலி "னுற்றபணிசெய்வோர் பெருமைக்கேதுண்டோபிற,, வென்றார். (௩௪)

(கவி - ௩௫. அ - கை.)

இதுவுமது.

காலமுடன் றேசந் திக்குக் கருமமுடற்
கோலஞ் சமயங் குறிப்பறிதல் - சீலங்

தலையோடு போனவுயிர் தான்போலத் தன்னோ
டிலையாஞ் சிவனே யிவன்.

"காலமுடன்றேசந்திக்குக்கருமமுடற் கோலஞ்சமையங்குறிப்பறி தல்சீலம்" எ-து. இன்னகாலத் தின்னவிரதஞ்செய்வதென்னுங் காலமுங் காசிமுதலியன நன்று மற்றையனதீதென்னுந் தேசமு மின்னதிக்குநன்று இன்னதிக்குத் தீதென்னுந் திக்கு மின்னகருமஞ்செய்வ தின்னகருமந் தவிர்வதென்னுங் கருமமு முடலிற்சமைந்தவேடங்களு மவ்வேடங்கட்குரிய சமையங்களு மச்சமையங்கட்குரிய கடவுளாயிங்ஙன மிருப்பரெனக் குறிப்போடு தியானிப்பதாய குறிப்பறிதலு மின்னசாதிக் கின்ன தாசாரமென்று செய்யுஞ் சீலமுமாகிய விவையெல்லாம் ?

"தலையோடுபோனவுயிர் தான்போலத்தன்னோ டிலையாஞ் சிவனேயிவன்" எ-து. தலைபோனவிடத் ததனோடும்போன வுயிர்போலத் தற்போதமிறந்தவிடத் ததனோடு நீங்குமாகலின் மவுனாநந்தமாயிருந்த சிவனே யிவனும். எ-று.

ப-ம். கைகான்முதலிய வுறுப்புக்கள் போனவிடத்து மிருந்தவுயிர் தலையோடும் போனதுபோலப் போதஞ் சிறிதிறந்தவிடத்து மிருந்த கிரியைத்தொழில்களது முற்று மிறந்தவிடத் ததனோடு நீங்குமாகலினங்ஙன முவமைகூறினா ரவற்றைச்செய்தவ னிறந்தமையா லிவனாற் செய்யப்படு மவையு மிலவென்பதுங் காண்க.

மவுனானந்தமாயுள்ள சிவனை யடைந்தவன் மவுனாநந்தி யாகலிற் "சிவனேயிவ" னென்றார். (௯௫)

(கவி - ௯௬. அ - கை.)

இங்ஙன மவர்க்கு விதிவிருத்தங்க ளில்லையென்று நீர்கூறியதென்னையெனின்; ஞானிகட்கு விதிவிருத்தங்களிலவென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சாவே பெருநோன்பாய்ச் சந்தற்ற சத்தியர்க்குத்
தேவாரங் காலந் தியானமறம் - பாவம்
விதிவிருத்தம் பேசுகைக்கு வேதாக மங்க
ளதிசயிக்கு மேலுணைப்பா ரார்.

(இ-ள்.) சாவேபெருநோன்பாய்ச் சந்தற்றசத்தியர்க்குத் தேவாரங் காலந்தியானமறம் பாவம் விதிவிருத்தம்பேசுகைக்கு" எ-து. தற்போ

தமிறப்பதே பெருந்தவமாய்க்கொண் டதனைக்கெடுத்துச்சிவத்தோடு மிரண்டறக்கலந்த சத்திய ஞானிகட்குத் தேவாரமுதலிய தோத்திரங்களை யோதலுங் காலாகாலங்களறிந்து சிவாலயங்களிற் சென்று பணிதலு மோரோர் பாவனையைக்கருதித் தியானித்தலுஞ் சிவபூசையாதி புண்ணியங்களைச் செய்தலு மிவையன்றிப் பாவங்களைச் செய்தலுமாகிய விவ்விதி விருத்தங்களுளவென்று சொல்வதற்கு?

"வேதாகமங்க ளதிசயிக்குமேலுனைப்பாரார்" எ-து. வேதங்களு மாகமங்களு மதிசயிக்குமெனி னவற்றிற்குமேன் மற்றியாவர் சொல்வார். எ-று.

ப-ம். போதஞ்சிறிதெழினு மதனைக்கெடுத்துச் சிவத்தோடுங் கலந்திருப்பதே யவர்க்குச் சகல நோன்புகளுமாகலிற் "சாவேபெருநோன்பாய்ச் சந்தற்றசத்திய" ரென்றார்.

அங்ஙனஞ் செய்வதே நோன்பாய்க் கொண்டோர்க் கதற்குமேன் மற்ற நோன்பொன்றுமின்மையா னவர்க்கு விதிவிருத்தமிலவாயின. "வேதாகமங்களதிசயிக்கு" மென்றதனு னவற்றான்விதிவிருத்த மறிவோர்க்கு வேறு சொல்வதற் கிடமின்மையான் "மேனுனைப்பாரா" ரென்றார். விதியாவது வேதாகமங்கள், சிவபூஜாதிகளைச்செய்கவென்று கூறுவது. விருத்தமாவது, மதுபானுதிகளை விடுகவென்று கூறுவது. (௩௬)

(கவி - ௩௭. அ - கை.)

எமக்கு மிங்ஙனமிருக்குமென்று ஞானிகள தருமை யித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

மோனிகளைப் பார்த்திமையா மோகமும் வெண்டிங்கண்
மேனி யழகெழுதா மேற்பத்தி - யானை
பதுமா தனன்கண்ணும் பானுவும்போற் றூணு
யெதிராகுஞ் சொற்பனத்தி லும்.

(இ-ள்.) மோனிகளைப்பார்த்திமையா மோகமும்வெண்டிங்கண்மேனியழகெழுதா" எ-து. அந்தஞானிகடம்மைப்போற் சுகாதீதமுத்தியைப் பெறும்பொருட்டுப் புறத்துநின்ற போதத்தை யுள்ளடக்கி யிதனைக்கெடுப்பதே விரதமாய்க்கொண்ட மவுனிகளை யிமையா நாட்டத்தோடும் பார்த் திவர்மேல்வைத்த மோகமு முத்தூளனத்தால்வெ

ண்டிங்கள்போலும் விளங்காநின்றவழ கெழுதக்கூடாத வவரது திரு மேனியும் ?

"மேற்பத்தியான பதுமாதனன்கண்ணும் பானுவும்போற்றுனை யெதிராகுஞ் சொற்பனத்திலும்" எ-து. பிரமனது நான்முகங்களினு மேன்மைபெறு பங்கிபோலவிளங்குவதான வெண்கண்தளு மக்கண் கட் கெதிர்தோன்றும் பானுவும்போ லியான்கருதாதிருப்பினு மவை தாமாய்வந் தென துளக் கண்ணிற்கு முகக்கண்ணிற்கு மெதிரே விள ங்குவதாஞ் சொற்பனத்திலுஞ் சாக்கிரத்திலும். எ-று.

ப-ம். சுகாதீதமுத்தியை யடைந்தஞானிகட்கு ஞானசாதகனாக்கண் டாற் பாசங்களையெல்லாங்கடந் திவ்வளவு வந்தாரென் றவர்மேற் சந் தோடமும் பிறக்குமாகலின் "மோனிகளைப்பார்த்திமையாமோகமு" மென்றார். யான் பெற்றபேறு பெறுக விவ்வையகமென்பதுமது.

பதுமாதன னிமையாநாட்டத்தையு மதற்கெதிர்தோன்றும் பா னுவையுமுவமைகூறினமையா னவர்மேல் வைத்த மோகத்தையு ம வரது திருமேனியையுந் தமதுள மறவாதென்பதாயிற்று. எனதெனு ம்பெய ரெஞ்சிநின்றது. சொற்பனத்திலுமென்ற வும்மையாற் சாக் கிரத்துமென்று வருவிக்கப்பட்டது. (௩௭)

(கவி - ௩அ. அ - கை.)

ஞானிகளைப்புகழ்ந் தித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

உருகு பரமசுக வுல்லாச நோக்குந்
திருமுகமும் புன்முறுவற் றேசுந் - திருநீறுந்
தற்பாவ மாண்ட சரீரத்தி லோர்சாத்து
மற்றே வெறுமனழ காம்.

(இ-ள்.) உருகுபரமசுகவுல்லாசநோக்குந் திருமுகமும்புன்முறுவ ற்றேசுந் திருநீறும்" எ-து. உள்ளமுருகப்பண்ணுநின்ற பரமசுக வு ல்லாசத்தோடுங் கூடிய திருநோக்கமு மவ்வின்பக்களிப்பாற் றெய்வ த்தாமரை மலர்ந்ததுபோல விளங்காநின்ற திருமுகமு மவ் வின்பம் பொங்கி மேன்மேலெழலாற் றோன்று மந்தகாசப் பிரகாசமுந் திரு மேனிமுழுதும் பூசுவதாகிய திருவெண்ணீற்றழகும் ?

"தற்பாவமாண்டசரீரத்திலோர்சாத்துமற்றேவெறுமனழகாம்". எ-து. பஞ்சபூதகுணங்களாகிய தற்பாவ மிறந்துநின்ற திருமேனியிற் கூடியுங் கூடாதிருந்தஞானிகளது திருமேனியிற்றோற்று மனவ யங்

னைந்தோற்றுவனவன்றி யவற்று னவர்க்கியாதுசிறப்புமின் றவைவா ளாதோற்று மழகுகளாம். எ-று.

ப-ம். ஆனந்தந் தோன்றும்போ துள்ளநெக்குருகத் தோன்றுமாக வி "னுருகுபரமசுக" மென்றுஞ் சடசித்துக்களாயுள்ள பொருள்களெ ல்லா மவர்க்குச் சுகசொரூபமாய்த் தோற்றுமாகலி னவர்க்நோக்கை ப் "பரமசுகவுல்லாசநோக்" கென்றுங்கூறினர். "வினையேன் மனத் துத் தேனையும் பாலையுங்கன்னலையு மமுதத்தையுமொத், தூனையு மென்பினையுமுருக்காநின்ற வொண்மையனே" யென்பதுமது.

பூநாளுந்தலைசுமப்பவென்றதுபோற் றோற்றுமென்பதைச் சாத் துமென் றருமைதோன்றக்கூறினர். உல்லாசநோக்குமுதலியனவவர் கருத்தாய்த்தோற்று தியல்பாய்த்தோற்றலி "னற்றேவெறுமனழகு" மென்றார். (வெறும) னென்பது பார்ப்பார்சொல். (௩-அ)

(கவி - ௩௯. அ - கை.)

ஞானிகளினதருமை இத்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

வாடன் மணம்போல் வருந்தா வயிராக்யத்
தோடு மெலிந்த வுடம்புடனே - கூடார்
நிருவிடயா னந்தசுக நீங்காத நோக்குந்
திருமுகமு மென்னைவிடா து.

(இ-ள்.) வாடன்மணம்போல்வருந்தாவயிராக்யத் தோடுமெலிந்தவு டம்புடனேகூடார்" எ-து. வாடற்பூவின்மணஞ் சிறிது தோன்றுதல் போற் சிறிதுதோன்றும் பிராரத்தவாசனையோடும் போதத்தான் வ ருந்திச்செய்யாத பாசவயிராக்கியத்தோடுந் தளராநின்ற திருமேனியு டனேகூடியிருந்துங் கூடாராகிய ஞானிகளது? .

"நிருவிடயானந்தசுகநீங்காதநோக்குந்திருமுகமுமென்னைவிடா து" எ-து. நிருவிடயமாய்த்தோற்று மானந்தமாகிய சுக முட்போற் புறத்துநீங்காத வவ்வானந்தத் திருநோக்குந் திருமுகமு மென துள் ளத்தை யெப்போதும்விட்டு நீங்காது. எ-று.

ப-ம். "வாடன்மணம்போ" லென்ற வுவமையாற் சிறிது பிராரத்த வாசனை யோடுமென்பது வருவிக்கப்பட்டது.

வருந்திச்செய்யும் போதமுடையாரது வயிராக்கியம்போலன்றி யிவர்க் கியல்பாய்த்தோற்றலின்" வருந்தா வயிராக்கியமென்றார். விஷயானந்தம்போ லெதிரீடாய்த் தோற்றாதெதிரீடற்றவிடத்திற் றோற்றலி "னிருவிடயானந்த,, மென்றார். (ருகூ)

(கவி - சம. அ - கை.)

ஆயினிக்தஞானிகட்குப் பெயரியாதெனின் மேற்கூறுகின்றார்.

தத்துவத்தின் போர்வை சரிந்த திகம்பரிப்பே
ரத்துவிதி யேகாந்தி யானந்தி - சுத்தன்
றுரிய னவதூதன் றுறவி சிவயோகி
நிருவாணி யென்விரத்த னென்.

(இ-ள்.) தத்துவத்தின்போர்வைசரிந்ததிகம்பரிப்பேர்,, எ-து. முப்பத்தாறு தத்துவங்களாகிய போர்வை சரிந்தவதனாற் றிகம்பரியாயிருந்த ஞானியினது பெயர்சொல்லுமிடத்து?

"அத்துவிதியேகாந்தியானந்திசுத்தன் றுரியனவதூதன் றுறவி சிவயோகி நிருவாணியென்விரத்தனென்" எ-து. சிவத்தோடத்துவிதமாயிருத்தலி னத்துவிதி யென்று மங்ஙன மத்துவிதமாயிருப்பினுந் தா னச்சிவமாகாமையா னேகாந்தியென்றும், பூரணானந்தமெல்லாந் தானுய்ந்தின் றநுபவித்தலி னானந்தியென்றும், மலத்திரயங்களை நீங்கி நிற்றலாற் சுத்தனென்றும், மேலாயபொருளை யடைந்தோனாகலிற் றுரியனென்றும், வன்னாச்சிரமங்களைக் கடந்துநிற்றலா னவதூதனென்றும், தேகாதிப்பிரபஞ்சங்களெல்லாந் துறந்துநிற்றலாற் றுறவியென்றும், மற்றொன்றோடுங் கூட்டரவின்றிச் சிவத்தோடுங் கூட்டரவாயிருத்தலிற் சிவயோகியென்றும், அத்துவா வாறையுங் கடந்துநிற்றலா னிருவாணியென்றும், அச்சிவத்தோ டத்துவிதமாக விருக்கின்றேனென்னும் வாஞ்சையு மிறந்துபோயிருத்தலின் விரத்தனென்றும் நீ சொல்லுதி. எ-று.

ப-ம். உடம்பைப்போர்த்துநின்று நீங்கிய போர்வைபோ லுயிரைப்போர்த்துநின்று நீங்கினமையாற் "றத்துவத்தின்போர்வை சரிந்த,, வென்றார். அஃதன்றிப் பூதகஞ்சுகம், பிரகிருதிகஞ்சுகம், கலாதிகஞ்சுகம், வயிந்துவகஞ்சுகம், சத்திகஞ்சுகம், என்னு மிப்பஞ்ச கஞ்சுகங்களையு நீக்கிநின்றாரெனினுமாம்.

அத்துவிதியென்றதாதி யிக்குணங்களெல்லா முடையனாகலினிப்பெயர்களெல்லா மவற்குரித்தாயின. (சம)

(கவி - ௬க. அ - கை.)

இங்ஙனமகத்துளாசையற்றுத் துறந்தோரையு மகத்துளாசையிருக்கத் துறந்தோரையு மெங்ஙனமறியலாமெனின், மேற்கூறுகின்றார்.

அடங்கத் துறந்தார்க்கு மாசையறப் பாவித்
தொடும்பக் குவந்தெரியா தோகோ - மடந்தேடிப்
பிச்சையாய் மூலையிற்பெண் பேச்சாய் வரினடைக்கைக்
கிச்சையாய்க் கைக்கெதிர்நீட் டும்.

(இ-ள்.) அடங்கத்துறந்தார்க்குமாசையறப்பாவித் தொடும்பக்குவந் தெரியாதோகோ" எ-து. அகத்தாசையிருக்கப் புறத்தாசையறப்பாவித் தடங்கத்துறந்தாரையு மியல்பாயகத்தாசையற் றடங்கத்துறந்தாரையு மவரோடு நிகழும் பக்குவா பக்குவங்களினாலே யோகோ தெரியாதோ ! வஃதெங்ஙனமெனின் ?

"மடந்தேடிப்பிச்சையாய் மூலையிற்பெண்பேச்சாய் வரினடைக்கைக் கிச்சையாய்க்கைக்கெதிர்நீட்டும்,, எ-து. அவர்நற்பிச்சையிடு மடந்தேடிச்சென்று பிச்சையேற்பதாய்ப் புதிய மருமகட்பெண்மூலைக் கண்ணிருந்து மெல்லெனப்பேசும் பேச்சுப்போற் றமக்கென வோரொடுக்கம்பற்றி யதனுளிருந்து மாசீசத்தோடு மெல்லெனப்பேசுவதா யிவர் பெரியரெனக்கருதிப் பிற ரன்னவத்திரமுதலிய நடைக்கைகொடுவரி னந்நடைக்கைக்கிச்சையா யவர்கொடுக்குங் கைக்குத் தமது கையை யெதிர்நீட்டிவாங்குவ ரிவர்க்கெல்லா மனைதோறுஞ் செல்வதேயன்றி யோர்மடந்தேடிச்செல்வது மோரொடுக்கம்பற்றியிருந்து மாசீசமாய்ப்பேசுவதுந் தாமிருக்கு மிடத்துப் பிறரன்னாதிகளைக் கொடுவரி னவற்றையிச்சித்து வாங்குவது மில்லையாகலி னவரது பக்குவமு மிவரதுபக்குவமுந் தாமேதெரியு நீயறிதி. எ-று.

ப-ம். "ஆசையறப்பாவித் தடங்கத்துறந்தார்க்கு"மென்றமையா னிங்ஙனம்பாவியா தியல்பாய்த் துறந்தாரை வருவிக்கப்பட்டது. அடங்கத்துறத்தல், மனைவிமுதலிய பற்றுக்களையெல்லா மொருங்கேவிடுத்தல். அடங்கத்துறந்தார்க்கு மென்னு நான்காம்வேற்றுமையை யிரண்டாம்வேற்றுமையாகக்கொள்க.

"தெரியாதோ" வென்பது தெரியாதென் றோகாரந்தொக்கு நின்றது. மடந்தேடிப்பிச்சையாய்க் கைக்கெதிர்நீட்டுமென் றவரதுநடை கூறினமையா லதற் கெதிர்மறையா யிவரதுநடை வருவிக்கப்பட்டது.

ஒருவர்க்குச் செல்வம்வரி னதனை நடைக்கையென்பதுபோற் பி றர்வந் தன்னுதிகளைக்கொடுப்பதனை நடைக்கை யென்றார். (சக)

(கவி - சஉ. அ - கை.)

ஆயினகப்பற்றற்றார் துறப்பதேயன்றி யகப்பற்றுடையார் துறக் கலாகாதோ வெனின், மேற்கூறுகின்றார்.

கரையடுக்க வந்தாற் றிரையலைக்குங் கப்பல்
பொருளடுத்தாற் றென்றும்பொய்ப் போதம் - விருதினவன்
வெற்றிக் குதிகுதித்தோன் போல்வேண்டும் விட்டதுபின்
பற்றுமதிற் சிக்கெனநிற் பாய்.

(இ-ள்.) கரையடுக்கவந்தாற்றிரையலைக்குங்கப்பல் பொருளடுத்தாற் றென்றும்பொய்ப்போதம்" எ-து. அலையலைக்குங் கரைகடந்துசென் று கடனடுநின்றகப்பல் மீட்டு மக்கரையடுக்கவந்தா லக்கப்பலை யலை யலைக்குமாறுபோல விடயங்களைத் துறந்துசென்று துறவின்கண் ணி ன்ற நீ மீட்டு மவ்விடயங்களை யடுத்தாற் பொய்யாகிய வவ்விடயபோ தந்தோன்றி யறிவை யலைக்குமாகலின்?

"விருதினவன்வெற்றிக்குதிகுதித்தோன் போல்வேண்டும் விட் டதுபின் பற்றுமதிற்சிக்கெனநிற்பாய்,, எ-து. தன்பகைவனைச்செயங் கொண்டாலன்றி விடே னென்னும் விருதினேன்போலு மொருவ ரோடு வாதுகூறி வெற்றிக்குத் துரவுதாவினேன்போலு நீயும்பிடித் ததுறவை முற்றுஞ் சாதிக்கவேண்டு மதனைவிடாது சாதிக்கவேண்டி ன் விடயங்களை யடாதே! யடுத்தால் முன்னர் நீவிட்டபற்றுக்களெல் லா மிப்போதும்வந்துபற்று மிவையுன்னைப்பற்றா தகலும்படி யத்து றவின்கண் ணுறுதிப்படநிற்றி. எ-று.

ப-ம். கரையடாதுகடலினடுநின்றகப்பலை யலையலையாததுபோல வி டயங்களை யடாது துறவின்கண் ணின்றோனை விடயபோத மலையா தென்ப திவ்வுவமைக்குறிப்பாற் காண்க.

விருதினேனுக் கெவ்விதத்தானுந் தன்பகைவனைச் சயங்கொள் வதே விருது. கூடாதாயினு மவனேனும் பொருதிறத்தலே விருது போற் றுறவினேனுக்குத் தன் பகையென்னு மாயைப்படைகளாகிய முப்பத்தாறையுங்கடந்து வீட்டைதலேதுறவு. அங்ஙனங் கடக்கக்கூ டாதாயினு மதனைக்கடத்தற் கேதுவாய சுத்தவாசனையோடுநின் றிறத்

தலே துறவாகலின் "விருதினவன்" போலென்றும், வெற்றிக்கறுபத டித் தூரவு தாவத்தொடங்கினே னறுபத்தோராமடி தாவினுனெனி னது வெற்றியதுதவறின் வெற்றியுமிழந் தத்தூரவினும் வீழ்வன். அதுபோல விடயங்களைத் துறக்கத்தொடங்கினே னவ் விடயங்களையுந் துறந்து தற்போதத்தையுந் துறப்பதே துறவு. அங்ஙனஞ் செய்யாதவ்விடயங்களைச்சாரி னத்துறவினுன்வரும் பெருமையு மிழந்து பிறப்பினும் வீழ்வனுகலின் "வெற்றிக்குதிகுதித்தோன்போ" லென்றுங் கூறினர்.

க-து. தத்துவத்தின் போர்வையென்னுந் திருவெண்பாமுத லிவை மூன்று திருவெண்பாவானு ஞானிகளது பெயருந் தாமுந்துறந்ததைச் சாதியாது மீட்டுஞ் சாரலாகாதென்பது மறிவித்தனரென்பது.(சஉ)

அருளவத்தைத்தன்மை -முற்றிற்று.

ஆ திருவெண்பா-உசுக.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது.

வாதனைமாண்டார்தன்மை.

(அஃதாவது,)குடும்பத்தோடு கூடியிருந்து ஞானம்பெற் றக்குடும்பவாதனை மாண்டுநின்றார் தன்மைகூறினமையா லிவ்வதிகாரத்திற்கு வாதனைமாண்டார் தன்மையென்று பெயராயிற்று. துறவிகளாயிருந்து ஞானம்பெற்றோருமன்றிக் குடும்பிகளாயிருந்து ஞானம்பெற்றோரு முளராகலி னவ்வதிகாரத்தின்பின் னிவ்வதிகாரம் வைக்கப்பட்டது.

(கவி - க. அ - கை.)

ஞானமில்லாவிடினும் வைராக்கியத்தால் வீட்டுநெறி யடையலாகாதோவெனின், ஞானமில்லாவிடின் வைராக்கியத்தாற் பயனின்றென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

ஞானமில் லாத வைராக்கி நன்றல்ல
கானவர்க்கு நோயினர்க்குங் கள்ளர்க்கு - மானதுவெ
னென்னிலைக்கே நின்றாலெ னெவ்விடயத் தேய்ந்தாலென்
றன்னிழப்பே யின்பாந் தலம்.

(இ-ள்.) ஞானமில்லாதவைராக்கிநன்றல்ல கானவர்க்குநோயினர்க்குங்கள்ளர்க்கு மானதுவென்,, எ-து. அகத்துப்பரிபூரணஞானமில்லாதார் புறத்துச்செய்யும் வயிராக்கிய நன்றல்லவாகும். அஃதெங்ஙனமெனின்; மலைக்கானிற் சஞ்சரிக்கும்வேடர்களுக்கும் விடாநோயினர்க்கும் பொருடிருடுங் கள்வர்க்கும்வயிராக்கியமுண்டாவ தென்னையாகலி னிவரது வைராக்கியத்தோ டவரது வைராக்கியமொக்கும்? .

“என்னிலைக்கேநின்றாலெனெவ்விடயத்தேய்ந்தாலென் றன்னிழப்பேயின்பாந்தலம்” எ-து. அகத்துப் பரிபூரண ஞானமுடைய ரரசுரிமை முதலியன வுலகவியாபாரங்களி லியாது நிலையினிற்பினு மென்னை வனிதாதிவிடயங்களி லியாது விடயங்களோடுங் கூடி யிருந்தாலுமென்னை யந்நிலையு மவ்விடயங்களு மிவர்க்கிடமுமன் றின்பமுமன்று தற்போதவிழப்பே யிடமு மிப்போதவிழப்பிற் றோன்று மின்பமே யின்பமுமாம். எ-று.

ப-ம். தழையுடுத்தன் மூலபலங்களைப்புசித்த லிராப்பகற் கானிற்சரித்தல் பனி மழை வெய்யில் காற்றுகளைப் பொறுத்தன் முதலியன கானவர் வைராக்கியம். வனிதாதி விடயபோகங்களைத் துறந்திருத்தல் விடாநோயினர் வைராக்கியம். பகைவர்க் கச்சமின்றித் தம்முடலையிழந் திருளிற் சேறன் முதலியன, கள்வர் வைராக்கியம். இவரது வைராக்கியங்களாற் போதவிழப்பு மின்பமுமின்றாயினபோ லவரது வைராக்கியத்தானும் போதவிழப்பு மின்பமுமின்றாகலி னவரது வைராக்கியத்தை யிவரதுவைராக்கியத்திற் குவமைகூறினார்.

அகத்துப்பரிபூரண ஞானமுடையார்க் கியாதுநிலையி னிற்பினுமியாதுவிடயங்களைப் புசிப்பினு மவற்றை யந்தப் பரிபூரணஞானத்தாற் பார்த்தழித்தலி னவற்றோடுந் தாக்கற்றுநிற்பதும், இங்ஙனந் தாக்கற்றுநிற்றலாற் போதவிழப்பு மிப்போதவிழப்பாற் பேரின்பமுமுண்டாமாகலின் “என்னிலைக்கேனின்றாலெ னெவ்விடயத் தேய்ந்தாலென் றன்னிழப்பேயின்பாந்தல” மென்றார்.

அஃதன்றி விடயவின்பத்திற் கேதுவாய வுலக வியாபாரங்களைச் செய்வார்போ லிவ்வரியாது நிலையினின்றாரெனினு மதனுட் டாக்கற்று

நின்று சொரூபவின்பத்திற் கேதுவாய தற்போதவிழப்பைச் செய்வா ரென்பது மவ்விடயவின்பங்களைத் தாமற்றநுபவித்தலா லவற்றை யநுபவிக்குந்தோறுந் தாமற்றவிடத் துண்டாம் பேரின்ப மேலிடுமே யன்றி யவ்வின்ப மோர்பொருளா யவர்க்குத் தோற்றாதென்பதுங் காண்க. "தன்னிழப்பேயின்பாந்தல" மென்றமையா னங்கிலேயு மவ்விடயமு மிடமுமின்பமு மன்றென்பது வருவிக்கப்பட்டது. 'வைராக்கிய மென்பது, வைராக்கியென்று கடைகுறைந்துநின்றது. (க)

(கவி - உ. அ - கை.)

ஞானம்பெறுவோர்க் கில்வாழ்க்கையைத் துறக்கவேண்டாவோ வென்ற மாணாக்கனைநோக்கி மெய்த்துறவாவ திதுவென் றித்திருவெண் பாவிற் கூறுகின்றார்.

எல்லாச் சமையங் களுந்துதிக்கு மில்லறத்தி
னில்லாம னீத்தாரென் னீத்தாலென் - புல்லறிவைத்
தீரத் தெளிந்து சிவத்தோடும் பற்றற்றா
ராகிற் பிறப்பறுக்க லாம்.

(இ-ள்.) எல்லாச்சமையங்களுந்துதிக்குமில்லறத்தி னில்லாம னீத்தாரென்னீத்தாலென்" எ-து. சமையங்களெல்லா மிது நன்று நன்றென்று புகழ்ந்துகூறாநின்ற வில்வாழ்க்கையி னில்லாம லிதனைத்துறந்தா ரித்துறவிற்குத் தகுமென மற்றியாது துறந்தாலுமென்னை யித்துறவினாற் பிறப்பறுக்கக்கூடுமோ?

"புல்லறிவைத்தீரத்தெளிந்துசிவத்தோடும்பற்றற்றா ராகிற்பிறப்பறுக்கலாம்" எ-து. தற்போதங் கருவிப்போதங்களாய புல்லறிவை ஞானகுருவா னன்றாய் விசாரித்தறிந் ததனைக் கெடுத்துச் சிவத்தோடிரண்டறக்கலந்து அச் சிவத்தோடுங் கலந்திருக்கின்றோ மென்னும் வாசனைப்பற்று மற்றாரெனி னவர்க்கே பிறப்பறுக்கலா மற்றையார்க்குக்கூடாது. எ-று.

ப-ம். சமையநூல்களெல்லா மில்லறத்தையே மேம்பாடாகக் கூறுதலி"னெல்லாச்சமையங்களுந் துதிக்குமில்லறத்தை,,யென்றார்."அறனெனப்பட்டதே யில்வாழ்க்கையஃதும்,பிறன்பழிப்ப தில்லாயி னன்று,,என்பதுமது. "நீத்தாரென்னீத்தாலென்"னென்ற தவ்வில்வாழ்க்கையைத் துறந்தபின்னரு முடலொறுத்த லூண்வெறுத்த லுடைதுறத்த லூரொடுக்கந் துறத்தன்முதலியன துறந்துநிற்றலெனக்கொள்க.

புல்லறிவைத் தீரத்தெளிந்து சிவத்தோடும் பற்றற்றாராகிற்பிறப்பறுக்கலா” மென்றமையா லிங்ஙனந் தெளிந்து பற்றறுதியுடையாரில்லறந் துறவறங்களினின்றாலும் “பிறப்பறுப்பா,, ரென்பது மிவையில்லா ரியாது துறந்தாராயினும் பிறப்பறாரென்பதுங் காண்க.

தற்போதங் கருவிப்போத மிரண்டும் புல்லறிவாகலிற் பொதுப்படப் புல்லறிவென்றார். தீரத்தெளித லவற்றை யுள்ளபடி யறிந்து கெடுத்தல். (உ)

(கவி - ௩. அ - கை.)

இதுவுமது.

மனையிழக்கி லோமனது மாறாது மாய்த்த
தனையிழக்கி லோசிவனைச் சார்ந்தங் - கநுபவிக்கைப்
போகா ததுபோகிற் பூரணமாம் பூரணந்தா
னாகா திருப்பதெவர்க் காம்.

(இ-ள்.) மனையிழக்கிலோமனதுமாறாதுமாய்த்த தனையிழக்கிலோ சிவனைச்சார்ந்தங்கநுபவிக்கைப்போகாததுபோகிற்பூரணமாம்” எ-து. நீரிங்ஙனங்கூறியவாற்றா னில்வாழ்க்கையைத் துறப்பது துறவன்றோவெனி னவ்வில்வாழ்க்கையைத் துறக்கி னதன்கண்ணின் றநுபவித்த விடயவாதனை மனத்தின்கண் மாறாதெழுமாகலி னது துறவன்று. ஆயின்மனத்தைமாய்ப்பது துறவோவெனின்;மனத்தை மாய்த்ததற்போத மெழுமாகலி னதுதுறவன்று. ஆயிற்றற்போத மிழப்பதோ துறவெனி னத்தற்போதமிழக்கிற் சிவத்தையடைந் தாண்டுச் சுகத்தையநுபவிக்கைபோகாதாகலி னதுதுறவன்று. ஆயிற் சுகப்பேறிழப்பது துறவோவெனி, னச்சுகப்பேறுபோகிற் சிவபூரணந்தா னப்போதிங்ஙனஞ்சிவபூரணந் தானானேனென்னும் வாதனைதோன்றுமாகலி னது துறவன் றாயி னினித்துறவுதா னியாதெனின் ?

“பூரணந்தானாகாதிருப்பதெவர்க்காம்”எ-து. அச்சிவபூரணந்தானானேனென்னு வாதனையுமறந்துநிற்பது துறவு. இங்ஙனஞ்சிவபூரணந் தானாகாதிருப்பதாய துறவு யாவர்க்குண்டாம். எ-று.

மாய்த்தவென்பதற்குந் தனையிழத்தவென்பதற்கு மிடையிற் றற்போத மெழுமென்பது வருவிக்கப்பட்டது.

க-து. இவை மூன்றுதிருவெண்பாவானு மெய்த்துறவாவதிதுவென்றறிவித்தனரென்பது. (௩)

(கவி - ச. அ - கை.)

இல்வாழ்க்கையோடு கூடியிருந்து மித்துற வெய்தினேனைத் துறவிகளென்று சொல்லப்படுமோவெனின்; தங்நிலைபி னின்ருலு ம தனுட் பற்றறுதி யுடையோர்க்கே வீடென் றித்திருவெண்பாவிற் கூறுகின்ருர்.

மாயாபோ கத்தரசாய் வாழ்ந்தாலு மாமணிபோற்
ருேயா தவரே துறந்தோர்க - டோய்வாரேற்
சேரும் விதைபோலத் தீர்ந்தவிடத் தேதிரும்பும்
வேரொன் றதுவே வினை.

(இ-ள்.) மாயாபோகத்தரசாய்வாழ்ந்தாலுமாமணிபோற்ருேயாத வரேதுறந்தோர்கள்,, எ-து. மாயாபோகத்துக்கெல்லா மரசாகி யப் போகங்களை யநுபவித்து வாழ்ந்தாராயினு மகத்தாகியமாணிக்கமணி யொன்ருேடுந் தோயாதுநின்றதுபோ லவற்ருேடுந் தோயாதுநின்ற வரே துறந்தோரென்று சொல்லப்படுவார் ?

“தோய்வாரேற்சேரும்விதைபோலத் தீர்ந்தவிடத்தேதிரும்பும் வேரொன்றதுவேவினை” எ-து. படிகமணிபோ லியாதொன்ருேடாயினுந் தோய்வாரெனி னிலத்துச்சேரும் வித்துப்போல வுடலிறந்தகாலை நின்று நீங்கிய பற்றின்கண் மீட்டுந்திரும்பு மோர்மூலமும் பற்றுடைமையே வினையென்பது மப்பற்றுடைமையேயாம். எ-று.

ப-ம். மாமணி தன்னையடுத்த வன்னங்களைக்கவராது தனதுபிரகாசத்தை யவற்றின்மேல் வீசிநின்ருற்போல யாதுவிடயங்கள் வந்தடுப்பினு மதிற்ருேயாது தனது ஞானப்பிரகாசத்தை யவற்றின்மேல்வீசிநிற்றலான் “மாமணிபோற்ருேயா தவ” ரென்றும், உடம்பிற்குப் புறம்பாய பற்றுக்களையொழித்து அவ்வுடம்பாய் நின்ருேனைத் துறந்தோர்களென்று சொல்வதுபோல வுயிர்க்குப் புறம்பாய கருவிகண் முப்பத்தாறையு மொழித் தறிவாய் நின்ருேனைத் துறந்தோர்க ளென்ருர்.

நிலத்திற்சேரும் வித்துப்போ லுடலிறந்தகாலை நின்ற பற்றின்கண் மீட்டு முயிர்வந்தடைந்துற்பத்தியாகலிற் “சேரும்விதைபோ” லென்று முடனீங்குங்காலை யுயிர்க்கெந்தவாதனையிருந்ததந்தவாதனையோடும் பிறப்பின்கண்மீள்கலாற் “தீர்ந்தவிடத்தேதிரும்பும்வே,,”ரென்றும் பற்றுள்ளவிடத்து வினையுமுளவாகலி னதுவே வினையென்றுங் கூறினர்.

"அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான றுந் தவாஅப் பிறப்பீனும் வித்து,, என்பது மது. அதுவே யென்பதனைப் பற்றுடை யெனக்கொள்க. (ச)

(கவி - டு. அ - கை.)

விடயங்களை யநுபவிப்பினு மவற்றுட் கூடாரென்றீ ரிதென்னை யென்ற மாணுக்கனைநோக்கி, அவ்விடயங்க ளவரறிவை மயக்காதென் பது மவ்விடயங்களி லவரறிவு தோயாதென்பது மித்திருவெண்பாவி ற் கூறுகின்றார்.

ஒருகுடைக்கீழ் வாழுலகத் தோர்க்குறும்பூ ருண்டோ
வருணிழற்கீழ் வாழ்வா ரறிவு - கருவிகளிற்
போனுலென் சேற்றுத்தாள் போலோ பருந்துநிழற்
போனற்போற் றேயாமற் போம்,

(இ-ள்.) ஒருகுடைக்கீழ்வாழுலகத்தோர்க்குறும்பூருண்டோ வருணிழற்கீழ்வாழ்வாரறிவு கருவிகளிற் போனுலென்சேற்றுத்தாள்போலோ,, எ-து. பூமியெல்லாமொருகுடைக்கீழாள்வோ னுலகத்துவாழ் வோர்க்குக் குறும்பூராற் றுன்பமுண்டாமோ அதுபோ லெங்கும்பரிபூரணமாய்நின்ற திருவடி நிழற்கீ ழாநந்தச் செல்வத்தோடும் வாழ்வாரறிவு விடயங்களிற்சென்றாலு மென்னை அவ்வறிவிற் கவ்விடயங்களான்வருமயக்க மியாதுமின்று மாயைக் கீழ்வாழ்வா ரறிவுபோலவரறிவு சேற்றுக்குட் டேட்போ லழுந்துமோ?

"பருந்துநிழற்போனற்போற்றேயாமற்போம்,, எ-து. பருந்தினிழ லொன்றிற்றேய்ந்துந் தோயாதுபோனற்போ லவரறிவு அவ் விடயங்களிற்றேய்ந்துந் தோயாதுநீங்குமென் றறிதி. எ-று.

ப-ம். ஒருகுடைக்கீழ் வாழ்வார் மற்றியாதோ ரூருக்குச்செல்லினு மவ்வரசாயன தாணையாற் குறும்புசெய்வாரு மிவரான்வருந்துன்பமு மவர்க்கின்றாயதுபோற் றிருவடிக்கீழ் வாழ்வாரறிவு விடயங்களிற்சென்றாலு மத்திருவடிப் பரிபூரணமாய்நிற்றலி னிவ்விடயங்கண் மயக்குவதுந் தான் மயங்குவது மிவ்வறிவிற்கின்றா மாகலி னங்ஙனமுவமை கூறினர்.

பருந்தி னிழற் றேய்ந்தவாறே நில்லாது விரைவினீங்குதல்போ லவ்வறிவு விடயங்களிற்றேய்ந்தவாறே மயங்காது விரைவினீங்கித்திருவடிக்கீழ்நிற்றலா னிங்ஙனமுவமைகூறினர். பருந்தினையவர்க்கு மதனிழலை யவரதறிவிற்கு முவமையாகக் காண்க. (டு)

(கவி - சு. அ - கை.)

இதுவுமது.

நெய்யுண்ட நாயென்ன நீரினிழ லென்ன
மையுண்ட கண்போன் மனைவாழ்வார் - துய்ய
வருளால் விலையேறு மாணிக்க மெல்லாப்
பொருள்போல வல்லாப் பொருள்.

(இ-ள்.) நெய்யுண்டநாயென்னநீரினிழலென்னமையுண்டகண்போன்மனைவாழ்வார்" எ-து. நெய்யையுண்டு மீட்டுங் கக்காநின்றநாய்போலுந் தடாகத்தீரத்தி னிற்குமர மேன்முகமாய்நிற்கவு மத்தடாக நீரிற் கீழ்முகமாய்த்தோன்று மம்மரநிழல்போலும் பிறர்க்கழகாய்த் தனக்குக் கரிப்பாயிருக்கு மையுண்டகண்போலு மந்தஞானிக ளில்வாழ்க்கையோடுங் கூடியுங் கூடாதிருந்து வாழ்வா ரிங்ஙனம் வாழ்வாராயின் ஞானிக்கு மஞ்ஞானிக்கும் பேதமென்னையெனின்?

"துய்யவிருளால்விலையேறுமாணிக்கமெல்லாப்பொருள்போல வல்லாப்பொருள்" எ-து. இருளைத்துறந்து பிரகாசித்தலா னிருளான் விலையேறு நிருமலமாயுள்ள மாணிக்கமணி யவ்விருளான் மறையு மற்றெல்லாப்பொருள்களைப்போலு மல்லாதபொரு ளதுபோ லில்வாழ்க்கையிருளாற் றாமறைந்திருப்பாரைப்போலு மன்றி யவ்வில்வாழ்க்கை யிருளைத் தமது ஞானப்பிரகாசத்தா னீக்கிநின்று விளங்குவரென்றறிதி. எ-று.

ப-ம். நெய்யையுண்டபின் வயிற்றி லெட்டுணையேனுந் தங்காது மீட்டுங்கக்கலா னந்நெய்யினதுசார மதனுடலிற் சாராததுபோல விடயங்களைத் தாமற்றநுபவித்துச் சிவத்திற் காக்கலா னவ்விடய வாசனையிவரைச்சாராதாகலி "னெய்யுண்டநாயென்ன,, வென்றும், கரையின்கண்மர மேன்முகமாய் நிற்கவு மதனது நிழ னீரின்கட் கீழ்முகமாய்த் தோற்றுதல்போற் சகலத்தையுங்கடந்த சிவத்தைத் தாம்பிரியா திருக்கவு மனைக்கண்ணிருத்தல்போற்றோற்றலி "னீரினிழலென்ன,, வென்றும், பிறர்க்கழகாய்த் தனக்குக்கரிப்பதா யிருக்கு மையுண்ட கண்போற் பிறர்க்கு மனைக்கண் வாழ்கின்றதுபோற் றோற்றத் தமக்கிப் பிராரத்தவாசனை யென்றைக் கொழியுமென்று வெறுப்பாய்த் தோற்றலின் "மையுண்டகண்போலு,, மென்றுங் கூறினார்.

மாணிக்கம் பகலைப்பற்ற விரவின் மிகவும் பிரகாசிப்பதுபோன் மெய்ஞ்ஞானிகட்குத் துறவைப்பற்ற வில்வாழ்க்கையின் ஞான மிகவும் பிரகாசிக்குமாகலி னிருளால் விலையேறு"மாணிக்கமெல்லாப்பொருள்போல வல்லாப்பொரு,, ளென்றுங்கூறினர். (சு)

(கவி - எ. அ - கை.)

ஞானியு மஞ்ஞானியுங் குடும்பத்தோ டிருப்பதாலு லவர்க்குப் பிறப்பிறப்பின்றாய தென்னை யிவர்க்குப் பிறப்புண்டாய தென்னையெனின் மேற்கூறுகின்றார்.

துடைதட்ட லொன்றே துயிற்கும் விழிக்கும்
படிகத் திருண்மணிக்கேன் பற்று - மடிபார்த்துக்
கூடப்போங் கள்ளனைப்போற் கூடாக் குடும்பக்கூத்
தாடிக்கேன் மேற்பிறப்புண் டாம்.

(இ-ள்.) துடைதட்டலொன்றேதுயிற்கும்விழிக்கும் படிகத்திருண் மணிக்கேன்பற்றும்" எ-து. துயிலும் பருவமுடையோன் றுயிற்றற்குத்துடைதட்டலும் விழிக்கும் பருவமுடையோன் விழித்தற்குத் துடைதட்டலு மொன்றேயாம். அதுபோன் ஞானி மனைவிமுதலியகுடும்பத்தார்வந்து சருவுந்தோறு மகமுகமாய்த் தற்போத வொழிவினின் றுநந்தநித்திரை பண்ணுவான். அஞ்ஞானி தன் மனைவி முதலிய குடும்பத்தார் வந்து சருவுந்தோறுஞ் சகமுகமாய் நின்று மயக்கத்திலழுந்துவான். ஆயின் ஞானிக்கு மஞ்ஞானிக்கும் பேதமிங்ஙனமாயினு மந்த ஞானிக்குக் குடும்பத்தி லிருக்கின்றேனென்னும் வாசனையாயினுந்தோன்றாதோவெனிற் படிகத்திற்பற்றும் பஞ்சவன்னமாகிய விருண் மாணிக்க மணிக்கேன்பற்று மதுபோலக் குடும்பந் தானாய்நின்ற வஞ்ஞானிக் கேறும்வாசனை குடும்பத்திற் பற்றின்றிநிற்கும் ஞானிக்கேனேறு மிங்ஙனங் குடும்பவாசனையு மேறாதிருத்தலான் ?

"அடிபார்த்துக்கூடப்போங்கள்ளனைப்போற்கூடாக்குடும்பக்கூத்தாடிக்கேன்மேற்பிறப்புண்டாம்" எ-து. பொருள்களைக் களவுகொடுத்தோர்க ளவனடிபார்த்துச் செல்ல வப்பொருள் களவுகொண்டோனு யவரோடுங் கலந்துகொண் டவ்வடிபார்த்துக் கூடச்செல்லு மக்கள்வனைப்போற் குடும்பத்தார்க்குச் சுகதுக்கம்வந்தகாலை யவரைப்போற் றானுமவர்க்குக்காயத்தாற்பூரிப்பும் வாட்டமுமுடையவனைப்போற் காட்டி யவரோடுங் கூடிநின்று மனத்தா னவரோடுங் கூடாத குடும்பக்கூத்தாடியாகிய வந்தஞானிக்கு மறுபிறப்பேனுண்டாம். எ-று.

ப-ம். துணைதட்டலாற் றுயில்வதும் விழிப்பது மவர்க்கியல்பாயின போற் குடும்பத்தா லகமுகப்படுவதுஞ் சகமுகப்படுவது மிவர்க்கியல் பாயினவென்பதுங் கொள்க.

பார்ப்பான் தோட்டிவேடம்போட்டு நடிப்பினுந்தன்னைவேறு கண்டுநின்றாற்போ லிவன்குடும்பிபோ லிருப்பினுந் தன்னை வேறுகண்டு நின்றானாகலிற் "குடும்பக்கூத்தாடி,,யென்றார். (எ)

(கவி - அ. அ - கை.)

நீரிங்ஙனங்கூறியவாற்றான் ஞானிக்கு இல்லறமுந் துறவறமுஞ் சரியோவெனின்; மேற்கூறுகின்றார்.

தொடும்போ சுழல்காற்றுத் தூளம்போற் றொட்டு
விடும்போது மங்ஙனே விட்டு - நடந்தாலு
மாகாய நீங்காம லாடியது போலடங்கு
மேகாந்திக் கெங்கிருந்தா லென்.

(இ-ள்.) தொடும்போசுழல்காற்றுத்தூளம்போற்றொட்டுவிடும்போதுமங்ஙனேவிட்டு நடந்தாலும்" எ-து. விடயங்களைப்பற்றும்போதுஞ் சுழல்காற்றுத் தூளத்தைப்பற்றுவபோற் பற்றி யவ்விடயங்களை விடுக்கும்போது மச்சுழல்காற்றுத் தூளத்தை விடுப்பதுபோல விடுத் திங்ஙன ஞானியின தறிவு விடயங்களைப் பற்றிவிடுத்துச் சென்றாலும்?

"ஆகாயநீங்காம லாடியதுபோலடங்கு மேகாந்திக்கெங்கிருந்தா லென்" எ-து. தூளத்தைப் பற்றும்போது மாகாயத்தைவிட்டு நீங்காமற்பற்றிச் சுழன்றாடும்போது மவ்வாகாயத்தைவிட்டு நீங்கா தாடிய த்தூளத்தைவிடுத்து அவ் வாகாயத்து ளடங்கு மச்சுழல்காற்றுப்போல விடயங்களைப்பற்றும்போதுந் திருவருளைவிட்டு நீங்காதுபற்றி யநுபவிக்கும்போது மவ்வருளைநீங்கா தநுபவித்து அவ்விடயங்களைவிடுத்து அவ்வருளிலடங்கு மேகாந்தியாகிய ஞானிக் கிருவகை யறங்களி லெவ்வறத்திருந்தா லென்னை யவர்க்கோர் பற்றுமின்று. எ-று.

ப-ம். "ஆகாயநீங்காமலாடி,,யென்றதனாற் றூளத்தைப்பற்றும்போது மாகாயநீங்காமற் பற்றியென்பது வருவிக்கப்பட்டது. அதுபோலடங்கு மென்றமையா லாடியென்றதன் பின்னர் அடங்குமென்பது வருவிக்கப்பட்டது. இங்ஙனஞ் செய்தாலு மவரிருக்குமிடந் திருவருளாகலி "னேகாந்தி,, யென்றார். (அ)

(கவி - கூ. அ - கை.)

இங்ஙனங் குடும்பத்திருந்து மதன்கட் சார்வொழிந்துநின்ற றியாவனொன்ற மாணுக்கனைநோக்கி; அங்ஙனநின்றோர் சுந்தரசுவாமிகள்முதலிய ஞானிகளென்றும் ஞானிகட் கில்வாழ்க்கையே யதிகமென்றும் அவர்களெவ்விடத்து நிலையயராரென்று மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சுந்தரனார் சேரர்கோன் சோழர் குறுமன்னர்
மைந்தருட றம்முடலை வாட்டினர்க - ளந்தமிலாப்
பத்தரொடு ஞான வயிராக் கியர்பலர்க்கு
மொத்ததுசார் போத வொழிவு.

(இ-ள்.) சுந்தரனார்போதவொழிவு" எ-து. சுந்தரநாயனார்சேர்மான் பெருமாணயனார், செங்கட்சோழர், புகழ்ச்சோழர்ஆகிய, சோழராஜாக்கள், மெய்ப்பொருணயனார், கழற்சிங்கர்முதலிய குறுமன்னர் மைந்தருடலைவாட்டிய சிறுத்தொண்டநாயனார், தம்முடலை வாட்டிய கண்ணப்பநாயனார், அரிவாட்டாயனார், முதலியோர் நாசமில்லாத திருநீலகண்டநாயனார்?

அதிபத்தரோடு மற்றுமுண்டாகிய ஞானிகள் வைராக்கியராயுள்ள விம்மெய்யடியார் பலருக்குங் குடும்பத்திற்கூடியிருந்து மதன்கட் சார்போத மொழிந்துநிற்ற லொன்றுயொத்திருந்ததாகலிற் சார்போதமொழிவோ ரெவ்வறத்திருப்பினு மொழிந்துநிற்பர். ஒழியாதாரெவ்வறத்திருப்பினு மொழியாரென்றறிதி. எ-று.

க-து. நெய்யுண்டநாயென்னுந் திருவெண்பாமுத லிவைநான்குதிருவெண்பாவானும் பற்றற்ற ஞானிகட்கு இல்வாழ்க்கையில் ஞானவொளிவிளங்கலி னிரவுவிளக்குப்போன் றந்தஞானம் பயன்பட் டதிகமாமென்பதும், அவர் அக்குடும்பத்திற் பற்றிலராகலிற் பிறப்புண்டாகாதென்பதும், அவர் எவ்விடத்திருப்பினும் நிலை யயராரென்பதும், இவ்வாறு குடும்பத்திலிருந்தும் ஞானிகளாயிருந்தோ ரிவரிவரென்பது மறிவித்தனரென்பது. (கூ)

வாதனைமாண்டார்தன்மை - முற்றிற்று.

ஆக திருவெண்பா-உசஎ.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

பத்தாவது.

நிலையியல்பு.

(அஃதாவது,) இதனுட்கூறிய வுண்மை நிலைதவறினு மீட்டுமத னைச்சென் றடைதற் குபாயங்கூறினமையா னிவ்வதிகாரத்திற்கு நிலை யியல்பென்று பெயராயிற்று.

(கவி - க. அ - கை.)

கருவிகளையறிந்து நீங்கிநின்ற வறிவு அருளறிவிக்க வறிந்தவறி வென் றறியவேண்டுமென்பதுங் கருவிகளை நீக்கிச் செல்லும்போது தற்போதத்தைப் பின்னிட் டருட்போதத்தை முன்னிட்டு நீக்கிச்செ ல்லவேண்டுமென்பது மித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

அறியார் வழிகேட் டறிந்து நடக்க
வறிவா ரறிவென் றறியார் - மறையாக்
குடையிருக்கத் தாமே குதித்துங் கடந்து
மடர்மழைக்கே வாறவர்போல் வார்.

(இ-ள்.) அறியார்வழிகேட்டறிந்துநடக்க வறிவாரறிவென்றறியார்" எ-து. தாங்கருதியவூருக்குச் செல்லும் வழியறியா ரவ்வழியறிந்தோ ராக்கேட்டறிந்து நடக்கவுந் தம்மாலறிந்து நடப்பதாய்க் கருதுவரன் றி யவ்வழி யறிவா ரறிவித்தவறிவுதா மவ்வழி யறிந்த வறிவென்றறி யார். அதுபோலத் தாமுன்ன ரறியாத கருவிகண் முப்பத்தாறையு மிப்போ தருளறிவிக்க வவற்றையறிந்துகடந்து செல்லவுந் தம்மா ல வற்றையறிந்து கடந்துசென்றதாய்க் கருதுவரன்றி யவ்வருளறிவிக்கவ றிந்த வறிவு தாமக்கருவிகளை யறிந்த வறிவென்றறியார்?

"மறையாக்குடையிருக்கத்தாமேகுதித்துங்கடந்து மடர்மழைக் கேவாறவர்போல்வார்,, எ-து. அடர்மழைக்க ணோரூர்க்குச்செல்லத் தொடங்கினோர் மழை தம்மேற்றுக்காதபடி தமக்கு மறைப்பாகக் கு டை கைக்கணிருக்கவு மக்குடையைத் தம்மேற்கொண்டு செல்லாது மழைத்திவலைகட் கிடையே தாமேகுதித்துங்கடந்து மவ்வடர்மழைக்

கண் ணனைந்துசெல்கின்றாரைப்போ லவர்கருவிகளைக் கடந்து வீட்டையக்கருதினோ ரக்கருவிக டம்முட்டாக்காதபடி யரு டம்மைவிட்டு நீங்காதிருக்கவு மிவ்வருளை முன் னிட்டுக்கொண்டுசெல்லா தக்கருவிகளைத் தற்போதத்தாலறிந்துங் கடந்துஞ் செல்வதாகக் கருதி யவற்றுனுழைவாரிதென்னை. எ-று.

ப-ம். முன்னரறியாதிருந்த கருவிகளை யிப்போ தறியவந்தது திருவருளா லறியவந்ததென் றறியாதுதம்மா லறிந்ததாகக்கருதினமையாலிங்ஙன முவமை கூறினார்.

கருவிகளை நீக்கத்தொடங்குவோர் திருவருளை முன்னிட்டுக்கொண்டு நீக்காது தற்போதத்தை முன்னிட்டு நீக்கத்தொடங்கி னக்கருவிகணீங்காது பண்டைப்படி மூடுமோகலி னிங்ஙன்முவமைகூறினார். (க)

(கலி - உ. அ - கை.)

கருவிகளை யிங்ஙன நீங்கித் திருவருளைக் கூடுநிட்டை கூடாதாயினுங் கேவல சகலங்க டாக்கா தருளேயெவைக்குந் தாரகமென்றறிந்து நிற்றற்குபாய மியாதெனின், ஆன்மபோதம் ஜீவியா தருட்போதத்தை நாடிநின்று லவ்வரு ளறியப்படுமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

செத்துப் பிறவாமற் றேடித் திரிகையிலே
செத்துப் பிறந்து திரிவீரே - சுத்த
விருட்கே வலசகலம் போகவெதி ரிட்ட
வருட்போத ராய்த்திரியா மல்.

(இ-ள்.) செத்துப்பிறவாமற்றேடித்திரிகையிலேசெத்துப்பிறந்துதிரிவீரே,, எ-து. இனிமே லிறந்துபிறவாம லிப்போது பிறப்பிறப்பைக்கடந்துநின்ற வீடுதேடிப் பாவனைமுதலியசெய் துள்ளே சுழலுமிடத்துத் தானே கேவலாவத்தையி லிறந்துஞ் சகலாவத்தையிற் பிறந்துஞ் சுழல்வீர்?

"எதிரிட்டவிருட்கேவலசகலம்போகச் சுத்தவருட்போதராய்த்திரியாமல்" எ-து. உமதறிவிற் கெதிரிட்ட மயக்கவடிவாகிய கேவலாவத்தையும் விகற்பவடிவாகிய சகலாவத்தையும் போக விவைகடாக்காத சுத்தாவத்தையி னின்றவருளே யெவைக்குந் தாரகமென்றறிந்து நாடியவ்வருட்போதராய்ச் சஞ்சரியாமலிதென்னை. எ-று.

ப-ம். மயக்கமாய்வந்தடுப்பது கேவலம். விகற்பமாய்வந் தடுப்பதுசகலம்மயக்கம்வந்தடுத்தபோது மயக்கவடிவாய்நின்றும் விகற்பம்வந்த

டுத்தபோதுவிகற்பவடிவாய்நின்றும்மயக்கநீங்கியபோதம்மயக்கத்தை மயக்கமென்றறிந்தும் விகற்பத்திற்சென்று மீண்டபோது அவ்விகற் பத்தை விகற்பமென்றறிந்து மிங்ஙன மவற்றின் மறைந்துஞ் சுழன்று மவற்றை யிவையென்றறிந்து நின்றவறிவு தானென்றறிந் தவற்றையு ந் தன்னையுந் தனக்கறிவித் தருளென வறிந்து அவ்வரு டன்னையெப் போதும் விட்டு நீங்காதென்றறிந் தவ்வருளை நாடிநிற்கவே யம்மயக்க ம் விகற்பமாகிய கேவலசகலங்களி னீங்கி யருட்பூரணமாய்ப் பிரவே சிக்குமாகலி "னிருட்கேவலசகலம் போகவெதிரிட்ட வருட்போதரா ய்த்திரியாம" லென்றார். (உ)

(கவி - ௩. அ - ௯.)

இங்ஙனஞ் சகலகேவலங்க டன்னா லறியப்படுதலி னவற்றைத்த ன்னா னீக்கக்கூடாதோவெனின்; சகலகேவலங்களை அருட்போதத்தா லன்றி யான்மபோதத்தால் நீக்கப்படாதென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

சகலமுங் கேவலமுந் தாக்கறுப்பான் றானே
பகல்விளக்கோ டுச்சிப் படிகந் - தகவைத்தா
ழூட்டி யுறக்குவது நாமேநம் முட்கலப்பு
நாட்டமொழி யென்றருளி னான்.

(இ-ள்.) சகலமுங்கேவலமுந்தாக்கறுப்பான்றானே பகல்விளக்கோ டுச்சிப்படிகந் தகவைத்தா ழூட்டியுறக்குவதுநாமே,, எ-து. நமதருளை முன்னிட்டுக்கொண்டு சகலகேவலங்களைத் தன்னுட்டாக்காது அறு ப்பதேயன்றித் தானே சகலத்தையுங் கேவலத்தையுந் தன்னுட்டாக் கா தறுப்பா னுதித்தன்சந்நிதியிற் றற்சேட்டை யற்றிருந்த விளக்குப் போலு முச்சிகாலத்துப் பஞ்சவன்னங்களையுங் கவரா திருந்த படிகம் போலு மெமது சந்நிதியி லுனதுதற்போதஞ் சீவியா திருக்கவு மெம து சந்நிதியை நீயங்ஙன நீங்கா திருத்தலிற் கருவிகளுன்னைத் தாக்கா திருக்கவுந் தகைமைபெறவைத் துனதூழ்வினைப்படி யுனக்கூட்டி யு றக்குவிப்பது நமதருளே யிங்ஙனம் வீட்டின்பங்கொடுப்பது நமதரு ளே யென்றறிந்து இவ் விருவகையிடத்து முன்போதஞ் சிறிதேனு ஞ் சீவியாதுநிற்பி னம்மிருவர்க்குந் தாமே யிரண்டற்றவைக்கியங்கூ டு மிஃதன்றி?

"நம்முட்கலப்புநாட்டமொழியென்றருளினான்" எ-து. யாமுன் னைவந்துகூடுதலு நீ நம்மைவந்தடைதலுமாகிய கருத் துன்பாலெழி

னைக்கியங் கூடாதாகலின் நாமிருவரும்வந்து நம்முட்கலப்பதாகிய நாட்டத்தை நீயொழிதியென்று (திருஞானசம்பந்தப்பிள்ளையாராகிய சுவாமிக) ளெனக்கருளிச்செய்தா ரிவ்வாறே நீயு மறிதியெனி னவரது திருவடிக்கணைக்கிய முனக்குங்கிடைக்கும். எ-று.

ப-ம். எதிரிட்டுத்தடித்த போத மெதிரிடா தசைவற நின்றுதேய்ந்தபோ தான்மாவிற்குஞ் சிவத்திற்கு மைக்கியந் தாமேகூடுமாகலி“னம்முட்கலப்புநாட்டமொழி” யென்று அருளினனென்றார். நாட்டமொழியென்றருளினனென்றது, தமதாசாரியர் தமக்கருளிச்செய்த முறைமையீதென்று மாணாக்கனுக்கறிவித்ததெனக்கொள்க. (௩)

(கவி - ௬. அ - கை.)

இங்ஙனங் கருதிநின்று திருவருளைக் கூடுதலறிதாயினு மின்னுமோருபாய மியாதெனின், கருவிகளை யுள்ளபடி கண்டறியில் திருவருணிலை காணவருமென்றும், அங்ஙனம்வரின் பரையோகமுதலிய பேறுளவாமென்று மித்திருவெண்பாவிற்கூறுகின்றார்.

சாக்கிரத்திற் போதச் சலனையெல்லாஞ் சொற்பனம்போ
லாக்கு மருட்போத ராகுவோர் - நீக்கும்
பரையோகர் சுத்தர் பரமசுகா நந்தர்
துரியகதி யின்புகடந் தோர்.

(இ-ள்.) சாக்கிரத்திற்போதச்சலனையெல்லாஞ்சொற்பனம்போலாக்கு மருட்போதராகுவோர்” எ-து. சாக்கிராவத்தையிற் றோன்றும் போதச்சேட்டையு மற்று முண்டாகிய தேகாதிப் பிரபஞ்சங்களெல்லாமு மிவையாவையென்ன வெதிரிட்டுப்பார்த் தப்போதச்சேட்டை விடயங்களைச்சார்ந்தவிடத்துத் தோன்றிய விடயபோதமென்றுந் தேகாதிப்பிரபஞ்சங்க ளெல்லாவற்றையு மாயையிற் றோன்றி யழிவதென்று மிவற்றிற்கெல்லாந் தாரகமா யுட்புறம்பாய்ப் பரிபூரணமாய்நிற்ப தருளென்றுங்கண்டு பின்ன ரப்பரிபூரணமாகிய வருளே மெய்யென் றதனை நாடிநின் றிவ்விடயபோதந்தையு மிப் பிரபஞ்சங்களையுஞ் சொற்பனம்போலப் பொய்யாக்குமவ ரிவற்றை யுள்ளபடிநீங்கி யவ்வருட் போதரேயாகுவார். அஃதன்றி அவரோ ?

"நீக்கும்பரையோகர்சுத்தர்பரமசுகாநந்தர் துரியகதியின்புகடந் தோர்" எ-து. அவ்வருளையுங் கடந்துசெல்லும் பரையோகருந் தற் சுதந்திரமற்ற பரிசுத்தரு மப்பரமசுகமாகிய வாநந்தத்தையுடையரு நின்மலதுரியத்திற் றோன்றும் பரமசுகாநந்தாதீதருமாவர். எ-று.

ப-ம். இங்ஙனம் விடயபோகத்தையுந் தேகாதிப்பிரபஞ்சங்களையும் பொய்யென்றுந் தமக்கன்னியமென்றுங் கண் டிவற்றிற்குள்ளும் புற ம்பும் பரிபூரணமாகிய திருவருளையே நாடிநிற்போ ரிப்பொய்களைநீங் கி யம்மெய்யாகியதிருவருளே வடிவாவராகலிற்"சொற்பனம்போலா க்கு மருட்போதராகுவோ,,ரென்று மங்ஙன மருள்வடிவாயகாலத் த வ்வருளையுங்கடந்துபரையோகமுதலியன அவர்க்கெளிதிலுண்டாமாக லி னவரையே பரையோகமுதலியன வுடையரென்றுங்கூறினர். "அ வரென்னுஞ் சுட்டுப்பெய ரெஞ்சிநின்றது. (௪)

(கவி - ரு. அ - கை.)

இங்ஙனம் விடயபோகத்தையுந் தேகாதிப்பிரபஞ்சங்களையுநீங்கி யருளைப்பெறுவதே யமையாதோ வதற்குமேனீர் பரையோக முதலி யன கூறிய தென்னையென்ற மாணாக்கனைநோக்கி;உண்மையீதென் றி த்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

தத்துவம்போய்க் கேவலம்போய்த் தான்போ யருள்கழன்று
சுத்தபரை யாய்த்தன் சுதந்திரம்போய்ச் - சத்தி
யொழிவிலே போதம்போ யொன்றாகா வொன்றி
னழிவிலே யின்பவதீ தம்.

(இ-ள்.) தத்துவம்போய்க்கேவலம்போய்த்தான்போயருள்கழன்று சுத்தபரையாய்த்தன் சுதந்திரம்போய்ச் சத்தி யொழிவிலே போதம் போய்" எ-து. நினைப்பாய்நின்ற தத்துவ முப்பத்தாறையு நீங்கி யவற் றின்மேன் மறப்பாய்நின்ற கேவலாவத்தையு நீங்கி யத்தத்துவங்களை யுங் கேவலாவத்தையையு மிவையென்றறிந்து நீங்கிநின்ற வறிவு தா னெனத் தன்னையறிந் தவைகளை யறிந்துநீங்கவுந் தன்னையறியவும் வந் தது திருவருளறிவிக்க வறியவந்ததென் றறிந்து தானறிந்தே னென்ப துநீங்கித் தனக்கறிவித்த வவ்வருளைத் தரிசித் தவ்வருளையுங்கழன்று நிருமலமாயுள்ள பரையே தானாகி யப்பரையையறிந்தவிடத் திதுவது வென்று தான் காண்பானுங்காட்சியுமாயறிந்துவந்த தற்சுதந்திர வறி வுநீங்கி யப்பராசத்தி நீக்கத்திற் றற்போத மொழிந் தாநந்தாநுபவம் பெற்றதற்பின்னர்?

"ஒன்ருகாவொன்றினழிவிலேயின்பவதீதம்,, எ-து. இங்ஙனங்கூறியவற்று ளொன்றுந் தானுகாத வொன்ருயிருந்த சிவத்திற் ருனிரண்டறக்கலந்து போதவாசனையு மிறந்தவிடத்திற் சுகாதீத மிச்சுகாதீதமே யுண்மைநிலையென்றறிதி. எ-று.

ப-ம். பரையோகத்தி லான்மாவினது தற்சுதந்திரவறிவு கெடுமாகலிற் "சுதந்திரம்போ" யென்றும் அப்பராசத்தி நீக்கத்திற் போதமிறந் தாநந்தாநுபவமுண்டாமாகலிற் "சத்தியொழிவிலேபோதம்போ" யென்று மான்மா சிவத்தோ டிரண்டறக்கலந்தவிடத்துப் போதவாசனையொழிதலானு மிவ்விடஞ் சுகாதீதமாகலானு "மொன்ருகாவொன்றி னழிவிலேயின்பவதீத,,மென்றுங்கூறினர். (இன்பாதீதமென்றமையா லின்பப்பேறு வருவிக்கப்பட்டது.) தத்துவமுதலியன போக்கப் போவனவாகலிற் போயென்பதனை நீங்கியென்று கூறப்பட்டது. (ரு)

(கவி - சூ. அ - கை.)

இவ்வாநந்தப்பேறு பெறுமா றெங்ஙனமெனின்; மேற்கூறுகின்ருர்.

போதப் புரவி புருட னதிலேந்து
வீதிப் பவனி விறிசாகும் - போதப்
புரவியரு ளேறினுற் போக்குவர வற்ற
பரமசுக மாங்காணப் பா.

(இ-ள்.) போதப்புரவி புருடனதிலேந்து வீதிப்பவனி விறிசாகும்,, எ-து. போதமாகிய வளையன்புருடனுகிய புரவிமே லேறிக்கொண்டு பஞ்சேந்தியவீதிகளில் விடயங்களாகிய காட்சிகளைக் கண்டுகொண்டு சுழல்விறிசுபோலப் பவனிசெல்வதாகும்?

போதப்புரவியருளேறினுற்போக்குவரவற்ற பரமசுகமாங்காணப்பா" எ-து. போதமாகிய புரவிமே லருளாகிய வளையனேறினு லப்போது போக்குவரவற்றுநின்ற மவுனுநந்தமுண்டா மிதனை மாணுக்கனே நீயறிதி. எ-று.

ப-ம். போதம்புருடனேடுங்கூடிப்பஞ்சேந்தியவழிச்சென்று விடயங்களைப்பற்று மங்ஙனம்பற்ருு தவற்றைநீங்கி யப்போதத்தை யுள்ளேயடக்கித் திருவருளைநாடவே யிவ்வரு ளப்போதத்தைக் கீழ்ப்படுத்தித் தான்மேலீடாய்ப் பிரகாசிக்கு மப்போ தாநந்தோதய முண்டாமாகலி னங்ஙன முவமைகூறினர்.

போதம்விடயாநந்தம் பெறுதற்கேதுவாய்நின்றது புருடனாகலினி ப்புருடனைப் புரவியாக்கினர். சொரூபாநந்தம்பெறுதற் கேதுவாயவ ருளை போதமுன்னிட்டுக்கொண்டு சேறலி னிப்போதத்தைப் புரவி யாக்கினர். இந்தநாட்டம்வைத்தா லந்தநாட்ட மறந்துசுழலு மந்தநா ட்டம்வைத்தா லிந்தநாட்டமறந்து அசைவற்றிருப்பதுங்காண்க. ஒரு வ னட்டாவதானஞ்செய்தன் முதலியவு மிப்புருடனது வேகமெனக் கொள்க.

(இதற்குதாரணம்) சிவப்பிரகாசம் ஐவகையாலுறுபயன்க ணு கரவருங்கால, மது புருடதத்துவமென் றறைந்திடுவ ரறிந்தோ, ரெ ன்றும், மற்றும்வருவனவற்றுற்காண்க. (சு)

(கவி - எ. அ - கை.)

அறிவுமாநந்தமும் பெருதற்குபாயங்கூறினீ ரினித்துறவின தில க்கண மியாதெனின்; மேற்கூறுகின்றூர்.

அறிந்தழுந்தி யாராய்ந் தகம்புறமாய்த் தேடி
மறந்தவனாய்த் தானாய் மயங்கிப் - பிறிந்து
சுகதுக்க மாய்ப்பதறிச் சுட்டுத் தொழில்போய்ப்
பகைகெட் டதுதுறவப் பா.

(இ-ள்.) அகம்புறமாயாராய்ந்துதேடியறிந்தழுந்தி மறந்தவனாய்தா னாய்மயங்கிப்பிறிந்து சுகதுக்கமாய்ப்பதறி" எ-து. தற்போதத்தால் வி டயங்க ளெவ்விதத்தா லுண்டாமென் றுள்ளும் புறம்புமாய் விசாரித் துத் தேடியு மவ்விடயங்கள் கிடைத்தகாலை யவற்றை ஞானேந்தியங் களா னறிந்து கன்மேந்தியங்களாற்பற்றி யந்தக்கரணங்களா லவற்றுள ழுந்தி யவ்விடயங்களைக் கேவலத்தின்மறந்தவனாயுஞ் சகலத்தி லவ்வி டயங்களே தானாய்மயங்கியும் விடயங்க டன்னைப்பிரியாது நின்றவிடத் தவற்றிற் சுகரூபியாய்ச்சென்றுபற்றிப் பதறியும் அவை தன்னைப்பிறி ந்து நீங்கியவிடத்துத் துக்கியாநின்று பதறியும்?

"சுட்டுத்தொழில்போய்ப்பகைகெட்டதுதுறவப்பா" எ-து. இங் ஙனமயங்கிநின்ற சுட்டுப்போதமுங்கெட்டு அவ்விடயங்களாகிய வுயி ர்ப்பகையுங்கெட்டதுவே துறவென்றறிதி மாணக்கனே. எ-று.

ப-ம். "அறிந்தழுந்தியென்றதனால்,, பற்றியென்பது இடையே வரு விக்கப்பட்டது. துறவுகூறினமையால் விடயம் எதிராக வருவிக்கப்

ட்டது.பிரதியா வருவிக்கப்பட்டதுவென்று சிலவுரைபாடங்களிலிருக்கின்றது. அகத்துத்தேடியென்றது அவ்விடயங் கிடைத்தற் குபாயநாடுதல்சுகங்கூறினமையால் விடயம் பிரியாதுநின்றவிடத் தென்பது வருவிக்கப்பட்டது,விடயம் பிறியாதபோ ததன்மேல்விரைந்துசேறலானும் பிறிந்தபோ துளம்பதைத்தலானு மிருமைக்கும் பொதுவாய்ப் பதறியென்றார். மயங்கிச்சுழல்வதனுற் போதத்தொழி லென்றார். இம்மை மறுமைகளினு முயிர்க்குத் துன்பந்தருவதாகலி னவ்விடயங்களைப் பகையென்றார். (எ)

(கவி - அ. அ - கை.)

அறிவுந் துறவு மிவையென் றறிவித்தி ரினிச் சிவயோகமாவ தியாதெனின், மேற் கூறுகின்றார்.

நடந்ததெல்லா நீயே நடப்பழிய நின்ற
விடஞ்சிவநீ யென்றிருக்க வெண்ணி - லடங்கின்
மயக்கி மலமழுத்து மாயையிது வாரா
வயிர்ப்பருளா லாஞ்சிவயோ கம்.

(இ-ள்.) நடந்ததெல்லாநீயே நடப்பழியநின்ற விடஞ்சிவநீயென்றிருக்கவெண்ணி லடங்கின் மயக்கிமலமழுத்தும்" எ-து. கருவிகளை யிதுவிதுவென்றறிந்து சென்றதெல்லா முன்றற்போதமே யாமாகலினிது சிவயோகமன் றக்கருவிகளை யறிந்துசென்ற தொழியநின்ற விடத்தை நீ சிவயோகமென் றிருக்கக் கருதினையெனி னக்கருவிகளடங்கின் உன்னை யாணவமலமயக்கித் தன்வயப்படுத்துமாகலி னக்கருவிகளொழிய நின்றவிடஞ் சிவயோகமன் றுயிற்சிவயோக மியாதினு லுண்டாமெனின்;

"மாயையிதுவாராவயிர்ப்பருளாலாஞ்சிவயோகம்" எ-து. உன்னலறியப்படுங் கருவிகளெல்லா மாயை அக்கருவிகளொழியநின்றவிடத்து மறப்பாய்நின்ற தாணவ மலமாகலி னம்மாயையு மிவ்வாணவமும் வந்தடாத சுத்தத்தின்கட்டோன்றுந் திருவருளாலுண்டாஞ் சிவயோகமென்றறிதி. எ-று.

"இதுவென்றதை,, யிதுவாணவமெனக் கொள்க. சகலகேவலங்களிற்செல்வ துயிர்க்குப்பழக்கமாகலி னிவற்றைமறந்துநின்ற சுத்தத்தை யயர்ப்பென்றார். (அ)

(கவி - கூ. அ - கை.)

இச் சகலகேவலங்க ளற்றபோது தற்போதமறுதோ விவற்றின் மேலும் போதமுளதென்று நீர்கூறிய தென்னையெனின்;மேற் கூறுகின்றார்.

அருளும் பரையு மருக்கன்மதி போன்ற
விரவுபக லற்ற விடத்தே - பரமநிலை
சத்தி கழற்றியிலே சச்சிதா னந்தமயச்
சுத்தநிலை நீயற் றது.

(இ-ள்.) அருக்கன்மதிபோன்ற வருளும்பரையும் பகலிரவற்றவிடத்தேபரமநிலை" எ-து. அருக்கனு மதியும்போன்ற வருளும் பரையுமாகிய பகலுமிரவுமற்றவிடத்தே பரமாநந்தாநுபவநிலையாம் ?

"சத்திகழற்றியிலேசச்சிதாநந்தமயச் சுத்தநிலைநீயற்றது" எ-து. அப்பரமாநந்தாநுபவமாகிய வநுபவசத்தி நீக்கத்திற் சச்சிதாநந்த வடிவாயிருந்த சிவமாகிய சுத்தநிலை யிச்சுத்தநிலையே யுன் தற்போதஞ் சிறிதுந்தோன்றா தற்ற நிலையென்றறிதி. எ-று.

ப-ம்.அரு ளான்மாவிற்குப் புலப்படத்தோற்றலானு மப்பரையினுந் தடிப்பாகலானு மவ்வருளை யருக்கனென்று மவ்வருளைக் கடந்தது பரையாகலானு மிப்பரை யான்மாவிற்குத் தோற்றாமற் றேற்றலானு மிப்பரையை மதியென்றும் பகலிரவுகண்ணிற்குத் தோற்றுதல்போலருளும்பரையு மான்மாவிற் கநுபவமாய்த்தோற்றலாற் "பகலிரவென்றுங்,, கூறினார்.

பிரகாச முட்டணஞ் சோபையென்னு மிம்மூன்றுகுணத்தையுமுடையசூரியனைப்போ லருள் பரை யாநந்தமென்னு மிம்மூன் றிலக்கணத்தையுமுடையது சிவமாகலிற் சச்சிதாநந்தமயச் சுத்தநிலை யென்றார். ஆநந்தமளவு மான்மாவா லநுபவங்கூறப்படு மவ்வாநந்தாதீதத்தி லநுபவங் கூறப்படாதாகலிற் சுத்தநிலை நீயற்றதென்றார். (கூ)

(கவி - ய. அ - கை.)

இனிப்பஞ்சமலங்களுமறுநெறி யெங்ஙனமெனின்மேற்கூறுகின்றார்.

தாமருந்தல் போலத் தமைச்சிவனுக் கூணாக்கித்
தாமருளா லுண்டுபரை தாமாகித் - தாமழிய

வஞ்செழுத்தா லர்ச்சித் தடியார்க் கடிமைசெயிற்
பஞ்சமலக் கொத்தறுமப் பா.

(இ-ள்.) தாமருந்தல்போலத்தமைச்சிவனுக்கூணாக்கித் தாமருளாலுண்டுபனைதாமாகித் தாமழிய" எ-து. தமக்கூணாயிருந்த வன்னுதிகளைத் தாமருந்தல்போலத் தற்போதஞ் சீவியாதுநின்று தம்மைச் சிவனுக் கூணாயுண்ணக்கொடுத்துப் பஞ்சவிடயங்கள் வந்தடுப்பினுமவற்றைத் தற்போதத்தாற் சென்றுபற்றி யவற்றிலழுந்தாம லருளை முன்னிட்டுக்கொண்டு அவ்வருடரவாங்கி யுண்கின்றோமென்னு ஞாபகமறவாம லவ்வருளால் வாங்கியுண் டிங்ஙன மவ்வருளா லறிகின்றோமென்னும் போதமுஞ் சுருங்கிப் பனையேதாமாகித் தற்சுதந்திர வறிவுகெட்டுப் பின்ன ரானந்தானுபவத்திற் றாமழியவே?

"பஞ்சமலக்கொத்தறுமஞ்செழுத்தாலர்ச்சித் தடியார்க்கடிமை செயிலப்பா"எ-து. ஆணவமாயை காமியந் திரோதை மாமாயையென்னும் பஞ்சமலக்கூட்டங்களுமறும். அங்ஙன நிட்டைகூடி யிப்பஞ்சமலங்களை நீங்கக்கூடாதாயிற் சிவமுன்னாக விதிப்படியுச்சரிப்பதாய பஞ்சாக்கரத்தாற் சிவன்றிருவடியை யருச்சனை பண்ணி யத்திருவடியை யடைந்த மெய்யடியார்க் கடிமைபூண்டு பணிவிடைசெய்யின்முற்கூறிய வநுபவங்களெல்லாங் கைகூடும் பஞ்சமலங்களு மறுமென்றறிதிநீ மாணாக்கனே. எ-று.

ப-ம். தமதுடலருந்துமூ ணவ்வுடலுக் குண்ணக்கொடுத்துநிற்கவே யதனை யவ்வுடல் சிறுகச்சிறுக வுண்டு தான்பருத்தல்போலத் தற்சேட்டையற்றுத் தம்மைச்சிவனுக் கூணாகக்கொடுத்துநிற்கவே யச்சிவந் தம்மைச் சிறுகச்சிறுகவுண்டு தான் பூரணமாய்விளங்குமாகலிற்"றாமருந்தல்போலத் தமைச்சிவனுக் கூணாக்கி,,யென்றார்.

விடயங்கள்வந்தடுக்கும்போதுந் தற்போதத்தைப் பின்னிட்டருட்போதத்தை முன்னிட் டவ்வருளா லவ்விடயங்களை யறிந்துபற்றியவற்றை யநுபவிக்கும்போது மவ்வருளை முன்னிட்டுநின் றநுபவித்தவற்றா லான்மசந்தோடம் பிறக்கும்போது மிச்சந்தோட மவ்வருளாலுண்டாயதென் றவ்வருளுக் காக்கிநிற்கவேண்டு மாகலிற் றாமருளாலுண்டென்றார்.

சகலகேவலங்களைநீக்கிச் சுத்தாவத்தையினின்று தம்மைச் சிவத்திற்கூணாக்கிநிற்றலான் முன்னரிதமாய்த் தோன்றிய விடயபோகமு

மகிதமாய்த் தோன்றுமாகலி னதனை ருசிப்பித்துநின்றதிரோதைசத் திநீங்கு மத்திரோதைசத்திநீங்கவே யிருவினைப்பயன்களுஞ் சமமாய்த் தோன்று மிவை சமமாய்த்தோன்றவே யிவ்விருவினைப்பயன்கட் கீடாய்ச் சிவன் சுத்தமாயையினின்று செய்யும் பஞ்சகிருத்தியங்களும் அச்சுத்தமாயையுநீங்கும்?

அவன் அவளதுவென்னும் முன்னிலைச்சுட்டொழிந்து அவ்விருவினைப்பயன்களைத் தருவ தருளென் றறிந்து அவ்வருளின் மறைந்துநின் றவ்விருவினைப்பயன்களையு மவ்வருளாற் ருமுண்டலாற் கன்மமலநீங்கு மிங்ஙனநீங்கவே பரையோக முண்டா மிப் பரையோகத்தா லிவ்வுடம்புந் தாமன்றென்று நீங்கவரு மிவ்வுடம்புநீங்கவே மாயைநீங்கு மாநந்தாநுபவத்திற் றற்போதங்கெடு மித்தற்போதங்கெடவே யிப்போதத்திற்குத் தானல்லாதவுடம்பைத் தானென்றுந் தனதல்லாத போகத்தைத் தனதென்று மாறுபாடாய்க்கருதப்பண்ணிநின்ற வாணவங்கெடுமாகலிற் "ருமழியப்பஞ்சமலக்கொத்தறு,மென்றார்.

இங்ஙனங் கூறியவாறு நிட்டைகளாற் பஞ்சமலங்களையுநீக்கக்கூடாதவர் நகாரமாகிய திரோதையும் மகாரமாகிய மலத்தையும் பின்னிட்டுச் சிகாரமாகியசிவத்தையும் வகாரமாகிய வருளையும்முன்னிட்டு யகாரமாகிய தான் நகார மகாரமாகிய பாசத்திற்குஞ் சிகார வகாரமாகிய பதிக்குநடுநின்று வகாரமாகிய வருளைக்கூடிச் சிகாரமாகிய சிவாநுபவத்தில் வகாரமாகிய வருளுங்கழலாது யகாரமாகிய தற்போதங்கழல?

இங்ஙன மவ்வருளே நாவாகச்செபியாமற் செபித்துச் சிகாரமாகிய சிவத்தி லதீதப்படுவது பஞ்சாக்கர தரிசன மிங்ஙனம் பஞ்சாக்கர தரிசனமும்பண்ணி மெய்யடியார்க்குப் பணிவிடைசெய்யின் முற்கூறிய நிட்டைகளுங் கைகூடிப் பஞ்சமலங்களு மறுமாகலி "னஞ்செழுத்தா லர்ச்சித்தடியார்க் கடிமைசெய்யிற் பஞ்சமலக்கொத்தறு" மென்றார். இங்ஙனம் பஞ்சாக்கரதெரிசனம்பண்ணுதல் சிவனுக் கருச்சனையாகலி "னஞ்செழுத்தாலர்ச்சித்,,தென்றார். (ய)

(கவி - யக. அ - கை.)

தேவரீரருளிச்செய்த சுத்தத்தை யடியேன்பெறுவ தெந்நாளென் றிரங்கிய மாணுக்கனை நோக்கி,மேலருளிச்செய்கின்றார்.

கருவியுதிப் பிற்சகல கேவலத்தைக் காட்டி
யருளுதிப்பு மங்கதுபோ லாக்கி - யிரவுபகற்
றாக்காத சுத்தத் தலத்துனைநாம் வைக்கநீ
யாக்கா தெமக்குப் பரம்.

(இ-ள்.) கருவியுதிப்பிற்சகலகேவலத்தைக்காட்டி யருளுதிப்புமங்கதுபோலாக்கி" எ-து. கருவிகண் முப்பத்தாறையுங் கூடிநின்ற சாக்கிரத்திலுனதறிவின் விகற்பமாய்வந்தடுப்பது சகலமென்றும், மயக்கமாய்வந்தடுப்பது கேவலமென்றும், உனக்கறிவித்த சகல கேவலங்களை நீங்கப்பண்ணி யுன்னை யுள்ளபடியறிவித்து இங்ஙன முன்னை யறிவித்தபின்னர்த் தோன்றுந் திருவருட்டரிசனத்திலு மிவ்வருளைச் சகலமென்று மிதுகழன்றுதோன்றும் பரையோகத்தைக் கேவலமென்று முற்கூறிய சகலகேவலங்களைப்போ லுனக் கநுபவமாய்த் தரிசிப்பித்துப் பின்னர்?

"பகலிரவுதாக்காதசுத்தத்தலத்துனைநாம்வைக்கவெமக்குப்பரம் நீயாக்காது" எ-து. அச்சகலகேவலங்களு மிச்சகலகேவலங்களுமாகிய பகலிரவுகளுந் தாக்காதுநின்றசுகாதீதமாகிய சுத்தநிலையிடத் துனை நாங்கொடுசென்று வைக்க வெமக்குப்பர மீண்டுகூறிய விருவகைச் சகலகேவலங்களினு முன் றற்போதத்தை முன்னிட் டுண்டாக்கா தெம்மை முன்னிட்டுக்கொண்டுசெல்வ துனக்குப்பர மிங்ஙனஞ் சென்றியே லுனக் கச்சுத்தநிலை வருமென்றறிதி. எ-று.

ப-ம். ஆன்மபோத வெதிரீட்டினு மெதிரீடற்றவிடத்துந் தோன்றுஞ் சகலகேவலங்களைப்போ லிவைநீங்கித் தன்னை யறிந்தவிடத்திற் றோன்றுந் திருவருளையும் பரையையு மெதிரீடாயு மெதிரீடற்றுந் தரிசித்தலி "னங்கதுபோலாக்கி" யென்றார்.

எமக்குப்பரமென்றமையா லுனக்குப் பரமென்றது வருவிக்கப்பட்டது. ஞானசாரியர் மாணாக்கனுக் குபதேசிக்குங்காற் றம்மைச் சிவமாகக் கூறவேண்டுமாகலி "னெமக்குப்பர" மென்றார். (௫௧)

(கவி - ௫௨. அ - கை.)

இந்நூனெறிக்கணின்றோர்க்கே வீட்டின்பங் கிடைக்குமென் றித்திருவெண்பாவிற் கூறுகின்றார்.

கருப்ப நிலத்தைக் கறண்டு திரிவார்க்குச்
சருக்கரையே வாயிற் சனித்தாங் - கிருத்திவிடு

மெந்தலைமை யென்பிரா லினர்வாக் கென்னவே
தந்தலைமை மாண்ட தலம்.

(இ-ள்.) கருப்பநிலத்தைக்கறண்டுதிரிவார்க்குச் சருக்கனையே வாயி ற்சனித்தாங்கிருத்திவிடும்'' எ-து. சுவையைவிரும்பிக்கரும்பறுத்தொ ழித்த வக்கருப்பநிலத்தைத்தமதுபற்கொடுகறண்டுகொண்டு திரிவோ ர்க்குத் தெய்வகதியாய்ச் சருக்கரை தானேவந் தவரதுவாயிற் றோன் றிய முறைபோல வீட்டின்பத்தை விரும்பித் தற்போதத்தைக் கொ ண்டு சரிதாதிகளைச்செய்வோ ரிந்நூலிற்கூறியமுறையே சரிதாதிகளை விட்டுநீங்கித் தற்போதத்தைபின்னிட் டருட்போதத்தை முன்னிட்டு ச்சென்றாரெனின், இவ்வருட்போதமே யவரை யவ்வீட்டின்பத்தின் க ணழுத்திவிடுமாகலின் ?

“எந்தலைமையென்பிராலினர்வாக்கென்னவேதந்தலைமைமாண்ட தலம்'' எ-து. ஓர்காரியஞ் செய்யுமிடத்து எமதுவலியினாற்செய்வோ மென்று கூறு மறிவினர் வாக்குப்போ லவ்வீட்டின்பத்தை யெமது போதவலியாற்சென்றடைவேமென்று கருதிச் சொல்வீராகிலங்ஙன நீர்கருதிச்சொல்வதே யுமது ஞானமேம்பாடற்றவிடமென்று அறிந் து நீரு மிந்நூல்நெறிமுறையே செய்வீர். எ-று.

ப-ம். சரிதாதிகளைவிட் டிந்நூல்நெறிச்சென்றாற்போதமொழியுமிப் போதமொழியி லாநந்தந்தானே தோன்றுமாகலிற்“கருப்பநிலத்தைக் கரண்டு திரிவார்க்குச் சருக்கரையே வாயிற்சனித்தாங்”கென்றுவமை கூறினர். உந்தலைமையென்பது தந்தலைமையென்று முன்னிலைத்தன் மைதழீஇவந்தது. பன்னூல்களையும்விட் டிந்நூனெறி சென்றார்க்கே யின்பங்கிடைக்கு மென்பதுமாம்.

க-து. போதப்புரவியென்னுந் திருவெண்பாமுதலிவையேழுதிரு வெண்பாவானு மாநந்தவறிவு நிலையுந் துறவுநிலையுஞ் சிவயோக நிலை யுஞ் சுத்தநிலையும் பஞ்சமலமறுக்கும் பஞ்சாக்கரநிலையு முத்திநிலையு இந்நூனெறிச் சென்றார்க்கே வீட்டின்பங்கிடைக்குமென்னுமுடிபுநி லையு மறிவித்தனரென்பது. (கூஉ)

கண்மணியி னாகாய நீழல் கலந்தாற்போல்
உண்மையை நீயுண்டென் றெனையுணர்த்தித் - துண்ணெனவே
பார்த்திருந்த சித்திரம்போற் பார்த்தானை நாம்பாவித்
தோத்திரஞ்செய் யாப்பிறவாச் சொல்.

இந்நூலின் நன்குணறுநெறியினது நல்லறிவாளர்க்கு இத்திரு வெண்பாவி னருத்தம் தானேவிளங்குமெனக் கொள்க.

நிலையியல்பு - முற்றிற்று.

ஆகதிருவெண்பா - உடுரு.

ஒழிவிலொடுக்கம்-உரைபாடம்

முற்றிற்றுமுற்றும்.

திருச்சிற்றம்பலம்.

சமரபுரி யாறுமுகன் றானேயென் னுள்ளத்
தமரவிருந் திந்நூற் கருத்தந் - திமிரமறக்
காட்டினான் பொல்லாக் கடையேனைச் சீர்வீட்டி
னாட்டினான் பேரருளி னால்.

கைலையுறை பாலின்பங் காட்டுவிர லேகசிவ
மெய்யருளாம் பாதமிடு மென்பதுகை - துய்ய
விருட்கே வலசகல மெந்தைசம் பந்தன்
திருக்கோலங் கொண்ட சிறப்பு.

அரவுவிடந் தீர்க்கு மமணருடன் மாய்க்குந்
திரகதியி லெண்ணிலரைச் சேர்க்கும் - புரமயிலை
மென்மைப்பெண் ணாக்கிவிடு மேழையே னேழ்பிறவித்
துன்பத்தை நீக்குவான் சொல்.

ஒழிவிலொடுக்கம்.

அதிகாரங்களின் பெயரு முறையுஞ் செய்யுட்டொகையுங் கூறியது.

சீராகுமாகமத்திற் செப்புமியற்சித்தாந்த
நீராகுமுப்பொருளி னேர்தெளிவினோர்த்துய்தற்
கொத்தபொதுவி லுபதேசமேழொன்பான்
சத்திநிபாதத்துத்தமரொழிவுநாலேழ்
அருமையோகக்கழற்றியாய்ந்திடுமையாருங்
கிரியைக்கழற்றிகிளத்துமீரெட்டாஞ்
சரிதைக்கழற்றியதிற்சாற்றுமீரேழாம்
விரத்திவிளக்கத்தின்மேவும்பதின்மூன்
றுறப்புறுநற்றுறவினுற்றவையைந்தாகு
மவத்தைத்தன்மைக்குளரியவாறேழாம்
வாதனைமாண்டார்தன்மைவாய்த்தமும்மூன்றாகும்
கோதினிலையியல்பிற்கூறல்பதின்மூன்றா
மொருபத்ததிகாரத்தோங்குதிருவெண்பா
விருநூற்றைம்பான்மூன்றிவைகளிசையத்
தழுவியுரைத்திட்டான்றகைமையுறுவள்ள
லொழிவிலொடுக்கத்தினுள்.

அமைத்துக்கொளல்.

காப்பின்கண் ஈண்டு இத்தோத்திரச் செய்யுட்களென்றவையுள் ஆனைமுக னாறுமுக னென்னுஞ்செய்யுளையொழித்து வேறுகொள்க. கூ-ம்-பக்கம் - இக்கதையை யிப்பொருளுக்கென்றதை அக்கதை யிப்பொருளுக்கெனக்கொள்க. இங்ஙன மின்னுஞ் சிலவிடங்களிலுள் அவற்றையு மங்ஙனங்கொள்க. ௯-பக்கம் மாறுபாடாய்க்கருதி என்பதில் செய்து என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமாய ஆய் என்பதை செயவென்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமாய ஆகவெனக்கொள்க. இங்ஙனமின்னுஞ் சிலவிடங்களிலுள அவற்றையு மங்ஙனங்கொள்க. வடசொற்களுள்-ஞாநம்-ஞானம்-ஆநந்தம்-ஆனந்தம்-எனத் தமிழிற்குப் பொதுவுஞ் சிறப்புமாய நகர னகரங்கள் சிற்சில விடங்களில் விரவிநின்றன. அவற்றைத் தமிழ்ச்சிறப்பு வழக்கு நோக்கி யமைத்துக்கொள்க. ௰-ம் பக்கம் எட்டாவது பாட்டுரை உ௫-வது, வரியில் இருப்பதுமன்றி அங்ஙனநின்று கேழ்க்குமொழி பிரமோபதேச மொழியாகலினென்பதும் சிலவுரைபாடங்களினுண்டு. கூஎ-ம் பக்கம் ஆறுவது பாட்டுரை "ஞானத்திலின்பத்தைநசிப்பித்துநான துவாமூனத்தையாரொழிவிப்பா"ரென்பதற்கு சுவாநுபவத்தான் ஞானாநந்தத்தைப் பெறுது. அதனை விடயச்சேற்றுற் கெடுப்பித்து விடயச்சேற்றி லழுந்திநின்று அவ்வாநந்தத்தை யடைதற் கேதுவாய்க் கூறும் ஞானசாத்திரங்களைக் கேட்டறிந்தமாத்திரத்தினு னவ்வாநந்தமய னென்னு கூறும் என்பது சிலவுரைபாடங்களிலுண்டு. இது-உரைவேறுபாடு.

உ

சிவமயம்.

செய்யுளகராதி.

அ

அக்கினிதேவர் ௱௰௭
அங்கக்காரன் ௱௭௭
அஞ்சனக்கண் ௨௱௯
அஞ்சுதொழி ௩௪
அடங்கத்து ௨௨௩
அடைப்புள் ௨௱௨
அட்டமாசித்தி ௮௯
அண்டமுத ௭௰
அதிபக்குவத் ௫௯
அரசற்குட ௱௮௨
அரிபிரமரிங் ௨௱௰௬
அருணனுத ௮௰
அருளாலே ௪௧
அருளும் ௨௪௩
அரைகோட்டஞ் ௭௨
அவரவரைப் ௨௱௰௧
அழிப்பேயவ ௱௨௭
அறிந்தமூங் ௨௪௧
அறிந்ததுவாய் ௮௬
அறிதங்தெல்லா ௱௰௨
அறிந்தவிடத் ௱௪௪
அறிந்துபற்றி ௱௫௰
அறியாமை ௬௰
அறியார் ௨௩௫
அறிவடங்கா ௯௰
அறிவாலே ௱௨௬
அறிவாயிரீர் ௱
அறிவித்தா ௪௫
அறிவுக்கறிவெ ௮௭
அறிவுக்கறி ௱௰௨
அறிவுபறி ௱௯௪
அறிவுமறிவா ௮௩
அறுசமயத் ௱௪௫
அறைந்தபறை ௰௯

ஆ

ஆகாயத்தே ௱௫
ஆகாயம் ௱௰௯
ஆசைமுதலா ௱௯௮
ஆகையினு ௱௬௫
ஆலிங்கனத்தி ௰௭
ஆணைக்கை ௨௰
ஆணைமதப் ௫௮

இ

இதுவென்ற ௪௪
இடும்பை ௱௭௰
இருட்கேவல ௱௰
இரும்பை ௭௭
இருளிற்சுட ௰
இன்பேயறி ௱௩௬

உ

உடம்புள்ள ௱௪௰
உடலாலுழை ௱௩௨
உடலிருந்தெ ௱௪௧
உடல்பொறி ௮௧
உடற்குயிர் ௰௫
உடற்போகம் ௨௱௪
உடுக்கைகமற ௱௭௫
உட்புறம்பா ௱௯
உண்டொழித் ௱௮௪
உதித்தொடுங் ௱௩
உதியாதுளதா ௨௬
உதையங்தொ ௱௬௬
உபதேசப் ௯௪
உருகுபரம் ௨௨௰
உரையொடுங் ௱௮௭
உலகத்தை ௱௫௫
உனையுணர்த் ௨௮
உனக்கு ௱௪௮

ஊ

ஊமைமணி ௱௬௭
ஊர்க்குருவி ௱௬௰
ஊன்றில் ௪௰

எ

எங்கும்பரி ௱௩௮
எட்டுருவுமை ௨௭
எந்தவூர்நீ ௱௩௨
எல்லாச்சமய ௨௨௭
என்னுணை ௱௪௩

ஒ

ஒட்டாதிரு ௯௮
ஒருகுடைக்கீழ் ௨௩௰

க

கடல்சிவநீரா ௩௨
கட்டியநாண் ௱௪
கட்டுநெகிழ்த் ௱௭௪
கண்மணி ௨௪௮
கயிற்றரவு ௱௪௨
கருப்பநில ௨௪௬
கருமந்திரி ௱௮௰
கருவிகழல ௱௮௮
கருவியுதி ௨௪௬
கரையடுக்க ௨௨௪
கல்லையுரு ௭௭
கல்வியாய் ௱௩௪
கவிப்பயனு ௯௧
கன்னனைப் ௱௭௩
கன்னிக்கதலி ௩௭

கா

காணுமறிவு ௱௨௯
காமாதிவிட் ௨௱௬
காலமறை ௭௪
காலமுடன் ௨௱௰௭
காலனுக்கு ௫௪

கால்வந்த ௱௯௩

கி

கிரிபைக்கிளை ௱௰௬
கிரியையான் ௱௨௧
கின்னரியை ௬௩

கு

குடையுந் ௱௨௫
குட்டித்திரட் ௫
கும்பிட்டுங் ௱௭௯
குரங்கிற் ௱௭௧
குரங்கை ௱௭
குருட்டரிப்ப ௬
குரங்குகுத்தி ௯௬
குறும்பாட்டு ௱௯௨
குன்றமலி ௨௩

கூ

கூட்டிற்குர ௯௯
கூரிருளின் ௱௫௨
கூலித்தொழி ௪

கே

கேடுஞ்சுகமு ௱௯௯

ச

சகலமுங் ௨௩௭
சத்தாதிதத் ௫௧
சத்தியநிர் ௰௨
சரிதாதி ௬௨
சரிதைகிரியை ௮௮
சரிதையுடல் ௱௮௩
சன்மார்க்க ௫௬

சா

சாக்கிரத்திற் ௨௩௮
சாக்கிரத்தே ௯௩
சாத்துவித ௱௮௬
சாயாபுருட ௰௧
சாலோகமா ௨௱௰௭
சாவேபெரு ௨௱௰௮

சி

சிந்தைபய ௫௩
சிற்றறிவனுப் ௱௪௯

சு

சுகாதிதம் ௱௨௨
சுகிக்கில்லை ௨௱௰௫
சுட்டுப்போ ௱௪
சுந்தரனார் ௨௩௪
சும்மாதிரு ௱௨௪
சும்மாதே ௬௪
சுருதிகுரு ௰௪

சூ

சூலையும் ௨௱

செ

செகஞ்சிரிக்க ௱௯௫
செத்தவரைப் ௨௱௩
செத்துப்பிற ௨௩௬
செல்வமிள ௱௬௪

ஞ

ஞானக்கிரியை ௱௩௫
ஞானமில்லா ௨௨௬
ஞானிக்குல ௨௱௭

த

தண்டுகுடை ௨௱௰௨
தத்துவத்தா ௫௩
தத்துவத்தின் ௨௨௨
தத்துவத்தை ௱௰௫
தத்துவமுட் ௯௨
தத்துவம் ௨௩௯
தத்துவாதீத ௪௮
தந்திரகலை ௰௫
தம்மாலதி ௩௮
தருவனமென் ௨௱௫
தனுவாதி ௱௬௮
தன்னறிவு ௮
தன்மையுமுன் ௪௨
தன்னிழப்பை ௩
தன்னையருளா ௨௱௬
தன்னையறி ௨௫
தன்னையறிவார் ௩௰
தன்னையிழப் ௮௫

தா

தாக்கற்ற ௰௩
தாமருந்தல் ௨௪௪
தானல்லர் ௫௭

தி

தின்னிற்றிமி ௱௬௩

து

துக்கஞ்சுகமா ௱௭௬
துடைதட்ட ௨௩௨

தே

தேடப்படும் ௱௫௯
தேட்டந்திரண் ௭௨
தேனுண்டுமி ௯

தொ

தொடும்போ ௨௩௩
தொழிலிறுதி ௱௨௩

ந

நடந்ததெல்லா ௨௪௨
நடக்துங் தளி ௧௩௧
நடைதளர்ந்து ௧௯௧

நா

நாடுநகர்வீடு ௱௬௨
நாயலகை ௧௬௯
நாயேறிவீழ்ங் ௫௫

நி

நித்திரைசெய் ௧௭௪
நினைப்புமறப் ௫௰
நினைப்புமறப் ௧௫௰

நீ

நீர்க்குப்பதமு ௧௦௧
நீர்க்கும்வழி ௧௰௮

நெ

நெய்யினிழற் ௯௩
நெய்யுண்ட ௨௩௧
நெருப்பில் ௧௨௰

ப

பஞ்சமலமு ௬௬
பட்டினத்து ௧௬௧
பதியிறக்கக் ௭௫
பரிசித்தஞ் ௭௩
பழக்கங்கொடி ௧௦௪
பழுதையைப் ௩௬
பற்றுதுபோது ௧௦௦
பற்றியது ௪௰

பா
பாசங்கழன் ௧௪௭
பி
பிறவாதயோ ௧௮௧
பு
புளிசேர்பழமா ௭௯
பூ
பூசிமுடிப்பன ௫௮
பூரணவானந்த ௩௧
பெ
பெண்ணுனலி ௨௪
பெருநோவு ௨௱௰௨
பே
பேயைப்பெ ௱௯௰
பேரின்பமுன் ௱௩௬
பொ
பொய்போகப் ௯
பொய்போல ௮௪
பொய்யென்ற ௱௫௬
பொன்மலை ௱௭௮
போ
போதப்பூர ௨௪௰
போதம்பதை ௪௬
போதவொழி ௨௰
ம
மண்ணுதிசத்தா ௩௩
மகவான்கண் ௬௧
மணிப்பாம் ௱௮
மண்ணைமலை ௱௨
மயலற்றூர் ௬௭
மரப்பாவை ௭௮
மருண்மூகர் ௨௱௧
மருந்துபிணி ௱௨௭
மலட்மக ௱௯௧
மலமாயை ௪௫
மலையேறிப் ௪௩
மறப்புநினைப்பு ௱௰௩
மறவாத்தம்மை ௩௯
மனவாக்குக் ௯௭
மனையிழுக்கி ௨௨௮
மா
மாயாவிகாரம் ௩௫
மாயாபோகத் ௨௨௯
மாலயனு ௱௯௭
மாற்றுப்பல ௭௬
மு
முலைமுதிரநா ௬௫
முலையுண்ணி ௨௨
மூ
மூர்க்கனை ௨௱௮
மெ
மெய்யாகத் ௱௫௪
மே
மேலைச்சுகம் ௭௰
மோ
மோனிகளை ௨௱௰௯
வ
வணங்காவுனா ௰௮
வதுவைச்சட ௱௩௰
வா
வாசிக்குச்சா ௧௪௬
வரசகத்துங் ௧௮௫
வாடன்மணம் ௨௨௧
வாதிவடத்தின் ௬௭
வாயுமனங் ௯௭
வாலேமுகமாய் ௯௫
வி
விடாதவத்தை ௨௯
விடயமுத்தி ௧௩௮
விபரீதப்பூணு ௧௯௬
வெ
வெண்ணையுறு ௭௯
வெற்றவெறும் ௪௯
வே
வேதாகமப் முதல்
வேட்டியுங் ௧௩௯
வேண்டாம் ௧௫௭
வேதாந்தம் ௪௭
வேர்க்குங்கண் ௭௧
வேர்க்கும்வி ௧௮௯

செய்யுளகராதி

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

பிழை திருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௮	௧	ஸித்ணை	ஸித்துணை
௮	௩௧	அரவர்	அவர்
௰௧	௨௪	கெட்டோர்க்கு	கேட்டோர்க்கு
௰௫	௨௬	கதிகாகளிலக்கணம்	கதிகாரிகளிலக்கணம்
௨௰	௰௫	பிரத்தியகக	பிரத்தியக்க
௨௫	௮	நின்றுககுவன்	நின்றுக்குவன்
௪௭	௨௮	வன்ளையுங்	வருளையுங்
௸	௨௯	நாட்டருமிறி	நாட்டமுமின்றி
௪௯	௰௩	வெற்றவேறு	வெற்றவெறு
௫௩	௨௫	சந்திரனைப்பாா	சந்திரனைப்பார்
௬௬	௨௨	கிலேசங்கொடா	கிலேசங்கெடா
௬௭	௪	மருந்துவன்	மருத்துவன்
௭௰	௰௩	நாராய்	நராய்
௭௩	௭	கேட்க	கேட்ட
௯௬	௩	குறங்குத்தி	குறங்குகுத்தி
௱	௰௮	சிவமாமை	சிவமாவை
௱௩	௯	போதற்தாற்	போதத்தாற்
௸	௰௯	கூநுகின்றார்	கூறுகின்றார்
௱௯	௰௩	ரியாவராகலி	ரறியாகலி
௧௧௩	௰௫	விறப்பேனை	இறப்பேனை
௧௪௭	௸	யிடமா	யிடமாம்
௧௫௨	௰௯	வர்க்கந்த	வவர்க்கந்த
௧௫௪	௫	உமுடுவின்றி	உடுவின்றி
௧௫௮	௮	ஆறுகுபெயர்	ஆகுபெயர்
௧௬௰	௯	பறறென்னே	பற்றென்னே
௧௭௯	௫	அருமனித	அவருமனித
௧௮௨	௰	யனிரதெனின்	யாதெனின்
௧௮௮	௸	பொயபாகலிற்	பொய்யாகலிற்
௧௯௧	௨௮	ெண்போய்	டேண்போய்
௸	௨௯	டுகட்டு	கெட்டு
௨௱௮	௸	சனயயநடை	சமையநடை
௨௨௧	௫	ணவர்க்நோக்கை	ளைவர்நோக்கை
௨௩௰	௨	பற்றுடை	பற்றுடைமை